
இதழ் 59 - ஜனவரி 2023


# காலம்

ISBN 1715 - 4030





**தியாகு:**
"இந்த வாழ்வு எனக்கு
அலுப்புத் தருவதே இல்லை."
(நேர்காணல்) - சாம்ராஜ்



**கணேஷ்:**
கையால் வர்ணம்
(நேர்காணல்) - பா.அகிலன்

- கீதா சுகுமாரன்
- மிஸ்ரா ஜப்பார்
- சேரன்
- ஆழியாள்
- மு.புஸ்பராஜன்
- மணி வேலுப்பிள்ளை
- அகிலன்
- இளங்கோ
- நரேஸ் வேல்சாமி
- சிவானந்தம் நீலகண்டன்
- சிறில் அலெக்ஸ்
- வெங்கட்ரமணன்
- பா.அ.ஜயகரன்
- ஷோபாசக்தி
- ஜெயமோகன்
- தெய்விகன்
- ஆனந்தப்பிரசாத்
- அ.முத்துலிங்கம்
- சாம்ராஜ்
- K S தமயந்தி
- சுகுமாரன்
- கருணாகரன்
- தர்மினி

"நமது நம்பிக்கையைவிட
யதார்த்தம் குரூரமானது."

மு. புஸ்பராஜனுடனான நேர்காணல்:
ப. ஸ்ரீஸ்கந்தன், செல்வம் அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KM LIMITED BUSINESS SOLUTIONS

## ACCOUNTING & TAX SERVICES

PERSONAL INCOME TAX

CORPORATE TAX

TRUCKING & UBER TAX

BOOKKEEPING

PAYROLL

BUSINESS REGISTRATION

HST

## CERTIFICATES & LICENCES

FOOD HANDLERS CERTIFICATE

SMART SERVE LICENSES

## MORTGAGES

FIRST MORTGAGE

SECOND MORTGAGE

PRIVATE MORTGAGE




416-420-8675 - 647-522-1775

info@kmlimited.ca

**KMLIMITED.CA**

416-420-8675 - 647-522-1775 info@kmlimited.ca | 2347 Kennedy Road, Suite 301, Toronto M1T 3T8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
18 MAR 2023
மாநகர சபை
யாழ்ப்பாணம்


# காலம்

இதழ் 59 ஜனவரி 2023

**ஆசிரியர்**
செல்வம் அருளானந்தம்

**ஆலோசனைக் குழு**
என்.கே. மகாலிங்கம்
உஷா மதிவாணன்

**இதழ் மேற்பார்வை**
பா.அ. ஜயகரன்

**அட்டை வடிவமைப்பு**
கே.கே. ராஜா

**இதழ் வடிவமைப்பு**
வள்ளியூர் வி. பெருமள்



**தொடர்பு முகவரி**
SELVAM ARULANANTHAM
84, COLELUKE LANE
MARKHAM, ONT
L3S 0B7
CANADA
Email: kalam@tamilbook.com
Phone: +1 416 731 1752


**சந்தா (தபால் செலவு உட்பட)**

**இந்தியா**
ஓராண்டுச் சந்தா ரூ.250
இரண்டாண்டுச் சந்தா ரூ.450
ஐந்தாண்டுச் சந்தா ரூ.1,000
ஆயுள் சந்தா ரூ. 4,000

**பிறநாடுகள்**
ஓராண்டுச் சந்தா ரூ.750
இரண்டாண்டுச் சந்தா ரூ.1,400
ஐந்தாண்டுச் சந்தா ரூ.3,600
ஆயுள் சந்தா ரூ. 10,000

சந்தா செலுத்த விரும்புபவர்கள் பின் வரும் மின்னஞ்சல் முகவரி அல்லது தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

Email: kalam@tamilbook.com
Phone: +1 416 731 1752

ஒரு வேளை இதழ் இடையில் நின்று போனால், மீதி சந்தாத் தொகை திருப்பித் தரப்படும் என உறுதியளிக்கிறோம்.

காலம் இதழை மின்னூலாக Magzler மற்றும் DailyHunt Appகளில் வாங்கிப் படிக்கலாம்

# உள்ளடக்கம்



## கட்டுரை


| | |
|---|---|
| இளங்கோ | 4 |
| வே. வெங்கட்ரமணன் | 21 |
| மணி வேலுப்பிள்ளை | 32 |
| நரேஸ் வேல்சாமி | 34 |
| கலாநிதி க.ஆனந்தராஜா | 69 |
| மு. புஸ்பராஜன் | 80 |





## நேர்காணல்


| | |
|---|---|
| மு. புஸ்பராஜன் | 8 |
| கணேஷ் | 40 |
| தியாகு | 56 |





## கவிதைகள்


| | |
|---|---|
| சேரன் | 46 |
| கீதா சுகுமாரன் | 48 |
| மிஸ்ரா ஜப்பார் | 50 |
| ஆழியாள் | 51 |

## சிறுதைகள்


| | |
|---|---|
| ஜெயமோகன் | 24 |
| அ.முத்துலிங்கம் | 52 |
| பா.அ.ஜயகரன் | 74 |
| ஷோபா சக்தி | 88 |
| தெய்வீகன் | 95 |
| ஆனந்தப்ரசாத் | 100 |

## நூல் பார்வை


| | |
|---|---|
| சுகுமாரன் | 106 |
| சிவானந்தம் நீலகண்டன் | 114 |
| தமயந்தி கே.எஸ் | 117 |
| சிறில் அலெக்ஸ் | 119 |
| கருணாகரன் | 121 |
| தர்மினி | 125 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலையங்கம்



காலம் 59ஆவது இதழ் தயாரித்துக்கொண்டிருக்கும்போது, மரித்த தெளிவத்தை யோசப் அவர்களின் நினைவு துயர் தருகிறது. இந்த இதழில் அவர் எழுதியிருப்பார் அல்லது காலம் 59ஆவது இதழ் பற்றி இலங்கையில் வெளிவரும் முக்கிய பத்திரிகைகளில் ஒன்றில் அறிமுகம் செய்திருப்பார். காலம் சிறப்பிதழ்கள் ஒவ்வொன்றும் பற்றியும் விரிவான கட்டுரைகளை இலங்கைப் பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதியிருக்கிறார்.

அவர் இன்று நம்மோடு இல்லை. காலம் சஞ்சிகையினதும், எனதும் உற்ற நண்பர். காலம் சஞ்சிகை நடத்திய குமார்மூர்த்தி நினைவு உரைக்காக அவரை நான் கனடாவிற்கு அழைத்திருந்தேன். ஆறு வாரங்கள் என்னுடன் தங்கியிருந்தார். இலக்கியத்திற்காக இலக்கியமாக வாழ்ந்த மனிதர். 'ஏன் என்று கேட்க யாருமில்லா அந்த மலையக மனிதர்களின் வாழ்வை எழுதியவன். தெளிவத்தை யோசப்பின் எழுத்துக்களால் மலையகத் தொழிலாளர்களின் சம்பளத்தில் ஐம்பது சதத்தைக்கூடக் கூட்ட முடியாது. ஆனால் உங்களைப் போன்றவர்களுக்கு எங்கள் வாழ்வையும், வலிகளையும், சந்தோசங்களையும், தோல்விகளையும் தொற்றிக்கொள்ளச் செய்ய முடியும்' என இங்கு நடந்த உரையாடலில் சொன்னார்.

சுந்தர ராமசாமியின் ஜே.ஜே. சொன்னதுபோல்

'செயலின் ஊற்றுக்கண்ணான சிந்தனையைப் பாதிப்பதே என் வேலை.'

அப்படிச் செய்தவருக்கு, அதற்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்தவருக்கு, காலத்தின் சிரம் தாழ்ந்த அஞ்சலி.

○

இந்த இதழில் தமிழின் மிக முக்கியமான எழுத்தாளர்கள் பங்கு பெற்றிருக்கிறார்கள். மேலும் பல முக்கியமான எழுத்தாளர்களின் படைப்புகளைப் போட முடியவில்லை.

மு. புஷ்பராஜன், தோழர் தியாகு ஆகியோரின் நேர்காணல்கள் இடம்பெற்றிருக்கின்றன. முன்னவர் இலக்கியமே வாழ்வு அல்லது பிரதானம் என்று வாழ்பவர். பின்னவருக்கோ அரசியல்தான் பிரதானம். ஆனால் இருவரும் உண்மையைத்தான் வாழ்வு நெடுகப் பேச முயன்றிருக்கிறார்கள். அவ்வகையில் இரண்டு வேறு உலகங்களைச் சேர்ந்த ஆளுமைகளின் நேர்காணல்கள் ஒரு புள்ளியில் சந்திக்கின்றன.

காலத்திற்கு ஆக்கம் தேடுவது எந்த வேளையிலும் சிரமமாய் இருந்ததில்லை. இதழ் தயாரிப்பதற்குக் காசு தேடுவதுதான் சிரமம். ஆக்கம் தந்த ஆளுமைகளுக்கும், காலத்தில் விளம்பரம் போடுவதால் எந்த பலனும் இல்லாவிட்டாலும் ஆதரிக்க வேண்டுமென்ற நோக்கில் விளம்பரம் தந்த விளம்பரதாரர்களுக்கும், கடைசி நேரத்தில் என் தொல்லைகளைத் தாங்கிய இதழ் தயாரிப்பாளர் அரவிந்தனுக்கும், அட்டை வடிவமைப்பாளர் கே.கே. ராஜாவிற்கும், என் நண்பர்களான ஜயகரனுக்கும், சாம்ராஜிற்கும் நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18 MAR 2023
யாழ்ப்பாணம்


# தமிழ் வணக்கம்

**உலகத் தமிழரின் இணைப்புப் பாலம்**

# http://tamilvanakkam.com/


எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்தநல் லறிவு வேண்டும்
பண்ணிய பாவ மெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்!
**- பாரதியார்**

**கனேடிய இலங்கை இந்தியா சர்வதேச செய்திகளை உடனுக்குடன் பார்வையிட...**



கட்டுரை: **இளங்கோ**

# எதையும் செய்யாமல் இருக்கும்போது எல்லாமே நிகழத் தொடங்குகின்றன





## 1. எதையும் செய்யாமல் இருத்தல்

இலங்கைக்குச் சென்ற பயணத்தில் தரித்து நின்ற இடங்களில் ஒன்றான சூரிச்சில், பயணத்திடையே வாசிப்பதற்கென, "Do Nothing" என்ற நூலை வாங்கியிருந்தேன். இந்நூல் எப்படி கிறிஸ்தவத்தில் இருந்து சீர்திருத்த கிறிஸ்தவம் தோன்றியதிலிருந்து, வேலை என்பதை மனித வாழ்வில் மிக முக்கியமாக முன்னிறுத்த ஒவ்வொரு காலக்கட்டத்திலும் என்னவெல்லாம் நிகழ்ந்திருக்கின்றன என்பதை வரலாற்றை முன்வைத்து விரிவாக ஆராய்கின்றது. கடந்த ஒரு நூறாண்டில் மனித வாழ்வென்பதன் அர்த்தமென்பதே வேலை செய்வது மட்டுமே என்பதாக மாற்றியமைப்பட்டிருக்கின்றது என்பதை தெளிவாக இது நமக்கு உணர்த்துகின்றது. ஒருவகையில் ஸென் போன்றவை இதை வேறுவிதமாகச் சொன்னாலும், நாம் வாழும் சூழலுக்கு நெருக்கமாக இதை விஞ்ஞான/வரலாற்று நிகழ்வுகளுடன் இந்த நூல் பேசுவதால் அநேகருக்கு நெருக்கமாகக் கூடிய ஒரு நூல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்நூலின் பிற்பகுதியில் கிட்டத்தட்ட 200 இற்கு மேற்பட்ட நூல்கள்/கட்டுரைகள்/ஆவணங்களில் இருந்து தகவல்கள் எடுக்கப்பட்டதென அந்த நூல்களின் ஒரு பெரும் பட்டியலும் தரப்பட்டிருக்கின்றது. ஆனால் தனியே தரவுகளின் நூலாக இல்லாது, வாசிப்பதற்குச் சுவாரசியமாக இருக்கும் நூல் இது. இந்த நூலை வாசித்தவுடன் நாம் செய்யும் வேலைகளிலிருந்து உடனே விடுபட விழிப்புணர்வைத் தந்துவிடுமென்பதாக எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. ஆனால் இன்னும் நுண்ணுணர்வுடன் இந்த வாழ்வையும், விரும்பியபடி வேலையையும் நாம் செய்யலாம் என்பதற்கான புள்ளிகள் நிறையவே இதில் இருக்கின்றன.

இவ்வாறுதான் நாம் நாளாந்த வாழ்வில் நமக்குத் தேவையானவற்றிலிருந்தும் விலகிச் சென்று நமக்கான பொழுதைக் கழிப்பதற்கான தேர்வுகள் இருக்கின்றதென நினைக்கின்றேன். முக்கியமாக சமூகவலைத்தளங்களில் தினமும் ஒரு சூடான செய்திவர நாம் விரும்பியோ விரும்பாமலோ அதனோடு இழுபடச் செய்வோம். அண்மையில் 'பொன்னியின் செல்வன்' திரைப்படம் வரப்போகின்றது என்றதை அறிந்தவுடன், இனி வரும் சில நாட்களில் முகநூலை அந்தச் செய்திகளே ஆக்கிரமிக்கும் என்று உணர்ந்து அந்தத் திரைப்படம் வரமுன்னரே முகநூலை விட்டு (deactivate) முற்றிலுமாக விலகியிருந்தேன்.

அப்படியிருந்தும் திரைப்படம் வெளிவந்த நான்கோ, ஐந்தாம் நாளோ முகநூலுக்குத் திரும்பி வந்தபோதும் அதைப்பற்றிய பதிவுகளையே நிறையப் பார்க்க வேண்டி வந்திருந்தது. ஒருவகையில் இதை விலக்க வேண்டும் என்று முன்னேற்பாடுகள் எடுத்த என்னையே இந்தப்பதிவுகள் இன்னும் இந்தப் படத்தைப் பார்க்கவில்லையே என்ற குற்றவுணர்வைத் தந்திருந்தன.

இங்கே இந்தப் படத்தைப் பார்க்கக்கூடாது என்ற எண்ணமோ அல்லது வேறெந்தப் பெரிய காரணமோ எனக்கில்லை. ஆனால் பார்ப்பதாக இருந்தால் சமூகவலைத்தளங்களில் இது குறித்து எழுதப்படும் எதையும் வாசிக்காமல் பார்க்கவேண்டும் என்று நினைத்திருந்தேன். அதேசமயம் பார்க்காவிட்டாலும் பரவாயில்லை, இழப்பதற்கு எதுவுமில்லை என்று நினைப்பும் இருந்தது.

இவ்வாறுதான் நாம் நமக்கு என்ன வேண்டும் என்று தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கின்றது. ஆனால் அவ்வாறு நாம் நமக்கு விரும்பியதைத் தேர்ந்தெடுக்க புறச்சூழலோ/புறக்காரணிகளோ எளிதாக விடாது. அது வேலையாக இருந்தாலென்ன, ஒரு திரைப்படமாக இருந்தாலென்ன, எமது விருப்புக்களைத் தாண்டி திணிக்கப்படுகின்ற பல காரணிகள் இருக்கின்றன. அவற்றில்தான் நாம் கவனமாக இருக்கவேண்டியிருக்கின்றது.

ஒருவர் ஒரு விடயம் அவருக்குப் பிடித்திருந்தால் பெருநீரோட்டத்தோடு ஒத்தோடிப் போவது பிழையுமில்லை. அது அவருக்கான விருப்பமாகக் கூட விட்டுவிடலாம். ஆனால் அவ்வாறு பெருநீரோட்டத்தோடு ஒத்தோட முடியாதவர்கள் என்ன செய்ய முடியும் என்பது பற்றியே நானும் என் அலைவரிசையொத்த நண்பர்களும் பேசிக் கொள்வதுண்டு. நாம் நமக்குப் பிடித்தமான விடயங்களை நம்போக்கிலே செய்யலாம். நமக்கான ஒத்த அலைவரிசையில் இருப்பவர்கள் செய்பவற்றைப் பற்றி நமக்குள் உரையாடலாம், எழுதலாம், பிறருக்கு அறிமுகப்படுத்தலாம்.

மேலே குறிப்பிட்ட "Do Nothing" நூல் பற்றி என் நண்பர்களோடு உரையாடியிருக்கின்றேன். அவர்கள் தமது சூழ்நிலை, வேலை என்பதன் பின்னணியில் இந்த நூலைத்தாண்டிய விடயங்களைப் பேசியிருக்கின்றார்கள். அந்தத் தோழமை உணர்வு (solidarity) ஒருவகையில் நான் தனித்தவனல்ல என்பதை உணர்த்தியிருக்கின்றன. இன்றைய உலகமயமாக்கலில் நாம் பெரும் விடயங்களோடு போராடுவது என்பது பெரும் சவாலானது.

அதற்கெதிராக நாம் நடக்கும் ஒவ்வொரு காலடிகளும் நம்மை சோர்வாக்கக் கூடியவை. எளிதில் எதிர்மறைச் சிந்தனைகளுக்கு இழுத்துச் செல்லக்கூடியது. ஆனால் நாம் நம் அலைவரிசையையொத்த மனிதர்களைத் தேடிக்கொண்டால், அவர்களோடு சேர்ந்து அது எந்தளவு மீச்சிறு உலகாயினும் அதனை நாம் எமக்காக உருவாக்கிக் கொள்ளமுடியும்.

## 2. தேனீ போல ஒரு வாழ்வு

கடந்த வாரம் எங்கள் அலுவலகத்தின் கூரையில் தேனீக்களை வளர்க்கும் (bee hive) திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியில் எங்களுக்கு இந்தவாரம் தேனீக்களைப் பற்றிய ஓர் அறிமுக வகுப்பு நடத்தப்பட்டது. தேனீக்களின் வகை,இராணித் தேனீ, வேலையாள் தேனீகளின் பணி என்று பல்வேறு விடயங்கள் விவாதிக்கப்பட்டன. தேனீக்களில் பலவகை இருந்தாலும் நாம் தேனுக்காய் எடுக்கும் தேனீக்கள் தம் கொடுக்கால் கடிக்காது என்று சொன்னதிலிருந்து honey bee மீது அதிகம் காதல் எனக்கு வந்துவிட்டது. இந்தவகைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேனீ தம் கொடுக்கால் நம்மைக் கடித்துவிட்டால் பிறகு இறந்துவிடும், ஆகவே இவ்வாறான தற்கொலைகளை இந்தத் தேனீக்கள் செய்ய விரும்புவதில்லை என்றனர்.

தேனீ முட்டையிட்டு 21 நாளில் ஒரு புதுத்தேனீ இந்த உலகுக்கு வருகின்றது. அதேபோல ஒரு இராணித் தேனீயின் கொலனியில் கிட்டத்தட்ட 20,000—30,000 இற்கு மேற்பட்ட தேனீக்கள் இருக்கும். ஆனால் கிட்டத்தட்ட 90%—95% பெண்களாகவே இருக்கும் என்றனர். அப்படியெனில் ஆண் தேனீக்களுக்கு என்னதான் வேலை என்று கேட்டோம். சோம்பறி ஆண்கள் வேறு என்னதைச் செய்யப்போகின்றார்கள், ஒரேயொரு தொழில்தான் என்று எள்ளலாகச் சொன்னார்கள். செய்யும் தொழிலே தெய்வம். வாழ்க ஆண் தேனீக்கள்!

வேலையாள் தேனீ கிட்டத்தட்ட ஒரு மாதம் உயிர்வாழும். அந்த ஒருமாதத்தில் மகரந்தம் பரப்புதல், தேனைச் சேர்த்தல், தேன் கூட்டை அமைத்தலென்பதிலேயே அதற்குக் காலம் போய்விடுகின்றது. ஆனால் இராணித் தேனீக்கு ஆயுள் கெட்டி. கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் வாழ்கின்றனவாம். வித்தியாசமான டி என்ஏ இல்லாமல் இது எப்படிச் சாத்தியம் என்று வாய்பிளந்து நான் அவர்களிடம் கேட்டேன். இராணித் தேனீ ஆனதன் பிறகு அவை இப்படி நீண்டகாலம் வாழத் தம்மைத் தகவமைத்துக் கொள்வது ஒரு அதிசயமாகத்தான் எனக்குத் தெரிந்தது.

ஒரு கொலனியை தேனீக்கள் கட்டும்போது ஒரேயொரு இராணித் தேனீயை மட்டும் நம்புவதில்லை. இராணித் தேனீகளுக்கென்று ஒன்று மேற்பட்ட லாவாக்கள் இருக்கின்றன. அவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட 'கன்னி'த் தேனீக்கள் தங்களுக்குள் அடிபட்டுப் பிறகு ஒன்றேயொன்று இராணித் தேனீயாகின்றது. அது தனது வம்சத்தைப் பெருக்க, வீரியமான தேனீயைத் தேடிக் கண்டுபிடித்து, கிட்டத்தட்ட நாளொன்றுக்கு 2000 முட்டைகள் வீதம் இடுகின்றது.

தேனீக்கள் தமது கூட்டிலிருந்து 5 கிலோ மீற்றர்கள் பறந்து திரும்பி வரக் கூடியவை. தேனீக்கூட்டின் கணித நுட்பம் வியக்கக் கூடியது என்பது நமக்குத் தெரியும். அதேவேளை இந்தத் தேனீக்கள் எந்தப் பூவில் நல்ல தேன் கிடைக்கும், எப்படி அதைத் தேடிச் செல்வது என்று தங்களுக்குள்ளேயே தகவல்களைப் பரப்புமாம்.

தேனீக்கள் தங்களைப் பற்றிய விடயத்தைத் தாண்டி நமக்கும் சொல்ல ஏதோ விரும்புகின்றன என நினைக்கின்றேன். எங்களையும் காலம் முழுக்க வேலை செய்யப் பழக்கி வேலையாள் தேனீபோல ஆக்கிவிட்டார்கள். பணியாள் தேனீயின் ஆயுள் ஒரு மாதம் என்றாலும், வேலை மட்டுமே செய்வதோடு அதன் ஆயுட்காலம் முடிந்து விடுகின்றது.

ஒருமுறை ஒரு தோழி பேசிக் கொண்டிருக்கும்போது போகின்றபோக்கில், '9—5 வேலை செய்தால் you can survive, but you never live your life to the fullest' என்றார். அது ஒரு பேருண்மை. 9—5 வேலை ஒரு எளிய அடிப்படையான வாழ்க்கையைத் தரும். ஆனால் தொடர்ச்சியாக நாங்கள் அப்படி 9—5 வேலை செய்யத் தொடங்கிவிட்டு திரும்பிப் பார்த்தால் முதுமைக்குள் நுழைந்திருப்போம். ஆனால் நாம் வாழ விரும்பிய வாழ்வு கை நழுவிப் போயிருக்கும்.

தேனீக்கள் இப்படி ஆயிரக்கணக்கில் சூழ கொலனி அமைத்துக் கொண்டாலும், அங்கேயும் கூட்டத்தோடு சேரா ஒரு தனிப்பிரிவு இருக்கின்றது. அது இந்தப் பெருங்கூட்டத்தைத் தவிர்த்து தனியே சுற்றியலைபவை. அவை Solitary bees என அழைக்கப்படுகின்றன.

இராணித் தேனீயாகவோ அல்லது வேலையாள் தேனீயாகவோ இல்லாமல் இப்படி தன்போக்கில் அலைந்தபடியிருக்கும் Solitary தேனீயாக இருப்பதுதான் எனக்கும் இந்த வாழ்வில் பிடித்திருக்கிறது.

## 3. எல்லாமே நிகழ்தல்: King Richard

செரீனாவும், வீனஸூம் ரென்னிஸ் உலகுக்கு வந்தது ஒரு பெரும் நிகழ்வு. கறுப்பினப் பின்னணியில் மட்டுமில்லாது, மிக வறிய குடும்பத்திலிருந்தும் வந்த அவர்கள் பின்னர் நிகழ்த்தியது மாபெரும் சாதனை. எங்களைப் போன்ற கறுப்பு/மண்ணிற மக்களுக்காக, அதுவரை அறைந்து மூடப்பட்ட கதவுகளை ஒரு புயலைப்போல அடித்துத் திறந்து விட்டவர்கள்.

நான் கனடாவுக்கு வந்த போது, கனடாவில் ரென்னிஸில் அவ்வளவு கனடியர்கள் இருக்கவில்லை. பெரும் ஆட்டங்களில், வன்கூவரிலிருந்து இலங்கைப் பின்னணியில் இருந்து வந்த சோனியா ஜெயசீலனே கனடாவை அடையாளப்படுத்தும் ஒருவராக இருப்பார். அவர் பெரும்பாலும் முதலாம் சுற்றிலே 'கிராண்ட் ஸ்லாம்' ஆட்டங்களிலிருந்து வெளியேறி—விடுவார். சிலவேளைகளில் இரண்டாம் மூன்றாம் சுற்றை எட்டும்போது அவர் ஏதோ அரை—யிறுதிக்குப் போனது போல மனம் மகிழும். இப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவில் வெவ்வேறு பின்னணியில் இருந்து வந்த நிறைய இளையவர்கள் நன்றாக ஆடத்தொடங்கிவிட்டார்கள் என்பது வேறுவிடயம்.



ஒருவர் ஒரு துறையில் சாதிக்கும்போது, அதுவும் அதற்கான பின்னணியே இல்லாது சாதனைகள் செய்யும்போது மனம் பெருமிதத்தில் துள்ளும். அப்படித்தான் வீனஸினதும், செரீனாவினதும் தொடக்கக் காலத்தைப் பதிவு செய்யும் இந்தப் படத்தைப் பார்க்கும்போது நெகிழ்வாக இருந்தது. ஒரு ரென்னிஸ் ஆட்டக்காரியைப் பார்த்து, அதுபோல தனது இரண்டு பிள்ளைகளையும் ரென்னிஸ் வீராங்கனைகள் ஆக்கவேண்டுமென 80 பக்கத் திட்டத்தை அவர்கள் பிறந்தபொழுதே எழுதி, அவர்கள் நாலரை வயதாக இருக்கும்போதோ ரென்னிஸ் களத்துக்கு அழைத்துச் சென்ற அந்தப் பெற்றோர்களின் ஓர்மம் வியந்து போற்றக்கூடியது. கறுப்பின வறிய பின்னணியில் வந்த அவர்கள் பணக்காரர்கள் ஆடும் ஆட்டத்தில் பயிற்சிபெற/பங்குபெற அனுபவிக்கும் துயர்கள் இங்கே பட்டியலிடவே முடியாதன.

வீனஸ் / செரீனா தமது தகப்பன் கறுப்பினத்தவராக இருப்பதால் எப்படி பொலிஸ் உள்ளிட்ட அதிகாரத்தரப்பால் மட்டுமில்லை, இந்த வறிய/வன்முறை வாழ்விலிருந்து வெளியேறத்துடிக்கும்போது தமது சொந்த நிறத்தவர்களாலும் வன்முறைக்குள்ளாக்கப்படுகின்றார் என்பதை அறிந்தே வளர்கின்றார்கள். ஆகவேதான் அவர்கள் தமது கறுப்பு அடையாளத்தை ஒரு பெருமிதமாக பின்னர் முன்வைக்கின்றார்கள். கவனிக்க, ஒடுக்கப்படுபவர்கள்தான் தமது நிற/மொழி/சாதி/மதம் என்பவற்றை இப்படி முன்வைக்கலாமே தவிர, ஒடுக்குதல்களைச் செய்கின்றவர்கள்/அப்படியான பின்னணியில் இருந்து வருகின்றவர்கள் முன்வைக்கமுடியாது. அந்த வித்தியாசங்கள் கூடப் புரியாமல் தமிழ்ச்சூழலில் ஒடுக்கப்படும் தலித்/சிறுபான்மை மதம் சார்ந்தவர்கள் தமது அடையாளங்களை முன்வைத்துப் பேசும்போது, 'ஐயோ இவர்களும் சாதியைப் பேசுகின்றார்கள்/மதத்தைப் பேசுகின்றார்களே' என்ற போலிக்கூச்சல்கள் வருவதை நாம் எளிதாகப் பார்க்கின்றோம்.

இந்தத் திரைப்படம் வில்லியம்ஸ் சகோதரிகளின் வாழ்வில் சிறுபகுதியை மட்டுமே காட்டுகின்றது. வீனஸ் பதினான்காம் வயதில் முதல் போட்டி ஆடி இறுதிப் போட்டியில் தோற்பதுடன் முடிகின்றது. அடுத்த வருடம் 15ஆம் வயதில், வீனஸை விளம்பரத்துக்காகச் சேர்த்துக் கொண்ட Rebook கொடுத்த பணம் 15 மில்லியன் டொலர்கள். ஒரு ஒழுங்கான வீடில்லாது, விளையாட ஒரு ஆடுகளமில்லாது, 5 பெண்குழந்தைகளுமாய் ஒரே அறையில் படுத்துக்கொண்டு வாழ்ந்தவர்கள் அடைந்த இந்த உயரம் நாம் கற்பனையே செய்ய முடியாதது. இதைவிட அவர்கள் உடைத்துத் தள்ளிய கதவுகளும், இனவாதத்தின் சுவர்களும் தொலைதூரம் நீளக்கூடியவை.

தகப்பனாக வில்லியம்ஸின் தளும்பல்கள், அறைகூவல்கள் சிலவேளை 'சாதாரண' மக்களாகிய எமக்கு எரிச்சலூட்டக்கூடியவை. ஆனால் அவ்வாறு இருந்தபடியாலுந்தான் வில்லியம்ஸ் சகோதரிகள் இவ்வாறு ரென்னிஸுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து மற்ற எவ்விதத் தொந்தரவுகளுமில்லாது சாதனைகளை அடையக்கூடியதாகவும் இருந்திருக்கின்றது.

வீனஸ் 19ஆம் வயதில் முதலாம் கிராண்ட் ஸிலாமை வென்ற ஒன்றிரண்டு வருடங்களிலேயே அவர்களின் பெற்றோர் மணவிலக்குப் பெற்றுவிட்டார்கள். அடுத்த கொஞ்ச வருடங்களில் அவர்களின் தந்தையார் வில்லியம்ஸ் சகோதரிகளின் உலகில் இருந்து கூட விலகத் தொடங்கிவிட்டார் என்பதை வில்லியம்ஸின் தாயும், சகோதரிகளும் மட்டும் இருந்து ஆட்டங்களை இரசித்த கடந்தகாலத்து நிகழ்வுகளைப் பார்த்த நாம் எளிதாகக் கண்டடைந்து கொள்ளலாம். ஆனால் இந்தப் பாதையையும், அறிந்தோ அறியாமலோ ஒரு வரலாற்றுத் திருப்பதையும் தகப்பனாகிய வில்லியம்ஸ் ஏற்படுத்தியிருக்கின்றார்.

இப்படி வில்லியம்ஸ் கறுப்பினப் பின்னணியில் இருந்து வந்து சாதனைகளைப் படைத்தபோது நெகிழ்ந்ததைப் போல, என்னளவில் இன்னொரு விடயமாக மாயா (M.I.A) கிராமிக்கு வந்து பாடியதையும், பின்னர் மடோனா, நிக்கி மினாஜ் போன்றவர்களுடன் Super bowl half time show இல் (அமெரிக்க உதைபந்தாட்ட இறுதிப்போட்டி) பாடியாடியபோதும் அடைந்திருக்கின்றேன். மாயா அந்தவகையில் ஈழத்தவர்களாகிய நமக்கு இசையில் ஒரு பாய்ச்சலை சமகாலத்தில் நிகழ்த்திக் காட்டியவர் என்கின்ற நேசமும், பெருமையும் எனக்கு எப்போதும் அவர் மீது இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்காணல்: **மு.புஷ்பராஜன்**

ப.ஸ்ரீஸ்கந்தன் - செல்வம் அருளானந்தம்


# நமது நம்பிக்கையைவிட யதார்த்தம் குரூரமானது

மு. புஷ்பராஜன் அவர்கள் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக இலக்கியப் பரப்பில் இயங்கிவருகிறார். சிறந்த கவிஞர். விமர்சகர். இலக்கியத் திறனாய்வாளர். தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவரும் இலக்கியங்களின் தீவிர வாசகர். பல இலக்கிய ஆய்வுக் கட்டுரைகளைத் தொடர்ச்சியாக 'காலம்' சஞ்சிகையில் எழுதிவருபவர். எழுபதுகளில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து அதிர்வுகளை ஏற்படுத்திய 'அலை' சஞ்சிகையின் ஆரம்ப ஆசிரியர்களில் ஒருவர். அம்பா (மீனவர் பாடல்கள்), மீண்டும் வரும் நாட்கள் (கவிதைத் தொகுதி), வாழ்புலம் இழந்த துயர் (அரசியல் கட்டுரைகள்), வலை உணங்கு குருமணல் (குருநகர் மக்கள் வாழ்வு பண்பாடு), நம்பிக்கைக்கு அப்பால் (இலக்கியக் கட்டுரைகள் ) ஆகிய இவரது நூல்கள் இதுவரை வெளிவந்துள்ளன.

இவர் யாழ்நகரை அண்டிய குருநகர் என்ற கடலோரக் கிராமத்தில் பிறந்தவர். வீட்டுச் சூழல் காரணமாகத் தன் இளவயதிலேயே கடலோடியாகத் தொழில் செய்ய ஆரம்பித்த இவர் பின்னர் இலங்கை போக்குவரத்து சபையில் நடத்துநராகவும் பரிசோதகராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். சில காலம் யாழ். திருமறைக் கலாமன்றத்திலும் பணியாற்றியிருந்தார்.

மு. புஷ்பராஜன் மிகவும் அமைதியாகவும் அடக்கமாகவும் ஆழமாகவும் இலக்கியப் பணி ஆற்றிவருபவர். இவரது ஆளுமையின் அளவுக்கு இலக்கியவுலகில் அறியப்படாத ஒருவராக இருக்கிறார். இது இவர் தன் முன்னோடிகளாய் கொண்ட ஏ.ஜே. கனகரத்தினா, மு. தளையசிங்கம் போன்றவர்களிடம் கற்றுக்கொண்ட தன்மை.

தன்னை முன்நிறுத்தாத பண்பும் ஆழமும் விரிவும் கொண்ட இவரது பார்வைகளும் இன்றைய தமிழ் இலக்கியத்திற்கும் அவற்றுக்குள் இயங்குபவர்களுக்கும் முக்கியமானவை. இதுவரை நேர்காணல்களில் அக்கறை காட்டாமல் ஒதுங்கி இருந்தவரைத் தேடித் துருவி எடுத்த பதில்கள் இங்கே தரப்பட்டுள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீவிர இலக்கிய வாசகராக, எழுத்தாளராக, செயற்பாட்டாளராக அறியப்பட்டுள்ளீர்கள். இந்தப் பாதைக்கு எப்படி வந்தீர்கள்?**

இது ஒரு நீண்ட மீள்பயணமே. ஊரில் அப்போது 'திரு இருதய வாசிகசாலை', 'குருநகர் சனசமூக நிலையம்' என இரு வாசிகசாலைகள் இருந்தன. பின்னையதில் தினசரிப் பத்திரிகைகளுடன் தமிழகத்தின் வார, மாதப் பத்திரிகைகள், இதழ்கள் ஆகியன அதிகமாகவும் இருக்கும். மனம் விரும்பியவை சித்திரக் கதைகள் கொண்ட இதழ்களைத்தான். 'ஆனந்த விகடனில்' வெளிவந்த 'துப்பறியும் சாம்பு', கல்கியில் வெளிவந்த 'வீர விஜயன்' ஆகியவை என் பாலிய கால விருப்பிற்குரியவை. 'அம்புலிமாமா', தினத்தந்தி'இல் 'சிந்துபாத்' கதை ஆகியவற்றையும் சேர்த்துக்கொள்ளலாம். வளர்ந்தபின் வீர விஜயன் போல் சாகசங்கள் புரியவேண்டுமென நினைத்ததுண்டு. ஆனால், மெலிந்த உடலும் மிக இளமைக் காலத்திலே என்னுடன் தங்கியிருந்த நோயும் அதற்கு அனுமதிக்க வில்லை.

வாசிப்பின் அடுத்த நிலையாக மர்மங்கள் சூழ்ந்த துப்பறியும் உலகு அமைந்தது. இருளில் காலடி ஓசைகளும் நாய்களின் குரைப்புகளும் முள்ளந்தண்டு சில்லிடும் அலறல்களுமாய் அவ்வுலகு நிறைந்திருந்தன. மர்மங்கள் விலகும் விதம் திகைப்பை அளித்தபடியே இருக்கும். இந்த உலகை என்னுடன் பகிர்ந்துகொள்ளப் பாடசாலை நண்பர்களும் அயலிலுள்ள சில அக்காக்களும் இருந்தனர். இந்த மர்ம உலகினால் வீட்டில் தனியே இருக்கப் பயந்தேன். இரவில் கடற்கரைக் காற்றிற்கு அலையும் தென்னோலைகளின் ஓசைக்கும் பயம். என்னை யாரோ பின்தொடர்வதாகவும் கொலைசெய்யப் பதுங்கி இருப்பதுமான பிரமையும் ஆட்டுவித்தன. இரவில் அம்மா சொல்லும் சிறிய வேலைகளையும் செய்ய மறுத்தேன். அல்லது தம்பியையும் துணைக்கு வரும்படி அழைத்தேன். வழக்கம்போல் மறுத்துவிடுவான். எவ்வளவோ புத்தகங்கள் வாசித்தபோதும் 'பேய்வீடு','சங்கர்லால் துப்பறிகிறார்' போன்ற தலைப்புகளைத் தவிர வேறெதையும் அந்த இருண்ட மனக் குகைகளிலிருந்து மீட்டெடுக்க முடியவில்லை.

அடுத்து பாடசாலையில் எட்டாம் வகுப்பில் நுழைகையில் அங்கு ஓரிரு பழைய மாணவர்களும் இருந்தனர். அவர்கள் கடைசி வரிசை மேசைகளைச் சொந்தமாக்கி இருப்பார்கள். இவர்களில் மாறன் என்பவர் முக்கியமானவர். இந்தப் பெயர் அவருடைய தாய் மாமனுடையது. ஊரில் இவ்வாறு சிலர் உறவினர் பெயரால் அழைக்கப்படுவதுண்டு. இந்த மாறன்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்கள், நூல்களை அறிமுகப்படுத்தினார். அண்ணாத்துரை, நெடுஞ்செழியன், மு.கருணாநிதி என்றும் 'தீ பரவட்டும்', 'பாண்டியன் பரிசு' போன்ற நூல்களை இரவலும் தந்தார். இவர்களின் மொழி ஒருவித கிறக்கத்தையே அளித்தது. 'பராசக்தி'திரைப்படக் 'கோட் சீன்' முழு வசனங்களும் அக்காலத்தில் மனப்பாடமாக இருந்தது. இக் காலங்களில்தான் எனக்கு மு. வரதராசனும் அறிமுகமாகின்றார். இவரது புனைவுலகில் தூய நெறிகொண்டவர்களே அதிகம் நடமாடினார். 'நெஞ்சில் ஒரு முள்', 'கள்ளோ காவியமோ' நாவல்களின் கிறக்கம் நெடுநாட்களாய் என்னில் வாசம் கொண்டிருந்தது. மிகச் சிறந்த நாவலாசிரியர் இவரே எனக் கருதியிருந்தேன். இவரது நாவல்கள் மாத்திரமன்றி திருக்குறள் உரை, பண்டைய இலக்கியங்களின் விளக்கவுரை நூல்கள் எனப் பலவற்றையும் வாசித்திருந்தேன். அது எனக்குப் பெருமையாகவும் இருந்தது.

அடுத்த வளர்ச்சி வண்ணக் கனவுகளாலும் நிறைவேற்ற முடியாத தூய இலட்சியங்களாலும் மனம் ஈரலித்துக் கிடந்தது. நா.பார்த்தசாரதி, அகிலன், சாண்டில்யன், கல்கி, கண்டேகர், எனப் பலர் என்னை விலங்கிட்டு வைத்திருந்தனர். 'குறிஞ்சி மலர்', 'பொன்விலங்கு' நாவல்களில் ஊறியிருந்தேன். அரவிந்தனாக என்னைக் கற்பனை செய்தேன். பூரணியை முதன்முதலாக அரவிந்தன் கண்ட கணத்தைத் தனது குறிப்பு புத்தகத்தில் கவிதையாக எழுதியிருப்பார். அதன் முதலிரு வரிகள் இவ்வாறு அமையும் 'நிலவைப் பிடித்து சிறு கறைகள் திருத்திக் குறுமுறுவல் பதித்த முகம்'. பூரணியைப் போலவே 'பொன் விலங்கு' நாட்டியத் தேவதை மோகினியும் மனதை உருக்கினாள். மு.வரதராசனுக்கான சிம்மாசனத்தில் நா. பார்த்தசாரதி போட்டியின்றி வந்து அமர்ந்துகொண்டார்.

அகிலனது 'வேங்கையின் மைந்தன்', 'பாவை விளக்கு', 'நெஞ்சின் அலைகள்' போன்ற நாவல்கள் மனதைக் கொள்ளையடித்தன. 'வேங்கையின் மைந்தன்' முன் அட்டையில் இராசேந்திர சோழன் குதிரையில் பாயும் ஓவியம் இன்றும் கண்ணில் தெரிகிறது. 'பாவை விளக்கு' தனிகாசலத்தை நான்கு பெண்கள் காதலிக்கின்றனர். அந்த வயதில் அது ஒருவித போதையாகவே இருந்தது. இந்தியா சுதந்திரப் போராட்ட நாவல்களை வாசித்தபோது அப்படி ஒரு போராட்டம் ஈழமண்ணில் நடக்கவில்லையே என்ற கவலை இருந்தது. ஆனால், ஒரு ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் எம் காலடியில் நெருப்பாறாய் ஓடியபோது யதார்த்தத்தில் வெறும் பார்வையாளனாகவே இருக்க நேர்ந்தது. சாண்டில்யனின் 'கடல் புறா ' கல்கியின் 'பார்த்திபன் கனவு'. 'சிவகாமியின் சபதம்' 'பொன்னியின் செல்வன்' போன்ற நாவல்களும் மயக்கம் தருபவைதான். மாமல்லச் சக்கரவர்த்தி ஒன்பது வருடங்களின் பின் சிவகாமியைச் சிறை மீட்டது எனக்குத் துக்கமாக இருந்தது. அவ்வளவு பெரிய வீரன் தன் காதலியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே மீட்டிருக்க வேண்டாமா? கடல் புறா வாசிக்கையில் மறுநாள் கணிதப் பரீட்சை இருந்தது. இரவு வெகுநேரமாகியும் வாசித்துக்கொண்டிருந்தேன். எனது சின்னப் பெரியம்மா பரீட்சைக்குப் படிக்கிறான் என நினைத்து அந்த நடுஇரவில எழுந்து தேனீர் தயாரித்துத் தந்தார். அப்போது எனக்கு உள்ளூரச் சிரிப்பாக இருந்தது. இப்போது நெஞ்சு வலிக்கிறது.

மேகங்களின்மீது சிறகடித்தும் வெண் புரவிகள் மீதும் அமர்ந்தும் திரிந்த கனவுகளின் பிறடியில் பிடித்து இழுத்து புழுதி மணலில் வீசியடித்தவர் சிங்கம் த.ஜெயகாந்தன்தான். ஆனந்த விகடனில் அவரது 'முத்திரைச் கதைகளும்''உன்னைப்போல் ஒருவன்' குறுநாவலும் வேறு உலகிற்கு அழைத்துச் சென்றது. அங்கு தூய ஜிப்பா மனிதர்களும் முகிலைப் பிடித்து கறைகள் திருத்தியவர்கள் இல்லை. அச்சகத்தில் அச்சுக் கோர்த்தபடி இறந்துபோனவர்களும், நடுரோட்டில் ஆடைகளை அவிழ்த்து எறியும் மனநிலை பிறழ்ந்தவர்களும் இரவில் தெருவோரம் படுத்துறங்கும் கூலிகளும் காணப்பட்டனர். திருமணத்தின்பின் முதலிரவுக்காகப் பூட்டியிருக்கும் பூங்காவின் செடிகளின் மறைவில் ஓதுங்குகையில் பொலிசாரால் கைது செய்யப்படுகிறார்கள் அந்தக் கூலிகள். அவர்கள் எவ்வளவோ கெஞ்சியும் போலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்படுகின்றார்கள். அவர்களின் துயர்வெகுநாட்களாய் என்னை அலைக்கழித்தபடி இருந்தது. ரோமியோ யூலியற் துயரத்தைவிடத் துயரமல்லவா! ஆம் என் கனவுகளின்மீது ஒரு இடி முழக்கமாய் ஜெயகாந்தன் விழுந்தார். பிற்காலத்தில் அவரிடமிருந்தும் விலகல் நேர்ந்தது. ஆயினும் 'ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்', 'ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்' இன்றும் பிடித்தமானவைதான்.

இதன் தொடர்ச்சியாகத்தான் புதுமைப்பித்தனின் 'காஞ்சனை', சுந்தர ராமசாமியின் 'அக்கரைச் சீமையிலே' ஆகிய தொகுதிகள் இன்றைய எனது இலக்கிய நிலைக்கு அழைத்துவந்து நிரந்தரமாகத் தம்முடன் தங்கவைத்துக்கொண்டன. காஞ்சனை தொகுதியிலுள்ள முன்னுரையும் பல கதைகளும் இன்றும் அதன் வீரியத்துடன்தான் இருக்கிறது. தொடர்ந்து கு.பா.ரா, நா.பிச்சமூர்த்தி, மௌனி போன்றோர்களை எனது வாசிப்பின் எல்லைக்குள் வைத்துக்கொண்டேன். எங்கள் காலத்தில் மௌனி பெயரை அறிந்து வைத்திருத்தல் என்பதே நவீன இலக்கியத் தகுதிக்குச் சான்றாக இருந்தது. அப்போது என்னிடம் மௌனியின் கையெழுத்துடனும் தர்மு சிவராமுவின் முன்னுரையுடன் கூடிய 'மௌனி கதைகள்' தொகுப்பு இருந்தது. இவரது'எவற்றில் நடமாடும் நிழல்கள் நாம்' என்ற வரி மிகப் பிரபலமானவை. இந்த வரிகளில் இளம் மனம் கிறங்கிக் கிடந்தது. இன்று அப்படி இல்லை. அவை சேக்பியரின் 'மாக்பெத்'இல் இருந்து பெற்றவை என்பதுதான். கு.பா.ரா.வின் கதைகள் உணர்வின் கொந்தளிப்புக்களால் ஆனவை. பெண்களின் துயரங்களைத் தேர்ந்தச் சொற்களால் செதுக்கியவர். சுந்தர ராமசாமியும் ஜெயகாந்தனும் சமகாலத்தவர்களும் கட்சிக்காரர்களும்தான். அதனால் இருவர் கதைகளிலும் ஒரு பொதுப்போக்குக் காணப்பட்டன. சு.ரா. மார்க்சிய ஈடுபாட்டிலிருந்து விலகிக்கொண்டபின்னர் படைப்புலகு சார்ந்து, களிம்பு படர்ந்த தோலை கழற்றி வீசிவிட்டு புதுப்பொலிவுடன் நகரும் நாகம்போல், மன அடுக்குகளின் தளங்களில் பயணித்தார். இத்துடன் கு.அழகிரிசாமி. தே.மு.சி, ரகுநாதன், கிருஷ்ணன் நம்பி, ஜி.நாகராஜன் தி.ஜானகிராமன் எனவும் அதன் தொடர்ச்சியான தலைமுறைகளுடனும் பயணித்துக்கொண்டிருக்கிறேன்.

மு.வரதராசன், நா.பார்த்தசாரதி போன்றவர்களை வாசித்த காலங்களில்தான் ஈழ இலக்கியங்களிலும் ஈடுபாடு ஏற்பட்டது என நினைக்கிறேன். டொமினிக் ஜீவா என்ற பெயரை அவரது படைப்புகளை வாசிப்பதற்கு முன்னரே அறிமுகமாகியிருந்தது. அவர் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற செய்தி அதற்குக் காரணமாக இருக்கலாம். அப்போது 'காலத்தின் குரல்கள்' என்ற பெயரில் இரண்டு மெலிந்த சிறுகதைத் தொகுதிகள் கைகளில் கிடைத்தன. நாம் காணாத களத்தின் தொலைதூர மனிதர்களுக்குப் பதிலாக, அறிந்த மனிதர்கள் நம்ம மனிதர்கள் அறிந்த இடங்களின் அறிந்த பேச்சோசையுடன் எம்முன் நடமாடினார். அதன்பின்னர்தான் டொமினிக் ஜீவா, கே . டானியல், எஸ். பொன்னுத்துரை, வ.அ. இராசரத்தினம், செ. கணேசலிங்கம், கனக செந்திநாதன், எனப் பல பெயர்களும் அவர்கள் படைப்புக்களும் அறிமுகமாயின. அதன் பின்னர்தான்ஈழத்து இலக்கியத்தின் மும்மூர்த்திகள் என அறியப்பட்ட சம்பந்தர், சி. வைத்தியலிங்கம், இலங்கையர்க்கோன் போன்றவர்களின் படைப்புக்கள் நோக்கிய தேடல் அமைந்தது. இந்த வாசக வேட்கைக்கு 'யாழ் பொதுசன நூலகம்'தான் அட்சய பத்திரமாய் அமைந்தது.

அடுத்து செயற்பாட்டாளனாகவா! .....ம் ..... அப்படிச் செயற்பாட்டாளராக நான் இருந்ததாக ஞாபகம் எதுவும் இல்லை .

**உங்களுக்குப் பிடித்த ஈழத்து எழுத்தாளர்களாக யாரைக் குறிப்பிடுவீர்கள்?**

நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். இதுவும் மீள்நோக்கிய நீண்ட பயணம்தான். பிடித்தவர்கள் என்பது எனது வாசிப்பு அனுபவத்தின் தெரிவுதான். நான் வாசிக்காத பல படைப்பாளிகள் உண்டு என்பது இயல்பே. எனது தெரிவில், மாறுபடுபவர்கள் இருப்பதும் இயல்பே. மனிதனுக்கு மறதியும் உண்டு. சரி. இலக்கியத்தில் ஆர்வம் கொண்டிருந்த காலத்தில் முன்னர் குறிப்பிட்டதைப்போல் மார்க்சிய எழுத்தாளர்களே பரவலாகப் பேசப்பட்டார்கள். டொமினிக் ஜீவா, கே. டானியல், எஸ்.அகஸ்தியர், செ.கனேசலிங்கன் உட்பட பலர் இருந்தாலும் இவர்களுள் படைப்பிலக்கியரீதியில் எனக்குப் பிடித்தமானவர் எஸ்.பொன்னுத்துரையே. அவரது 'வீ', 'ஆண்மை', 'சடங்கு', 'நினவிடை தோய்தல்'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவைகள் முக்கியமானவை. ஆனால் இவரது விமர்சனமுறை மிகுந்த எரிச்சலை ஏற்படுத்துபவை. க.கைலாசபதி, கா.சிவத்தம்பி ஆகியோர்மீது விமர்சனம் என்ற பெயரில் இவர் சொல்லியவை அவதூறுகளும் வசையும் உருவக் கேலியும்தான். வ.அ.இராசரத்தினத்தின் ஆரம்பகாலச் சிறுகதைகளில் புதுமைப்பித்தன் பாதிப்பு புலப்படுகிறது. 'துறைக்காரன்' 'ஒரு காவியம் நிறைவு பெறுகிறது' ஆகிய குறுநாவல்கள் இப்பவும் வாசிக்க விருப்பம்தான். அதிகம் பேசப்பட்ட 'தோணி' சிறுகதை எனக்கு அவ்வளவு பிடித்தமானதாக இல்லை. மலையகத்தின் சி.வி.வேலுப்பிள்ளையின் 'இனிப் பாடமாட்டேன்,' 'வீடற்றவன்' ஆகியவையும் இவர்களுக்குப் பின்வந்த தெளிவத்தை யோசப்பும் முக்கியமானவர்கள். பின்னையவரின் 'நாமிருக்கும் நாடே' நல்ல தொகுதி. இவரது 'குடை நிழல்' நாவலில் ஒரு கங்காணி பற்றிய அலாதியான சித்தரிப்பு உண்டு. ஜீவா, டானியல் போன்றோரின் சிறுகதைகள் எனது ஆரம்பகால வாசிப்பில் ஏற்படுத்திய பாதிப்பைப் பின்னர் ஏற்படுத்தவில்லை ஜீவாவின் 'எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்' என்ற தன்வரலாறு மிகுந்தத் துயரை ஏற்படுத்தியது. செ. கணேசலிங்கத்தின் 'நீண்ட பயணம்' நாவலும் முன்னர் ஏற்படுத்திய பாதிப்பை பின்பு ஏற்படுத்தவில்லை. டானியலின் நாவல்களில் ஒப்பீட்டளவில் 'கானல்' நல்ல நாவல். இவர்களுக்குப்பின் வந்த மார்க்சிய எழுத்தாளர்களான செ.யோகநாதன், செ. கதிர்காமநாதன். ஆகியோர் விருப்பமானவர்கள். பெனடிற் பாலன், நீர்வைப் பொன்னையன் கதைகள் பாடசாலையில் வாத்தி யாயர் முன் இருக்கும் உணர்வினையே ஏற்படுத்தியது. மு.தளையசிங்கத்தின் 'தொழுகை', 'வெளி' ஆகிய சிறுகதைகள் பிடித்தமானவை. இவரது 'ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி' ஒரு பெரிய பாச்சலை அக்காலத்தில் நிகழ்த்தியது. சண்முகம் சிவலிங்கம், எம்.ஏ.நுஃமான் ஆகியோர் விமர்சனத்தில் படைப்புச் சார்ந்து வளமான மார்க்சியப் பார்வையை அளித்தவர்கள். சண்முகம் சிவலிங்கம் சில நல்ல சிறுகதைகள் எழுதியுள்ளார். 'காண்டாவனம்' தொகுப்பாக அவர் மறைவின் பின்னர்தான் வெளிவந்துள்ளது. நல்ல தொகுப்பு.

**கவிதைகளில்...**

சந்தேகமில்லாமல் மஹாகவி, முருகையன், த.இராமலிங்கம், நீலாவாணன், தருமு சிவராம், மு.பொன்னம்பலம், சண்முகம் சிவலிங்கம் எம்.ஏ. நுஃமான் ஆகியோர்களே. மஹாகவியின் 'பொருள் நூறு'எனக்குப் பிடிக்கவில்லை. தர்மு சிவராமின் கவிதைத் தொகுப்பில் பாதிக் கவிதைகள் பிறர்மீதான வசைகள்தான். அவரது ஆணவத்தால் கவித்துவத்தை இழந்த கவிதைகள் அவை. மிகுதிக் கவிதைகள்; கவித்துவமானவை. அவர் பெயரை எக்காலத்திலும் சொல்லிக்கொள்ளும் கவிதைகள். தமிழ்நாட்டில் சிலர் அவரை விமர்சனம் இல்லா விக்கிரமாக்கதொழுகிறார்கள்.

**உங்கள் சம காலப் படைப்பாளிகள்...**

இதிலும் பலர் இருக்கிறார்கள். சிலரைச் சில கதைகளுக்காகப் பிடிக்கும். திரும்பத் திரும்ப வாசித்ததும் தொகுதிகளாக விரும்புவதும் ரஞ்சகுமாரின் 'மோகவாசல்' உமா வரதராஜனின் 'உள்மன யாத்திரை' ஆகியவைதான். ரஞ்சகுமாரின் 'கோசலை' சிங்கிஸ் அஸ்மத்தோவின் 'அன்னை வயல்' நாவலின் பாதிப்பு இருப்பதாக உணர்ந்தேன். 'காலம் உன்கொரு பாட்டெழுதும்' 'சுருக்கும் ஊஞ்சலும்' எனப் பல என்னில் அழுத்தமாகப் பதிந்த சிறுகதைகள். கடைசியாகக் குறிப்பிட்ட சிறுகதை 'அலை' பிரசுரத்திற்காக வாசித்தபோது அசந்து போனேன். உமா வரதராஜனின் 'எலியம்'பின்னர் எழுதிய 'அரசனின் வருகை' ஆகியவை வேறு லெவல். அழகிய மொழிநடை வாய்க்கப்பெற்றவர். இதுதவிர அ.யேசுராசாவின் 'ஒரு இதயம் வறுமை கொண்டிருக்கிறது', 'தொலைவு' (இக்கதை என்னைப் பற்றியது) சாந்தனின் 'கிருஷ்ணன் தூது.' 'வடிகால்' என இன்னும் சில முக்கியமானவை. 'ஒட்டுமா' நாவலையும் சேர்த்துக்கொள்ளலாம். சாந்தன் கதைகளில் ஒரு கதாநாயகத் தனம் எப்போதும் மேலோங்கியிருக்கும். 'அவன் ஒரு ஹீரோ' என்று ஒரு கதைகூட எழுதியதாக ஞாபகம். குப்பிளான் ஐ.சண்முகத்தின் பிற்பட்ட கதைகள் எனக்குப் படிக்கக் கிடைக்கவில்லை. 'வேட்டைத் திருவிழா' நல்ல கதை. க. சட்டநாதனின் கதைகளில் படித்தவற்றில் ஞாபகம் இருப்பவற்றில் 'பக்குவம்', 'தாம்பத்தியம்' நல்ல சிறுகதைகள்தான். நந்தினி சேவியர் எம் காலத்தில் நல்ல சிறுகதைகளை எழுதியவர். அவருடைய 'அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்', 'தொலைந்து போனவர்கள்' அவரது குறிப்பிடக்கூடிய கதைகள். அல் அஹமத் என்று ஒரு மலையகப் படைப்பாளி சிறப்பான கதைசொல்லி. விருப்பமானவரும்கூட. தேவகாந்தன் பல நாவல்கள் எழுதியுள்ளார். அதில் 'கனவுச் சிறை'பற்றித் தனியே எழுதப்படவேண்டியது. 'கந்தில் பாவை' முக்கியமான நாவலாக அமைந்திருக்க வேண்டியவை. தேவகாந்தனின் தமிழ் வித்துவத்தாலும் சிறிய கவனப் பிழையாலும் நாவலுக்குத் தீங்கிழைத்துவிட்டார். கேசவனின் 'புதியதோர் உலகம்' குணா கவியழகனின் 'நஞ்சுண்ட காடு' ஆகியவையும் குறிப்பிடக்கூடியவையே. தமிழ்நதியின் 'மாயக் குதிரை' சிறுகதை அவரை என்றும் தாங்கிப்பிடிக்கக்கூடியது. காலம் செல்வத்தின் 'எழுதித் தீராப் பக்கங்கள்'. ஜயகரனின் 'ஜயகரன் சிறுகதைகள்' பிடித்தமான தொகுதிகள். செல்வத்தின் 'சொற்களில் சுழலும் உலகம்' முதல் தொகுதிபோல் கவரவில்லை.

கவிதையைப் பொறுத்தவரை பலர் இருக்கிறார்கள் 'மரணத்துள் வாழ்வோம்' தொகுப்பைப் பார்த்தாலே தெரியுமே! என்னைப் பொறுத்தவரையில் சு.வில்வரத்தினம் ஜெயபாலன், சேரன் ஆகியோரைச் சொல்லலாம். சேரனின் ஆரம்காலக் கவிதைகள் கவர்ந்த அளவிற்கு இப்போதய கவிதைகள் கவர்வதில்லை. கவிதையைவிட அதில் புத்திசாலித்தனம் அதிகம். யேசுராசாவின் 'நல்லம்மாளின் நெருப்புச் சட்டி' 'சங்கம்புளையும் மாயாகோஸ்கியும்' எப்போதும் பிடிக்கும் கவிதைகள். ஆழியாள், அனார், பஹிமா ஜான், ஊர்வசி ஆகியோர்பிடித்தமானவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவராசா கருணாகரன் புலிகளில் இருந்த காலங்களில் எழுதிய கவிதைகளைவிடச் சமீப காலங்களில் நல்ல கவிதைகளை எழுதிவருகிறார். இவரது 'காலநிலை அரசியல் சார்புகள்' எனக்குப் பிடிப்பதில்லை.

**இப்போது எழுதும் இளைஞர்கள் பற்றிய அபிப்பிராயங்கள் உண்டா?**

சோபாசக்தி மிக முக்கியமான படைப்பாளி. 'கொரில்லா'தான் அவரது கிளாசிக். அதற்குப் பின் பல நாவல்கள் வந்திருந்தாலும் முதல் நாவல் எல்லையை அவை எட்டவில்லை என்றே நினைக்கிறேன். அவரது கடைசியாக வந்த நாவல் நல்லதெனப்பலரும் கூறுகிறார்கள். இன்னும் அதை வாசிக்கவில்லை. அவருக்குச் சமமாக சயந்தனின் 'ஆறாவடு' நாவலைக் குறிப்பிடலாம். ஆனால் சொல்முறையில் மொழியின் லாவகத்திலும் சோபாசக்தி செழுமை கொண்டவர். சயந்தன் மேலும் இரு நாவல்கள் எழுதியுள்ளார். அவைபற்றி நீண்ட பதிவு தேவைப்படுவதால் பிறிதொரு சமயம் தனியாக எழுதப்படும். விமல் குழந்தைவேலின் 'வெள்ளாவி' மற்றும் 'கசகறணம்' ஆகியவை முக்கியமானவை.

இப்போது எழுதுபவர்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர்களில் தெய்வீகன், அனோஜன் பாலகிருஷ்ணன், இளங்கோ ஆகியோர்கள் குறிப்பிடத்தகுந்தவர்கள். தெய்வீகனது 'அவனை எனக்குத் தொரியாது.' 'புலரியில் மறைந்த மஞ்சள் கடல்.' 'பொதுச்சுடர்' ஆகிய சிறுகதைகளைப் உதிரியாகப் படித்துள்ளேன். முதல் சொன்ன கதையைப் படித்தவுடன் 'யார்றா இவன்' என்ற வியப்புத்தான் ஏற்பட்டது. மிலான் குண்டராவின் நாவல்களை வாசிக்கையில் என்னுள் ஏற்படும் மின்னல்கள், இவரை வாசிக்கையிலும் ஏற்படுவதுண்டு. இரு நாவல்கள் எழுதியிருக்கிறார். செல்வத்திடம் கேட்கவேண்டும். அனோஜனது மூன்று தொகுதிகள் வந்துள்ளன. முதல்தொகுதி தவிர மற்றயவையைப்படிக்கவில்ல. நல்ல படைப்பாளிக்குரிய கூறுகளைக் காணமுடிகிறது. 'யானை' ஆளுமைமிக்க படைப்பாளியாக அவரை முன்னிறுத்துகிறது. இவரது விமர்சனங்களில் இவர்முன் யாரோ நிற்கும் பதட்டம் தெரிகிறது. வாசு முருகவேலின் 'ஜப்னா பேக்கரி' நாவல் பலரது வெறுப்புக்கு உள்ளானது. அது அரசியல் சார்ந்த வெறுப்புத்தான். என்னளவில் படைப்பு ரீதியாக குறிப்பிடக்கூடிய நாவல்தான். ஆயினும் ஒரு அத்தியாயத்திற்கும் அடுத்த அத்தியாயத்திற்குமான கால இடைவெளி, சம்பவங்களுக்கு இடை—யிலான தொடர்ச்சியை ஏற்படுத்தத் தவறிவிடுகிறது. கருத்துரீதியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்த அல்லது போராட்டத்திற்கு எதிராகப் போராடுவதற்காக யாழ் முஸ்லிம்கள் ஆயுதங்கள் சேகரித்து வைத்திருந்தார்கள் என்ற புலிகளின் குற்றச்சாட்டு உண்மை என்ற வகையில் சம்பவங்கள் விவரிக்கப்படுகின்றது. அது ஒரு நிருபிக்கப்படாதக் குற்றச்சாட்டு என்றே கருதுகிறேன். புலிகள் மட்டுமல்ல, ஆட்சி செய்வோர், அதிகாரம் உடையோர், செல்வாக்கு மிகுந்தோர்தங்கள் தவறுகளை நியாயப் படுத்துவதற்காக எதையும் கட்டமைக்கக் கூடியவர்கள். படைப்பாளிகள் படைப்புக்களுக்கு விசுவாசமாக இருக்கவேண்டுமே தவிர கட்சியின் நிலைப்பாட்டிற்கு அல்ல. முஸ்லிம்கள் தங்களை ஒரு தனித்த இனமாக அறிவித்துக்கொள்வதில் தவறு இருப்பதாக நான் கருதவில்லை. தமிழினம் சிங்கள மேலாதிக்கத்தின் கீழ் அடங்கியிருக்க முடியாது என்ற கருத்து சரி என்றால், தமிழர்களின் அதிகாரத்தின் கீழ் முஸ்லிம்கள் அடங்கி இருக்க முடியாது எனக் கூறுவது எவ்வாறு தவறாக இருக்கமுடியும்? தமிழர்களது முடிவுக்கு வரலாற்றுக் காரணங்கள் இருப்பதுபோல், முஸ்லிம் மக்களுக்கும் வரலாற்றுக் காரணங்களும் உண்டே. இந்த நாவலுக்கு சோபா சக்தி 'தமிழ் நாசி பேக்கரி' என்று எழுதிய விமர்சனம் நியாயமானது அல்ல.நாவலைப் பற்றிய மதிப்பீட்டைவிட அதற்கு வெளியே சிலரைத் திருப்திப்படுத்தும் விமர்சனமாக அமைந்திருந்தது.

ஈழத்தில் இருந்து வெளிவரும் புதிய படைப்புகள் இங்கு (கனடாவில்) கிடைப்பது அரிதாகவே இருக்கிறது. 'புதிய சொல்' இதழ் செல்வம் மூலம் உதிரியாகக் கிடைக்கிறது. அதிலுள்ளபல சிறுகதைகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை. பலர் 'கோணங்கி'யின் பாதிப்பில் எழுதுவதாக கருதுகிறேன். கோணங்கியின் படைப்புக்களையேபுரிந்துகொள்ளும் முயற்சியில் பலமுறை தோற்றுப்போயிருக்கிறேன். இந்த நிலையில் நான் அவைகள் பற்றி என்னதான் கூறிவிடமுடியும்.

**மு.தளையசிங்கம், ஏ.ஜே. ஆகியோர்களுடனான சந்திப்பு. நெருக்கம் குறித்தும் அவர்கள் உங்கள்மீது ஏற்படுத்திய தாக்கம் பற்றியும் சொல்லுங்கள்?**

முதலில் ஏ.ஜே. பற்றிக் கூறுகிறேன். இளவயதில் படைப்பாளர்களை அறிவதிலும் சந்திப்பதிலும் உரையாடுவதிலும் ஆர்வம் அதிகமாக இருந்தது. ஏ.ஜே.இன் வீடு எனது வீட்டிற்குச் சிறிது தூரத்தில்தான் இருந்தது. அந்தப் பெரிய வீட்டைக் கடந்து செல்கையில், வீட்டின் விறாந்தையில் ஏ.ஜே. புத்தகம் வாசித்துக்கொண்டிருப்பதைப் பாத்திருக்கிறேன். ஆங்கிலத்தை வீட்டு மொழியாகக் கொண்ட இவரது உயர்குடிச் சூழல் என்னிடம் அந்நிய உணர்வை ஏற்படுத்தி இருந்தது. ஏ.ஜே. இலக்கியக் கூட்டங்களில் எப்போதும் பின் வரிசையில்தான் இருப்பார். இவருடன் கதைக்கவேண்டும் என்ற ஆவலும் தயக்கமும் இருக்கும்.

எழுபதுகளில் ஊரிலுள்ள 'நெய்தல் வளர்பிறை நாடக மன்றம், தமது ஆண்டு விழா மலர் ஒன்றை வெளியிட என்னை அணுகினர். அதை ஒரு நவீன இலக்கிய மலராக வெளியிடுவதற்காக முக்கிய படைப்பாளர்கள் பலரை அணுகினேன். படைப்புகளைப் பெறுவதில் கொழும்பில் வேலை செய்துகொண்டிருந்த நண்பர் அ. யேசுராசாவும் உதவினார். ஒரு பகற்பொழுது, யாழ் பிரதான வீதியில் ஏ.ஜே. புத்தகங்களுடன் வந்துகொண்டிருந்தார். துணிந்து அணுகினேன். மலருக்கு ஒரு ஆக்கம் தரும்படி கேட்டேன். இதைச் சற்றும் எதிர்பாராமல் திகைத்த நின்ற அவர், தனது அகன்ற நெற்றியில் துளிர்த்திருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியர்வையைத் துடைத்தபடி உடனடியாக எதுவும் எழுதமுடியாது என்றார். ஏமாற்றத்துடன் நின்ற என்னைத் திருப்திப்படுத்தும் விதமாக மலரைக் 'கூட்டுறவுப் பதிப்பகத்தில்' பதிப்பித்தால் அச்சுப் பிழைகளைத் திருத்தி உதவுவதாகக் கூறினார். காரணம் அப்போது அவரும் 'கூட்டுறவு' என்றொரு மலரை அங்கு பதிப்பித்துக்கொண்டிருந்தார்.

அன்று தொடங்கிய எங்கள் நட்பு அவரது வாழ்வு முடியும்வரையும் நீடித்தது. பண்ணைப் பாலத்தில் எம் காலடியருகே கேட்கும் அலையோசையுடன் அந்தியின் அடிவானை லயித்தபடியும் ரீகல் தியேட்டர் முன்னாலுள்ள தேனீர் கடையிலும் 'யாழ்ரா' ஹொட்டலிலும், அவர் வீட்டு விறாந்தையிலும் அரசியல், இலக்கியம், நாடகம், சினிமா எனக் கிளைக்கொண்டு விரிந்த உரையாடல்கள் மகிழ்வுடனும் துயருடனும் நினைவுகொள்ளக் கூடியவையே. நான் லண்டனில் இருக்கும்போது இருவரும் கடிதங்கள் மூலம் தொடர்பைத் தொடர்ந்தோம். அவர் கடிதங்களைப் பத்திரமாக வைத்துள்ளேன்.

மு.தளையசிங்கம் பற்றிச் சொல்வதற்குமுன் சிறு முன்னுரை ஒன்று இருக்கிறது. ஆண்டு ஞாபகம் இல்லை. அன்று ஜீவாவின் 'மல்லிகை' சிறப்பு மலர் பற்றிய கருத்தரங்கு வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. நானும் உரையாற்றிய ஞாபகம். கூட்டம் முடித்தபின் சிலர் நின்று உரையாடுவது வழக்கம். அங்குதான் மு.பொன்னம்பலம் அறிமுகமானார். மு.தளையசிங்கத்தின் தம்பி என்றுதான் அறிமுகப்படுத்தப்பட்டார். இருவரையும் பெயரளவில் அறிந்திருந்தேன். 'புது யுகம் பிறக்கிறது' சிறுகதைத் தொகுதியை வாசித்திருந்தேன். கூடவே 'கலைச்செல்வி' இதழ் நடத்திய நாவல் போட்டியில் மு.த.வின் 'ஒரு தனிவீடு' முதல் பரிசு பெற்றதையும் அறிந்திருந்ததால் மு.பொன்னம்பலத்துடன் மிகவும் ஆர்வமாக கதைத்தேன்.

கு.அழகிரிசாமியின் மறைவிற்குக்காக, டொமினிக் ஜீவா அஞ்சலிக்கூட்டம் ஒன்றைக் கஸ்தூரியார் வீதியிலுள்ள, ஒரு கடையின் மாடியில் நடத்தினார். அங்கு மு.பொ.வுடன் உரையாடிக் கொண்டிருக்கையில் ஜீவாவுடன் தடித்த மீசை கொண்ட மெலிந்த ஒருவர் உரையாடிக்கொண்டிருந்தார். யாரென வினவினேன். அண்ணர் என்றார். ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்துக்கொண்டிருந்தேன். கூட்டம் முடிந்தபின் அவருடன் கதைத்தேன். அப்போது மு.த.வின் 'போர்ப்பறை' மு.போ.வின் 'அது' ஆகிய நூல்கள் வெளியிடவிருப்பதாகவும் 'அது' கவிதைத் தொகுதி பற்றி பேசும்படியும் கேட்டார். சம்மதித்தேன்.

'சத்தியம்' பத்திரிகையை வெளியிடுவதற்காக மு.பொ. ஸ்ரான்லி வீதியிலுள்ள 'முருகன் ஹார்ட்வேர் ஸ்ரோர்' கடையின் மாடியில் தங்கியிருந்தபொழுது அங்கு அடிக்கடி செல்வேன். சிலவேளைகளில் மு.த.வும் அங்குவருவார். நான் வெளியிட இருந்த 'நெய்தல்' மலருக்கு இருவரிடமும் படைப்புகள் வாங்கினேன். இவ்வாறு வேர்விட்ட நட்பு,



புங்குடுதீவு சென்றும் அவர்களைச் சந்திப்பதுவரை வளர்ந்தது. மு.த. வீட்டில்தான் மு.பொ.வும் தங்கியிருந்தார். சிலவேளைகளில் நான் அங்கு தங்கி மறுநாள் வருவதுண்டு. அங்கு சு.வில்வரத்தினமும் இணைவதுண்டு.

ஏ.ஜே., மு.த. இருவரும் உண்மை மனிதர்களாக இருந்தார்கள். இருவரும் ஈழத்து இலக்கியத்தின் மிகப்பெரும் ஆளுமைகள். ஏ.ஜே.யை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு அமையும். அவர் ஆங்கில இலக்கியம் சார்ந்து பல்வேறு தகவல்களைக் கூறுவார். மேற்கத்திய இலக்கியங்கள் மீதான ஈர்ப்பையும் ஏற்படுத்தியவர். அதிலும் குறிப்பாக புகழ்பெற்ற பல நூல்களைப் பரிந்துரைப்பார். அவர் மறைந்தபோது 'காலம்' இதழில் அவர் நினைவாக சிறு கவிதை எழுதினேன். அதில் சில வரிகள் இவ்வாறு வரும்

'மேற்கோரம் பூத்த
வனப்பின் நடுவிலும்
சிகரங்கள் வீழ்த்திய
செறிவின் அருகிலும்
வழிநடத்திய நட்பு'.

இருவரது இலக்கியம் மற்றும் பல்துறை அறிவும் ஆழமும் வியப்பை அளிப்பவை. ஏ.ஜே.இன் 'மத்து' மு.த.இன் 'போர்ப்பறை' ஆகியவை இருவரது விசாலமான எல்லைகளையும் ஆழத்தையும் புலப்படுத்துபவை. கலை, இலக்கியம் சார்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்கான தனித்த கருத்துநிலை கொண்டவர்கள். ஏ.ஜே. தனது நிலைப்பாட்டை விளக்குவார். திணிக்கமாட்டார். உனது கருத்து உன்னுடையது, எனது கருத்து இதுதான் என்ற துறவு மனநிலையுடன் விலகி நிற்பவர். மு.த. தனது கருத்துநிலை சார்ந்து நிறைய இறங்கி விவாதிப்பார். ஏ.ஜே. மார்க்சிய இலக்கியத்தில் பன்முகப் பார்வைகளுக்கு இடமளிப்பவர். மு.த. தமக்கான இலக்கியக் கோட்பாட்டை வகுத்தவர். அதற்காக விவாதித்தவர். ஏ.ஜே.பிறத்தியானாகி அவதானிப்பவர். மு.த. பிறத்தியான் உள்நுழையும் தேவையை வலியுறுத்தியவர். இவர்களுடனான நட்பு எனக்கு எப்போதும் பெருமை தருபவைதான்.

பாதிப்பு என்றால் இருவரின் பாதிப்பும் என்னில் இருக்கிறது என்றே கருதுகிறேன். தன்னை முன்னிறுத்தாது, பிறத்தியான் போக்கில் அவதானிக்கும் ஏ.ஜே.இன் பண்பு அதிகமாக என்னில் சுவறி—யிருக்கிறது என்றே நினைக்கிறேன். சிலவேளைகளில் பின்னயவர்போல் ஒதுங்கலை மீறியும் செயற்பட்டும் உள்ளேன். எனது கருத்து சரியா என்பதை என்னை அறிந்தவர்கள்தான் கூறவேண்டும்.

**சுந்தர ராமசாமிக்கும் உங்களுக்கும் இடையில் ஒரு குடும்ப நட்பு இருப்பதாக அறியப்பட்டிருக்கிறது. அது பற்றிக் கூறமுடியுமா?**

1982இல் 'அலை' இதழ் சார்ந்து நண்பர் பத்மநாப ஐயர் ஏற்பாட்டில் நான் தமிழகம் செல்ல நேர்ந்தது. மதுரை, சென்னை, நாகர்கோவில் என பல இடங்கள் சென்று இலக்கிய படைப்பாளிகளையும் சந்தித்தேன். அவ்வாறுதான் நாகர்கோவில் சென்று சுந்தர ராமசாமியைச் சந்தித்தேன். அவரது வீட்டின் மேல் மாடியில் நான்கு நாட்கள் தங்கி—யிருந்தேன். தமிழகம், ஈழம், கேரளம் சார்ந்த பல இலக்கிய உரையாடல்கள். நான் கலந்துகொண்ட ஒரு 'காகங்கள்' கூட்டமும் இடம்பெற்றது. பல இலக்கிய நண்பர்களின் நட்பும் அமைந்தது. எனக்கும் சு.ரா.வுக்குமான இலக்கிய நட்பு குடும்ப நட்பாக மாற ஈழத்தின் 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கை அமைந்தது. இந்த இராணுவ நடவடிக்கையினால் எனது மனைவி மக்கள் கடல்வழி தப்பி மண்டபம் அகதி முகாமில் தங்கியிருந்தனர். ஒரு தொலைபேசி உரையாடலில் சு.ரா.விடம் இதுபற்றிக் குறிப்பிட்டேன். அவர் எனது குடும்பத்தினரை தனது வீட்டிற்கு அழைத்து வந்து ஒரு வாரம்வரை அவர்களைப் பராமரித்தார்.

எனது குடும்பத்தினர் இந்தியாவிலிருந்து கனடா செல்வதற்கான அனுமதியைப் பெற்றுக்கொண்ட பின்னரும், இந்தியாவிலிருந்து வெளியேறுவதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வது சுலபமாக இல்லை. அங்கு நடந்த சில சம்பவங்களினால் ஈழத்தமிழர்கள் அடிக்கடி கைதுசெய்யப்பட்டுக்கொண்டே இருந்தனர். அவர்கள் வெளிவருவதும் சாத்தியமற்றதாக இருந்தது. எனவே இந்தச் சூழலில் இருந்து வெளியேறிவிட வேண்டுமென்று மனைவி அவதிப்பட்டுக்கொண்டே இருந்தார். எப்படியே கனடாப் பயணத்திற்கு அனுமதி எல்லாம் கிடைத்தும் விமானப் பயணச் சீட்டுக்களுக்கான பெரும் தொகைப் பணம் உடனடியாக அனுப்பி வைப்பது பிரச்சினையாக இருந்தது. இந்த நிலையில் சு.ரா.வுடனான ஒரு உரையாடலில் உற்சாகமிழந்த எனது குரலை அவதானித்த அவர்; அதற்கான காரணம் கேட்டார். கூறினேன். 'பணம் பிரச்சினையா' எனக் கேட்டார். காலம்தான் பிரச்சினை என்றேன். எதுவும் யோசிக்கவேண்டாம் நான் பார்த்துக்கொள்கிறேன் என்றார். நான்கு பேர்களுக்கான விமானப் பயணச் சீட்டுக்கள், உடைகள், மனைவிக்கு சில நகைகள், கைச்செலவிற்குப் பணம் இவைகளுடன் எனது குடும்பம் கனடாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

பணத்திற்கான எந்த உறுதிமொழியையும் பெற்றுக்கொள்ளாத நிலையில் இலக்கிய நட்பின் அடிப்படையில் இவை நடைபெற்றது. பலரது ஆபத்தான, துயரமான நிலையில் தன்னால் எதாவது உதவ முடியுமா என்பதுதான் சு.ரா.வின் முதல் சிந்தனையாக இருந்தது. இந்த இடத்தின் நான் இன்னொன்றையும் கூறவேண்டும். எனது குடும்பம் கனடா செல்வதற்கான ஏற்பாட்டில், சென்னையில் அவர்களைத் தனது வீட்டில் தங்கவைத்து, அவர்களுக்கான சகல ஏற்பாடுகளையும் செய்த மதிப்பிற்குரிய எஸ்.வி. ராஜதுரை அவர்களையும் நன்றியுடன் நினைவுகூருகிறேன்.

**அலை சஞ்சிகையின் ஆரம்பகால ஆசிரியர்களில் ஒருவராக இருந்துள்ளீர். ஆரம்பித்த நோக்கம் என்ன? 25ஆவது இதழுடன் நீங்கள் ஆசிரியர் குழுவிலிருந்து வெளியேறினீர்கள். அதன் பின்னணி என்ன?**

அக்காலங்களில் அமைப்புரீதியாக 'முற்போக்கு இலக்கிய வட்டம்,' 'யாழ் இலக்கிய வட்டம்' என்பவைதான் நான் அறிந்து இருந்தவை. முன்னயது மார்க்சிய இலக்கியக் கோட்பாடு சார்ந்தவை. இதிலும் மொஸ்கோ, சீனா என பிரிவுகள் இருந்தன. அவ்வாறு அல்லாதோர் யாழ் இலக்கிய வட்டத்துள் இயங்கினர். இதற்கு வெளியிலும் தனித்துப் பலர் இயங்கி வந்தனர். இரு இலக்கிய வட்டங்களிலும் அதிகம் பேசப்பட்டவர்கள் மார்க்சிய இலக்கிய வட்டத்தினர்தான். ஏனையவர்கள் அவ்வாறு இல்லை என்பது இதன் பொருள் அல்ல. அதிகம் எனக் கூறுவதைக் கவனத்தில் கொள்ளவும். விமர்சனத் தளத்தில் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி போன்றவர்கள் படைப்பாளிகளைவிடவும் மிகுந்த செல்வாக்குச் உடையவர்களாக இருந்தார்கள். அவர்களது ஆங்கில அறிவும் கலாநிதிப் பட்டங்களும் அதற்கு அரணாக இருந்தது. குறிப்பாக க.கைலாசபதி 'தினகரன்' பத்திரிகையின் ஆசிரியராக இருந்தமை அவரது செல்வாக்கிற்குக் கூடிய வலுக் கொடுத்தது. எனது பார்வையில் இருவருமே பேரரசர்களாகவே தெரிந்தனர். அவர்களது நன்மதிப்பையும் முன்னுரையையும் பெறுவதற்காகவே மார்க்சியப் பார்வையில் படைப்புகளைப் படைத்த சிலர் இருந்தனர். இலக்கிய வட்டத்தில் கனக செந்தில்நாதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்பியன் செல்வன் ஆகியோர் பேசப்பட்டனர். ஆனால் மேற்கூறிய இருவர் தரத்தில் இல்லை.

நவீன இலக்கியம் சார்ந்து தொடர்ந்த வாசிப்பும் தேடலும் விவாதங்களும் படைப்புகள் பற்றிய எனக்கான சுய மதிப்பீடுகளை உருவாக்கியது. அ.யேசுராசா, ஏ.ஜே. ஆகியோர்களுடனான நட்பு இதற்கு வாய்ப்பாக அமைந்தது. தனிப்பட்ட முறையில் மார்க்சியத்தில் விருப்புக் கொண்டாலும் படைப்புகள் சார்ந்து மார்க்சிய பேரரசர்களின் விமர்சன முடிவுகளுடன் இசைவுகொள்ள முடியவில்லை. அவர்கள் தமது கட்சி சார்ந்த படைப்பாளிகளைத் தவிர மற்றவர்களைக் கவனம் கொள்வதில்லை. எஸ்.பொன்னுத்துரை போன்ற ஒரு முக்கிய படைப்பாளியையே அவர்கள் விலக்கி வைத்திருந்தனர். இலக்கியம் சார்ந்து இது ஒரு தவறான அனுகுமுறையாகவே கருதினேன். ஆயினும் விதிவிலக்காகவும் உற்சாகம் அளிக்கக்கூடிய வகையில் மார்க்சியம் சார்ந்த சண்முகம் சிவலிங்கம். எம்.ஏ.நுஃமான், தமிழகத்து எஸ்.வி. இராஜதுரை போன்றோரது முடிவுகளுடன் இசைவுகொள்ள முடிந்தது. இந்தப் பார்வையில்தான் மேற்கூறியதைப்போல் செ.யோகநாதனையும் வ.ஆ.இராசரத்தினத்தையும் மஹாகவியையும் இ.முருகையனையும் நல்ல படைப்பாளர்களாக என்னால் கருத முடிந்தது. குறிப்பிடப்பட்டுள்ள பெயர்கள் ஒரு எடுத்துக்காட்டுகளே தவிர இவர்கள் மட்டும்தான் என்று அர்த்தம் அல்ல.

இந்தச் சூழ்நிலையில்தான் அ.யேசுராசா ஒரு இலக்கிய இதழ் வெளியிடும் ஆலோசனையை முன்வைத்தார். எங்கள் கருத்தை அழுத்தமாக வெளியிட அது ஒரு நல்ல களமாக இருக்குமென நினைத்து இணங்கினேன். அவர் கொழும்பில் இருந்தபடியால் 'அலை' ஆசிரியர் குழுவில் இணைந்திருந்த ஏனையவர்களுடன் கதைத்தார். 'அலை' தோற்றம் இவ்வாறுதான் ஆரம்பமாகியது. அதன் முதல் இதழின் ஆசிரியர் தலையங்கத்தின் ஒரு பகுதி சாகித்திய மண்டலப் பரிசுகள் பற்றிய விமர்சனம்தான். தரமான படைப்புகள் ஒதுக்கப்படுவது பற்றியும் தரமற்ற படைப்புகள் பரிசுபெறும் நிலைபற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'அலை' பற்றிய தோற்றத்தினை இன்று ஒரு விரிந்த தளத்தில் நோக்குவதாயின் இவ்வாறு கருதலாம். எழுபதுகளில் அதுவரை நிலவிவந்த பாராளுமன்றத் தமிழ் அரசியல்வாதிகளின் செயற்பாட்டில் அதிருப்தி அடைந்த இளைஞர்கள் தமக்கான புதிய அரசியல் வடிவத்தினைத் தேர்ந்தெடுத்தனர். யாழில் பல்கலைக்கழகத்தின் வருகையின் பின்னர்; 'அவைக்காற்று கலைக்கழகம்','நாடக அரங்கக் கல்லூரி' ஆகியன யாழ் நாடக மேடையேற்றத்தின் முகத்தையே மாற்றியமைத்தன. அவைபோலவே நவீன கலை, இலக்கியத்துறையில் அதுவரை நிலவிய கருத்து நிலை மாற்றத்தின் குறியீடாக 'அலை' அமைந்திருந்தது.

'அலை'யின் வெளியேற்றம் பற்றி நீங்கள் குறிப்பிடுவதுபோல் 'அலை' 25 இதழிலிருந்து அல்ல 24இல் இருந்து வெளியேறிவிட்டேன் என நினைக்கிறேன். குறிப்பிட்ட இந்த இதழிற்கு முற்பட்ட இரு இதழ்களில் வெளிவந்த சில படைப்புகள் வழக்கத்திற்கு மாறாக எனது கவனத்திற்கு வராமலேயே பிரசுரமாகியிருந்தன. தொடர்ந்த இதழின் படைப்புகளும் பார்வைக்கு வராமலேயே வெளிவந்திருந்தது. எனவே இணையாசிரியராகத் தொடர்ந்து இருப்பதில் எந்தவித அர்த்தமும் இல்லை. எனது முடிவை அ.யேசுராசாவிடம் தெரிவித்துவிட்டு விலகிக்கொண்டேன்.


**அலைக்கும் பேராசிரியர்கள் க.கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோருக்கும் குழுவினருக்கும் என்ன முரண்பாடு அல்லது பிரச்சினை?**

இலக்கியப் படைப்புகள் பற்றிய விமர்சனத்தில் க.கைலாசபதி, சிவத்தம்பி போன்ற மார்க்சியர்களின் விமர்சனங்களுடன் இசைவுகொள்ள முடியவில்லை. அவர்கள் கட்சி சார்ந்து படைப்புக்களின் தரம் பற்றித் தீர்மானிக்கின்றனர். சில முக்கியமான படைப்பாளிகளான எஸ்.பொ.மஹாகவி போன்றவர்களை முதன்மைப்படுத்தவில்லை. அது அவர்களது கட்சி சார்ந்த முடிவுகளுக்கும் தேவைகளுக்கும் உதவலாம். இலக்கித் தரம்சார்ந்த முடிவுகளுக்கு அவை உதவப்போவதில்லை. முன்னர் குறிப்பிட்டதுபோல் 'அலை' முதலாவது இதழ் ஆசிரியர் தலையங்கத்தில் 'தரமான படைப்புகள் ஒதுக்கப்படுவது பற்றியும் தரமற்ற படைப்புகள் பரிசு பெறுவது பற்றியும்' குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நிலைப்பாட்டை அலை தொடர்ந்து விமர்சித்து வந்துள்ளது. அதற்கு அப்பால் அவ்விரு பேராசிரியர்களது கல்விப்புலம், விரிந்த இலக்கிய அறிவுப் பரப்பு சார்ந்து எனக்கு மதிப்பு இருந்தே வந்தது. இருக்கிறது.

அவர்களைத் தமது வழிகாட்டியாகக் கருதியவர்களுக்கு எம்மீது கடுமையான கோபம் இருந்தது. தமது மதிப்பிற்குரிய வழிகாட்டிகள் மீது கடுமையான விமர்சனங்களை வைத்ததுதான். பின்னர் சி.மௌனகுரு, மௌ, சித்திரலேகா. எம்.ஏ. நுஃமான் ஆகியோரின் 'இருபதாம் நூற்றாண்டு ஈழத்து தமிழ் இலக்கியம்' நூல் பற்றி மௌனகுரு அவர்கள் வீட்டில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின் அங்கு தெரிவிக்கப்பட்ட கருத்துகளின் அடைப்படையில் க.கைலாசபதி அவர்கள் 'சமர்' இதழில் 'முற்போக்கு இலக்கியமும் அழகியல் பிரச்சினைகளும்' என்றொரு கட்டுரை எழுதினார். அக்கட்டுரை பற்றிய எனது கருத்துகளாக 'புதிய திராட்சை இரசமும் பழைய சித்தையும்' என்ற கட்டுரையும் அ.யேசுராசாவால் 'குருக்களை மிஞ்சும் சீடப்பிள்ளை' என்ற கட்டுரையும் சமர் இதழுக்கு அனுப்பப்பட்டது. அவை பிரசுரிக்கப்படவில்லை. அவை பின்னர் அலை—13 இதழில் வெளிவந்தது. அவை தமிழிலும் பின்னர் Lanka Guardian என்ற ஆங்கில மாத இதழிலும் தமிழ், சிங்கள இலக்கியவாதிகள் இடையில் மிகுந்த வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கட்சி சார்ந்த மார்க்சியவாதிகளாலும் அதன் ஆதரவாளர்களாலும் நாம் மார்க்சிய எதிர்ப்பாளர்கள், அழகியல்வாதிகள், கருத்துமுதல்வாதிகள் எனப் பலவாறாக குறிப்பிடப்பட்டோம். அவை கருத்து முரண்பாடுகள்தான். பிரச்சினை என எதுவுமில்லை. அதேவேளைபல மார்க்சிய இலக்கியவாதிகளும் விமர்சகர்களும் எமது கருத்துநிலையை ஆதரித்தார்கள்.

**உங்கள் முதல் நூலான 'அம்பா' தொகுதியின் பின்னணி பற்றி... இதன் பாடல் பற்றிய மெட்டுக்கள் பதிவில் உள்ளதா?**

வறுமை காரணமாக இளவயதிலேயே நான் கடற்தொழிலிற்குச் செல்ல நேர்ந்தது. பாடசாலை விடுமுறைகளின்போதும் அவ்வாறு செல்வது வழக்கம். கடற்றொழிலில் பல வகைகள் உண்டு. இங்குக் குறிப்பிடுவது 'கரைவலைத்' தொழிலையே. இதற்குப் பெரிய படகும் குறைந்தது இருபது இருபத்தைந்து ஆட்கள்வரையும் தேவை. நான் சென்ற காலத்தில் ஊரில் குறிப்பாக நான்கு கரைவலைத் தொழில்கள் இருந்தன. இவற்றைச் சொந்தமாக வைத்திருப்பவரைச் சம்மாட்டி என அழைப்பர். இதில் ஒரு சம்மாட்டியாரில் தொழிலில் எனது பெரியய்யா (பெரிய தகப்பன்) செல்வார். அவர்தான் என்னைத் தன்னுடன் கூட அழைத்துச் சென்றார். இந்தத் தொழிலில் கரைவலையைக் கடலில் இருந்து கரைக்கு இழுக்கும்போது தொழிலாளர்கள் களைப்புத் தெரியாமல் இருப்பதற்காகப் பாடல்கள் பாடுவது வழக்கம். இப்பாடல்களே 'அம்பா' என்று அழைக்கப்படுகிறது.

இந்தப் பாடல்கள் தலைமுறை தலைமுறையாகப் பாடப்பட்டு வருபவை. இவை உழைப்பின் போதான உடலின் அசைவுக்கும் விரைவுக்கும் ஏற்ப பாடும் இராக முறைகள் மாறுபடும். ஓத்திசைவுதான் முக்கியம். உடலின் அசைவோடுப் பாடலின் இசையும் ஒத்திசைவு கொண்டு இயங்கும். இவற்றைத் தொடர்ந்து கேட்கும்போது என் மனதில் உதித்த எண்ணம் இதுதான். இப்பாடல்கள் கடலோடுப் பிறந்துக் காற்றோடு மறைகிறதே என்ற ஏக்கம் அலைக்கழித்தது. அவற்றைப் பதிவு செய்ய விரும்பினேன். பல பாடல்கள் எனக்கு மனப்பாடமாகவும் இருந்தது. அவற்றைப் பதிவுசெய்தும் நன்றாகப் பாடல்கள் தெரிந்த பலரிடம் நேரடியாகச் சென்று கேட்டு எழுதியும் சேகரித்துக்கொண்டேன். பலர் இதெல்லாம் ஒரு பாட்டென்று எழுதுவதா என மறுத்துவிட்டார்கள். அவர்களிடம் தொடர்ந்து அரியண்டம் கொடுத்துத்தான் பெற்றுக்கொள்ள முடிந்தது. அவர்கள் மறுத்ததற்கும் ஒரு காரணம் உண்டுதான். அனேக பாடல்கள் தூசணங்களால் நிறைந்திருந்தன. தூசணங்களைத் தவிர்த்தே அம்பா நூலாக வெளிவந்தது. அவ்வாறு தவிர்த்திருக்கத் தேவையில்லை என எம்.ஏ.நுஃமான் அவர்கள் இதன் வெளியீட்டு விழாவில் கூறினார்.

இந்தப் பாடல்களையும் மெட்டுக்களையும் கொண்டு திருமறைக் கலாமன்றத்தினரால் சிறு மேடையேற்றம் ஒன்று செய்யப்பட்டது. அதை நான் பார்த்துள்ளேன். நான் லண்டன் வந்தபின்னர்; பரீசில் ஒரு மேடையேற்றம் இடம் பெற்றதை அறிவேன். ஒலிவடிவம் கொண்ட பதிவுகள் உண்டா எனத் தெரியவில்லை. இதுதவிர வேறு சில கடற்கரைப் பகுதிகளைக் கொண்ட அம்பாப் பாடல்களைச் சிறுசிறு வீடியோ துண்டுக் காட்சிகளாகப் பார்த்திருக்கிறேன்.

**வலை உணங்கு குருமணல் என்ற உங்கள் நூல் குறித்து.**

அது குருநகர் என்ற எனது ஊர் பற்றியது. சிறுவனாக,இளைஞனாக இருந்த காலத்தில் கர்ணபரம்பரை மாதிரி ஒரு வாக்கியத்தைப் பலர் எப்போதும் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். எமது முன்னோர்கள் போர் வீரர்களாக இந்தியாவில் இருந்து இங்கு அழைத்து வரப்பட்டவர்கள் என்பதுதான். இதை எமது சாதாரண மக்கள் தொடங்கி, ஆசிரியர்கள் மதகுருமார் ஏன் பெண்கள் பலரும் கூறுவதைக் கேட்டிருக்கிறேன். அத்தோடு எமது கோவில் புனிதர் யாகப்பர் ஆலயம் பற்றியும் விதம்விதமான கதைகள் சொல்லப்படுவதுண்டு. யாகப்பரைப் 'படையாளி' என்று போருடன் சம்பத்தப்படுத்தியே அழைப்பர். அம்பாப் பாடல்கள் சேகரிக்கத் தொடங்கிய பின்னர் அந்த மக்களது வேர், சுவடுகள், மதமாற்றம், தொழில்கள், மரபுகள், வாழ்க்கை முறைகள் கலாசாரக் கூறுகள் ஆகியவைகளின் மீதான எனது சிறு பயணத்தின் விளைவுதான் அந்த நூல். அதிக உழைப்பையும் காலத்தையும் எடுத்துக்கொண்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியனாக பல அனுபவங்கள் உங்களுக்கு உண்டு. அவற்றை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.**

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் நடத்துனராகவும் சாலைப் பரிசோதகராகவும் பணியாற்றியுள்ளேன். சாலைப் பரிசோதகர் பணி என்பது என்னளவில் அலுப்பூட்டிய வேலைதான். தலைக்குமேல் சுழலும் மின்விசிறியின் கீழ் ஒரே இடத்தில் அமர்ந்துகோப்புகளைப் பார்த்துக்கொண்டு இருப்பது. இது அலுப்பில்லாமல் வேறென்ன? அனுபவங்கள் என்றால் மன்னாரில் நடத்துனராக நீண்ட வருடங்கள் பணிபுரிந்த காலம்தான். ஒவ்வொரு நாளும் புதிய புதிய அனுபவங்களை புதிய முகங்களை எதிர்கொண்டபடி இருந்தேன். மறக்கமுடியாதவை. அவற்றையெல்லாம் கொட்டிவிட இந்த நேர்காணல் போதுமான வெளியைக் கொண்டவை அல்ல. ஆனாலும் இலங்கையின் இன அரசியல் வரலாற்றிற்குச் சாட்சியாக நானிருந்த சில சம்பவங்களில் இரண்டை மட்டும் குறிப்பிடுகிறேன்.

1977ஆம் ஆண்டு இனக்கலவரம். ஊரடங்குச் சட்டம் அமல்படுத்தப்பட்டிருந்தது. மன்னாரில் அது ஒரு செய்திதான். அசம்பாவிதங்கள் என எதுவும் நிகழவில்லை. பஸ் ஓட்டம் மட்டும் இல்லை. நாங்கள் டிப்போவில் கூடிநின்று கலவரம் பற்றிக் கதைத்துக்கொண்டிருந்தோம். அப்போது சாலை அதிகாரி 'ஏராளமான அகதிகள் வவுனியா வந்திருக்கிறார்கள். அவர்களில் மன்னார் வருபவர்களை ஏற்றிக்கொண்டு வரவேண்டும். ஒரு சாரதியும் நடத்துனரும் அவசரமாகத் தேவை. யார்போகிறீர்கள். பொலிசார்; 'பாஸ்' தருவார்கள் என்றார். எல்லோரும் 'ஆளையாளைப்' பார்த்தபடி நின்றனர். யாரும் முன் வரவில்லை. இறுதியில் சாரதி ஆரியசேன முன்வந்தார். நடத்துனராக எவரும் முன்வரவில்லை. தயங்கிய படி நின்றார்கள். இறுதியில் நான் செல்வதாகக் கூறினேன். அப்போது மார்க்சியக் கருத்துக்களில் விருப்புடையவனாக இருந்தேன். மார்க்சியருக்கான மானிட நேயம் என அதை நினைத்துக்கொண்டேன். வவுனியா தமிழர் பகுதிதானே என்ற தைரியமும் இருந்தது. இதற்கு அப்பாலும் ஒரு காரணம் இருந்தது. நாங்கள் வாடகைக்கு இருந்த வீட்டுக்காரரின் மகனுக்கு திருமணம் ஏற்பாடாகி, மணப்பெண் குடும்பம் இந்த நெருக்கடியால் மன்னார் வரமுடியாமல் வவுனியாவில் நிற்பதாக வீட்டுக்காரர் கூறியிருந்தார். அவர்களும் அகதியோடு அகதியாக மன்னார் வரலாம் எனவும் நினைத்தேன்.

எவ்வித பிரச்சினையும் இல்லாமல் வவுனியா சென்றடைந்தோம். அங்குள்ள பொலிஸ் பொறுப்பதிகாரி பஸ்ஸை பொலில் நிலையத்தில் விட்டுவிட்டு அகதி முகாமில் சென்று சாப்பிட்டு வருமாறு பணித்தார். சாரதி அகதி முகாமில் சாப்பிட விரும்பவில்லை. நான் சென்றேன். அங்கு எதிர்பார்த்ததுபோல் அதிக அளவில் அகதிகள் இல்லை. வரிசையில் அமர்ந்து சாப்பிட்டுக்கொண்டு இருந்தார்கள். அணிந்திருந்த உடையுடன் ஓடி வந்திருப்பார்கள் போலிருந்தது. முகத்தில் திகில். சாப்பிடும்போது பயத்துடன் அடிக்கடி வெளியே பார்த்தபடி இருந்தார்கள். நானும் அமர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். திடீரென 'மதவாச்சி', 'ஈரப்பெரியகுளம்' பகுதிகளில் இருந்து சிங்களவர்கள் வவுனியா அகதி முகாமைத் தாக்க வருவதாக கதை பரவியது. சாப்பிட்டுக்கொண்டிருந்தவர்கள் அலறியடித்து வெளியே ஓடினார்கள். நானும் ஓட ஆயத்தம்தான். அப்போது அந்த முகாமைப் பராமதித்துக்கொண்டிருந்த புலேந்திரன் (தோல்வியடைந்த தேர்தல் வேட்பாளர்) இல்லை இது வதந்திதான். பயப்பிடாமல் சாப்பிடுங்கள் என்றார். யாரும் அவர் கதையைக் கேட்கும் நிலையில் இல்லை. அப்பாடா என்று என்னை நானே தேற்றிக்கொண்டேன். தமிழர் பகுதிகளில்கூட தமிழர்களுக்குப் பாதுகாப்பான மனநிலை இல்லாமல் போனதே என்பது எனக்கு கவலையாக இருந்தது.

திரும்பி பஸ்ஸிற்கு வந்தபோது பஸ்ஸின் முன் கண்ணாடியில் சிங்களத்தில் அனுராதபுரம் என எழுதி ஒட்டப்பட்டிருந்தது. பஸ்ஸினுள் பௌத்த துறவிகளும் சில பொதுமக்களும் இருந்தனர். குழப்பத்துடன் நான் எனது சாரதியைத் தேடினேன். அவர் ஒரு பொலிஸ் அதிகாரியுடன் என்னை நோக்கி வந்தார். அந்த அதிகாரி 'நீங்க அனுராதபுரம் போய் ஆமத்துறுமாரை இறக்கிவிட்டு வாருங்கள்' என்று சொன்னார். அவர் குரலில் இருந்த அதிகாரம் பயத்தை ஏற்படுத்தியது. வழக்கமாக எங்களுக்கு இ.போ.ச. அதிகாரிதான் கட்டளையிடவேண்டும் இங்கு எந்த அதிகாரிக்கும் அதிகாரம் இல்லை. ஊரடங்கு நேரம் வரம்பற்ற அதிகாரத்தை அவர்கள் வைத்திருந்தார்கள். திகிலுடன் ஆரியசேனவைப் பார்த்தேன். அவன் தனது மொழியில் 'பயப்படாதே நான் இருக்கிறனே. ஆமத்துறுமார் இருக்கின்றனர் வா' என்றான். வேள்விக்கு நேர்ந்துவிடப்பட்ட ஆட்டின் நிலையுடன் ஏறினேன். எங்கும் நிற்காமல் பஸ் விரைவாகச் சென்றது. ஊரடங்கு நேரத்திலும் சில இடங்களில் சிலர் தெருவோரம் கூடிநின்றனர். 'பரசங்கடவ'யில் சிலர் இறங்கினார்கள். திடீரென மூவர் ஏறினர். ஒருவர் கையில் வாள். பிரயாணிகள் தமக்குள் திரும்பித் திரும்பிக் கதைத்துக்கொண்டனர். சாரதியைப் பார்த்தேன்.தன் முன்னிருந்த கண்ணாடியூடாக என்னை உற்றுப் பார்த்தான். பின் எழுந்து வந்தான். அதற்குள் பௌத்த பிக்குமார் கோபத்துடன் வாளுடன் நின்றவர்களை மறித்து அவர்களைத் திட்டி இறங்குமாறு கூறினர். எனதுகால்கள் நடுங்கிக்கொண்டிருந்தன.மரணம் இவ்வளவு நெருக்கமாகவா என்முன் வாளுடன் நின்றுகொண்டிருக்கும். பௌத்த குருமார்கள் எதிர்ப்பை எதிர்பாராத அவர்கள் புறுபுறுத்தபடி இறங்க ஆயத்தமானார்கள். இறங்குகையில் ஒருவன் "பறத் தமிழன் எவனாவது இருந்தால் சொல்லவேண்டும்'என்று என்னைப் பார்த்துக் கூறினான். அந்தப் பறத் தமிழன்தான் நடத்துனராக நின்றுகொண்டிருக்கிறான் எனச் சொல்லவா முடியும்?ஏதாவது பேசினால்,எனது அரைகுறைச் சிங்களம் என்னைக் காட்டிக்கொடுத்துவிடும். ஓம் என்ற அடையாளமாகத் தலையை ஆட்டினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதா புண்ணியமோ ஆமத்துறுமார் புண்ணியமோ பிரச்சினை இல்லாமல் பஸ் அனுராதபுரம் பஸ் நிலையத்தை அடைந்தது.

நிம்மதியாகப் பெருமூச்சு விட்டேன். அப்படி நினைத்துவிட முடியாது தம்பி என விதி என்னைப் பார்த்துச் சிரித்திருக்குமோ? எம்மை நோக்கி இ.போ.ச. அதிகாரி ஒருவர் வந்தார். அவர் முன்பு மன்னார் டிப்போவில், அதிகாரியாக இருந்தவர். அவர் காலத்தில் அவருக்கும் எனக்குமான ஒரு பழைய கணக்குவழக்கு இருந்தது. என்னைக் கண்டவுடன் திடுக்கிட்ட அவர்; 'ஓ! நீயா' என்றார். பின்னர் 'சரி சரி கொழும்புக்குப் போய் வா' என்றார். ஈரல்குலையே நடுங்கியது. பழி தீர்க்கிறானே பாவி என நொந்துகொண்டேன். இதை அவதானித்த ஆரியசேன அவரேடு தன் பாசையில் கதைத்தான். இவர்'நோ நோ' என்றார். ஆரியசேன 'எப்பா எப்பா' என்றான். கடைசியில் எப்பா எப்பாதான் வென்றது. ஒரு தமிழ் உயரதிகாரியை ஒரு சாதாரண சிங்கள சாரதியால் மிக இலகுவாக மீற முடிகிறது. மீண்டும் ஆட்களை ஏற்றியபடி வவுனியா திரும்பினோம். மதவாச்சிவரை பொலிஸ் பாதுகாப்புத் தந்தது. இரவு பஸ்ஸை பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பாக விட்டுவிட்டு அங்கேயே தூங்கினோம். தூங்கினேனா! மறுநாள் பொலிஸ் அதிகாரி முகாமிலுள்ளவர்களைக் கொண்டு யாழ்ப்பாணம் (கனகரத்தினம் மகா வித்தியாலயம்) செல்லவேண்டும் என்றார். இப்போது ஆரியசேன மறுத்தான். நல்லவேளை. மன்னாரில் இருந்து ஒரு பஸ் வவுனியா வந்தது. அவர்கள் யாழ் செல்லச் சம்மதித்தனர். நாங்கள் வவுனியா அகதிகளை ஏற்றியபடி மன்னார் விரைந்தோம். 'வீரமும் களத்தேப் போட்டு வெறுங்கையோடு' டிப்போ அடைந்தவனானேன்.

**அடுத்த சம்பவம்...**

அது 1881ஆண்டு இடம்பெற்றது. அப்போது நான் யாழ்ப்பாணத்தில் பணி புரிந்தேன். மாவட்ட சபைக்கானத் தேர்தல் நடைபெறவிருந்த காலம். 31—05—1981 அன்று இரவு பஸ்நிலையத்தில் 'கொழும்புத்துறை' செல்லும் கடைசி பஸ்ஸிற்காக நின்றேன். அப்போது காற்றுவாக்கில் ஒரு செய்தி பரவிக்கொண்டிருந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரசாரத்திற்குக் காவல் கடமையில் இருந்த இரு பொலிசார் இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்பதுதான் அது.. கடைசி பஸ்கள் புறப்படுவதற்கு முன்னர், ரீகல் தியேட்டர் அருகிருந்து யாழ் பஸ்நிலையம் வரும் சிறு வீதியால், சீருடை அணியாத பலர் ஆயுதங்களுடனும் பொல்லுகளுடனும் சிங்களத்தில் கத்தியபடி அகப்படுபவர்களை அடித்தபடியும் நின்ற கார்களை உடைத்தபடியும் வந்தார்கள். திகில் கொண்ட மக்கள் திசைதெரியாமல் ஓடினார்கள். கொழும்புத்துறை பஸ்ஸை சாரதி ஸ்ராட் பண்ணினார். நானும் ஏறினேன். பஸ் நேராக கோண்டாவில் டிப்போவிற்கு வந்து சேர்ந்தது. அங்கு எமக்கு முன்னே சில சாரதிகள் சில பஸ்களைக் கொண்டுவந்து சேர்த்திருந்தனர்.

சிறிது நேரத்தின் பின் சாலை அதிகாரி அங்கு வந்து பஸ்நிலையத்தில் சில பஸ்கள் கைவிடப்பட்டு இருப்பதால் அவற்றை எடுத்துவர சாரதிகள் தேவை. நானும் உங்களுடன் வருகிறேன் என்றார். அப்போது சாரதி செல்லத்துரை என்னுடன் கூடநின்றார். நாங்கள் இருவரும் மன்னாரில் ஒரே காலத்தில் பணியாற்றியவர்கள். நண்பர்களும்கூட. பலர் ஒவ்வொருவராக விலகினர். சாலை அதிகாரி வற்புறுத்திப் பலரை தயாராக நின்ற பஸ்சில் ஏற்றினார். செல்லத்துரை வீர வசனம் பேசியபடி என்னையும் வரும்படி அழைத்தார். புத்திப்பூர்வமாக யோசித்தால் நான் சாரதி அல்ல. ஆனாலும் நான் ஏறினேன்?அதற்கு ஒரேஒரு காரணம்தான். 77ஆம் ஆண்டு கலவரத்தின்போது வவுனியாவிற்குச் சென்ற அதே மன உந்தல்தான்.

யாழ் பஸ்நிலையம் நோக்கிய பயணம் ஆரம்பமாகியது. போகும்போது சிலர் பஸ்ஸின் பின் கதவால் இறங்கி மறைந்துவிட்டனர். வழியில் சிலர் மறித்து பெரிய கலவரம் நடக்கிறது போகவேண்டாம் என்றனர். சாலை அதிகாரியோ. எதற்கும் மசிவதாக இல்லை. பஸ் வெலிங்டன் தியேட்டர் வழியாக திரும்பி பெரிய ஆஸ்பத்திரியின் பின்பக்கமாக வந்து பஸ் நிலையத்தை எட்டிப்பார்த்தது. அப்போது ஆயுதங்களுடன் வந்தவர்களால் பஸ் மறிக்கப்பட்டது. முன் கதவால் சாதாரண உடையில் ஒருவன் ஏதோ திட்டியபடி ஏறினான். அவன் பின்னால் இன்னொருவன் துப்பாக்கியுடன். எமது அதிகாரி எழுந்து நான் சாலை அதிகாரி என்று கம்பீரமாக ஆங்கிலத்தில் கூறிமுடிக்குமுன் விழுந்த அடியில் பின் பக்கமாய் சாய்ந்தார். அடித்தவன் தனது நீளக் காற்சட்டைப் பெலிற்றைக் கழற்றி அடித்தபடி வந்தான். நன்றாகத் தலையைக் குனிந்தபடி தயாரானேன். பிட்டுக்கு மண்சுமந்து சுமந்தவர்களாய் அவரவர்கான அடிகளைப் பெற்றனர். பின் எல்லோரையும் கீழே இறங்கும்படி பணித்தான்.

இறங்கியபோதுதான் பஸ்ஸைச் சுற்றி ஆயுதங்களுடன் பலர் நின்றிருந்ததையும் பஸ்நிலையத்தைச் சுற்றி—யிருந்த கடைகளின் வரிசையைத் தீ விழுங்கியபடியும் இருந்தது. முன்னும் பின்னும் ஆயுதம் ஏந்தியவர்கள் வர நாங்கள் வரிசையாக பஸ் நிலையக் காரியாலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். நான் வரும்வரை உங்கள் காரியாலயத்துள் இருங்கள் என்று எம்மை அழைத்து வந்தவர் கூறிச் சென்றார். ஆயுததாரிகளும் அவனுடன் சென்றனர். நாம் பயணக் கைதிகள்போல் நின்றோம். அப்போது பஸ்நிலையக் காரியாயலத்தின் மேல்மாடியில் 'மணிக்குரல்' விளம்பர நிலையம் ஒன்று இருந்தது. சாலை அதிகாரி அந்த விளம்பர நிலையம் திறந்திருக்கிறதா என பார்த்துவரும்படி பொதுவாகச் சொன்னார். யாரும் அசைவதாக இல்லை. இறுதியில் அவரே சென்றுவந்து திறந்திருக்கிறது ஒருவர் ஒருவராக அங்கு செல்லவேண்டும் என்று கூறிவிட்டு அவரே முதல் சென்றார். நான் மூன்றாவது ஆளாகச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலைபோல் தவழ்ந்து தவழ்து படியேறிச் சென்றேன். ஒரு ஐந்து முதலைகள் உள்வந்தவுடன் எம்மை விட்டுச் சென்ற அதிகாரி அங்கு ஒரு பஸ்சுடன் வந்தான். கீழேகாரியாலயத்தினுள் நின்றவர்களைப் பஸ்ஸில் ஏற்றிக்கொண்டு தானும் ஏறிச் சென்றுவிட்டான்.

மணிக்குரல் காரியாயலத்தில் நாங்கள் தனித்து விடப்பட்டோம். இருட்டில் இருந்தபடி இடைக்கிடை ஓணான்போல் தலையை எட்டி எட்டிப் பார்த்து நடப்பதை அறிந்துகொண்டிருந்தோம். ஆயுதங்களுடன் சிலர் அங்குமிங்குமாய் ஓடிக்கொண்டிருந்தனர். கடைகளை எரிந்தபடி இருந்தனர். 'ஹற்றன் நெஷனல் வங்கி' இருந்த வரிசையும் 'பூபாலசிங்கம் புத்தகக் கடை' இருந்தவரிசையும் எரிந்தபடியும் வெடித்தபடியும் இருந்தன. காரியாலயம் பலகைகளால் அமையப்பெற்றவை. அனால் தீ பரவினால் என்ற கேள்வியும் மரண பயமும் கலக்க, இரவு இரண்டு மணிவரை இருந்தோம். ஆள்நடமாட்டங்கள் குறைந்ததுபோல் இருந்தது. இப்போது எந்த மனிதச் சத்தமும் இல்லை. காதைத் தீட்டியபடி இருந்தோம். சிறிது நேரத்தின் பின் தமிழில் கதைப்பது கேட்டது. அந்தச் சாமத்திலும் கங்கையையும் கொண்டு கடாரத்தையும் வென்றவர்கள் வாரிசுகள்,எரியும் கடைகளில் இருந்து அகப்பட்டப் பொருட்களை எடுத்துக்கொண்டு ஓடினர். உயிர் திரும்பிவந்த நிலையில் ஒருவர் ஒருவராக கீழே இறங்கி முன் நின்ற பஸ்ஸில் ஏறினோம். உயிரைக் கையில் பிடித்தபடி பலாலி வீதிவழி டிப்போ வந்து சேர்ந்தோம். காலையில் அந்தத் துயரச் செய்தி எம்மை வந்தடைந்தது யாழ் நூல்நிலையம் எரிந்து சாம்பலானது என்று.

**இவை பற்றி நீங்கள் எங்காவது பதிவு செய்ததுண்டா?**

அனுராதபுரச் சம்பவம் சிறுகதையாக எழுதப்பட்டு திருத்தப்படாத பிரதியாகவே இருக்கிறது. யாழ்; பஸ்நிலைய எரிப்புப்பற்றி அக்காலத்திலேயே '81 மே 31'என்ற தலைப்பில் அலை—18இல் கவிதையாக வெளிவந்தது. 'மரணத்துள் வாழ்வோம்' தொகுதியிலும் இணைக்கப்பட்டது. இத்தொகுதிக்கு சி.சிவசேகரம் அவர்கள் கடுமையான ஒரு விமர்சனம் எழுதியிருந்தார். அதில் சிலரது கவிதைகள்மீதே அந்தக் கடுமை இருந்தது. எனது கவிதையை சிங்கள மொழித் துவேசமாக இனம் கண்டார். இதே கருத்தை லண்டனில் வெளிவந்த 'பனிமலர்' இதழிலும் அவர் குறிப்பிட்டதாக ஒரு ஞாபகம். ஆனால் சிவசேகரத்தின் விமர்சனத்திற்கு 'பூரணி' இதழில் மறுப்பு எழுதிய இ.ஜீவகாருண்யன் எனது கவிதையை நியாயப்படுத்தினார். விமர்சனத்தில் எதிர்ப்பும் நியாயப்படுத்தலும் சாத்தியமானதுதானே! அந்தக் கவிதையின் இறுதி வரிகள் இவ்வாறாக அமைந்தது.

"சூழவும்
உடைபடும் கடைகளில் ஒலியும்
வெறிக் கூச்சலும்
வேற்று மொழியும்
விண்ணுயர்ந்த தீச்சுவாலையும்".

இதில் 'வேற்று மொழியும்' என்ற வரியின் இறுதியில் புள்ளியிட்டு அடைப்புக் குறிக்குள் சிங்களம் என்று எழுதியிருந்தேன். இந்த வரிகளே அவரைக் கோபம்கொள்ள வைத்துள்ளது என நினைக்கிறேன். அந்தச் சூழலினுள் இரத்தமும் சதையுமாக நின்றவன் நான். என்னைச் சுற்றிலும் எரிந்துகொண்டிருந்த தீச்சுவாலையிடையேக் கேட்ட வெறிக் கூச்சல் சிங்களமொழியில்தான் கேட்டது. ஒரு படைப்பாளியாக அதை நேர்மையாக பதிவு செய்துள்ளேன். அவ்வளவுதான். சிலவேளைகளில் நமது நம்பிக்கையைவிட யதார்த்தம் குரூரமானதாக இருக்கும்.

**அந்தக் காலங்களில் உங்கள் அரசியல் நிலைப்பாடு எவ்வாறு இருந்தது?**

முன்னர் குறிப்பிட்டதைப்போல் மார்க்சிய சாய்வு கொண்டவனாக, கட்சிகளின் எல்லைகளுக்கு வெளியேதான் இருந்தேன். கருத்துரீதியில்அது ஒரு சுதந்திர வெளியை அளித்தது. இயல்புகளை மீறி கோட்பாட்டு எல்லைகளுக்குள் ஒடுங்கி இருக்க எப்போதும் என்னால் முடிந்ததில்லை. அதுவரை நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியிருந்த ஐக்கிய இலங்கை, முழு இலங்கைக்குமான தேசியம் என்பவைகள் எல்லாம் கண்முன்னே நிகழ்ந்த இன வரலாற்றுத் தொடர் சம்பவங்கள்,சொந்த அனுபவங்கள் ஆகியவற்றால் நொறுங்கிப்போயின. எமக்கானத் தனித்த தேசியம், எமக்கான நாடு போன்ற கருத்துக்கள் என்னுள் விதைகொண்டன. அப்போது இருந்தப் புறச்சூழல் அதற்கு நீர் பாச்சியது. 'கானல் வரி' கவிதை அந்த மன வெளிப்பாடுதான். அக்கவிதை 10 டிசம்பர் 1981இல் எழுதப்பட்டது. சர்வதேச மனித உரிமைகள் தினம். 'கானல் வரி' என்பது தமிழ் இலக்கிய மரபில் 'பிரிவு' பற்றிய பாடல். எனது'கானல் வரி' கவிதையின் இறுதிப் பகுதி இவ்வாறு அமைகிறது.

"இனிநாம் பிரிந்து செல்வோம்
எனது பிரிவோ
கணு ஒடிந்த மலராய்
உதிரவல்ல
தாயகத்தில்
உழுது புரட்டும் செம்மண்ணில்
மகிமையாய் மலரவே"
ஆனால் கனவு தோற்கடிக்கப்பட்டுவிட்டதே...

ஆம். உண்மைதான். எந்தக் காரணங்களினால் பிரிவின் முளை வெளிவந்ததோ அந்தக் காரணங்கள் இன்னமும் உயிர்ப்புடன் அப்படியேதான் இருக்கிறது. தீர்வுக்கான எந்த நம்பிக்கைக் கீற்றும் இல்லை. மேலும் இறுகியிருக்கிறது. 'உலக ஒழுங்கு,' 'இராஜதந்திரம்' என்ற அலங்கார வார்த்தைகளால் ஈழத்தமிழர்கள் கைவிடப்பட்டுள்ளார்கள். உலக ஒழுங்கு என்பது நீதியின் அடிப்படையில் அமைவது இல்லை. நாடுகளின் நலன் அடிப்படையில்தான் கட்டமைக்கப்படுகிறது. இராஜதந்திரம் என்பது சாராம்சத்தில் கெச போக்கிலித்தனம்தான். நீதியற்ற இந்த உலக ஒழுங்குக்குள்ளும் இராஜதந்திரம் என்ற கெச போக்கிலித்தனத்துள்ளும்தான் நமது விடுதலை சிக்கிக்கொண்டிருந்கிறது.

**தோற்கடிக்கப்பட்டப் போராட்ட இயக்கத்தின் மீது கடுமையாக விமர்சனங்கள் இருக்கிறதே?**

எந்தப் போராட்டம் சார்ந்துதான் விமர்சனங்கள் இல்லை. எமது போராட்டம் சார்ந்து உலக அரசுகளின் விமர்சனம் சுயநலம் சார்ந்த விமர்சனங்களே. எமக்கான தீர்வுக்காக முன்வந்த பிராந்திய, உலக அரசுகள் எமது பிரச்சினையை தமது நலன்களிற்கான பகடைக் காய்யாக மாற்றி உருட்டிக்கொண்டிருக்கவில்லையா? போராட்டங்களிலும் தவறுகள் நிகழ்ந்ததுதான். அதை நியாயப்படுத்த முடியாது. ஆதரிக்கவும் முடியாது. அதேநேரம் போராட்டத்தின்அழிவையும் விரும்பமுடியாது. எதிரிஎந்த நம்பிக்கையும் அற்றவன். பலமடங்கு மோசமானவன். தீமையானவன். போராளிகளுக்குப் போராட்டத்தை எதிர்த்தவர்கள்தான் எதிரி. அரசுக்கோ தமிழினம் எதிரி. சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து அதை அவர்கள் வெளிப்படுத்தியே வருகிறார்கள். சகபோராளிகள் அழிக்கப்பட்டவிதம்,பொதுமக்கள் படுகொலை, முஸ்லிம்களின் வெளியேற்றம் ஆகியவை மனச்சாட்சி உள்ளவர் விரும்பமுடியுமா?முடிந்ததெல்லாம் ஒரு படைப்பாளியாக இவைசார்ந்த அதிருப்திகளைக் கவிதைகளிலும் கட்டுரைகளிலும் பதிவு செய்யத்தான் முடிந்தது. எமக்கான நாடு பற்றிய கனவு பெரிதாக இருந்தது. நாடற்றவர்கள் நாதியற்றவர்கள்.

**மார்க்சியச் சார்பு உள்ளவராகத்தான் இப்போதும் இருக்கிறீர்களா?**

இல்லை. போராட்டம் தோற்கடிக்கப்பட்டபின் மனம் வெறுமையாக இருக்கிறது. எந்த நம்பிக்கையும் இல்லை. புதுமைப்பித்தன் பாடியதுபோல் 'செல்லும் வழி இருட்டு செல்லும் மனம் இருட்டு'. அதுதான் இப்போது.

**இப்போது கவிதை, சிறுகதை போன்ற புனைவுகள் எழுதுவதில்லையே. ஏன்?**

உண்மைதான். அதிகமாகக் கட்டுரைகளே எழுதுவதால் சிறுகதைகளில் அதிக கவனம் செலுத்த முடியவில்லை. கவிதைகள் தொகுப்பாக வரும் அளவிற்கு இருக்கிறது. அவை எழுதிய காலத்தில் ஏற்படுத்திய திருப்தியை இப்போது ஏற்படுத்தவில்லை. அதனால் வெளியிடும் ஆர்வமும் பின்னோக்கி நகர்கிறது. மீண்டும் படித்துச் செழுமைப்படுத்த வேண்டும். வாசிக்கவும் நிறைய இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக டிக்கன்சின் A Tale of Two Cities மாதிரி லண்டன் — ரொறன்ரோ என அலைய வேண்டியிருக்கின்றது. பார்க்கலாம்.

**உங்கள் உரையாடல்களில், கட்டுரைகளில் ஆங்கில நூல்கள் பற்றி அடிக்கடி குறிப்பிடப்படுகிறதே!**

ஆங்கில நூல்களில் ஆர்வத்தை ஏற்படுத்தியவர் ஏ.ஜே.தான். முன்னரும் கூறியுள்ளேன். லண்டன் வந்தபின்னர் எனது குடியிருப்பில் இந்து மூன்று திசைவழி ஒரு மைலுக்குள் சுமார் பத்துப் 'பாவித்த புத்தகங்கள் கடை'களும் (Second Hand Book Shop) 'தொண்டு நிறுவனங்களின் கடை'களும் (Charity Shop) இருக்கிறன. பின்னையதில் புத்தகங்கள் ஒரு பகுதியாக இருக்கும். இவைகளில் சிப்பிக்குள் முத்துக்களாக நல்ல புத்தகங்கள் மலிவாகக் கிடைக்கும். இவ்வாறு முத்துக்கள் தேடுவதற்கு அடிக்கடி செல்வதும் வழக்கம்.இதனால் எனது ஆங்கில வாசிப்பு சற்று விரிவாகியது. இதன் காரணமாகவும் இருக்கலாம். இந்தவாய்ப்பு கனடாவில் எனக்கு மிகத் தூரமாகியுள்ளது துயரமானதே.

**புதிய நூல்கள் வெளிவரும் சாத்தியங்கள் உண்டா?**


'நம்பிக்கைகளுக்கு அப்பால்' நூல் வெளிவந்தபின் எழுதப்பட்ட கட்டுரைகள் இரண்டு தொகுதிகளுக்குப் போதுமானது. கட்டுரைகளை சும்மா அப்படியே தொகுத்தல் என்பதில் ஆர்வம் இல்லை. குறிப்பிட்ட கருத்துச் சார்ந்து பல்வேறு விரிவுகள் கொண்டு அமையும் கட்டுரைகளின் தொகுதிதான் விருப்புக்கு உரியது. அதற்காக இன்னும் சில கட்டுரைகள் எழுதவேண்டும். பார்க்கலாம்.

*18-06-2022*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: **வே. வெங்கட்ரமணன்**

# ஒளியிலிருந்து இருளுக்கு



எனக்குப் பத்து வயதிருக்கும்போது என் அம்மா வீட்டில் அலுமினிய இட்டிலிப்பானை வாங்கினார்கள். அது என் பாட்டி அம்மாவுக்குக் கையளித்த பித்தளை இட்லிப்பானையின் எடையில் ஐந்தில் ஒரு பங்குதான் இருந்தது. என் அம்மாவுக்கு அதைக் கையாளுவது எளிதாக இருந்தது. ஆனால் அடுத்தமாதம் ஊரிலிருந்து வந்த பாட்டி, "இது ரொம்ப நாளைக்குத் தாங்காது, எங்ககாலத்து சாமான்லாம காத்திரமா இருக்கும், நாலு தலமறக்குப் பொழக்கத்துக்கு வரும்" என்று ஆதங்கப்பட்டுக்கொண்டார். இந்த "அந்தக்காலத்து சாமான் மாதிரி இல்லை, இப்பல்லாம் என்ன பண்றாங்க" என்ற கோபத்தை, விசனத்தை, ஆதங்கத்தை நாம் பலமுறை, பல இடங்களில் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஒரு தொழில்நுட்பத்திலிருந்து இன்னொன்றுக்கு மாறும்பொழுது இயல்பாக சில குறைகள் ஏற்படலாம். ஆனால், திட்டமிட்டே தாழ்தரத்தில் தயாரிப்பதும் நடந்து வருகின்றது. இதற்குத் திட்டமிட்ட வழக்கறுத்தல் (Planned obsolescence) என்று பெயர். கார்கள், கணினிகள், மென்கலன்கள், செல்பேசிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், மின்கலன்கள், அச்சு இயந்திரத்தின் மசிகள், எனப் பல நுட்பங்களிலும் இந்தத் திட்டமிட்ட வழக்கறுத்தல் தொடர்ச்சியாக நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

1924ஆம் ஆண்டு டிசம்பர் 23ஆம் தினத்தன்று எல்லோரும் கிறிஸ்துமஸ் ஒளிவெள்ளத்தில் திளைத்துகொண்டிருந்த இரவில் சுவிஸ் நாட்டின் ஜெனீவா நகரில் ஆஸ்ரம் (ஜெர்மனி), பிலிப்ஸ் (நெதர்லாந்து), ஜெனரல் எலக்ட்ரிக் (அமெரிக்கா), டங்க்ஸ்ரம் (ஹங்கேரி), கம்பெனி தெ லாம்பே (பிரான்சு), தோக்கியோ எலெக்ட்ரிக் (ஜப்பான்) போன்ற அன்றைய மாபெரும் பன்னாட்டு மின்விளக்கு நிறுவங்களின் நிர்வாகிகள் ஒன்று கூடினார்கள். ஜெர்மனியின் ஆஸ்ரம்—மின் அழைப்பில் ஒன்றுகூடிய அவர்கள் மின்விளக்கு நுட்பத்தின் போக்கையே மாற்றியமைத்தார்கள். அது அவர்கள் தெரிந்தே, திட்டமிட்டுச் செய்தது. அதற்கும் மேலாக, இன்றைக்கும் நம்மைத் துன்புறுத்தும் திட்டமிட்ட வழக்கறுத்தல் என்னும் இராட்சதனைக் கட்டவிழ்த்து விட்டதை அவர்கள் அறிந்திருக்கச் சாத்தியமில்லை. இந்தக் கூட்டுக் களவாணிகள் (cartel) 'பீபஸ் கார்ட்டல் (Phoebus cartel)' என்ற பெயரால் அறியப்பட்டார்கள். வரலாற்றில் முன்னிலும் அதற்குப் பின்னிலும் பீபஸ் கூட்டுக்களவாணிகளுக்கு இணையாக பன்னாட்டு அளவில் திட்டமிட்டுச் சாதித்தவர்கள் யாரும் இல்லை என்றே சொல்லாம்.

அதற்கு முன்னால் டங்கஸ்டன் இழைகளால் ஆன ஒளிர் விளக்குகள் (ஆம், சில ஆண்டுகளுக்கு முன்வரை நாம் தொடர்ந்து பயன்படுத்திவந்த 'மின் பல்புகள்'—தாம்) கிட்டத்த 2,000 மணி நேரத்திற்குப் பயன் தருவனவாக இருந்தன. தாமஸ் எடிசன் வணிகரீதியாக இவற்றின் முன்னோடியான கார்பன் இழை விளக்குகளை அறிமுகப்படுத்தியபொழுது அவை அதிகபட்சம் 13.5 மணி நேரத்திற்கே ஒளிர்ந்தன, பிறகு அவற்றின் இழை அறுபட்டுப்போகும். பிறகு மூங்கில் கரியால் செய்யப்பட்ட இழைகளைக் கொண்ட விளக்குகள் 1,000 மணி நேரத்திற்கு ஒளிர்ந்தன. இது 1880ஆம் ஆண்டுவாக்கில் புழக்கத்திற்கு வந்தது. பிறகு எளிதில் அறுபட்டுப் போகும் கார்பனுக்குப் பதிலாக டங்கஸ்டன் இழை பயன்படுத்தப்பட்டது. இந்தக் குமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்குகளில் வெற்றிடத்திற்குப் பதிலாக ஆர்கான் போன்ற வாயுக்கள் நிரப்பப்பட்டு இவற்றின் ஆயுள் மேலும் நீட்டிக்கப்பட்டது. 1924இல் உலகம் முழுவதும் 2,000 மணி நேரத்திற்கு ஒளிரும் குமிழ் விளக்குகள் பரவலாகத் தயாரிக்கப்பட்டன. ஜப்பான் முதலிய நாடுகளில் இது குடிசைத் தொழிலாகவே மாறத் தொடங்கியது.

மிதிவண்டி விளக்குகள், கார் முன்விளக்குகள், வீதி— விளக்குகள், என்று பல இடங்களிலும் மின்சார விளக்கின் பயன் பெருகத் தொடங்கியபோதும் ஆஸ்ரம், பிலிப்ஸ், போன்ற முதலைகளுக்கு என்னமோ அப்படியொன்றும் பெரிய அளவில் இலாபம் கிடைக்கவில்லை. ஒருபுறத்தில் பெருந்தொழிற்சாலைகளின் உற்பத்திச் செலவு அதிகரித்துக் கொண்டிருந்தது. மறுபுறம் தொழில்நுட்பம் பரவலாக, எளிதாகக் கிடைக்க சிறு உற்பத்தியாளர்களின் போட்டி அதிகரித்துக் கொண்டிருந்தது. 1922—23இல் 63 மில்லியன் விளக்குகளை விற்ற ஆஸ்ரம் நிறுவனத்தால் அடுத்த ஆண்டில் வெறும் 28 மில்லியன்தான் விற்க முடிந்தது. இதுவே ஆஸ்ரம் பிற நிறுவங்களை ஜெனீவா கலந்துரையாடலுக்கு அழைக்க வழிவகுத்தது.

அந்தக் காலங்களில் அமெரிக்காவின் ஜி.ஈ நிறுவனத்தின் கை மேலோங்கியிருந்தது. 1911ஆம் ஆண்டு ஜி.ஈ தூய டங்கஸ்டன் இழை விளக்குகளை அறிமுகப்படுத்தியது. குமிழ் விளக்குகளின் இழைகளின் முக்கிய குறைபாடு அந்த இழை, அது கார்பனோ, டங்கஸ்டனோ, சில நூறு மணிகளில் மெதுவாக ஆக்ஸிஜனேற்றம் பெற்று இழை நீளத்தொடங்கும், அப்பொழுது அதன் தடிமன் சில இடங்களில் மெலிந்துப்போகும், அது மின்னோட்டத்தைத் தாங்க இயலாது அறுபட்டுப் போகும். இதைக் குறைக்கக் குமிழ்விளக்குகளில் காற்றை முற்றிலும் உறிஞ்சி வெற்றிடமாக்கினார்கள். பின்னர் ஜீ.ஈ இதை ஆர்கான் வளி கொண்டு நிரப்பி அதன் ஆயுளை மேலும் நீட்டித்ததோடு, அதன் ஒளிர்திறனை ஐந்து மடங்குகள் மேம்படுத்தியது. அமெரிக்காவில் நேரடியாக உற்பத்தி செய்து வந்த ஜீ.ஈ பிற நாடுகளின் பெரும் நிறுவனங்களுக்குத் தன் காப்புரிமையைப் (patents) பகிர்ந்துகொண்டு அதற்கான ஆதாய உரிமையை ஈட்டிக்கொண்டிருந்தது. இதற்காக பெர்லினில் 'காப்புரிமைச் சமூகம்' (Patentgemeinschaf) என்ற சக்திவாய்ந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. அது காப்புரிமையைப் பகிர்ந்துகொள்ளும் நிறுவனங்களின் உற்பத்தியளவைக் கட்டுப்படுத்தியது. உதாரணமாக, நெதர்லாந்து நாட்டில் பிலிப்ஸின் தொழிற்சாலையால் எளிதில் ஆண்டிற்கு 12 மில்லியன் உற்பத்தி செய்யமுடியும். ஆனால் அதற்கு 5.7 மில்லியன் விளக்குகளை மாத்திரமே தயாரிக்கக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது. முதலாம் உலகப் போரின்பொழுது இந்த அமைப்பு செயலிழக்கத் தொடங்கியது. போரின் முடிவில் வர்த்தகம் மீண்டும் பெருகத் தொடங்குகையில் 'சர்வதேச குழல்விளக்கு விலைக்கட்டுப்பாட்டுக் கழகம்' (Internationale Glühlampen Preisvereinigung), என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு விளக்குகளின் உற்பத்தி, விலை, ஏற்றுமதி போன்றவை ஓரளவுக்குக் கட்டுப்பாட்டில் கொண்டுவர முயற்சிகள் நடந்தன.

ஆனால் பீபஸ் கூட்டுக்களவாணிகளின் நோக்கம் இவற்றையெல்லாம் தாண்டியது. 'பன்னாட்டு மின்னிழை விளக்குத் தொழிற்சாலைகளின் முன்னேற்றக் குழுமம்' என்று மிகக்கெட்டிக்காரத்தனமான பெயரைக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்தக் கூட்டு "விளக்குகளின் உற்பத்தியை மேம்படுத்தல், அனைத்து தாயாரிப்புகளின் தரத்தை நிர்ணயம் செய்தல், மின்விளக்குகளின் பயன்பாட்டைப் பரவலாக்குதல், மின்விளக்கு நுகர்வோரின் பயனைப் பெருக்குதல் போன்ற உயர்ந்த குறிக்கோள்களை அடையப் பங்குதாரர்களின் நல்லிணக்கதைப் பேணும் அமைப்பு' என்று வரையறுக்கப்பட்டது. முன்னர் சொன்ன அனைத்து நிறுவனங்களில் ஜீ.ஈ மட்டும் அமெரிக்க நிறுவனமாக நேரடியாகப் பங்கேற்காமல், அதன் பிரித்தானியக் கிளையின் பெயரில் இணைந்துகொண்டது. அதன் கூடவே, சீனா, பிரேசில், மெக்ஸிகோ நாடுகளின் ஜீ.ஈ—யின் பங்காளி நிறுவனங்களும் பங்கேற்றன.

வெளிப்புறத்திற்கு தொழில்நுட்பத் தரக்கட்டுப்பாடு, மற்றும் தர நிர்ணயம் போன்ற கண்காணிப்பு அமைப்பாகத் தோற்றமளித்த பீபஸ் கூட்டுக்களவாணிகள், விரைவிலேயே தங்கள் கைவரிசையைக் காட்டத் தொடங்கினார்கள். அந்த அமைப்பு குழல் விளக்குகளின் ஆயுள் 1,000 மணிகளுக்கு மேலிருக்கக் கூடாது என்ற கட்டுப்பாட்டை விதித்தது. அதாவது இரண்டா—யிரம் மணிகளுக்கு மேலாக ஒளிரும் விளக்குகளின் தரத்தைக் குறைத்து அவற்றின் ஆயுளைக் குறைக்க வேண்டும். அப்படிக் கட்டுப்படுத்தாதக் குழும உறுப்பு நிறுவனத்தின் மீது அபராதப்பணம், உற்பத்தி குறைப்புப் போன்ற இறுக்கங்கள் விதிக்கப்பட்டன.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் ஆதார நோக்கம் தொடர்ந்த முன்னேற்றம். மேம்பட்ட அடிப்படை அறிவியல் புரிதலை நுட்பம் முன்னெடுத்துப் பயன்பொருளின் தரத்தைத் தொடர்ச்சியாக உயர்த்திவருகிறது. இரண்டாயிரம் மணிகளுக்குப் பயன்தரக்கூடிய நுட்பம் இருக்கும் பொழுது பன்னாட்டு நிறுவனங்களும் அதன் ஆயுளைச் சரிபாதியாகக் குறைக்க வேண்டும் என்பதை நடைமுறைப்படுத்துவது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. மற்றவர்களை விட இன்னும் ஒரு நூறு மணிநேரம் ஒளிர்ந்தால் தங்கள் விற்பனை கூடும் என்றுதான் எல்லோரும் எதிர்பார்ப்பார்கள். அதைச் செயலாக்கும் நுட்பமும் எளிதில் அனைவருக்கும் தெரியும். இதைக் கண்காணிக்க பலநூறு நிறுவனங்களும் தங்கள் தயாரிப்பை சுவிஸ்நாட்டின் சோதனைச் சாலைக்கு அனுப்பப் பணிக்கப்பட்டார்கள். பெரிய நிறுவனங்கள் பீபஸ் அமைப்பில் கையொப்பமிட்டதால் இதைச் செய்தார்கள். சிறு மின்விளக்கு உற்பத்தியாளர்கள் ஜீ.ஈ காப்புரிமைக் கட்டுப்பாடுகளின் காரணமாக இதைச் செய்யவேண்டியதாயிற்று. சோதனைக்கு விளக்குகளை அனுப்பாவிட்டால் அபராதம், அச்சோதனையில் விளக்குகளின் ஆயுள் 1,000 மணிகளுக்குக் கூடுதலாகவோ, குறைவாகவோ இருந்தால் அபராதம், உற்பத்தியை அதிகரித்தால் அபராதம் என்று பல நெருக்கடிகள் உருவாக்கப்பட்டன.

மின்விளக்குகளின் ஆயுள் பாதியாகக் குறைந்தால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றின் விற்பனை இருமடங்காவது நிச்சயம்தானே. உதாரணமாக தோக்கியோ எலெக்ட்ரிக் "உங்கள் ஆணைகளுக்குக் கட்டுப்பட்டு விளக்குகளின் ஆயுளைப் பாதியாகக் குறைத்தோம். குறைந்த ஆயுளின் காரணமாகவும், மின்விளக்குப் பயன்பாட்டு அதிகரிப்பின் காரணமாகவும் எங்கள் சந்தை ஐந்துமடங்கு பெருகிவிட்டது. இதைச் சரிசெய்ய உற்பத்தியைப் பெருக்கினால் அதற்கும் அபராதம் விதிக்கிறீர்கள். இது எந்தவிதத்தில் நியாயம்" என்று புலம்பியது. மறுபுறத்தில் பிலிப்ஸ் போன்ற ஐரோப்பியப் பெருநிறுவனங்கள் "தொடர்ச்சியான தரக்கட்டுப்பாடுகள், சோதனைகள் மூலம் இப்பொழுதுதான் நாம் சந்தையைப் பெருக்கியிருக்கிறோம். இந்நிலையில் விளக்குகளின் ஆயுளை நீட்டிப்பது நம்மை மீண்டும் மூழ்கச்செய்யும்" என்று பயமுறுத்தின.

மின்னிழை விளக்குகளை அதிக மின்னோட்டத்தில் இயக்குவது அவற்றின் ஆயுளை எளிதில் குறைக்கும். இதை நடைமுறைப்படுத்தி ஜி.ஈ மின்கலன்களில் இயங்கும் விளக்குகளின் ஆயுளை மூன்றில் ஒரு பங்காகக் குறைத்தது. அதிக மின்னோட்டத்தில் விளக்குகள் பிரகாசமாக எரியும். கூடவே அவற்றின் வெப்பமும் உயரும் எனவே இழைகள் எளிதில் அறுபட்டுப்போகும். எங்கள் விளக்குகள் பிரகாசமானவை என்று விளம்பரப்படுத்த இது பெரிதும் உதவியது. மறுபுறத்தில் ஆயுளைக் குறைக்கும் அவர்களின் தீய நோக்கத்திற்கும் அது உதவியது. அடுத்த பல வருடங்களுக்கு ஜி.ஈ, ஆஸ்ரம், பிலிப்ஸ் போன்ற நிறுவனங்களின் ஆய்வுகள் மின்னிழைகளின் அமைப்பு, அவற்றின் தடிமனைச் சில இடங்களில் மெலிதாக்கல் போன்று எவ்வாறெல்லாம் குமிழ்விளக்குகளின் தரத்தைக் குறைக்கலாம் என்றே நோக்கம் கொண்டிருந்தன. 1926இல் உலகெங்கும் சராசரியாக 1,800 மணி ஆயுளைக்கொண்ட விளக்குகள் உற்பத்தி செய்யப்பட்டன. பீபஸ் கூட்டின் கட்டுப்பாடுகளால் 1933இல் இது 1,205 மணியாகக் குறைக்கப்பட்டது. உலகில் யாருமே 1,500 மணிக்கு மேல் நீடிக்கும் விளக்குகளை உற்பத்தி செய்யவில்லை. அதே நேரம் 1926இல் 335.7 மில்லியன் விளக்குகள் விற்கப்பட்டன, நான்கே ஆண்டுகளில், 1930இல் இது 420.8 மில்லியனாக அதிகரித்தது. இதே நேரத்தில் உற்பத்திச் செலவும் வெகுவாகக் குறைக்கப்பட்டது. கூட்டணியின் உறுப்பு நிறுவனங்கள் பெரும் இலாபம் ஈட்டின. இவற்றுள் ஜீ.ஈ—யின் பங்கு வெகுவாக உயர்ந்தது. ஒரு சமயத்தில் அதன் பங்கு 80 சதவீதமாக இருந்தது. நேரடி உற்பத்தி இல்லாமல் இருந்த சீனா, பிரேசில் உள்ளிட்ட நாடுகளின் அது தங்கள் பங்குகளைப் பெருக்கிக்கொண்டு அதன் கூட்டுநிறுவனங்களை விழுங்கியது.

இப்படியான செயற்கை இலாபம் சில வருடங்களே நீடித்தது. தரத்தைக் குறைத்து, விலையைப் பெருக்கி இலாபம் ஈட்டலாம் என்ற நிலை பீபஸ் கூட்டமைப்பு வெளியே இருந்த சிறு நிறுவனங்களை ஊக்கப்படுத்தத் தொடங்கியது. ஜப்பானின் பெருநிறுவனமான தோக்கியோ எலக்ட்ரிக் பீபஸ் கூட்டாளியாக இருந்த போதும் அந்த நாட்டில் மின்விளக்கு உற்பத்தி குடிசைத்தொழிலாகப் பெருகத் தொடங்கியது. அவற்றின் தரத்தை யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. பிபஸ் தொடங்கப்பட்ட பத்தாண்டுகளில் அந்நாட்டின் உற்பத்தியின் 45 மில்லியன் விளக்குகளிலிருந்து, 300 மில்லியனாக உயர்ந்தது. ஜப்பானில் மக்களுக்கு நேரடியாக இவற்றின் தரக்குறைவு தெரிந்திருந்தது. அவர்கள் பெரிதும் தோக்கியோ எலக்ட்ரிக்கின் தரக்கட்டுப்பாடுகள் கொண்ட விளக்குகளையே வாங்கினார்கள். மலிவான ஜப்பானிய உற்பத்தி அமெரிக்காவிலும் ஐரோப்பவிலும் சந்தையில் பெருகியோடத் துவங்கியது. 1930 தொடங்கி பெருநிறுவனங்களின் விற்பனை சரியத் தொடங்கியது. அடுத்த மூன்று வருடங்களில் பீபஸ் கூட்டாளிகளின் விற்பனை 30% குறைந்தது. இதே நேரத்தில் ஜி.ஈ—யின் காப்புரிமைகள் காலாவதியாயின. எனவே அதன் காப்புரிமை வருமானம் குறைந்தது. பிபஸ் தொடங்கும்பொழுது குறைந்தது முப்பது ஆண்டுகளாவது, அதாவது 1955—வரை கூட்டு ஒப்பந்தம் நிலைத்திருக்கும் என்று கூட்டணி நிறுவனங்கள் கையெழுத்திட்டன. ஆனால், இரண்டாம் உலகப்போர் தொடங்க, ஜெர்மனியும், ஜப்பானும் ஒரு புறமிருக்க, அமெரிக்கா, பிரிட்டன், நெதர்லாந்து போன்ற நாடுகள் அவற்றின் எதிரிகளாயின. மாறிவரும் அரசியல் சூழலில் வர்த்தக ஒப்பந்தங்கள் காலாவதியாக, 1940இல் அது முற்றாகச் செயலிழந்துபோனது.

***

ஆயினும் பீபஸ் கார்ட்டலின் சிலகால வெற்றி இன்றளவும் பெரிய பாதிப்புகளை உருவாக்கி வருகிறது. அதன் வெற்றியிலிருந்தும் தோல்வி—யிலிருந்தும் கற்ற பாடங்களை மேலும் செழுமைப்படுத்தி அதைக்காட்டிலும் பன்மடங்கு கோரமான கூட்டமைப்புகள் இரண்டாம் உலகப்போரின் பின்னர் ஆதிக்கம் செலுத்திவருகின்றன. குறிப்பாக, ஆயுதத்தொழில்நுட்ப உலகு பல்வேறு சிக்கலான கூட்டுக் களாவணி அமைப்புகளைக் கொண்டது. 21ஆம் நூற்றாண்டின் ஆதாரமான மின்னணு மற்றும் தகவல் நுட்பத் துறைகளில் திட்டமிட்ட வழக்கறுத்தல் பலரும் ஏற்றுக்கொண்ட நடைமுறையாகவே மாறிவிட்டிருக்கின்றது. வருடம்தோறும் அறிமுகப்படுத்தப்படும் புதிய செல்பேசிகள், கணினிகள், விளையாட்டுக் கருவிகள், இசைச் சாதனங்கள், கார்கள், நாகரீகத் துணிமணிகள் எல்லாம் நுகர்வோர்களை இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு ஒருமுறை புதியனவற்றை வாங்கத் தூண்டுகின்றன. மைக்ரோஸாஃப்ட் போன்ற நிறுவனங்கள் தங்கள் கணினிகளையும் இயக்குதளங்களையும் அடிக்கடி சற்றே மேம்படுத்திச் சந்தைப்படுத்துகின்றன. ஆப்பிள், சாம்சங் போன்றவற்றின் மின்னணுச் சாதனங்கள் எளிதில் திறக்க முடியாதபடியும், திறந்தால் சரியாக மூட முடியாதபடியும், அவற்றின் உதிரிப்பாகங்கள் எளிதில் கிடைக்காதனவாகவும் உருவாக்கப்படுகின்றன. இது நுகர்வோரை மிகச் சிறிய பழுதுபார்த்தலில் சரியாகக்கூடிய பழைய சாதனங்களைக் கழிவுகளாக்கத் தூண்டுகின்றன. இவற்றின் பல துவக்கங்களைப் பீபஸ் கார்ட்டலில் அடையாளம் காணமுடியும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துமி



அந்த வீட்டில் அவன் எப்படித் தனியாக இருக்கிறான் என்று தான் அவள் வியந்தாள். உண்மையில் அது வீடே கிடையாது. ஒரு பழைய பங்களாவின் இரண்டாவது மாடி. அங்கு முன்பே வாழ்ந்திருந்த தாசில்தார் அவருடைய சொந்த அலுவலகமாக அதை பயன்படுத்தி வந்தார்.

பெரிய கூடம், அதை ஒட்டி ஒரு உக்ரான அறை. அந்தப்பக்கம் ஒரு சிறிய அறை. அதை சமையலறையாக பயன்படுத்திக்கொள்ளலாம். அவ்வளவுதான். ஆனால் கூடம் மிகப்பெரியது. சிறுவயதில் அந்தக்கூடத்துக்குள்ளேயே அவளும் தங்கைகளும் ஓடிப்பிடித்து விளையாடுவதுண்டு. அதன்பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் வளர்ந்தார்கள். அறைக்குள் தட்டுமுட்டு சாமான்களும் கட்டில்களும் பீரோக்களும் வந்தன. வீடே இடமில்லாததுபோல் ஆகியது. பார்த்து நடக்கவில்லையென்றால் எதிலாவது இடித்துக்கொள்ளவேண்டும். எவர் மீதாவது முட்டிக்கொள்ள வேண்டும். பாட்டி தடுக்கி விழுந்து காலை உடைத்துக்கொண்டபிறகு தரைத்தளத்திற்கு வீட்டை மாற்றவேண்டும் என்பதனால் அடுத்த கட்டிடத்திலேயே இப்போதிருக்கும் வீட்டுக்கு அவர்கள் மாறினார்கள்.

இதுவும் மிகப்பழைய வீடுதான். இந்தத் தெருவில் எல்லாவீடுகளுமே மிகப்பழைய வீடுகள். அந்தக்காலத்தில் இதைச் செட்டியார் தெரு என்று சொன்னார்கள். ஒரே சாதியினர் வியாபாரம் செய்து செயலாக இருந்த காலத்தில் போட்டி போட்டுக்கொண்டு கட்டிய வீடுகள். அத்தனை பேருமே 1950—60களிலேயே சென்னைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு நகரங்களுக்கும் போய்விட வீடுகள் கைமாறி பலபகுதிகளாக வாடகைக்கு விடப்பட்டிருந்தன. அவளிருக்கும் வீட்டிற்கு மேலே கூட மூன்று மாடிகள் உண்டு. மொட்டை மாடியில் எட்டு சிண்டக்ஸ் டேங்குகள். ஏராளமான உடைந்த மரச்சாமான்கள். துருப்பிடித்த இரும்புப்பொருட்கள். எப்போதோ வேலை செய்து எஞ்சிய மணலை ப்ளாஸ்டிக் மூட்டைகளில் கட்டி ஒரு ஓரமாக அடுக்கி வைத்திருந்தார்கள். அதில் தான் அவள் வந்து உட்கார்ந்து அந்த சாலையின் மறுஎல்லை வரைக்கும் பார்த்துக்கொண்டிருப்பாள்.

அந்த இடம் தனியானது என்று அவளுக்குத் தோன்றியது. அவள் அங்கிருந்தால் அம்மா மூன்று மாடிகளையும் பக்கவாட்டு செங்கல் படிகளின் வழியாக ஏறி வந்தால் தான் அவளைப்பார்க்க முடியும். கீழிருந்து என்ன கத்தினாலும் மேலே கேட்காது. சாந்தியையோ தேவியையோ மேலே ஏவிவிடுவாள். அவர்களுடன் சரியாகப் பேச்சு வைத்துக்கொள்ள வேண்டாமென்று அவள் நினைப்பாள். அக்கா என்ற தோரணையை சற்றுக்கூடுதலாகவே கைக்கொள்வாள். இல்லாவிட்டால் அந்த வீட்டில் வம்புதான். எல்லா வேலையையும் அவள் தலையில் கட்டி வைத்துவிட்டு ட்யூஷன் படிக்கிறேன் என்று அவர்கள் கிளம்பிவிடுவார்கள். ஒரு வேலையைச் சொன்னால் செய்தே ஆகவேண்டும் என்று இல்லையென்றால் சின்னப்பெண்கள் அதை செய்வதே இல்லை.

அந்த இடத்தை முதலில் பார்க்கும்போது அவள் அமர்ந்திருப்பதற்கான அந்த மணல் மூட்டைகள் இதமான ஒரு உணர்வைத்தரும். ஏனென்றால் வீட்டில் கீழிருந்து அவள் தப்பி மேலே வந்திருப்பாள். வீடு நெரிசலான ஒரு சாலை முனை மாதிரி. அத்தை, பாட்டி, அம்மா மூன்று பேருமே மாறி மாறி எதையாவது சொல்லிக்கொண்டே இருப்பார்கள். மூன்று பேருக்கும் இடையே ஒருபோதும் பூசல் ஓய்ந்ததில்லை. பாட்டி எப்போதுமே மனக்குறையில் இருந்தாள். அவள் பிறந்து வளர்ந்த வீடு ராஜவல்லிபுரத்தில். தெருவிலிருந்து தெருவரை படர்ந்திருந்தது. முற்றத்தில் நின்றால் கொல்லைப்பக்கத்தில் நிற்கும் மகிழ மரம் தெரியும். “வீட்டுக்குள் ஓடி ஓடி கால் ஓயும் அப்பல்லாம்” என்று சொல்வாள் இப்போது இடது கால் நன்றாகவே சூம்பிப்போய் அதன் விளைவாக வலது காலும் வளைந்து பெரும்பாலும் இரும்புக்கட்டிலில் காலை எண்ணெய்ச் சிக்கு பிடித்த தலைகாணி மீது தூக்கி வைத்துக்கொண்டு அமர்ந்திருக்கிறாள்.

அத்தை சற்று குரல் தாழ்த்தி பேசுவது போன்ற ஒரு பாவனையை பேச்சுகளில் எல்லாம் வைத்திருந்தாலும் அவளது குரலும் அம்மாவின் குரலுக்குச் சமானமானது தான். “நமக்கெதுக்கு வம்பு. சொல்லணுமேன்னு சொல்றேன். அப்பறம் உங்க இஷ்டம்” என்று தான் எல்லாப்பேச்சையும் தொடங்கி முடிப்பாள். ஆனால் எதைப்பற்றியும் ஏதாவது அவள் சொல்லாமல் இருப்பதில்லை. அப்பா வீட்டு முகப்பில் அவர் பைக்கை ஏற்றி வைக்கும் ஒரு பகுதிக்கு இந்தப்பக்கம் தனக்கான இடத்தை உருவாக்கிக்கொண்டிருந்தார். அங்கேயே சுருட்டி வைக்கப்பட்ட மெத்தை தலைகாணி. அந்தக்கட்டிலிலேயே அமர்ந்து சின்ன மேசையை இழுத்துப் போட்டுக்கொண்டால் எழுதுவதும் படிப்பதும். பெரும்பாலும் சாப்பிடுவதும் அங்கேயேதான். அவர் உள்ளே வருவதில்லை.

மூன்று தங்கைகளும் இரண்டு தம்பிகளும் எல்லாரும் அதற்கு அடுத்த பெரிய கூடத்தில் தான். ஒவ்வொருவருக்கும் அவர்களுக்கான இடம் அவர்களே எடுத்துக்கொண்டது. சண்டை போட்டு மாற்றிக்கொண்டது. ராஜு மட்டும் எந்த இடத்திலும் தங்க மாட்டான். “இந்த இடத்திலே கொசு கடிக்குது” என்று இடம் மாறி அமர்வான். “இங்க வெளிச்சம் தெரியல” என்பான். “இங்க உக்காந்தா இவ காதுக்குள்ள வந்து சத்தமா படிக்கிறா” என்பான். அந்த வம்புகளுக்குள் அவள் தலையிடுவதில்லை. ஆனால் அவையனைத்தும் சேர்ந்துதான் ஒவ்வொரு நிமிஷமும் அவளைச் சுற்றி நிறைந்திருந்தது.

கூடத்தின் இடது ஓரத்தில் ஜன்னலுக்கு கொஞ்சம் கீழே தரையில் பாய்போட்டுதான் அவள் படுப்பது. அங்கே படுத்தால் ஜன்னல் காற்று கொஞ்சம் வரும். அந்தக்காலத்து சிறிய ஜன்னல். ஆனால் ஜன்னலுக்கு வெளியே கொஞ்ச தூரத்திற்கு வெற்றிடமும் அதன் பிறகு பெருமாள் கோயில் தெப்பக்குளமும் இருந்ததால் காற்றில் நீர் மணமும் பாசி மணமும் இருக்கும். கொஞ்சம் குளிர்மையும் இருப்பதாக அவளுக்குத் தோன்றும். செல்போனில் சத்தமில்லாமல் பாட்டை வைத்து காதருகே வைத்துக் கேட்டுக்கொண்டிருப்பாள். அவளுக்கு இயர் போன் மாட்டிக்கொள்வது பிடிப்பதில்லை. காதுக்குள் வேர்த்து கொஞ்ச நேரத்திலேயே தலைக்குள் முழக்கம் கேட்பது போலாகும். ஒலியைத்தாழ்த்தி தாடை எலும்பில் கேட்பதுபோல் வைத்துக்கொண்டு படுத்தால் அந்தப்பாட்டு அவள் மனதுக்குள்ளேயே ஒலிப்பது போல் இருக்கும். அவள் பிறந்தபோது இளையராஜா தான் ராஜா. ஆனால் என்னவோ அவளுக்கு எம். எஸ். வி பாட்டுதான் பிடித்திருந்தது. ‘உன்னிடத்தில் என்னைக்கொடுத்தேன்.’ அந்தப்பாட்டில் இருக்கும் கொஞ்சலும் குழைவும்.

சுசீலா பாட்டு அவளுக்குப்பிடிக்குமென்றாலும் ஜானகிதான் மனசுக்குள்ளிருந்து பாடுவதுபோல் தோன்றும். ஜானகி பாடும்போது இருட்டான சிறிய உக்ராண அறைக்குள்ளிருந்து வெட்கத்துடன் வெளியே வந்து தரையை நோக்கி பார்வையை தாழ்த்தி முந்தானை நுனியை சுட்டுவிரலில் சுற்றிக்கொண்டு கட்டைவிரலால் தரையை வருடியபடி சற்றுக்கனைத்து நல்ல குரலெடுத்து ஒரு பழைய காலத்து இளம்பெண் பாடுவது போலிருக்கும். வேறெங்கோ இருந்து அந்தக்குரல் வரும். வெட்கம், தயக்கம் பாடப்பாட மனம் அப்படியே வெளியே வரும் உணர்வு. சுசீலா அப்படி அல்ல. சுசீலா பெருமாள் கோயிலில் அர்த்தமண்டபத்தில் கட்டியிருக்கும் வெண்கலமணிபோல எல்லா இடத்திற்கும் கேட்கும் பிரகாரங்கள் முழுக்க ரீங்கரிக்கும்.

ஜானகியின் எல்லாப் பாட்டுமே இனிமையானவைதான். ஆனால் மொட்டை மாடிக்கு அவள் பாட்டுக்கேட்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதில்லை. அங்கே காற்று பறந்து கொண்டிருக்கும். காற்று பாட்டை அடித்துக்கொண்டு போய்விடும் என்று தோன்றும் அங்கே இன்னும் தனிமையாக இருப்பாள். எழுந்து போகும் போது அந்த இடத்தை பார்த்தால் சில சமயம் தூக்கி வாரிப்போடும். இந்த இடிபாடுகளுக்குள் எப்படி உட்கார்ந்திருந்தோம் என்று தோன்றும். யாராவது ஹெலிகாப்டரில் மேலே போய்க்கொண்டு அவளைப்பார்த்தால் அவளும் ஒரு உடைந்து சாயம் போன பொம்மை. தேவையில்லை என்று நினைத்து அங்கே கொண்டு போட்டிருக்கிறார்கள் என்று நினைத்துவிடுவார்கள். அவளுக்கு இன்னமும் அந்தப்பக்கத்து வீடு நன்றாக நினைவிருக்கிறது. குட்டி கவுன் சுற்றிலும் பறக்க அவள் ஒவ்வொரு சுவரையும் தொட்டுவிட்டு தொட்டுட்டேன் தொட்டுட்டேன் என்று கூவியபடியே மறுசுவர் நோக்கி ஓடுமளவுக்கு அந்தப்பெரிய கூடம். இப்போது அதில் அவன் தனியாக அங்கிருக்கிறான்.

**அவன் தன்னைப் பார்க்கிறானா என்று தொடக்கத்தில் அவளுக்கொரு சின்ன பதற்றம் இருந்தது. ஆனால் மணல் மூட்டை இருக்குமிடத்தில் இருந்த இரண்டு சின்டெக்ஸ் டேங்குகள் அவளை முற்றாக மறைத்துவிட்டன.**

*

அந்தப்பெரிய கூடத்தின் சன்னல் எல்லாமே கூட ரொம்பப்பெரியவை. செங்குத்தானப் பெரிய கம்பிகள். பலமுறை துருப்பிடித்து பலமுறை பெயிண்ட் அடித்து அவை ஏராளமான முண்டு முடிச்சுகளுடன் தடவிப்பார்த்தால் கொய்யா மரக்கிளையோ என்று தோன்றும்படி இருக்கும். கம்பிகள் வழியாக ஒரு தண்ணீர் சொம்பை அந்தப்பக்கம் கொடுத்துவிடலாம், அவ்வளவு இடைவெளி. பாட்டி சொல்வாள், "சோத்துக்கு செத்தவன்னா அப்படியே ஒடம்ப நுழைச்சு இந்தால வந்திர முடியும்." அவ்வளவு பெரிய கம்பி இடைவெளி.

அவர்கள் குடியிருந்தபோது எல்லா ஜன்னல்களுக்கும் அம்மாவின் புடைவையால் பெரிய திரை இட்டிருந்தார்கள். இல்லையேல் வெட்டவெளியில் நின்றிருப்பதுபோல் இருக்கும். பல சன்னல்களுக்கு கதவுகள் கொஞ்சம் உடைந்தவை. திறந்தால் கதவுகள் கீலிலிருந்து சற்று சரிந்து இருக்கும். உள்ளே இருந்து இழுத்து சாத்துவது கடினம். வெளியே போய் தூக்கி மரப்பட்டியில் வைத்து அழுத்தவேண்டும்

கீழே கொக்கியைப்போட்டால் ஜன்னல் திண்டில் ஏறி நின்று கையைத்தூக்கித் தான் மேலே கொக்கி போடவேண்டும், அவ்வளவு பெரியகதவு. அவ்வளவு எடை மிக்க தடித்த பலகையை எதற்கு சன்னல் கதவாக போட்டார்கள் என்று தெரியவில்லை. ஆனால் அதுதான் நூறாண்டுகளாகியும் கதவுகளுக்கு அவ்வளவு பலம். புதிய வீடுகளின் ஜன்னல் கதவுகள் எல்லாமே வளைந்து விரிசல் விட்டு ஓரங்கள் சிதைந்திருந்தன. நூறு ஆண்டுகளாகிவிட்டது என்று அந்த வீட்டைப்பார்த்தால் தோன்றும் ஆனால் இன்னும் நூறு ஆண்டுகள் அது அப்படியே தான் இருக்கும் என்றும் தெரியும். சுவர்கள் அந்த அளவுக்கு கனம். வெளியே எந்த அளவுக்கு வெயில் அடித்தாலும் உள்ளே சுவர் தொட்டுப்பார்த்தால் சில்லென்று தான் இருக்கும். சிதை பூசின சுவர்கள். ஆனால் வெள்ளை அடித்தது போலிருக்காது. முட்டை ஓடுபோல ஒரு மழமழப்பு. அதைக்கண்ணாடித்தேய்ப்பு என்பார்களாம். சுண்ணாம்புடன் வெல்லம் கடுக்காயெல்லாம் சேர்த்து ஒரு குழம்பாக்கி அதை வைத்து பூசியிருக்கிறார்கள். எங்கும் காரை பெயர்ந்து விழுந்திருக்காது. ஆனால் நெடுங்காலம் விளக்கெரித்ததனால் மேல்பகுதியெல்லாம் நிறம் மாறி பழைய துணிபோல அழுக்குச் சிவப்பு பிடித்திருக்கும்.

அம்மாவுக்கு அந்த வீடு பிடிக்கவில்லை. "அவ்ளோ பெரிய கூரை ஒட்டறைக்குச்சி வச்சாதான் மேல தொடமுடியும். எத்தன தடவ தான் ஒட்டட அடிக்கிறது" என்று சொல்வாள். இப்போது இருக்கும் இந்த வீடு ஒரு சின்ன ஸ்டூல் போட்டாலே கூரையைத் தொட்டுவிடமுடியும். அப்பா கையை உயர்த்தினால் சீலிங் ஃபேன் அவர் கையை அடிக்கும். இரண்டு சீலிங் ஃபேன்கள் ஓடினாலும் அந்த அறைக்குள் காற்று பெரிதாக வீசாது. வேகமாக ஃபேனை விட்டால் காற்று உள்ளுக்குள்ளே சுற்றிக்கொண்டிருப்பது போலிருக்கும். பழைய வீட்டில் இரண்டு ஜன்னல்களைத் திறந்து வைத்தால் பிள்ளையார் கோயில் பிரகாரத்தில் காற்று ஆறுபோல ஓடிக்கொண்டே இருப்பதுபோல ஒரு ஜன்னலிலிருந்து இன்னொரு ஜன்னலை நோக்கி காற்று சென்றுகொண்டே இருக்கும்.

திரைச்சீலைகள் எல்லாமே நெளிந்தாடும். கொடித்துணிகள் எல்லாமே யாரோ வரிசையாக நின்று நடனம் ஆடுவது போலிருக்கும் இரவில் படுத்திருக்கையில் தன்னைச் சுற்றி ஏராளமான பெண்கள் மெல்லிய நடனத்துடன் நின்றிருப்பதுபோல அவள் நினைத்துக்கொள்வாள். எப்போதாவது இரவில் விழித்துக்கொண்டால் உண்மையாகவே அறைக்குள் வரிசையாகப் பெண்களைப்பார்க்க முடியும். மிக மெல்ல ஆடிக்கொண்டிருப்பார்கள். அவர்கள் எல்லாரும் அங்கே வாழ்ந்து மறைந்தவர்களாக இருக்கலாம். பழைய கால செட்டியார் பெண்கள் வீட்டைவிட்டே வெளியே போவதில்லை. அவர்களுக்கு நகைகள் புடவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் வீட்டுக்குள் வரும். அந்தப்பெரிய கூடத்திலேயே அவர்கள் பேசி சண்டைபோட்டுப் பிள்ளைபெற்று வளர்த்து வெளியே அனுப்பிவிட்டு அங்கேயே செத்து பாடையில் வெளியே போயிருப்பார்கள்.

அந்தப் பெண்களுக்கு வேறு போக்கிடம் கிடையாது. ஆவியாக ஆனாலும் கூட அவர்களால் சாலையிலோ ஆற்றங்கரையிலோ வெளியே விரிந்திருக்கக்கூடிய வயல்வெளிகளிலோ பொட்டல்களிலோ மலை உச்சிகளிலோ போக முடியாது. திரும்பவும் இதே கனத்த சுவர் கொண்ட அறைகளுக்குள் தான் வந்தாகவேண்டும். இங்கு தான் அவர்களால் நிம்மதியாக இருக்க முடியும். ஏனென்றால் இந்த இடம் தான் அவர்களுக்குத் தெரியும். மற்ற எல்லா இடத்திலும் அவர்கள் பதைபதைப்புடன் சேலை முகப்பை தலைமேல் போட்டு உடலைக்குறுக்கி தலைகுனிந்து நடக்க முடியும்.

அவள் மேலிருந்து அந்த அறையைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் மெலிந்த உடல் கொண்டவன். தோள்கள் சற்று முன்னால் வளைந்திருந்தன. கழுத்தில் குரல்வளை சற்று பெரிது. நல்ல அடர்த்தியான தலைமுடி பெரும்பாலும் அதை அவன் சீவி ஒழுங்குபடுத்துவதில்லை. மீசை அடர்த்தியானதுதான். மேலுதடே முழுமையாக மீசையால் மறைந்திருக்கும். அதை கத்திரிக்கோலால் நறுக்கினால் மேலுதடு நன்றாகத் தெரியும். அவள் அங்கிருந்தால் இரவில் அவன் தூங்கும்போது ஒரு கத்திரிக்கோலை எடுத்து சரியாக நறுக்கிவிட்டுவிடுவாள் என்று நினைத்துக்கொண்டாள்.

மேலுதடு நல்ல மென்மையாகத்தான் இருக்கும். கீழுதடு பெண்களைப்போல சிவப்பாக மென்மையானது. அவன் நல்ல நிறம். சாலையில் அவன் நடந்து செல்லும்போது தலைநிமிர்ந்து கைகளை வீசி வேகமாகச் செல்வான். கால்களில் கேன்வாஸ் ஷூ போட்டிருப்பான். அதுதான் அவன் நடையை மாற்றுகிறது. அல்லது அவன் அணிந்துகொள்ளும் நீல ஜீன்ஸும் பெல்டும். எப்போதுமே கட்டம் போட்ட சட்டைதான். அதை முழங்கைவரை மடித்துப்போட்டிருப்பான். அவன் நடை மாறுவதற்கு இன்னொரு காரணம் அவன் தோளில் மாட்டியிருக்கும் லேப்டாப் பையாக இருக்கலாம். அது அவனுக்கு ஒரு நிமிர்ந்த தன்மையைக் கொடுக்கிறது. வெளியே செல்லும்போது மெல்லிய ஃப்ரேம் கொண்ட ஒரு கண்ணாடி அணிந்திருப்பான். ஆனால் வீட்டுக்குள் அவன் முற்றிலும் வேறொருவனாக இருப்பான். வீட்டுக்கு உள்ளே வந்ததுமே ஜீன்ஸ் சட்டையைக்கழற்றிவிட்டு ஒரு லுங்கியைக் கட்டிக்கொள்வான். அதை முழங்காலுக்கு மேலே நன்றாக மடித்து செருகிக்கொள்வான். தோள்கள் அப்போது தொய்ந்து முன்னால் வளைந்துவிடும்.

அவன் அங்கே ஏதோ பாடிக்கொண்டிருக்கிறான் என்று தோன்றும். இங்கே அவ்வளவு கேட்காது. ஆனால் எப்போதாவது இப்படியே பக்கவாட்டு ஜன்னலருகே வந்தான் என்றால் அவன் பாடுவது கேட்கும். எல்லாமே புதிய பாட்டுகள் தான். அவனுக்குப் பாடவும் தெரியாது எல்லாப் பாட்டையும் ஒன்றுபோல பாடுவதாகத் தோன்றும். அவனே சமைத்துக்கொள்கிறானா என்று பார்த்தாள். பெரும்பாலும் அவன் வெளியே இருந்து வரும்போதே இரவுணவு வாங்கிக் கொண்டு வந்துவிடுகிறான். மத்தியானம் வெளியேதான். காலைக்கு மட்டும் ஆம்லெட் போட்டுகொண்டான். அல்லது ரொட்டியை தோசைக்கல்லில் வைத்து சுட்டு எடுத்தான். எப்போதாவது சப்பாத்தியோ தோசையோ விட்டுக்கொண்டான். மற்றபடி அவ்வளவு பெரிய வீடு அவனுக்குத் தேவையே இல்லை. ஒரு கட்டில் தவிர வேறெந்த சாமானும் இல்லை. சுவரிலேயே இருக்கும் அலமாராவிலேயே உடைகளை மட்டித்து வைத்திருந்தான். கீழே லேப்டாப். பெரும்பாலும் தரையில் ஒரு பை போன்ற பிளாஸ்டிக் நாற்காலியைப் போட்டு அதில் அமர்ந்து கால்களை நீட்டிக்கொண்டு மடியில் லேப்டாப்பை வைத்து வேலை செய்தான். செல்போனில் பாட்டு கேட்டான்.

அவன் அந்தப்பெரிய அறையின் பெரும்பகுதியை பயன்படுத்தவில்லை. அல்லது அங்கெல்லாம் அவன் மானசீகமாக நடமாடிக்கொண்டிருக்கிறவனாக இருக்கவேண்டும். அவனுக்கு அத்தனைப் பெரிய வீடு தேவையில்லை என்று அவள் மீண்டும் நினைத்துக்கொண்டாள். அதை அவன் எடுத்ததற்கு ஒரே காரணம் அங்கே வாடகை மிகவும் குறைவு என்பதாக இருக்கலாம். அதைப்போன்ற ஒரு வீட்டுக்குப் பத்து மடங்கு வாடகை ஆகலாம். அவன் மிக நெரிசலான சின்ன வீட்டில் எங்காவது வாழ்ந்திருக்கலாம். அவனுக்கு அங்கே தனியான இடமே இல்லாமலிருந்திருக்கலாம். நிறைய இடம் உள்ள ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து எல்லா இடத்திற்கும் ஓடி ஆடி சுற்றிவரவேண்டும் என்று அவன் நினைத்திருக்கலாம். மீண்டும் மீண்டும் அந்த வீட்டில் அவன் அப்படி என்னதான் செய்கிறான் என்று அவள் எண்ணிக்கொண்டாள்.

மணல் மூட்டை மேல் வந்தமர்ந்து தாழ்ந்த கைப்பிடிச்சுவர் மேல் முகத்தை வைத்து கீழே பார்த்துக்கொண்டிருப்பாள். அவன் எல்லா ஜன்னல்கலையும் திறந்து வைத்திருந்தால் இரவில் ஒவ்வொரு முறையும் வீட்டுக்கு வெளியே வந்து ஜன்னல்களைத் தூக்கி மூடினான். ஆனாலும் மறுநாள் எல்லா ஜன்னல்களையும் திறக்காமல் இருப்பதில்லை. அவன் வீட்டுக்குள் எல்லா ஜன்னல்கள் வழியாகவும் காற்று நுழைந்து சுழன்று வெளியேறிக்கொண்டிருந்தது. வீடுமுழுக்க காற்று அப்படி சுழலும்போது எப்படித் தூங்க முடியும்?

அவளுக்கு ஃபேன் காற்று முகத்திலறைந்தாலே தூக்கம் வராது. முகத்தை மூடிக்கொண்டு தூங்குவது அவள் வழக்கம். முகத்தை மூடினால் செல்போனில் கேட்கும் பாட்டு இன்னும் அந்தரங்கமாக இருக்கும். முகத்தை மூடினால் ஒரு தனியறையில் படுத்திருப்பது போலிருக்கும். வெளியே அத்தனை ஓசைகளும் நடமாட்டமும் இருந்தாலும் கூட அவளுக்கென்று ஒரு இருட்டிருக்கும். அந்த அறையில் இருட்டே இருக்காது என்று அவள் நினைத்துக்கொள்வாள். ஏழு மணியானதுமே தெருவிளக்குகள் எரியத்தொடங்கிவிடும். ஜன்னலைத்திறந்து வைத்திருந்தால் வீட்டுக்குள் தெருவிளக்கு வெளிச்சம் நன்றாகவே வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப்பெரிய ஜன்னல் வழியாக வெளிச்சம் சாய்வாக உள்ளே வந்து விழுந்து கிடக்கும். அவள் அங்கே குடியிருந்த அந்தக்காலத்தில் ஜன்னலை சரியாக மூடாவிட்டால் சிவப்பான பெரிய ஒரு ரிப்பன் போல அறைக்குக் குறுக்காக தெருவிளக்கு வெளிச்சம் விழுந்து கிடக்கும். இரவில் அதைப்பார்த்தால் எழுந்து போய் அதைத் தொட வேண்டும் என்று நினைப்பாள். அந்த ஒளிச்சட்டத்தைக் கையில் ஏந்திக்கொள்ள வேண்டும் என்று நினைப்பாள். ஆனால் ஒருமுறைகூட அப்படி எழுந்து போகத் தோன்றவில்லை. எழுந்தால் அம்மா அத்தை தங்கச்சிகள் என பலபேரைத் தாண்டிச்சென்று அந்த ஒளியைத்தொட வேண்டும்.



வெளிச்சம் ஒருமுறை கிரைண்டர் மேல் பட்டு அதன் எவர்சில்வர் வளைவு விளக்குபோல ஒளிவிட்டுக்கொண்டிருந்தது. இரவில் அவள் நெடுநேரம் அதைப்பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த கிரைண்டர் பகலில் கிரைண்டராகவும் இரவில் வேறொன்றாகவும் மாறுவது என்று தோன்றியது. பகலில் அது கிரைண்டராக நடிக்கிறது. இரவில் அதன் உருவமும் வேலையும், வேறு. அந்த ரகசியத்தை அது மறைத்துக் கொண்டிருக்கிறது. அந்த எண்ணங்களின் வேடிக்கையை அவளே உணர்ந்து புன்னகைத்ததை நினைவுகூர்ந்தாள்.

அப்போது கிரைண்டர் இருந்த இடம் இப்போது இங்கிருந்து தெரிகிறதா என்று பார்த்தாள். அந்த கிரைண்டரிலிருந்து தெறித்த மாவு சுவரில் அப்பியிருக்கும். அங்கே தண்ணீர் வெளியே போவதற்காக ஒரு சிறு துளை இருந்தது. அதனால் தான் அங்கே கிரைண்டர் வைக்கும் முடிவை அம்மா எடுத்தாள். இருந்தாலும் தண்ணீர் சரியாகப்போகாது. ஆகவே தரை முழுக்க பழைய சாக்குகளைப் பரப்பியிருப்பாள். இப்போது எதுவும் தெரியவில்லை. அவன் குடி வருவதற்கு முன்னால் அவனே ஆள் வைத்து நன்றாக வெள்ளை அடித்திருப்பான்போல.

*

அவன் ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சமாக தனிமை கொண்டு சுருங்கிக்கொண்டே செல்வது போல் தோன்றியது. தொடக்கத்தில் அந்த வீட்டுக்குள் அவன் நிறைய நடமாடிக்கொண்டிருந்தான். எல்லா ஜன்னல்களையும் திறந்து வைத்தான். எல்லா ஜன்னல் வழியாகவும் வெளியே எட்டிப்பார்த்தான். ஒரு எல்லையில் சட்டைகளை கழற்றி கொக்கியில் மாட்டினான். இன்னொரு எல்லையில் ஒரு சின்ன பிறையில் வாட்சை வைத்திருந்தான். ஒவ்வொருநாளும் ஒவ்வொரு இடத்தில் உட்கார்ந்து லேப்டாப்பில் வேலை செய்தான். அது எல்லாமே கொஞ்ச நாளைக்குத்தான். அதன்பின் அந்த வீட்டுக்குள் அவனுடைய நடமாட்ட பாதைகள் வகுக்கப்பட்டுவிட்டன. எப்போது என்ன செய்வானென்று அவன் உடலுக்கே தெரிய ஆரம்பித்துவிட்டது.

அவனுடைய அந்தப் பெரிய பிளாஸ்டிக் பை போன்ற நாற்காலி எப்போதுமே ஒரே இடத்தில் கிடந்தது. அதில் அவன் அமரும்போது மிகுந்த களைப்புடன் எடை மிக்க உடலை பொத்தென்று போட்டு அமர்ந்திருந்தது போலிருந்தது. நிறைய நேரம் லேப்டாப்பைத் தூக்கி அப்பால் வைத்துவிட்டு இரு கைகளையும் தலைக்குமேல் கோர்த்து உயரமான விட்டத்தைப் பார்த்தபடி படுத்திருந்தான். படுத்து என்ன நினைத்துக்கொண்டிருப்பான்? அவன் பாட்டும் அதிகமாகக் கேட்பதில்லை. நிறைய நேரம் ஜன்னல் வழியாக சாலையைப் பார்த்துக்கொண்டிருந்தான். அந்தத் தெருவில் எப்போதாவது ஒன்றிரண்டு பைக்குகள் போவதைத் தவிர பெரிய நடமாட்டமும் இருக்காது. ஏனெனில் மறுபக்கம் முட்டுச்சந்து. பெருமாள்கோயில், அதற்கு அப்பால் அவன் என்ன பார்க்கிறான்?

திரும்ப திரும்ப அந்த அறைக்குள் அவன் என்ன செய்கிறான். பெரும்பாலும் ஒன்றுமே செய்வதில்லை. வாங்கி வந்த சாப்பாட்டைப் பொறுமையாக அவன் அவிழ்ப்பதில்லை. பிளாஸ்டிக் பைகளில் இருக்கும் குழம்பை நூலைச் சுற்றி அவிழ்த்து கொட்டுவதற்கு பதிலாக ஒரு முனையைப் பல்லால் கடித்து ஓட்டை போட்டு அழுத்தி தோசை மேலோ சப்பாத்தி மேலோ பீய்ச்சிவிடுகிறான். சிலசமயம் அது மேஜை மேலும் அவன் உடம்பு மேலும் தெறிக்கிறது. எல்லாவற்றையும் திரும்ப ஒரு பிளாஸ்டிக் பைக்குள் போட்டு அப்படியேத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கி குப்பை பைக்குள் போட்டுவிடுவான்.

அவன் சாவியை கீழே கொடுத்துவிட்டு செல்கிறான். அவன் போன பிறகு மத்தியானம் இரண்டு மணிக்கு செல்லம்மா அந்த சாவியை வாங்கி வந்து வீட்டை கூட்டிப்பெருக்கித் துடைத்து வைத்துவிட்டுச் செல்கிறாள். அப்படி ஒன்றும் அங்கே வேலையில்லை. அரைமணி நேரம்கூட வேலையில்லை. அவன் புழங்கும் இடமே அவ்வளவு குறைந்துவிட்டிருந்தது. அந்த வீடு பெரும்பகுதி அவனை விட்டு விலகி வேறொரு காலத்தில் வேறொரு இடத்தில் இருக்கத்தொடங்கியது.



அவன் தன்னைப் பார்க்கிறானா என்று தொடக்கத்தில் அவளுக்கொரு சின்ன பதற்றம் இருந்தது. ஆனால் மணல் மூட்டை இருக்குமிடத்தில் இருந்த இரண்டு சின்டெக்ஸ் டேங்குகள் அவளை முற்றாக மறைத்துவிட்டன. அவளால் நேரடியாக ஜன்னல் வழியாக அறை முழுக்க பார்க்க முடியும். ஆனால் அந்த ஜன்னலில் வந்து நின்று நன்றாகக் கூர்ந்து பார்த்தாலொழிய மேலே அவளைப் பார்க்க முடியாது. அவன் அடிக்கடி அந்த ஜன்னல் பக்கம் வருவதும் இல்லை.

அங்கே குடிவந்த இரண்டு நாள் கழிந்து ஒருமுறை அவன் வீட்டுக்கு வந்திருந்தான். அப்பாவிடம் சம்பிரதாயமாக அறிமுகம் செய்து ஓரிரு வார்த்தைகள் பேசினான். அவன் அங்கே ஒரு பேங்கில் கிளார்க்காக வந்திருந்தான். ஊர் சிவகங்கை பக்கம் எங்கோ ஒரு சிற்றூர். வீட்டில் அம்மா அப்பா தங்கை இருக்கிறார்கள். அது ஒரு தனியார் வங்கிதான். அப்பா "தனியார் வங்கிகளில் ஊழியர்களை நிரந்தரமாக வைத்திருப்பாங்கல்ல?" என்று கேட்டார். அவன் "நிரந்தரமாக ஒரு வேலையில் இருப்பதும் கஷ்டம் நம் திறமைக்கேற்ப வேலையை மாற்றிக்கொண்டே இருந்தால் தான் முன்னேற முடியும்" என்றான். பக்கத்து அறையில் அவர்கள் பேசிக்கொண்டிருப்பதைக்கேட்டு அவளுக்கு சிரிப்பு வந்தது. அப்பா இருபத்தெட்டு வருடமாக ஒரே அலுவலகம் பதினேழு வருடமாக ஒரே பைக். இரண்டே வீடுகளில் வாழ்ந்து இன்னும் ஓராண்டில் ஓய்வு பெறப்போகிறார்.

அம்மா காபி கொண்டு வைத்துவிட்டு அவனிடம் அவனுடைய அம்மா அப்பா எல்லாம் என்ன செய்கிறார்கள் என்று கேட்டுக்கொண்டிருந்தாள். அப்பா அவளைப்பற்றி அவனிடம் சொன்னார். அவள் பி.எஸ்.சி படித்துவிட்டு வேலைதேடிக்கொண்டிருப்பதாக சொல்லி அவள் பேரைச்சொல்லி அழைத்தார். அவள் சென்று நின்றபோதும் அவனை அறிமுகம் செய்து "தெரியுமில்ல பக்கத்துவீட்டில வந்திருக்கிறார். பேங்கில இருக்காரு" என்றார். "ஹாய்" என்றாள். அவனும் சற்றுக்கூச்சத்துடன் அவளைப்பார்த்து புன்னகைத்து "ஹாய்" என்று சொன்னான். "இவ அவ்வளவு நல்லா படிக்கல. கம்ப்யூட்டர் சயின்ஸ் எடுத்துக்கச் சொன்னேன். பிடிக்கலன்னு மேத்தமெடிக்ஸ் எடுத்தா. எல்லா பேங்க் எக்ஸாமும் எழுதிப்பார்த்தா. ஒண்ணும் தேறல." அவள் அப்பா சொன்னார். அவன் பொதுவாகத் தலையாட்டினான்.

அப்பா தன்னைப்பற்றி மேற்கொண்டு மனக்குறைகளைச் சொல்லப்போகிறார் என்று தெரிந்து அவள் இயல்பாகப் பின்னால் நகர்ந்தாள். அப்போது அவள் கால் கொலுசின் ஒலி கேட்டு அவன் திரும்பிப்பார்த்தான். ஒரு கணம் அவன் பார்வை அவள் கொலுசைப் பார்த்துவிட்டு அவளைப் பார்த்தது. அவள் புன்னகைத்துவிட்டு உள்ளே வந்தாள். அவன் என்ன பார்த்தான் என்று உள்ளே வந்து தன் சிறிய நாற்காலியில் அமர்ந்தபோது அவள் எண்ணிக்கொண்டாள்.

பெரிய நகரங்களில் பெண்கள் கொலுசு அணிவதில்லை போல. ஜீன்ஸ் அணிந்தால் கொலுசு அணிய முடியாது. சுடிதார் போட்டால் கூட கொலுசு அணிந்தால் வித்தியாசமாகத்தான் இருக்கும். தாவணியோ புடவையோ அணிந்தால் தான் கொலுசு பொருத்தம். அவள் கொலுசை விரும்பி அணியவில்லை. அணியக்கூடாது என்றும் இல்லை. அவள் வயதுக்கு வந்தபோது அந்த வெள்ளிக்கொலுசு திருப்பத்தூர் சித்தி பரிசாகக் கொண்டுவந்து கொடுத்தது. அவளே போட்டும் விட்டாள். அதிலிருந்து அதைத்தான் போட்டுக்கொண்டிருந்தாள். சற்றுப்பெரிய மணிகள் கொண்டது. நன்றாகவே ஓசை கேட்கும். அந்த ஓசை அவளுக்கே அவளுடைய ஓசையாக மனதில் படிந்துவிட்டிருந்தது. அவள் அந்த சின்ன வீட்டுக்குள் அங்குமிங்கும் போவதை அவள் நினைத்துப் பார்க்கும்போது கூடவே அந்த கொலுசின் சத்தமும் நினைவுக்கு வரும்.

ஆனால் அந்தக்கொலுசு முதன்முறையாக வித்தியாசமாகத் தோன்றத்தொடங்கியது. அது என்ன காலில் ஒரு சத்தத்தை எழுப்பிக்கொண்டே நடமாடிக்கொண்டிருப்பது? உலகநாட்டில் வேறெந்த நாட்டிலாவது பெண்கள் அப்படி நடக்கிறார்களா அதைப்போட்டிருக்கும் பெண்ணுக்கு ரகசியமே இருக்காது. அவள் எங்கு வந்தாலும் உடனே தெரிந்துவிடும். ஒருவேளை அதற்குத்தான் கொலுசைப்போடச் சொல்கிறார்களோ? அவள் எண்ணிப்பார்த்தபோது எப்போதெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் கொலுசைக்கழற்றினாளோ உடனடியாக அம்மா கொலுசை மாட்டச் சொல்லியிருக்கிறாள். அப்பாவும் அம்மாவும் பேசிக்கொண்டிருக்கும்போது அவள் அங்கே வருவதை கொலுசு அவர்களுக்குச் சொல்கிறது. அப்பாவும் அம்மாவும் கூட ஏதோ தனியான ஒரு தாம்பத்திய வாழ்க்கை இருக்கத்தான் செய்கிறது. மற்றவர்கள் வந்தால் கூட பரவாயில்லை. அவளுடைய காலடி ஓசைதான் எல்லாருக்கும் தெரியவேண்டி—யிருக்கிறது.

கொலுசைக்கழற்றி வீசிவிட்டால் அவள் இல்லாமல் ஆகிவிடுவாள் என்று தோன்றியது. ஒருவேளை அவள் செத்துப்போய்விட்டால், பேயாக அந்த வீட்டுக்குத்தான் வருவாள். அப்போதும் கொலுசு போட்டிருப்பாள். அவளை அவர்களால் பார்க்க முடியாது. கொலுசு சத்தம் மட்டும்தான் கேட்கும். பேயாக வந்தால் முதலில் அந்த கொலுசைத்தான் கழற்றிவீசவேண்டும். அவர்களுக்குத் தெரியாமல் அந்த வீட்டுக்குள் வரவேண்டும் என்று நினைத்தாள். பேசிக்கொண்டிருக்கும்போதே குண்டு திருகியை விரல்கள் சுழற்றிக்கொண்டிருப்பதை உணர்ந்தாள் கொலுசைக்கழற்றி கையில் எடுத்துப்பார்த்தாள். அதுநிறம் மங்கி அலுமினியம் போலிருந்தது. அதை எடுத்து கைப்பிடிச்சுவரில் வைத்தாள். ஒரு நெக்லஸ் போலத் தோன்றியது. மிகச்சிறிய ஒரு பொம்மைப்பெண் இருந்தால் அவள் கழுத்தில் மாட்டலாம். தன் கையில் அதை ப்ரேஸ்லெட்போல வைத்துப்பார்த்தாள்.

ஆனால் நினைத்த அளவுக்கு அது மங்கலாகவும் இல்லை. நாலைந்து வாரம் முன்னால் தான் அதை காலிலிருந்து கழற்றாமலேயே சுத்தம் செய்திருந்தாள். கையில் வைத்து அதை மெல்லத்தட்டும்போது அவளே அந்த தட்டுமுட்டுகள் நிறைந்த மொட்டைமாடியில் நடமாடும் ஓசை கேட்டது. அதை வேகமாக தட்டினாள். அவள் ஒரு மேடையில் நடனமாடுவதுபோலத் தோன்றியது. இன்னும் வேகமாக, அவளை யாரோ துரத்துகிறார்கள். பின்னர் மிக மெதுவாகத் தட்டினாள். மிகப்பதுங்கி மிக மெதுவாக அவள் எதையோ பார்க்கிறாள். கண்ணை மூடிக்கொண்டு அந்த கொலுசு சத்தத்தால் தன்னை உருவாக்க முடியும் என்று அவள் கற்பனை செய்தாள்.

கொலுசின் ஒருமுனையை கையால் பிடித்துக்கொண்டு வேகமாகச் சுழற்றினாள். தேர்த்திருவிழாவின்போது வெள்ளிக்குடை சுழற்றுவது போலிருந்தது. எந்தப்பொருளும் சுழற்றப்படும்போது அழகாகிவிடுவதைப் பார்த்தாள். எல்லாமே ஒருவட்டத்தின் பகுதியாக மாறிவிடுகின்றன. சட்டென்று கையிலிருந்து கொலுசு தெறித்து கீழே விழுந்தது. அவள் மணல் மூட்டைகளில் இறங்கி முழந்தாளிட்டு அந்த கொலுசைப்பிடித்து இழுத்தெடுத்தாள். அது கீழிருந்த பழைய நாடாக்கட்டிலின் இடுக்கில் சிக்கியிருந்தது. அவள் அதை இழுத்தபோது ஒருபகுதி இரண்டு குண்டுகளுடன் தெறிந்து அங்கேயே விழுந்தது, எஞ் சியபகுதி கையில் வந்தது. அவளுக்குச் சற்று துணுக்குறல் ஏற்பட்டாலும் “சரி போனாப்போகுது” என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள்.

அறுந்த கொலுசை எடுத்து வளைத்து இருமுனைகளிலும் வைத்தபோது அப்போதுகூட குண்டு திருகியினுள் அதை செலுத்தி மாட்டிவிடமுடியும் என்று தோன்றியது அந்த இரண்டு மணிகளும் இல்லாமலிருந்தால் கொஞ்சம் நீளம் குறைவதன்றி வேறு பிரச்சினை ஒன்றும் இல்லை. எப்படி வேண்டுமானாலும் கழற்றி கொஞ்சம் நீளத்தைக்குறைத்துக் கொள்ளும்படித்தான் அந்த அமைப்பே இருந்திருக்கிறது. அம்மாவுக்கு ஒன்றும் தெரியப்போவதில்லை என்ற எண்ணமே அவளுக்கு கொலுசு அறுந்த சிறு பதற்றத்தை இல்லாமல் ஆக்கியது. தன் காலில் மீண்டும் அந்தக் கொலுசை அணிந்தாள். பெரிதாக இறுக்கமாக இருக்கவில்லை. இருமுறை காலை மெல்லத்தட்டினாள். ஓசை வந்தது.

முன்பு ஒருமுறை பெருமாள் கோயிலில் பரத நாட்டியத்திற்கு வந்த பெண் மேடையில் தன் காலால் இரண்டு முறை தட்டினாள். அந்த ஓசை மொத்த அரங்கையும் சட்டென்று நடனத்திற்குள் கொண்டுபோய்விட்டதை நெடுநாள் அவள் வியப்புடன் நினைத்துக்கொண்டிருந்தாள். அவள் மீண்டும் முழந்தாளிட்டு நாடாக்கட்டிலை நன்றாகத்தூக்கி அறுந்த இரு துண்டுகளை எடுத்தாள். இரண்டு குண்டு மணிகள் தொங்க ஒரு சிறுபகுதி. அதுவெள்ளியாலான ஒரு தொங்கட்டான் போலிருந்தது. அதை தன் காதில் வைத்து பிடித்துக்கொண்டு தலையை ஆட்டிப்பார்த்தாள். மெல்லிய சத்தம் கேட்டது. அதைப்போன்ற ஒன்றை ராஜஸ்தானி பெண்கள் மூக்கில் கூட அணிந்திருக்கிறார்கள். வெள்ளியில் தான். நெற்றிச் சுட்டியாகக்கூட வைத்துப்பார்க்கலாம்.

வகிடின் விளிம்பில் வைத்து தலையை ஆட்டியபோது வேடிக்கையாக இருந்தது. எல்லா நகையும் ஒன்றுதான். மோதிரமாக போடலாமா அந்த குண்டுமணிகள் மோதிரத்திற்கு சரிவராது அவள் அதை கைப்பிடிச் சுவரின் விளிம்பில் வைத்தாள். அவை மிகச்சிறிய மலர்கள் போலிருந்தன. அந்த நிறத்தில்கூட பூக்கள் உண்டு. கொஞ்சம் வாடிய முல்லைப்பூ என்று சொல்லலாம். சின்ன குண்டு மல்லிபோல. அதை மட்டும் பார்த்தால் அது என்ன நகை என்று கண்டுபிடிக்க முடியுமா? தெரிந்துவிடும் கொலுசுதான். எந்தக்கொலுசென்று கூடத் தெரியும். அவள் தான் அதை தொங்கட்டான் ஆகவும் நெற்றிச்சுட்டியாகவும் மூக்குத்தியாகவும் மாற்றிக்கொண்டிருந்தாள்.

அவள் அதைப்பார்த்தபோது சட்டென்று ஒரு புன்னகை எழுந்தது. சுட்டுவிரலை அதன் அருகே வைத்தாள். மூன்று நாட்கள் முன்னாடிதான் அவள் கைக்கு மருதாணி போட்டிருந்தாள். நகங்களுக்கு ஆழ்ந்த சிவப்பு நிறத்தில் நகச்சாயம் இட்டிருந்தாள். அவள் கை ஒரு பூப்போல் இருந்தது. நீண்ட குழல் போன்ற பூ. அதன் நுனியில் அந்த வெள்ளை மணிகளுடன் கொலுசுத்துண்டு, இன்னொரு பூ. அவள் விரலை நன்றாகச் சுண்டி ஒரு தட்டு தட்டினாள். அது பறந்ததுபோல சென்று கீழே ஜன்னல் கம்பிகளின் இடைவெளியினூடாக அவன் அறைக்குள் விழுந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Protection For You & Your Family

## Our services

- Life Insurance «
- Critical Illness Protection «
- Mortgage Protection «
- Travel/Super Visa Insurance «
- Dental & Medical Benefits «
- Disability Benefits «
- Long Term Care «
- Employee Benefits «
- RESP, RRSP & TFSA «



## Are You Getting Million Dollar Advice?



**Life100**

INSURANCE & INVESTMENTS INC.

**416-918-9771 | 416-321-2500**

info@life100.ca www.life100.ca

10 Milner Business Court, Suite 208,
Scarborough, ON M1B 3C6

**Sritharan Thurairajah** CLU, CHS

*Simple Solution in a Critical Situation*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை: **மணி வேலுப்பிள்ளை**

# மலபார்



உரோமத் தளபதி பிளினி (Pliny, பொ. ஊ: *23—79*), கிரேக்க—எகிப்திய ஆய்வாளர் தொலமி (Ptolemy, *87—170*), கிரேக்க புவியியலர் கொஸ்மஸ் (Cosmas Indicopleustes, *?—550*), பாரசீக அறிஞர் அல்—பிருனி (Al-Biruni, *973—1048*), போர்த்துக்கேய கடலோடி வாஸ்கோட காமா (Vasco da Gama, *1460—1524*) உட்பட வெளிநாட்டவர்கள் பலரும் தென்னிந்தியாவை "மலபார்" என்று குறிப்பிடுள்ளார்கள்.

இலங்கைக்கும், தென்னிந்தியாவுக்கும் வந்துசென்ற இத்தாலிய பயணி மார்க்கோ போலோ (Marco Polo, *1254—1324*) எழுதிய நூலில் மலபார் என்பது "மாபார்" என்று திரிந்துள்ளது. "மாபார்கள்" அடிக்கடி "பகவானே! பகவானே!" என்று சொல்லி இறைவனைத் துதிப்பதாக அவர் தெரிவிக்கிறார்.

புத்தளத்தில் தரையிறங்கிய மொரக்கோ நாட்டு யாத்திரிகர் இபின் பதூதா (Ibn Battuta, 1304-1369) "மாபார்" மொழிபேசும் ஆரியச் சக்கரவர்த்தியுடன் தாம் பாரசீக மொழியில் உரையாடியதாகவும், சக்கரவர்த்தியின் பேருதவியுடன் சிவனொளிபாதமலைக்குப் புறப்பட்டதாகவும் குறிப்பிடுகிறார்.

*1658*ல் போர்த்துக்கேயரிடமிருந்து யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றச் சென்ற ஒல்லாந்தப் படையுடன் கூடிப்புறப்பட்ட சமயபோதகர் பால்தியஸ் (Philip Baldaeus, 1632-1672) அங்கு "மலபார்" மொழியைக் கற்று, யேசுநாதரின் போதனைகளை மொழிபெயர்த்து சமயப்பணி ஆற்றினார்.

*19* ஆண்டுகள் கண்டியில் சிறையிருந்த பின்னர், அனுராதபுரத்துக்கு தப்பியோடி, வன்னிக்காட்டை ஊடறுத்து, அருவியாறு வழியே, ஒல்லாந்தரின் மன்னார் மாவட்ட அரிப்புக் கோட்டைக்கு தப்பிச்சென்ற ரொபேர்ட் நொக்ஸ் (Robert Knox, 1641-1720) "மலபார்" மன்னன் கயிலை வன்னியனின் ஆட்களிடம் அகப்படுவது "சட்டிக்குள்ளிருந்து அடுப்புக்குள் விழுவதை ஒக்கும்" என்று பதறுகிறார்.

வழியில் அந்தணர்கள் இருவர் எதிர்ப்பட்டபொழுது, அவர்களிடம் அம்பு—வில் இருக்கும் என்று அஞ்சிய நொக்சும் தோழரும் நடையை நிறுத்தி, தமது கத்தி, கட்டாரிகளை உருவுகிறார்கள். அந்தணர்கள் சோறு, மரக்கறி சமைப்பது புலப்படவே, "நெருங்கி வரலாமா?" என்று சிங்களத்தில் கத்துகிறார்கள். பதிலுக்கு அந்தணர்கள் "மலபார்" மொழியில் கத்துகிறார்கள். எதுவும் புரியாத நொக்சும் தோழரும் சைகை மொழியைப் பயன்படுத்தி நெருங்கி வருகிறார்கள். காட்டுப்பாதையில் புண்பட்ட முதுகை இருவரும் காட்டுகிறார்கள். அந்தணர்கள் உளமிரங்கி, வானத்தை நோக்கி கைகளை வீசி, "தம்பிரானே! தம்பிரானே!" என்று "மலபார்" மொழியில் துதித்தபடி தமது சைவச் சாப்பாட்டை அவர்களுக்கு ஈகின்றார்கள். "நெடுநாட்களுக்குப் பிறகு வயிறு புடைக்கச் சாப்பிடக் கிடைத்தது" என்று நன்றி பாராட்டுகிறார் நொக்ஸ்.

ஒல்லாந்த மொழியில் தொகுக்கப்பட்ட தேசவழமை சட்டக்கோவையின் முகப்பில் இவ்வாறு பொறிக்கப்பட்டுள்ளது: "*1706*ம் ஆண்டு ஆளுநர் கோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோ. சைமன்சின் கட்டளைப்படி கிளாஸ் ஐசாக்சினால் திரட்டப்பட்ட தேசவழமையை அல்லது யாழ்ப்பாண மாகாணத்து "மலபார்" வாசிகளின் வழமைகளை முற்றிலும் நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குவிதி, 1707—01—30."

"12 தமிழ் முதலியார்கள் தேசவழமையை மீள்நோக்கி தமிழில் மொழிபெயர்த்தார்கள்" (John H. Martyn, Jaffna Notes, 1923).

ஆங்கிலேயரின் கொழும்பு மாநகர அரண்படையில் தொழுகைக் குருவாக விளங்கிய கோர்டினர் தனது இராமேஸ்வர பயணம் குறித்து இப்படி எழுதுகிறார்: "பக்கப்பாடாக திருநீறு பூசி சிவனை வழிபடுவோர் "மலபார்கள்" எனப்பட்டார்கள்ஞ் முத்துக்குளிப்பு விளம்பரம் "மலபார்" மொழியிலும் ஆங்கில மொழியிலும் விடுக்கப்பட்டது; முத்துக்குளிக்க முதல் சுறாக்களைக் கட்டிப்போடும் மந்திரவாதியை "மலபார்" மொழியில் கடல்குட்டி என்கிறார்கள்ஞ் எமது "மலபார்" உரைபெயர்ப்பாளரின் பெயர்: ஐயா முதலி" (James Cordiner, A Description of Ceylon, London, 1807).

பொது ஊழி 6ம் நூற்றாண்டில் பாளி மொழியில் மகாவம்சத்தை எழுதிய மகாநாமதேரர் தமிழரை "தெமளோ" என்று சொல்லுகிறார். அதன்படி 1837ல் முதன்முதல் மகாவம்ச பிரதிகளுள் ஒன்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த டேர்னர் (George Turnour (1799-1843) "Damilas" என்று குறிப்பிடுகிறார். அதை வைத்து தனது நூலை எழுதிய தெனன்ற் "மலபார்கள்" என்கிறார் (James Emerson Tennent, CEYLON, 1860).

மகாவம்சத்தை முதன்முதல் (1908ல்) ஜேர்மன் மொழியில் பெயர்த்த கைகர் (Wilhelm Geiger, 1856-1943), அந்த மொழிபெயர்ப்பை ஆங்கிலத்தில் (1912ல்) பெயர்த்த போட் (Bode), அந்த ஆங்கில மொழிபெயர்ப்பை செப்பனிட்டு வெளியிட்ட கைகர் இருவரும் "Damilas" என்றுதான் குறிப்பிடுகிறார்கள்.

தெனன்ற் "மலபார்", "தமிழ்" இரண்டையும் மாறிமாறிப் பயன்படுத்துகிறார்: "எபிரேய மொழியில் குரங்கு, தந்தம், மயில் என்பவை குறித்து பயன்படுத்தப்படும் சொற்கள் "தமிழ்ச்" சொற்கள்ஞ் "மலபார்" கூலிகள் எலிகளையும் அகழான்களையும் பிடித்து எண்ணெயில் பொரித்து உண்கிறார்கள்ஞ் "தமிழரும்" சிங்களவரும் ஓணானை உயிரோடு பிடித்து அதன் நாக்கைப் பிடுங்கி வாயில் போடும் காட்டுமிராண்டித்தனம் படைத்தவர்கள்ஞ் சேனன், குத்தியன் ஆகிய "மலபார்ப்" படையினர் இருவரும் சிங்கள மன்னன் சூரதீசனைக் கொன்று 22 ஆண்டுகள் ஆண்டார்கள். பிறகு சூரதீசனின் படையினர் அவர்களைக் கொன்று ஆட்சியை மீட்டு 10 ஆண்டுகளுக்குள், எல்லாளன் எனும் "மலபார்ச்" சோழன், சிங்கள மன்னன் அசேலனைக் கொன்று 44 ஆண்டுகள் ஆண்டான். நண்பர், பகைவர் என்ற பேதமின்றி நீதி பாலித்தான். மகாவம்சம் அவர்களை தெமளோ என்கிறது. ஆனாலும் சிங்கள கால ஏடுகளில் உள்ளபடி தென்னிந்தியாவிலிருந்து படையெடுத்து வந்தவர்களை நான் "மலபார்கள்" என்றேன்..." என்கிறார் தெனன்ற்!

அநகாரிக தருமபாலா (1864—1933) தமிழரை "மலபார்கள்," "பிறநாட்டவர்கள்" என்றும், அவர்களை வெளியேற்ற வேண்டும் என்றும் தெரிவித்தார். "தமிழர் இந்த நாட்டவர்கள் அல்லவா!" என்று கேட்டதற்கு, "நான் இந்தியரை (மலையகத் தமிழரை) சொன்னேன்" என்று கதையை மாற்றினார். அவரது உள்ளக்கிடக்கை இங்கு வெளிப்படையாகப் புலப்படுகிறது.

Signed an order in Malabars என்பது Signed an order in Tamil என்று பொருள்படும்" என்கிறார் லூவிஸ் (John Penry Lewis, A Manual of The Vanni Districts, 1895). அதாவது Malabars எனும் பன்மை தமிழ்மொழியைக் குறிப்பதாகக் கொள்கிறார். மறுபுறம் "Tamils were called Malabars," என்பதை ஏற்றுக்கொள்கிறார் இராசநாயகம் (Mudaliyar C. Rasanayagam, Ancient Jaffna, 1926).

1931ல் தென்னிந்தியாவிலிருந்து புறப்பட்ட "மலபார்" எனும் கப்பல் மூடுபனியில் சிக்குண்டு, சேதமடைந்து ஆஸ்திரேலியாவில் சிட்னி மாநகரத்துக்கு தென்கிழக்காக 12 கிலோமீட்டர் தூரத்தில் கரையொதுங்கியது. அதிலிருந்து அந்த இடத்துக்கு மலபார் எனும் பெயர் வழங்கி வருகிறது.

இனி "மலபார்" எனும் சொல்லின் தோற்றுவாய் குறித்து ஓர் எளிய ஊகத்தை நாம் முன்வைக்கலாம்: பொது ஊழியின் துவக்கத்தில் இந்தியாவுக்கு வந்த அராபிய, பாரசீக, ஐரோப்பிய வணிகர்களின் கண்களுக்கு முதன்முதல் தென்னிந்தியாவின் மேற்குக் கரையோர குறிஞ்சித்திணை தென்பட்டிருக்கலாம். மலைச்சாரல் என்று பொருள்படும் "மலைவாரம்" எனும் திராவிட மொழிகளுக்குப் பொதுவான தமிழ்ச்சொல் அராபிய, பாரசீக இஸ்லாமிய வணிகர்கள் வாயிலாக கிரேக்கர், உரோமர் முதலிய ஐரோப்பியரைச் சென்றடைந்தபொழுது, அது "மலபார்" என்று திரிந்திருக்கலாம்.

"வ"கரம் ஐரோப்பிய மொழிகளில் "ப"கரமாகத் திரிபதுண்டு. எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணப் பட்டினத்தின் ஒல்லாந்த தளபதி சுவார்தகரூன் (Hendrick Zwaardecroon, 1667-1728) விட்டுச்சென்ற திரட்டில் "வெள்ளாளர்" என்பது "Bellalars" என்று திரிந்துள்ளது. 1908ல் இலங்கையின் மரஞ்செடிகொடிகளைப் பதிவிட்ட ஜோன் பென்றி லூவிஸ் (John Penry Lewis) "வள்ளம்" என்பதை ballum என்று குறிப்பிட்டுள்ளார். இற்றைவரை "வெற்றிலை" என்பது ஆங்கிலத்தில் betel என்று வழங்கி வருகிறது. அதே விதமாகவே bank என்பது தமிழில் "வங்கி" எனவும், bankruptcy என்பது "வங்குறோத்து" எனவும் திரிந்துள்ளன.

ஏறத்தாழ 20 நூற்றாண்டுகளாக திராவிடப் புலத்தையும், மக்களையும், மொழியையும் குறித்த "மலபார்" எனும் சொல் இன்று குன்றிக்குறுகி கேரளாவில் ஒரு பகுதியை மட்டும் குறிக்கின்றது. "மலபார் கடுகதி" (Malabar Express) என்பது திருவனந்தபுரத்துக்கும், மங்களூருக்கும் இடையே ஓடும் கடுகதி தொடருந்துச் சேவை என்பது தெரிந்ததே.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கட்டுரை: **நரேஸ் வேல்சாமி**

# நாட்டார் கதையில் பெண் கதாபாத்திரமும் அதிகாரத் தலைகீழாக்கமும்

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அதிகாரத்தால் ஒடுக்கப்படும் மக்கள் தங்களின் எதிர்ப்புகளைப் பல்வேறு வகையில் வெளிப்படுத்தியுள்ளனர். குரலற்ற மக்களின் எதிர்ப்பின் வெளிப்பாட்டில் நாட்டார் இலக்கியங்கள் மிக முக்கியமான இடத்தைக் கொண்டுள்ளன. ஏட்டில் எழுதா இவ்விலக்கியங்கள் கல்விமறுக்கப்பட்ட மக்களின் எதிர்ப்புக் குரலைப் பல்வேறு இடங்களில் பதிவுசெய்து வைத்திருக்கின்றன. இதை ஜெரால்ட் ஸ்காட் 'எழுதப்படாத எதிர்ப்பின் வரலாறு' என்று குறிப்பிடுகிறார். அடிமைமுறைகளைப் பின்பற்றிய மேற்கத்திய நாடுகளிலும், சாதியைப் பின்பற்றும் இந்தியா போன்ற நாடுகளிலும் இவ்வகை எதிர்ப்பு முறையைப் பரவலாகக் காணமுடிகிறது. ஸ்காட் தன்னுடைய எளியவர்களின் ஆயுதம் (weapon of the weak) என்ற புத்தகத்தில் குறிப்பிடும் அதிகார எதிர்ப்பின் வழிமுறைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1. அதிகார வர்க்கத்தால் கொடுக்கப்படும் வேலைகளைச் செய்யாமல் ஏய்த்தல்**

**2. அதிகார வர்க்கத்தால் கட்டமைக்கப்பட்ட விதிமுறைகளை ஏற்காமல் அதைக் கைவிடுதல்.**

**3. ஏமாற்றுதல்.**

உலகம் முழுவதும் நடைபெற்ற இவ்வித எதிர்ப்பு முறையை ஆய்வாளர்கள் மறைமுக எதிர்ப்பு (passive resistance) என்று குறிப்பிடுகின்றனர்.

அடிமைமுறை உச்சத்திலிருந்த ஆப்பிரிக்கச் சமூகங்களில் அடிமைகள் தலைவர்கள் மீது தங்களுக்கு இருக்கும் கோபத்தை அதிருப்தியை நேரடியாக வெளிப்படுத்தினால் அவர்களுக்குத் தண்டனை கொடுக்கப்படும் என்பதால் மேற்கண்ட முறையைப் பின்பற்றியிருக்கின்றனர். தலைவர்கள் தங்களுக்கு வேலைக் கொடுக்கும் பொழுது அடிமைகள் தங்களின் ஏமாற்றும் திறமைகளைப் (deceptive skills)பயன்படுத்தி வேலையைத் தாமதப்படுத்தித் தலைவர்களுக்குப் பொருள் இழப்பை ஏற்படுத்துகின்றனர். ச்செயலை அதிகாரத்திற்கு எதிராக அவர்கள் தொடர்ச்சி யாகச் செய்து அதிகாரமிக்கவர்களை வென்றுள்ளனர்.

இங்கு அடிமைகளை வைத்திருப்பவர்களின் பொருளாதாரம் என்பது நேரடியாக அடிமைகளைச் சார்ந்து இருக்கிறது என்பதால் அவர்களால் இவர்களைத் தவிர்க்க முடியாது. அவர்கள் அதிகாரிகள் இருக்கும்பொழுது நன்றாக வேலை செய்வதும் பின்பு அவர்கள் சென்றபின்பு வேலைசெய்யாமல் இருப்பதுமாக ஏமாற்றுகின்றனர். இதனால் அதிகாரிகளால் இவர்களின் மறைமுக எதிர்ப்பிற்குத் தண்டனையும் வழங்கமுடியவில்லை. ஆகையால் இவர்கள் அவர்கள் கேட்கும் சில உரிமைகளைக் கொடுக்கின்றனர். இதைப் பயன்படுத்தி அவர்கள் தங்களின் ஒரு சில உரிமைகளைப் பெற்றுக்கொண்டனர்.

ஆ. சிவசுப்பிரமணியன் இத்தகைய எதிர்ப்பு முறையை நலிந்தோரின் ஆயுதம் என்று குறிப்பிடுகிறார். சாதியப்படிநிலையில் கீழ் இருக்கும் வண்ணார் சாதியினர் படிநிலையில் மேல் இருப்பவர்களிடமிருந்து வெளுப்பதற்கு எடுத்து வந்த துணி எதிர்பாராது கிழிந்துவிட்டாலோ நிறம் மங்கிப் போனாலோ அவர்களை அடிப்பர் மேலும் கடுமையாகத் திட்டுவர். இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் நேரடியாக அவர்களை எதிர்க்காமல் அமைதியாக இருப்பார்கள். ஆனால், அவர்கள் துணிகளை மறுமுறை வெளுக்கும் பொழுது அதை வெள்ளாவி தண்ணீரில் இரண்டு நாட்கள் ஊறப்போடுவார்கள் இதனால் துணி கொடுக்கும் பொழுது நன்றாக இருந்தாலும் அதை அவர்கள் அணியும் பொழுது துணியில் பொத்தல் ஏற்பட்டுவிடும். இதை வெளுக்கக் கொடுத்தவர்கள் கேட்டால் நான் கொடுக்கும் பொழுது நன்றாகத்தானே இருந்தது துணியில் தான் ஏதோ குறை என்று கூறிவிடுவார்கள். இதே போன்று ஆடைகளில் நமைச்சல் ஏற்படுத்தும் காய் மற்றும் இலைகளைத் தடவிவிட்டுவிடுவார்கள் இதனால் அவர்கள் பாதிக்கப்பட்டு இவர்களிடம் விசாரிக்கும் பொழுது அவர்கள் காயப்போட்ட இடத்தில் ஏதாவது இருந்திருக்கலாம் என்று கூறிவிடுவார்கள்.

மேற்கண்ட இரண்டிலும் மக்கள் அதிகாரத்திற்கு எதிரான தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றனர். இங்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் அதேவேளையில் அதனால் ஏற்படும் பாதிப்பிலிருந்து தப்பிப்பதற்கான வழியையும் அந்த எதிர்ப்பில் வைத்துள்ளனர். நமைச்சல் ஏற்படுத்தும் காயைத் தடவிவிட்டு அவர்கள் கோபத்தோடு வரும் பொழுது காயப்போட்ட இடத்தில் இருந்திருக்கலாம் என்று கூறித் தப்பித்துக்கொள்ளலாம். இவ்வாறு தப்பித்துக் கொள்வதற்கான மிகச்சிறந்த மறைமுறை எதிர்ப்பு ஆயுதமாக நாட்டார் கதைகள் விளங்குகின்றன. நாட்டார் கதைகளின் பயன்பாடுபற்றி விவிலியம் பாஸ்கம் பின்வருமாறு கூறுகிறார்.

நாட்டார் கதை என்பது தங்களது அன்றாட வாழ்வில் ஏற்படும் புனைவுக்குள் செல்லும் முயற்சி என்கிறார். இந்தப் புனைவு அதிகாரத்தால் ஒடுக்கப்படும் மக்கள் பேசுவதற்கான ஒரு சமூக வெளியை அவர்களுக்கு உருவாக்கிக்கொடுக்கிறது. ஸ்காட் எதிர்ப்பை அன்றாட எதிர்ப்பு என்று குறிப்பிடுகிறார். தினமும் நடைபெறும் வாழ்க்கை நிகழ்வுகளில் வெளிப்படும் எதிர்ப்புகளை இவ்விடத்தில் குறிப்பிடுகிறார். நாட்டார் கதைகள் மக்கள் அன்றாட வாழ்கையில் தாங்கள் எதிர்கொள்ளும் அடக்குமுறை, எதிர்ப்பு, அதிருப்தி ஆகியவற்றைப் புனைவு கலந்து கூறுவனவாக அமைகின்றன. ஆ. சிவசுப்பிரமணியன் சாதிய மேலாதிக்கமும், பொருளியல் சுரண்டலும் நிலை பெற்றுள்ள சமூக வாழ்வில் அவை குறித்த எதிர்க்குரலாகவும், கலகக்குரலாகவும் மாற்றுப் பண்பாடாகவும் வாய்மொழிக் கதைகள் சில விளங்குகின்றன. இவற்றை இனம் கண்டுகொண்டால் வாய்மொழிக் கதைகளின் பயன்பாடு என்பது வெறும் பொழுதுபோக்கே என்ற கருத்திலிருந்து விடுபடுவோம் என்கிறார். ஜேக்கப் சைப்ஸ் இக்கதைகள் ஏற்கனவே இருக்கும் அதிகாரக் கட்டமைப்பைத் தங்களின் கதைகளின் வாயிலாகச் சிதைக்கிறது அல்லது தலைகீழாக்கம் செய்கிறது என்கிறார். இவர் கதை என்பது ஒரு குறிப்பிட்ட காலத்துச் சமூக அரசியல் பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கும் என்று குறிப்பிடுகிறார். மேற்கண்டவற்றை அடிப்படையாகக் கொண்டு தமிழ்ச் சமூகத்தில் காணப்படும் அரசமரத்துப் பிள்ளையார் கதை எவ்வாறு ஒரு குறிப்பிட்ட காலத்துச் சமூக அரசியலைப் பேசுவதாக இருக்கிறது, எவ்வாறு அதிகாரத்தைத் தலைகீழாக்குகிறது, வரையறுக்கப்பட்ட விதிமுறைகளை மீறுகிறது என்பதை எடுத்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

### கோவில் வெளியும் அதிகாரமும்

இக்கதையில் எவ்வாறு அதிகாரம் தலைகீழாக்கப்பட்டு கட்டமைக்கப்பட்ட சமூகவிதிமுறைகள் சிதைக்கப் பட்டன என்பதை அறிந்துகொள்ள முதலில் கோவிலுக்கும் ஒடுக்கப்பட்டமக்கள் மற்றும் பெண்களுக்கும் இடையே இருக்கும் அதிகாரக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டமைப்பைப் புரிந்துகொள்ளவேண்டும். சாதியை மையமாகக் கொண்ட இந்தியச் சமூக அமைப்பில், வெளி என்பது சாதிய அதிகாரத்தின் அடிப்படையில் வேறுபடுகிறது. சாதிய அமைப்பு பிறப்பின் அடிப்படையில் ஒவ்வொருவரின் செயல்பாடுகளையும்

கட்டுப்படுத்தி ஒரு வரையறைக்குள் கொண்டுவருகிறது. கோவில் வெளியில் ஒவ்வொரு சாதியைச் சார்ந்தவர்களின் செயல்பாடுகளும் ஒரு குறிப்பிட்ட பகுதி வரை வரையறுக்கப்பட்டு அதற்குப் பின்பு அவர்களின் செயல்பாடு தடை செய்யப்படுகிறது. கடவுளுக்கு உணவு படைத்தல், பூசை செய்தல் ஆகியவை நடைபெறும் கருவறை வெளி என்பது பிராமணர்களுக்கான அதிகாரவெளியாகப் பல நூற்றாண்டுகளாக இருந்து வருகிறது. பிராமணர்களுக்கு இவ்வுரிமை என்பது பிறப்பின் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. பிராமணர் அல்லாதவர்களுக்கு இவ்வெளிக்குள் செல்ல அனுமதியில்லை. சாதிய அமைப்பும் இவ்வெளியில் பிராமணர் அல்லாதார் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துகிறது.

ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த மக்களுக்குக் கோவில் வெளி, வழிபாட்டு உரிமை என்பது மறுக்கப்பட்ட ஒன்றாகவே இருக்கிறது. ஊர் பொதுக் கோவில், நிறுவனச்சமயக் கோவில்களில் இவர்களுடைய வெளி என்பது கோவிலுக்கு வெளியில் இருக்கிறது. இவ்வெளியிலிருந்துதான் இவர்கள் தங்கள் வழிபாடுகளைச் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். இந்த அதிகார வெளியை அவர்கள் மீறும் பொழுது சமூகவிதிமுறைகளை மீறியதாகக் கூறி அதிகாரவர்க்கம் அவர்களுக்குத் தண்டனை கொடுக்கிறது.

கோவில் வெளிக்கான ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டம் 1872இல் தொடங்கி இன்றுவரை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. 30/11/1917ல் திருநெல்வேலியில் நீதிக்கட்சி மாநாடு நடைபெற்றது. அதில் அனைத்து இந்துக்களும் கோவிலுக்குள் செல்லலாம் என்ற தீர்மானத்தை நிறைவேற்றினர். இதன்பின்பு 1925இல் இந்து அறநிலைச்சட்டம் இயற்றப்பட்டது இதன்படி ஒடுக்கப்பட்ட மக்கள் அறங்காவலர் குழுவில் அங்கத்தினராக அனுமதிக்கப்பட்டனர். 2006இல் மு. கருணாநிதி தலைமையிலான அரசு அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டத்தை இயற்றியது. மேற்கண்ட பல்வேறு சீர்திருத்தங்களுக்குப் பின்பு பல்வேறு எதிர்ப்புகளைச் சந்தித்த பின்பு தான் பிராமணர் அல்லாதோர் கோவில் வழிபாட்டு வெளிக்குள் செல்லமுடிகிறது.

ஒடுக்கப்பட்ட மக்களைப் போன்றே பெண்களின் செயல்பாடும் கோவில் வெளியில் கட்டுப்படுத்தப்படுகிறது. அவர்கள் மாதவிலக்கு ஏற்பட்ட காலக்கட்டத்தில் கோவில் வெளிக்கு உள்ளே வந்தால் அந்த வெளி தீட்டு ஆகிவிடும் புனிதத் தன்மையை இழந்துவிடும் என்று நம்புகின்றனர். பிராமணச் சமூகத்தைச் சார்ந்த பெண்ணாக இருந்தாலும் அவர்கள் கோவில் கருவறைக்குள் செல்ல, பூசை செய்ய அனுமதிப்பதில்லை. கோவில்சார்ந்த செயல்பாடுகள் அனைத்திலும் பெண்கள் ஆண்களைச் சார்ந்து இருப்பவர்களாகவே இருக்கின்றனர். இன்றளவும் பல கோவில் வெளிகள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அனுமதி மறுக்கப்படுவது போன்று பெண்களுக்கும் அனுமதி மறுக்கப்படுகிறது.

### கதைகளில் பெண்பாத்திர கட்டமைப்பு

ஆண்களைத் தலைமைக் கதைமாந்தராகக் கொண்ட நாட்டார் கதைகளில் பெரும்பான்மையாகப் பெண்பாத்திரக் கட்டமைப்பு ஆணைச் சார்ந்தே கட்டமைக்கப்பட்டிருக்கும். இக்கதைகளில் பெண் கதாப்பாத்திரங்கள் குடும்பத்திற்காகத் தியாகம் செய்பவர்களாக, கொடுமைகளை அமைதியாக ஏற்றுக்கொள்பவர்களாக, கணவனுக்குப் பணிவிடைகள் செய்பவர்களாக, பெற்றோர்கள் பேச்சினைக் கேட்பவர்களாகக் கட்டமைக்கப்பட்டிருப்பார்கள். இவ்வாறு கட்டமைக்கப்பட்ட கதாபாத்திரம் நல்ல பெண் என்ற வகைப்பாட்டின்கீழ் வருவதாக இருக்கும். இவ்வி—திமுறைகளைக் கடைபிடிக்காத பெண்கள் தீயவர்களாக படுவார்கள். ஆனால், பெண்களைத் தலைமைக் அடையாளப்படுத்தப் கதாபாத்திரமாகக் கொண்ட நாட்டார் கதைகளில் இத்தன்மை காணப்படவில்லை. இக்கதைகளில் பெண்கள் அதிகாரமிக்கவர்களாகவும் அவர்கள் மீது திணிக்கப்பட்ட சமூக அடக்குமுறைகளைச் சிதைத்து அவற்றைத் தலைகீழாக்கம் செய்பவர்களாகவும் விளங்குகின்றனர். அரசமரத்துப் பிள்ளையார் நாட்டார் கதையில் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த பெண் தான் தலைமைக் கதைமாந்தராக இருக்கிறார். அவரைச் சுற்றியே முழுக்கதையும் இயங்குகிறது. ஏ. கே. இராமானுஜம் பெண்களைத் தலைமை மாந்தராகக் கொண்டு அமையும் நாட்டார் கதைகளைப் பெண் மையக் கதையாகக் (woman centric folktale) குறிப்பிடுகிறார். இதன் அடிப்படையில் இக்கதையை ஒரு பெண் மையக் கதையாகக் கொள்ளலாம். இக்கதையில் இருக்கும் பெண் கதாபாத்திரம் சமூகக் கட்டமைப்பைத் தலைகீழாக்குவதோடு அதிகாரக் கட்டமைப்பையும் சிதைக்கிறது. கே.வி. எஸ். லட்சுமி நரசம்பா Gender and story in south india என்ற புத்தகத்தில் பெண்ணைத் தலைமை கதைமாந்தராகக் கொண்ட ஒரு நாட்டார் கதையைக் குறிப்பிடுகிறார். அக்கதையில் அரசரின் மகன் காணாமல் போகிறான் யாராலும் அவனைக் கண்டு பிடிக்க முடியவில்லை. எனவே, அனைவரும் கதையின் முதன்மை கதாபாத்திரமாக இருக்கும் பெண்ணிடம் செல்லுகின்றனர். அவள் அரசரின் மகனைக் கண்டுபிடித்துக் கொடுக்கிறாள். இங்கு அதிகாரமையத்தில் இருக்கும் ஒட்டுமொத்த ஆண்களும் தங்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியாமல் இந்தப் பெண்ணைச் சார்ந்து இருக்கும்படி இருக்கிறது. இக்கதை அரசமரத்துப் பிள்ளையார் கதையோடு பொருந்துவதாக அமைந்துள்ளது. அரசமரத்துப் பிள்ளையார் கதையில் பிள்ளையார் மேற்கு நோக்கித் திரும்புகிறார்(சிக்கல்) நரசம்பா கதையில் அரசனின் மகன் காணாமல் போகிறான். பிள்ளையார் கடவுள் என்ற முறையிலும் அரசனின் மகன் அடுத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் என்ற முறையிலும் இருவரும் சமூகத்தில் முக்கியமான ஆண்களாக இருக்கின்றனர். பிள்ளையார் கதையில் அரசர், அமைச்சர், பிராமணர் ஆகியவர்கள் சிக்கலைத் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுத் (கிழக்கு நோக்கித் திருப்ப முடியாமை).



தோல்வியடைகின்றனர் (பிள்ளையாரை நரசம்பா கதையில் அரசர் அமைச்சர்கள் சிக்கலைத் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுத் தோல்வியடைகின்றனர் (அரசனின் மகனைக் கண்டுபிடிக்க முடியாமை). இரண்டு கதைகளிலும் அதிகாரத்தில் இருக்கும் ஆண்கள் பெண்களின் உதவியையே நாடுகின்றனர். அவர்களே இரண்டு கதைகளிலும் சிக்கலைத் தீர்க்கும் அதிகாரமிக்கவர்களாக இருக்கின்றனர். இதன் அடிப்படையில் பெண் மையக்கதையில் சிக்கலைத் தீர்த்தல், ஆண் அதிகாரத்தைத் தனக்குக் கீழ்க்கொண்டுவருதல் என்பது பொதுவாகக் காணப்படுவதாகக் கூறலாம்.

### பெண் மையக் கதையில் மறைமுக எதிர்ப்பு

எச்சில் படுத்தப்பட்ட உணவு தூய்மையற்றதாகக் கருதும் நம்பிக்கை இந்தியச்சமூகத்தில் காணப்படுகிறது. அதனால், எச்சில் படுத்தப்பட்ட உணவைக் கடவுளுக்குப் படைக்கமாட்டார்கள். இக்கதையில் பெண் ஒருத்தி தன் வீட்டில் முன் அமர்ந்து கொத்தவரங்காய் பொரியலைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாள். அந்த உணவைப் பார்த்த பிள்ளையாருக்கு அவ்வுணவின் மீது ஆசை ஏற்பட்டு அந்த எச்சில் உணவைக் கேட்கிறார். இவ்விடத்தில் கடவுளுக்கு எச்சில் படுத்தாத தூய்மையான உணவைத்தான் படைக்கவேண்டும், அதைக் குறிப்பிட்டவர்கள் படைத்தால்தான் ஏற்றுக்கொள்வார் என்ற சாதிய அடிப்படையில் கட்டமைக்கப்பட்டிருந்த அதிகாரப் பிம்பம் இவ்விடத்தில் சிதைக்கப்படுகிறது. சாதியமுறையை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தில் அனைத்தையும் தூய்மையானது தீட்டானது என்று வகைப்படுத்துகின்றனர். இங்குத் தூய்மையானவர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் அதிகாரமிக்கவர்களாகவும் தூய்மையற்றவர்களாக அவர்களால் வரையறுக்கப்பட்டவர்களைக் கட்டுபடுத்துபவர்களாவும் இருக்கின்றனர். இக்கதையில் அதிகாரமிக்கவர்களாக இருப்பவர்கள் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த பெண்ணின் உதவியைச் சார்ந்து இருப்பவர்களாக இருக்கின்றனர். இக்கதையில் பெண்ணிடம் கொத்தவரங்காய் பொரியலைக் கேட்க அப்பெண் அதைக் கொடுக்க மறுக்கிறாள். பிள்ளையார் வற்புறுத்திக் கேட்கக் கோபம் கொண்ட பெண் அவர் முகத்தில் குசு விடுகிறாள். உடனே கிழக்கு நோக்கி இருந்த பிள்ளையார் மேற்கு நோக்கித் திரும்பிவிடுகிறார். மறுநாள் பூசை செய்ய வரும் பூசாரி இதைப்பார்த்து அதிர்ச்சியடைகிறார். அரசனிடம் தகவல் கூறுகிறார். அரசரும் நீங்க என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள் ஆனால், பிள்ளையார் மீண்டும் கிழக்கு நோக்கித் திரும்பவேண்டும் என்கிறார். பிராமணர்களும் மந்திரங்கள் சொல்லிப் பூசை செய்கின்றனர். ஆனால், பிள்ளையார் கிழக்கு நோக்கித் திரும்பவில்லை. உடனே அரசர் யார் இதைச் செய்தது என்று விசாரணை செய்கிறார். ஒரு பெண் தான் இப்படிச் செய்தார் என்பதை அறிந்த அரசர் அந்தப் பெண்ணின் வீட்டிற்குச் சென்று அந்தப் பெண்ணிடம் பிள்ளையாரை மறுபடியும் கிழக்கு நோக்கித் திருப்பும் படி கோரிக்கை வைக்கிறார். பின்பு அரசர், அமைச்சர், பிராமணர்கள் ஆகியோர் அப்பெண்ணை பிள்ளையாரிடம் கூட்டிச் செல்கின்றனர். பிள்ளையார் அருகில் சென்றவுடன் அப்பெண் இவர்கள் அனைவரையும் சற்றுத் தூரம் தள்ளி நிற்கச் சொல்கிறாள். பின்பு பிள்ளையாரிடம் கொத்தவரங்காய்ப் பொரியல் கொடுப்பதாகவும் அவர் மறுபடியும் கிழக்கு நோக்கி திரும்பும் படியும் கேட்கிறாள். பிள்ளையார் அதற்கு மறுப்பு கூறிவிடுகிறார். இதனால் கோபமடைந்த பெண் நீ கிழக்கு நோக்கி திரும்பவில்லை என்றால் நேற்று செய்தமாதிரி இன்றும் செய்துவிடுவேன் என்கிறார் உடனே அச்சப்பட்ட பிள்ளையார் கிழக்கு நோக்கி திரும்புகிறார்.1

குசு என்பது தூய்மையற்ற ஒன்றாகவே இந்தியச் சமூகத்தில் கருதப்படுகிறது. ஆனால், அந்த தூய்மையற்ற ஒன்றுதான் இக்கதையில் பிள்ளையாரை கட்டுப்படுத்தும் சக்தியாக இருக்கிறது. பிராமணர்களின் மந்திரங்களைவிட சக்திவாய்ந்ததாக குசு இக்கதையில் சித்திரிக்கப்பட்டுள்ளது. இச்சமூகத்தில் தூய்மையற்றதாக சித்திரிக்கப்பட்ட ஒன்று தூய்மையானதாக சித்திரிக்கப்பட்ட ஒன்றைக் கட்டுப்படுத்துவதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இக்கதையில் தலைகீழாக்கம் செய்யப்பட்டுள்ளது. பெண்கள் இக்கதை இ.முத்தையாவின் அடித்தள மக்களின் குறியீட்டு பயணவெளி என்ற புத்தகத்—திலிருந்து எடுத்து இவ்விடத்தில் பயன்படுத்தப்படுகிறது.

தங்களுடைய எதிர்ப்பு, அதிருப்தி, துன்பம் ஆகியவற்றை நாட்டார் கதைகளின் வாயிலாகக் கேலிக்குள்ளாக்கி வெளிப்படுத்துகின்றனர், இந்தியாவில் உள்ள குடும்ப அமைப்பு முறையில் மருமகன்களுக்கு அதிகாரமிக்க இடம் கொடுக்கப்படுகிறது. ஆனால், நாட்டார் கதைகளில் அவர்கள் அறிவற்றவர்களாக, உலக நிகழ்வுகளைப் பற்றித் தெரியாதவர்களாகக் கேலிக்குள்ளாக்கப்பட்டு அவர்களின் சமூக அதிகாரம் சிதைக்கப்படுகிறது என்று லலிதா ஹண்டு குறிப்பிடுகிறார். இக்கதையிலும் குசு என்பது அத்தன்மையிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. குசுவைக் கண்டு பிள்ளையார் பயந்தது என்பது சமய நம்பிக்கையின் அடிப்படையில் அவர்கள் மீது திணிக்கப்பட்ட சமூகவிதிகளைக் கேலிசெய்கிறது. இங்குப் பிள்ளையார் கடவுளாக மட்டுமின்றி ஆண் மையச் சமூகத்தின் பிரதிநிதியாகச் சித்தரிக்கப்படுகிறார். ஆண் மையச்சமூகத்தில் அதிகார உச்சத்தில் இருக்கும் ஒரு ஆணைக் கட்டுப்படுத்தித் தன்னுடைய கட்டளைக்கு இணங்க வைப்பது என்பது ஒட்டுமொத்த ஆண் மையச்சமுகத்தை இணங்க வைப்பதாக அமையும். இங்குப் பிள்ளையாரை கேலிக்கு உள்ளாக்குவது வழியாக ஆண் மையச்சமூகத்திற்கு மாற்றாகப் பெண் மையச்சமூகத்தை இவ்விடத்தில் கட்டமைக்கப்படுகிறது. வெளிப்பாடாகத்தான், இதன் சமூகத்தில் அதிகாரமிக்கவர்களாகக் கருதப்படும் ஆண்கள் அனைவரும் இப்பெண்ணின் உதவியை நாடிய செயல் காணப்படுகிறது. இவ்விடத்தில் இப்பெண்ணின் அதிகாரமே மையத்திலிருந்து அனைத்தையும் இயக்குவதாகவும் மாற்றுவதாகவும் அமைகிறது.

ஸ்காட் மறைமுக எதிர்ப்பிற்குப் பெருந்திரளான மக்களோ அவர்களுக்கு இடையே ஓர் ஒழுங்கமைப்போ, திட்டமிடலோ தேவையில்லை. மேலும், இவ்வகை எதிர்ப்பு என்பது நேரடியாக அதிகாரிகளை எதிர்ப்பதாக அதிகாரவிதிகளை மீறுவதாக அமையாது. மறைமுகமான குறியீடுகள் அடிப்படையில் தன்னுடைய எதிர்ப்பை வெளிப்படுத்துபவையாக அமையும் என்று குறிப்பிடுகிறார். இக்கதையிலும் அவ்வகை—யிலே அமைந்துள்ளது. அரசர், அமைச்சர், பிராமண பூசாரி ஆகியவர்களின் அதிகாரத்தையோ அவர்களால் கட்டமைக்கப்பட்ட சமூக விதிகளை அவள் நேரடியாக எதிர்த்துப் பேசவில்லை, போராடவில்லை. ஆனால், பிள்ளையாரை கிழக்கு நோக்கி திருப்பிய செயலின் மூலமாக அனைவரின் அதிகாரத்தை விடவும் அதிகாரமிக்கவளாக மாறுகிறாள். அவர்களால் பெண்கள் மீது கட்டமைக்கப்பட்ட சமூக விதிமுறைகளையும் கேள்விக்குள்ளாக்குகிறாள். லூமா இப்ராகிம் அல் பாராஜின்ஜி (luma ibrehim al barazenji) நாட்டார் கதைகள் விளிம்பிலிருக்கும் பெண்களின் குரலை மையத்திற்கு கொண்டு செல்வதாகவும் ஆண் ஆதிக்கச் சமூகத்தால் பெண்கள் மீது கட்டமைக்கப்பட்டிருக்கும் ஒழுங்குமுறைகளைக் கேள்விக்கேட்பதாகவும் இருக்கிறது.

மேலும், இக்கதைகளில் பெண்கள் வலிமையானவர்களாகவும் கதையில் உள்ள கதாபாத்திரத்தின் வாழ்க்கைமுறை, நம்பிக்கையில் மாற்றம் ஏற்படுத்துபவர்களாக இருப்பதாகவும் குறிப்பிடுகிறார் *(2015: 47)*. அலிசன் லூரி(Alison lurie) வலிமையான பெண்களைக் கட்டமைப்பதன் வா—யிலாகவும் அவர்களைப் பிரபலமானவர்களாக்குவதன் வாயிலாகவும் நாட்டார் கதைகள் பெண்விடுதலை முன்னோக்கி நகர்த்திச் செல்கின்றன என்கிறார்*(2015:48)* மேற்கண்ட அனைத்தையும் இக்கதைச் செய்கிறது அதிகாரமிக்க வலிமையானப் பெண்ணைக் கட்டமைத்துள்ளது. யாருடைய சமய நம்பிக்கைச் சார்ந்த விதிமுறைகளின் அடிப்படையில் தங்களின் உரிமைகள் மறுக்கப்பட்டதோ அவர்களின் வாயிலாகவே தங்களின் உரிமைகளை மீட்டு எடுக்கிறது. அவர்களின் சமூக அதிகாரநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதின் வா—யிலாகக் கதையில் அக்கதாபாத்திரங்களின் வாழ்க்கை முறையையும் மாற்றுகிறது. அரசர் இப்பெண்ணின் உதவியை நாடியது, அவள் கூறுவதைக் கேட்டு தள்ளி நின்றது. மக்கள் அனைவரும் இவளின் செயலைக் கண்டு ஆச்சரியப்பட்டது, கடவுளைத் தன்னுடைய கட்டளைக்கு இணங்கச்செய்தது ஆகியவை விளிம்பிலிருக்கும் பெண்களின் குரலை மையத்திற்கு கொண்டு செல்வதாகவும் சமூக ஒழுங்குமுறைகளைக் கேள்விக்கு உள்ளாக்குவதாகவும் அமைகின்றன. மேலும் அலிசன் மேற்குறிப்பிட்டது போன்று இக்கதையில் பெண் மக்கள் மத்தியில் பிரபலமானவராகவும் வியப்புக்குரியவராகவும் மாறுகிறார்.

அதிகாரவெளியும் அதிகாரச்சிதைவும் கோவில் வெளி என்பது எப்பொழுதும் கட்டமைக்கப்பட்டுள்ளது. அந்த அதிகாரத்தைச் சார்ந்தாகவே அதிகாரவெளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்கப்பட்டோர் பெண்கள் ஆகியவர்களின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவதோடு அவர்களை இந்த வெளிக்கு வெளியிலேயே இருக்கச் செய்கிறது. இக்கதை இவ்வதிகார வெளியைச் சிதைப்பதற்கான ஒரு இடத்தை இம்மக்களுக்குக் கொடுக்கிறது. பலநூற்றாண்டுகளாக பிராமணர்களின் வெளியாக இருந்த கோவில், அவர்களின் மந்திரங்களால் மட்டுமே கடவுளை மகிழ்விக்கவோ கட்டுப்படுத்தவோ முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளனர். இவைதான் அவர்களின் சமூக அதிகாரத்திற்கான அடிப்படையாக இருக்கின்றன. இக்கதையில் பிராமணர்கள் பலர் கூடி பல சடங்குகளைச் செய்து மந்திரங்களைக் கூறி பூசைச் செய்கின்றனர். பிள்ளையார் அதனைக் கண்டுகொள்ளாமல் மேற்கு நோக்கியே அமர்ந்திருக்கிறார். இவ்விடத்தில் அவர்களுக்குக் கோவில் வெளியில் உள்ள அதிகாரம் என்பது சிதைக்கப்படுகிறது, மேலும் அவர்களின் மந்திரங்களுக்கு ஆற்றல் உண்டு என்ற நம்பிக்கையும் உடைக்கப்பட்டுப் பிள்ளையாரைத் திருப்பும் பெண்ணிடம் செல்கிறது. இக்கதையின் வாயிலாகக் கோவில் வெளியில் உள்ள அதிகாரம் சிதைக்கப்பட்டு அது அனைவருக்குமான பொதுவெளியாக மாறுகிறது.

கதை என்பது கற்பனையான புனைவு. அதில் உண்மைத் தன்மையில்லை என்று கூறுவதால் அடித்தள மக்கள் இவற்றைத் தங்களுக்கான ஆயுதமாகப் பயன்படுத்துகின்றனர். ஆனால், கதை என்பது வெறும் கதையல்ல. அக்கதையில் உள்ள புனைவுகளுக்கு ஊடாக அக்காலக்கட்டத்தின் சமூக அரசியலும் கலந்துள்ளன என்பதை இக்கதையின் வாயிலாகத் தெளிவாக அறியமுடிகிறது.

•

கோவிலுக்குள் சென்று வழிபடுவது என்பது ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் பெண்களின் முக்கிய ஆசைகளில் ஒன்றாக இருந்துள்ளது. அத்தகைய போராட்டம் மற்றும் உரிமை கோரலே இக்கதையின் வாயிலாக வெளிப்படுகிறது. மேலும், அதுவே கதையின் மையக் கருவாகவும் இருக்கிறது.

இக்கதையுடன் வரலாற்று நிகழ்வுகளை ஒருங்கே வைத்து நோக்கும் பொழுது இது ஒரு குறிப்பிட்டக் காலத்தில் நடைபெற்ற சமூக அரசியலைப் வெளிப்படுத்துவதாகவும் அக்காலக்கட்டத்திலிருந்த குரலற்ற மக்களின் குரலாகவும் ஒலிக்கிறது.

இவை எதார்த்த வாழ்வியலில் சாத்தியமற்றதாக இருந்தாலும் நாட்டார் கதையின் வாயில் கட்டமைக்கப்படும் உலகத்தில் சாத்தியப்படுகிறது. அதேவேளையில் இதைப் படிப்பவர்களுக்குச் சமூக அடுக்குமுறைக்கு எதிரானத் தங்களின் எதிர்ப்பையும் சமூகமாற்றத்திற்கானத் தேவையையும் கடத்துகிறது.

பிறப்பு மற்றும் நிறத்தின் அடிப்படையில் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படும் மக்களிடத்தில் இத்தகையக் கதைகள் காணப்படுகின்றனர்.




மேலே குறிப்பிடப்பட்ட கதையும் மற்ற எடுத்துக்காட்டு கதைகளும் சமூக விதிமுறைகள், அதிகாரம் ஆகியவற்றால் ஒடுக்கப்படும் பெண்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், அடிமைகள் ஆகியவர்களைத் தலைமைக் கதைமாந்தாரக் கொண்டுள்ளது. அதில் காணப்படும் எதிர்ப்புகள் அனைத்தும் அவர்கள் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் பிரச்சினைக்கு எதிராகவே இருக்கிறது.

**துணைநூற்பட்டியல்**

1. முத்தையா. இ(2013). அடித்தள மக்களின் குறியீட்டுப் பயண வெளிகள். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

2. ஆ.சிவசுப்பிரமணியன் (2019).தமிழக வண்ணார் வரலாறும் வழக்காறுகளும், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

3. ஆ. சிவசுப்பிரமணியன் (2019). வாய்மொழிக் கதைகள் வகைமை— சேகரிப்பு— பனுவலாக்கம். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

4. Zipes, Jack(Ed.) (2014). The Original Folk & Fairy Tales of the Borothers Grimm. New Jersey: Princenton University Press.

5. Leela Prasad, Bottigheimer.B Ruth,Lalita Handoo(Eds.). (2006). Gender and story in South India. Albany: State University of New York Press.

6. James C. Scott. (1985) weapons of the weak everyday forms of peasant resistance. London: Yale university press.

7. Luma Ibrahim Al- barazenji. (2015). Women's voice and image in folktale and fairy tale. International E- journal of advances in social sciences, vol.1.

•


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்காணல்: **கணேஷ்**

பா. அகிலன்

# "போட்டேஷொப் ஒரு மஜிக்"


கையால்
வர்ணந் தீட்டும்
ஒளிப்படக்கலையின்
முன்னோடிகளுள்
ஒருவரான கணேஷ்
பேசுகிறார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கையால் வர்ணந்தீட்டும் ஒளிப்படக்கலையின் முக்கியமான படைப்பாளிகளுள் நீங்களும் ஒருவர்; கையால் வர்ணந்தீட்டும் ஒளிப்படக்கலை (Hand coloring photography) மீதான உங்கள் ஆர்வத்தின் அடிப்படைகள் என்ன?**



பல காரணங்கள் இருப்பதாகத் தோன்றுகிறது. என் தகப்பனார் இராசதுரை நகைவேலை செய்பவர். யாழ்ப்பாணம் ஐயனார் கோ—யிலடியில் எங்களுக்குப் பட்டடை இருந்தது. அது என்னையறியாத ஒரு தொடக்கமாக இருக்கலாம். ஆனால் எனது வீட்டுக்கு அயலில் இருக்கும் இளையதம்பி வித்தியாசாலையில் படிக்கும்போது தான் எனது ஓவிய ஆர்வம் கண்டுபிடிக்கப்பட்டது. பாடசாலையில் ஓவியபாடம் இல்லாத போதிலும் எமது பாடசாலைத் தலைமை ஆசிரியராக இருந்த சிறுப்பிட்டியைச் சேர்ந்த சைவப்புலவர், பண்டிதர் செல்லத்துரை அதனை என்னிடம் கண்டுபிடித்தார். தனியொரு மாணவனாக அவர் என்னை ஜே.சியில் *(junior secondary level)* ஓவிய பாடம் எடுக்க வைத்தார். ஓவியத்துறை மீதான ஆர்வம் அங்கிருந்துதான் பெரியளவில் முளைவிடத் தொடங்கியது. அதேநேரம் எங்கள் வீட்டிற்கு அருகாமையில்தான் 'கலைவாணர் நாடக மன்றம்' செயற்பட்டது. அவர்களது நாடகங்கள் தொடங்குவதற்கு முன்பே, நாடகக் கதாபாத்திரங்களுக்கு ஒப்பனை செய்வதைப் பார்க்கச் சென்றுவிடுவேன். ஒப்பனை இன்னொரு தூண்டலாய் இருந்தது. மற்றையது சினிமா; . சினிமாவிலும், நாடகங்களிலும் காட்சி அமைப்பு முறைகள் மற்றும் குறிப்பாக ஒளியமைப்பு முறைகளால் அதிகம் தூண்டப்பெற்றேன். இவையாவும் சேர்ந்துதான் என்னை கையால் வர்ணந்தீட்டும் ஒளிப்படக்கலைத்துறைக்கு இட்டுச் சென்றன என நினைக்கிறேன்.

**எப்போது ஒளிப்படக்கலையகத்தில் (Studio) வேலைக்குச் சென்றீர்கள்? ஞானம்ஸில் தானே வேலை செய்தீர்கள்?**

தொழில் என்று பார்த்தால், ஸ்ரூடியோக்குப் போக முன்பே, அதாவது பாடசாலையிற் படிக்கும்போதே கடை விளம்பரத் தட்டிகள், ஐஸ்கிறீம் பெட்டிகளுக்கு, கரம் சுண்டல் வண்டிகளுக்கெல்லாம் படங்கள் போடத் தொடங்கியிருந்தேன். ஸ்ரூடியோக்கு எஸ்.எல்.ஸி சோதனை எடுத்த பின்னர்தான் போனேன். ஞானம்சுக்கு அல்ல.அது பிற்பட்ட காலத்தில்; முதலில் கொழும்பு ஸ்ரூடியோக்குத்தான் சென்றேன். .அப்போது மணிக்கூட்டு வீதியில் அது இருந்தது. எனக்கு 'டாக் றூமில்'தான் *(dark room)* வேலை; பின்னர் ஸபாஸ் ஸ்ரூடியோவில் அதே 'டாக் றூம்' வேலைக்கு இணைந்தேன். அப்போதுதான் நெக்கற்றிவில் *(negative)* செய்யப்படும் 'றீ ரச்சிங்' *(Re touching)* வேலைகளைக் அவதானிக்கத் தொடங்கினேன். அவற்றை முக்கியமாக அம்பிரோஸ் அவர்கள் செய்வார்கள். கண்டியைச் சேர்ந்த இந்திய வம்சாளியைச் சமூகத்தவரான அவருக்கு ஓவியத்தில் முறைசார் பயிற்சியும் இருந்தது. அவரிடம் இருந்துதான் ஒளிப்படம் மீதான வரைபுகளின் அடிப்படை நுட்பங்களைக் கற்றுக் கொண்டேன். மெல்ல, மெல்ல அவற்றைச் செய்து பார்க்கவும் செய்தேன். சுமார் மூன்று வருடங்கள் ஸபாஸில் இருந்தேன். அதன் பின்னர் திரும்பவும் கொழும்பு ஸ்ரூடியோக்குச் சென்றேன். அங்கேதான் எனது வேலையானது முடிப்பு *(finishing)*, கையால் வர்ணந்தீட்டல் *(Colouring)* ஆகியவற்றோடு வடிவமைப்பு *(designing)* என விரிவடைந்தது. வடிவமைப்புக்களை புளக்குகளுக்காகச் செய்வோம். அப்போது அவர்கள்தான் 'புளக் மேக்கிங்'குக்கு *(Block making)* யாழ்ப்பாணத்திற் பிரபலமாயிருந்தார்கள். கறுப்பு—வெள்ளை மட்டுமின்றி மூவர்ண புளக்குகளும் அவர்கள் செய்தார்கள். அந்தக் காலகட்டத்தில்தான் கொண்டைய ராஜீவின் ஓவியங்களால் அதிகம் கவரப்பட்டேன். அவரது கடவுளர் படங்களை நன்கு அவதானிக்கவும் தொடங்கினேன். அதற்குப் பின்னர் தான் *1975*களில் ஞானம்ஸ் ஸ்ரூடியோவில் இணைந்தேன்.

**ஞானம்ஸ் ஸ்ரூடியோ பற்றிச் சொல்லுங்கள்? சுமார் 10 வருடங்கள் அங்கே இருந்தீர்கள் அல்லவா? யாழ்ப்பாணத்தில் அக்காலம் ஒரு ஸ்ரூடியோக்களின் காலம் இல்லையா?**

அது பலவகைகளில் முக்கியமாக காலகட்டம்தான். அங்கே ஒளிப்படம் சார்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைபுகனைக் கவனிக்கவென ஒரு ஆற்றல் மிகுந்த குழுவே இருந்தது. சில்வா எனும் சிங்களவர்; கண்டியைச் சேர்ந்த அம்பிறோஸ் அவர்களது தம்பி ஒகஸ்ரின், பதி என அறியப்பட்ட கைலாசபதி, மூர்த்தி முதலியவர்களை உள்ளடக்கிய இக்குழுவின் அனுபவம் — ஆற்றல் என்பன என்னைத் தனிப்பட்ட வகையிலும் செம்மைப்படுத்தன. விரைவாக அவர்களுள் ஒருவனாக என்னையும் நிலை நிறுத்திக் கொண்டேன். யோகமும் அங்கிருந்தார். சில நாட்களில் சுமார் 15 படங்கள் வரைகூட ஒரே நாளிற் செய்ய வேண்டியிருக்கும். பிரதிமை ஒளிப்படங்கள் மட்டுமின்றி திருமணச் சோடிகள்வரை கையால் வர்ணந்தீட்டும் வேலைகள் செய்வோம். அதேநேரம் ஞானம்ஸில் நான் அச்சுருக்கான வடிவமைப்புக்களையும் செய்துள்ளேன்.


நீங்கள் சொல்வது சரிதான். அக்காலகட்டத்தில் இந்தப் பிராந்தியத்தில் பல ஸ்ரூடியோக்கள் காணப்பட்டன. அதேநேரம், அந்தக் காலங்களில் வெளிப்புறப் படப்பிடிப்பை விடவும் ஸ்ரூடியோப் படப்பிடிப்பே கோலோச்சியது. திருமணம் முடிந்தவுடன் திருமணச்சோடிகள் அப்படியே நேரடியாக ஸ்ரூடியோவிற்கு வந்து படம்பிடித்துக் கொள்ளும் வழக்கம் காணப்பட்டது. திருமண 'சீசனில' விக்டோரியா றோட் முழுவதும் ஸ்ரூடியோவிற்குத் திருமணச்சோடிகளை ஏற்றி வந்த கார்களால் நிறைந்திருக்கும். ஞானம்ஸ் ஸ்ரூடியோ, கொழும்பு டொனால்ட் ஸ்ரூடியோவின் படப்பிடிப்பு பண்புகளை அதிகம் பின்பற்றியது.

**பாணி (Style) ரீதியாக கையால் வர்ணம் தீட்டப்படும் படங்களிடையே வேறுபாடுகள் காணப்பட்டதா?**

⏭ ஓம் காணப்பட்டது. ஒவ்வொருவரிடமும் சிறியளவிலேனும் அது இருந்தது. உதாரணமாக ஒகஸ்ரின் வழியாக யோகம் அவர்கள் வந்தாலும் அவரது வரைபில் வேறுபாடுகள் காணப்பட்டன. பெரும்படியாகப் பார்த்தால் கையால் வர்ணம் தீட்டலில் 1970களில் முக்கியமாக இரண்டு மரபுகள் காணப்பட்டன எனலாம். ஒன்று அதிகம் யதார்த்தப் பண்பை முன்னிலைப்படுத்திய போக்கு. மற்றையது பாரத் ஸ்ரூடியோ முதலியவற்றின் வழிவந்த இந்தியத் தன்மையான வர்ணந் தீட்டும் முறை.

**அது என்ன 'இந்தியத் தன்மையான வர்ணந்தீட்டும் முறை'? அதாவது, அது யதார்த்தம் அதிகமற்ற மோடிப்படுத்தப்பட்ட (Stylized) பண்பை உடையது என்கிறீர்களா?**

⏭ ஓம், ஓம் நீங்கள் சொல்வதுபோலத்தான். அவர்கள் 'றீ ரச்' (Re touch) பண்ணும் முறையாலேயே அவற்றின் இயற்கையான தன்மையை இல்லாமலாக்கி விடுவார்கள். 'றீ ரச்' பண்ணிய நெகற்றிவினை (*negative*) கழுவிப் படமாக்கியபின்தான் வர்ணந் தீட்டுவோம். ஆகவே 'றீ ரச்சிங்', வர்ணந்தீட்டும் பண்பிற்கான பிரதான தன்மைகளை உருவாக்கி விட்டிருக்கும். பாரத் ஸ்ரூடியோக்காரர்கள் வண்ணார்பண்ணை சிவன் கோயிற் சுற்றாடலில் குடியேறி இருந்த தென்னிந்திய தமிழர் வழிவந்தவர்கள் என்பதும், அவர்களிடம்



காணப்பட்ட தென் இந்தியத் தொடர்புகளும் அவர்களிடம் இந்தியத் தன்மையான பண்பை மேலோங்கச் செய்திருக்கலாம். முக்கியமாக, ராஜேந்திரம், அழகு எனும் இருவர்கள் பாரத் ஸ்ரூடியோவில் வர்ணம் தீட்டும் வேலைகளில் ஈடுபட்டு இருந்தார்கள். அவர்களில் ராஜேந்திரம் இந்தியப் பின்னணியுடையவர்.

**'செல்லம்ஸ் ஸ்ரூடியோ' நீக்கலஸ் பற்றிச் சொல்லுங்கள். அவர் மீதான உங்களது பார்வையானது அவரை ஒரு தனித்துவமான ஒரு ஒளிப்பட ஆளுமையாக இனங்காண்பதாக உணர்கிறேன். அவரது வழியாக அக்காலகட்டத்தில் ஸ்ரூடியோ ஒளிப்படக்கலையின் ஒரு தனிக்குணவியல்பு காணப்பட்டதாக நினைக்கிறீர்களா?**

⏭ செல்லம்ஸ் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியரான மூர்த்தி மாஸ்ரரினுடையது. ஆனால் மாணிக்கத்தம்பிதான் முழுதாக ஸ்ரூடியோவை பார்த்துக்கொண்டார். அவரொரு ஓவியருங்கூட. ஸ்ரூடியோக்களுக்கான காட்சித் திரைகளை அவர் வரைவார். நீக்கலஸ் அவருடைய மகன், அரசையா போல அவரும் பிருத்தானிய இராணுவத்தின் இந்தியப்படைப் பிரிவிற் பணியாற்றியவர். அக்கால யாழ்ப்பாண ஸ்ரூடியோ ஒளிப்படக்கலை மரபில் ஒளியமைப்பினை கலைத்துவமாக பிரயோகிப்பவராக நீக்கலஸ் இருந்தார். ஒளி பாய்ச்சப்படும் முறையால் முப்பரிமாணத்தை — ஆழத்தை — ஒளிநிழலின் பரிமாணங்களை அவர் ஏற்படுத்தினார். முக்கிமாக 'கட் லைற்' (*Cut lighting*) மூலமாக இதனை அவர் நிகழ்த்தினார். இந்த ஒளிவிளைவுகளால் ஏற்பட்ட மாற்றங்கள் அவர்களது கையால் வர்ணந்தீட்டப் பெற்ற ஒளிப்படங்களிலும் பிரதிபலித்தன. அதனால், நீங்கள் சொல்வதுபோல நீக்கலஸ் 1970களது யாழ்ப்பாண ஒளிப்படக்கலையின் தனிச் சிறப்பு அடையாளம்தான்.

மண்ணிறத் தொனியுடைய ஒளிப்படம்

*(Sepia tone Photo)*

நன்றி (பா.அகிலன்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீங்கள் வர்ணவிசுறு காற்றமுத்தி (Compressor) மூலமாக ஒளிப்படப் பின்னணியை உருவாக்கும் முறையைப் பயன்படுத்தல் மூலமான பிரதிமைகள், சோடிகளது ஒளிப்படங்களில் என்பவற்றில் நுட்ப ரீதியாக ஒரு புதிய முறையைக் கொண்டு வந்தீர்கள் எனக் கூறமுடியுமா?**

⏭ நான் ஒளிப்பட வர்ணந்தீட்டலில் 'கொம்பிறஸரைப்' பயன்படுத்தும் செயற்பாட்டை அறிந்து கொண்டது கே.கே.வி.செல்லையா அவர்களிடம் இருந்துதான். அவர்தான் ஸபாஸ் ஸ்ரூடியோவை ஆரம்பித்து வைத்தார். அதற்குப் பின் முத்துலிங்கம் அவர்களிடம் அது கைமாறியது. முத்துலிங்கத்தின் காலத்திற்றான் நான் வேலை செய்தேன். கே.கே.வி அப்போது முத்துலிங்கம் அவர்களுக்காக ஒரு காட்சித் தொங்கு திரையை வரைந்தார். ஸ்ரென்சில் வெட்டி வைத்து — கொம்பிறசர் கொண்டு வர்ணந்தீட்டிச் அவர் செய்த வேலையால் நான் கவர்ந்திழுக்கப்பட்டேன் கே.கே.வி மெட்ராசில் படித்தவர். நாடகத்திற் பெரியளவில் ஈடுபாடு இருந்தது. நாடகங்களுக்கு காட்சித் தட்டிகள், ஸ்ரூடியோக்களுக்கு தொங்கு காட்சித்திரைகள் எல்லாம் வரைவார். எனக்குத் தெரிந்தவரை ஒளிப்பட வர்ணந்தீட்டலில் கொம்பிறஸரைப் பயன்படுத்தலின் முன்னோடியாக அவரே இருந்தார். இது என்னைக் கவர்ந்தது. நான் அதனை எடுத்துக்கொண்டு பின்னணியில் பலவிதமான காட்சி — குறிப்பாக ஒளி சார்ந்த விநோதங்களை உருவாக்கினேன். அதற்கான பெரிய தூண்டலை சினிமாவிலிருந்துதான் நான் பெற்றேன். சினிமா ஒளியமைப்பை நான் கூர்ந்து கவனித்தேன். நீகலுக்கு வரும் ஆங்கிலப் படங்கள் முதல் தமிழ் படங்களிற் செய்யப்படும் ஒளியமைப்புக்கள்வரை நான் கவனம் எடுப்பேன். அதேசமயம் இந்தப் பின்னணி உருவாக்கப்படும் முறையால் உருவங்களது முதன்மை சிதைந்து விடக்கூடாது என்பதிலும் நான் கவனமாய் இருந்தேன்.

கொம்பிறசரை வைத்து வர்ணத்தை விசிறும் முறையைப் பரிசோதித்துப் பார்ப்பதற்கானப் பெரிய வாய்ப்பு 'சித்திரகலா ஸ்ரூடியோ' வழியாகக் கிட்டியது. அதனைச் சுன்னாகத்தைச் சேர்ந்த சிவராஜா நடத்தினார். நான் அந்த ஸ்ரூடியோவுக்காக ஒரு தொகுதி 'ஸோப் படங்களைச்' *(show pictures)* செய்தேன். அதற்காகச் சிலவேளை மொடல் *(models)* வைத்துக்கூட படம் பிடித்தோம். இந்தப் படங்களில்தான் கொம்பிறசரது தொழில்நுட்பச் சாத்தியங்களை அதிகளவில் முதலில் பயன்படுத்தினேன். அந்தப்படங்கள் சித்திரகலா ஸ்ரூடியோவுக்கு மிகப்பெரிய விளம்பரமாக அமைந்தன. அதேசமயம் என்னுடைய தொழில் வாய்ப்புக்களையும் அதிகரித்துவிட்டன.

**பொதுவாக கையால் வர்ணந்தீட்டப்படும் ஒளிப்படங்கள் நீர் வர்ணத்தையோ அல்லது தைல வர்ணத்தையோ அதிகம் பயன்படுத்தின. அவற்றின் ஒளியூடுபுக விடக் கூடிய தன்மை கையால் வர்ணம் தீட்டப்படும் ஒளிப்படங்களது அடிப்படைத் தேவையாக இருந்தது. அதேசமயம் நீர் வர்ணத்தை விடவும் தைலவர்ணத்தின் ஆயுட்காலம் அதிகம் என்பதாலும், அதன் மேற்பரப்பின், அதிகம் கவனத்தைக் கோரத்தக்க பண்பாலும் தைலவர்ணமே பொதுவாக மக்கள் மத்தியில் அதிகம் விரும்பப்பட்டது. நீங்கள் வர்ணவிசுறு காற்றமுத்தியைப் (compressor) பயன்படுத்தும்போது என்ன வர்ணத்தை அதற்காக உபயோகித்தீர்கள்?**



மீள்தொடுகை செய்யப்பட்ட எதிர்மறை ஒளிப்பட உருவும், ஒளிப்படமும்
நன்றி: சிதம்பரநாதன் (சர்மிலா ஸ்ரூடியோ)

⏭ 'போஸ்ரர் கலர்'தான் *(Poster colour)* கே.கே.வி. செல்லையா அவர்கள் பயன்படுத்தினார்கள். எங்கள் காலத்தில் சுவருக்குத் வர்ணம் தீட்டப் பயன்படுத்தப்படும் றுபிலாக் *(Robbialac)* நீர் வர்ணத்தையே அதிகம் பாவித்தோம். அதனுடன் புடவை உற்பத்தியிற் பயன்படுத்தப்படும் வர்ணம் ஒன்றையும் கலந்தோம். அது வர்ணச் செழுமையையும் — ஒளிரத்தக்க தன்மையையும் அதிகரித்தது.

(நன்றி: சுகன்யா அரவிந்தன்)

**கையால் வர்ணந்தீட்டலுக்கானப் படிமுறைகள் என்ன? எப்படி அதனைச் செய்வீர்கள்?**

⏭ இரண்டு அடிப்படைப் படிமுறைகள் அதில் காணப்படுகின்றன. ஒன்று 'றீ ரச்சிங்' *(re touching)* மற்றையது 'கலறிங்' *(Colouring)* — வர்ணந்தீட்டல். றீரச்சிங் சிலவேளை வர்ணம் தீட்டுபவர்கள் செய்வார்கள் அல்லது தனியே அதனைச் செய்யவும் ஸ்ரூடியோக்களில் ஆட்களை வைத்திருப்பார்கள். 'றீ ரச்சிங்' சரியாக அமையும்போதுதான் 'கலறிங்' சரியாய் அமையும். 'றீ ரச்சிங்'கிற்காகப் பயன்படுத்தப்படும் 'எச்பி பென்சில்களது' *(HB pencils)* தரமும் அளவுகளும் முக்கியம். அவைதான் நேர்த்தியான, சரியான தேவைப்படும் அழுத்தங்களை ஒளிப்படத்தில் உண்டாக்கும். அவ்வகையில் 'றீரச் செய்த நெக்கற்றிவ்வை' *(re touched negative)* பதிப்பிப்பார்கள். 'பிறவுண் ரோண் பிறின்ற்'தான் *(brown tone print / sepia*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





*toning)* வர்ணந்தீட்டலுக்குத் தோதாய் அமையும். கறுப்பு — வெள்ளை சிலவேளை பாவிப்பதுண்டு. ஆனால் 'பிறவுண் ரோணிற்'தான் வர்ணம் வலுவுடையதாக வெளிப்படும். பெரும்பாலும் வின்சன்ற் — நியூட்டன் வர்ணங்களைத்தான் அக்காலகட்டத்தில் பயன்படுத்துவோம். ரான்ஸ்பறன்ற் தன்மை (*trans-parent*) என்பது வர்ணந்தீட்டலுக்கான முக்கியமான தேவைப்பாடாக அமைந்தது.

**உங்களது பெயரில் 'கணேஷ் ஆட் ஸ்ரூடியோ' என்ற ஒரு ஸ்ரூடியோவைத் 1986 இல் தொடங்கினீர்கள் இல்லையா? அதனைப் பற்றிச் சொல்லுங்கள்.**

ஓம், ஓம். 1986 இல இருந்து 1995 இடப்பெயர்வு வரைக்கும் அது இயங்கியது.. உங்களுக்குத் தெரியும்தானே 1985 — 1986இல் ஆமிப் பிரச்சினைகள் கூடத்தொடங்கீட்டுது. யாழ்ப்பாண நகரத்துக்குள்ள ஷெல் வந்து விழுகிறது எல்லாம் வந்தபின், 'ரவுண' (*town*) விட்டு தள்ளியிருந்து தொழில் செய்யிறது கொஞ்சம் பாதுகாப்பு என்ற எண்ணம் வந்திட்டுது. அதேநேரம் இங்க நாச்சிமார் கோயிலடிச் சுற்றாடலையண்டி கே.கே. எஸ் றோட்டில இருந்த 'பரணி ஸ்ரூடியோ' இயங்காமல் இருந்தது. அதனை எடுத்துதான் 'கணேஷ் ஆட் ஸ்ரூடியோ' என மாற்றிச் செயற்படத் தொடங்கினோம். 1987 இந்தியன் ஆமிப் பிரச்சினையால் கொஞ்சம் பாதிக்கப்பட்டம். ஆனால் 1995 இடப்பெயர்வு முடிஞ்சு திரும்ப வந்தால் எல்லாம் சூறையாடப்பட்டு அழிந்து போய்க்கிடந்தது. அதோட ஸ்ரூடியோவை விட்டிட்டு முழுதாய் வீட்டிலை இருந்தபடியே சுயாதீனமாகச் செயற்படத் தொடங்கிவிட்டேன்.

**எப்போது வர்ண புகைப்படச்சுருள் யாழ்ப்பாணத்திலை பாவனைக்கு வந்தது? அதனால் உங்களது கையால் வர்ணந்தீட்டும் துறை பாதிக்கப்பட்டதா?**

1975கள் என நினைக்கிறேன். ஆனால் உடனடியாக பரந்துபட அது பாவனைக்கு வந்துவிடவில்லை. இதற்கு முன்னுக்கிருந்த கமராக்களைக் கொண்டு வர்ணப் புகைப்படங்கள் எடுக்க முடியாது. அதற்கான விசேட ஏற்பாடுகள் உடைய 'யசிக்கா இலக்றோ' முதலான கமராக்கள் தேவைப்பட்டன. அதனைவிடவும் மிகப் பெரிய பிரச்சினை அவற்றை இங்கே கழுவமுடியாது என்பதுதான். அப்போது — சிங்கப்பூரில் கொண்டுபோய்தான் ஒளிப்படங்களைக் கழுவிக் கொண்டு வருவார்கள். 'ஹப்பி ரெக்ஸ்' ஆட்கள்தான் அப்போது யாழ்ப்பாணத்தில் அதனைச் செய்தார்கள். அதனால், கலர் ஒளிப்படச் சுருள் வந்த பின்பும் நெடுங்காலம் அதனால் கையால் வர்ணந்தீட்டும் துறை பாதிக்கப்படவில்லை.

**பின்னர் போட்டோஷொப்பினைப் படித்தீர்கள் அல்லவா?**

ஓம், ஓம் விஸ்ரா விஷனிலை ஒன்றரை மாதம் படித்தேன். இரண்டு சிங்கள இளைஞர்கள் அப்போது விஸ்ரா விஷனிலை வந்து வேலை செய்தார்கள். விஸ்ரா விஷன் அழைத்தார், 'அண்ணை உங்களுக்கு ஆர்வம் இருந்தால் வாருங்கள்' என, அது எனக்கு போட்டோஷொப்பினைப் பயன்படுத்தும் அடிப்படை அறிவைத் தந்தது. ஆனால் நான் இப்போதும் புதிது புதிதாய் அதனுடைய தொழில்நுட்ப வாய்ப்புக்களை பயன்படுத்தும் அறிந்துகொண்டுதான் இருக்கிறேன்.

**போட்டோஷொப்பினைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? கைகளால் வர்ணம் தீட்டுதலில் இருந்த மனிதத்தொடுகை (Human touch) சார்ந்த உறவு இல்லாமலாகி, முழுவதுமே இயந்திர நிலைப்படுத்தப்பட்டுவிட்டது என நினைக்கவில்லையா?**

அப்படியா சொல்கிறீர்கள்? எனக்கு அது ஒரு 'மஜிக்' (*Magic*) போல இருக்கிறது. அதுவொரு கடல். பலவற்றை காட்சிரீதியாக செய்து பார்ப்பதற்கான தொழில்நுட்பரீதியான வாய்ப்புக்களை உடையது. ஒருவகையில் கையால் வர்ணந்தீட்டலின் மட்டுப்பாடுகளைத் தாண்டி பலவற்றைப் புதிது புதிதானச் செய்வதற்கான வாய்ப்பை அது தருகிறது. 'இதனைச் செய்ய முடியாது' என நினைத்தவை கூட இன்று போட்டோஷொப்பினைக் கொண்டு இலகுவாகவும், விரைவாகவும் செய்ய முடிகிறது.

மற்றையது, நீங்கள் தொழில்நுட்பத்தை நன்கு உள்வாங்கி அதனைக் கையாளும் சிறப்பு ஆற்றலை அடையும்போது, அது அதன் தொழில்நுட்பம் என்ற நேரடியான — தன்மையை இழந்துவிடும். அது நீங்கள் பயன்படுத்தும் கருவியாகி உங்களுக்கு வசைந்து கொடுக்கும் ஒன்றாகிவிடும் என்றுதான் நினைக்கிறேன்.

**ஒளிப்படப்பிடிப்பு : த. ரிலக்ஷன்**


**விசேட நன்றிகள் சர்மிலா ஸ்ரூடியோ சிதம்பரநாதன், சுகன்யா அரவிந்தன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# UNIVERSAL FINANCIAL GROUP INC



## Our Services

உங்கள் அனைத்துக்
காப்புறுதித்
தேவைகளுக்கும்
அழையுங்கள்

- Auto Insurance
- Life Insurance
- Disability Insurance
- Non Mediacal Insurance
- Critical Illness insurance
- Mortgage Insurance
- Travel & Super Visa Insurance

Free Financial Classes Available



RRSP | RESP | MORTGAGE | INVESTMENT

**416 -731-2829**

venthanperinpan@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை: **சேரன்**



1.

புழுதிப் பனி. துலங்காத சூரியன்.

சாளரத்தின் வெளியே
இப்போதுதான்
என்னுடைய சிட்டுக்குருவி வருகிறது
வழமைபோல
அரிசி கொஞ்சம் கிள்ளிக் கொடுக்கிறேன்

அதன் சிறகுத் துடிப்பு
பெரும் நெஞ்சக் கிளர்ச்சி
கண்கள்தான் தமிழின் ஓயா அலைகள்

வரும்.போகும்.
இருக்கும்.பறக்கும்.

*(மஹாகவிக்கு)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2.**

பலமுறை
எவர் குரலையும் நான் கேட்கவில்லை
உலகைக் காப்பாற்ற
என்னுடையதும் உன்னுடையதும்
கவிதை போதாது
எரிக்கலாம். எரிவோம்.
ஒளியிலும் மீட்சி இல்லை.

*(போல் செலானுக்கு)*



**3.**

நெருப்பில் நூலகம்
நெருப்பே நூலகம்
நூலகம் நெருப்பு
நினைவும் நெருப்பு
எரிப்பே நினைவு
நினைப்பே எரிவு.

*(சோமிதரனுக்கும் சந்தரஸிக்கும்)*

**4.**

உறைபனியில்
ஆழ்ந்து தூங்கும் கடல் மீது
எந்த நிழலும் விழாது.

மேலே நடந்து செல்லலாம்
எல்லோருக்கும் வழி விடுகிறது
எல்லைகளை அழிக்கிறது
இருளுக்கு வண்ணம் சேர்க்கிறது

தர மறுத்து
என்னுடைய நினைவுகளைப் புதைத்து வைத்திருக்கிறது.

*(மைக்கேலுக்கும் பிருந்தனுக்கும் அனாமிகாவுக்கும்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம் சந்திக்காமலே போகலாம்!

கவிதை: **கீதா சுகுமாரன்**

ஏலமும் கிராம்பும் கசிந்த தேநீரில்
கொதிக்கும் பால் சேர்த்து
நீல டியூலிப்பிகள் படரும் கோப்பையில் ஊற்றி
ஆவியின் வெப்பத்தில் ஈரமாகும் நாசி மினுங்க
உனது மின்னஞ்சலைப் பார்த்தேன்.

மாலை மழை வெயிலைக்
கைப்பற்றி என்னிடம் கடத்தியிருந்தாய்.
உனது கையில் என்ன கோப்பை?
என்று கேட்கவில்லை நான்.

கவிதை நிறையும் கணங்களையும்
தேகத்தில் ஒழுகும் வியர்வையையும் பகிர்கிறாய்.

உனது சொற்களை அழித்துவிட்டது
உன் உடல்மீதான வன்முறை என்கிறாய்.
இப்போது நீ வசிக்கும் விநோத நிலத்தில்
உனது தாய்மொழி நினைவில் விரிகையில்,
மூளைத் திரவம் கொதித்து,
'உடல் உன்னிடமிருந்து தெறித்து விழுகிறது'எனப்பதிகிறாய்.

வாழ்வின் வட்டுருவுக்குள்
அம்மாக்களின் அம்மாவாகிய பெண்களின் நாவுகளைத் தருகிறேன்.
நமது நெஞ்சக்கூட்டின் எலும்புகள்
பரிச்சயமாய் உள்ளே அசைகின்றன.
முன்பு கேட்டதுபோலவும்
கேட்காததுபோலவும் இருக்கும் ஓசைகள்
நமது கண்ணீரில் வழிந்து
கைகளின் குழிவுகளை நிறைக்கின்றன.

உனது மொழி
நனைந்தும் கீறல்களோடும் கட்டமைத்த வெளியில்
நீயே பெருகுகிறாய்.

இருவேறு பொழுதுகளிலிருந்து
இருவேறு கண்டங்களிலிருந்து.
உனது மொழியின் ஈரப்பதம்
ஒளிரும் இழைகள்
உன் உடலை நெய்கின்றன.
அதில் மிதக்கும் இரகசியங்களை
எவருமறியாமல் கணினித்திரையில் வைத்துவிட்டு
விடைபெற்றோம்.

அந்தக் கணம் நீலடியூலிப்புகளில் உறைந்திருக்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விதைகள்

இந்த முறை எனது பச்சைப் பெட்டியிலிருந்தன
நீலப் பெட்டியில் எப்போதும்
வைக்கப்பட்ட விதைகள்
அதற்கும் முன்னிருந்தப் பெட்டி
கறுப்பாக இருக்கலாம்; நினைவிலில்லை.

ஒவ்வோர் ஆண்டும் பெட்டியின் நிறங்கள்
மாறாவிட்டாலும்
செய்தித்தாளைக் கிழித்து நீள்சதுரமாய் மடித்து
அதனுள் அப்பா வைக்கும்
விதைகள் மாறியதேயில்லை.
துளசி, முளைக்கீரை, பசளி, பாகற்காய், மிளகாய்.
ஒவ்வொரு நீள்சதுரத்திலும் அப்பாவின் கையெழுத்தில்
விதைகளின் பெயர்கள் மௌனமாயிருக்கும்.

ஒவ்வொரு கோடையிலும் விதைகளைப் பிரிக்கையில்
மங்கலாய் அவிழும் பழுப்பேறிய தாள்களில்
பழைய செய்திகள் காலம்கடந்திருக்கும்.

தவறாமல் அப்பாவிடம் சொன்னேன்.
இப்பனிக்காட்டின் குறுங்கோடையில் அறுவடையாகும்
உருளை, காரட், சோளம், கோதுமை போக
இப்போது எனது தோட்டச்செலவுகளைவிட மலிவாயிருக்கும்
நாட்டுக்கீரை, வெண்டிக்காய், மனத்தக்காளியைப் பற்றி.

ஆனால், நான் சொல்லவில்லை அப்பாவிடம்

குளிர்நாட்டுப் பூர்வகுடிகள்
நீக்கப்பட்டபரந்த மண்ணில்
காலனியக் கூலிகளின் காலடிப் படிவுகளிலிருந்து
நீண்டு முளைக்கீரைக்கு நீர்பாய்ச்சும்
தற்காலிகப் புலம்பெயர் தோட்ட வேலையாளரின்
காற்றுப் புகாஅறைகளையும்
எனது சமையற்கட்டு இழுப்பறையின் இருட்டினுள்
செய்திகளோடு மக்கும் விதைகளையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை: **மிஸ்ராஜப்பார்**

**1.**



கதறிச்சரிகிறது நிலம்
பெரும் கதை ஒன்றின் சில பாகங்களில் நான்
புயலை ஏந்திக்கொள்கிறேன்.
அப்போது என் சொற்கள் நழுவுகின்றன
என்னுள் குடி கொண்ட தீரா இருள்
உதிரியாய் அலைந்து திரிந்து
துணுக்குற வைக்கிறது.
அப்போது
நேசத்தின் தடங்களை
மேலெழச் செய்யும் ஒலிக்குறிப்புக் கேட்கிறது

**2.**

நீ மட்டும் போதுமென்றேன்.
குலுங்கிச் சிரிக்கிறது அண்டவெளி.
பின்புறக்கோதுகளில் நீல வால்வெள்ளி
நதியாகி நுண்ணிய வானில் வெளிக்கோலமிடுகிறது.
மறுபடியும் சிரித்துச்சரிகின்றன சூரியக்கோள்கள்.
நீ மட்டும் என்பது புகையாகி
வெண்திவலையாகி ஒலியற்றுவிசும்புகிறது.
மாயச்சிரிப்பில் பச்சையவுருக்களாய்
ஒரு காடு தணலெடுத்து அழுகிறது.
மறுபடியும்
நீ மட்டும் எனச்சிரிக்கிறது.

சாளரப்புன்னகை அது

மலைச்சரிவுகளில் தயங்கியபடி இறங்கும் போதெல்லாம் ஏதோ ஓர் உணர்வு ஒட்டிக் கொள்ளும். காடு எப்போதும் தனித்தேதான் இருக்கிறது. சில பொழுதுகளில்அச்சத்தை ஓர் போர்வையாகப் போர்த்திக்கொள்கிறேன். பிரம்மாண்டமான மரங்களைத்தொட்டுப் பார்க்கிறேன். சில பொழுதுகளில் கோரமாய்த் தலையாட்டும் மரங்கள் அமைதியாகவே நிற்கின்றன. இரவுகளிலும் இவை இப்படித்தான் இருக்குமா? ஒவ்வொரு மரத்தையும் செடியையும் சுற்றியலைகிறேன். இடுப்புயரம் வளர்ந்திருக்கும் செடிகளைத் தட்டுத்தடுமாறிக் கடந்துபோகிறேன். என்னை உள்ளிழுத்துக்கொள்ளும் ஓர் உணர்வு ஆட்கொள்கிறது. அச்சமூட்டும் அனைத்தையும் நேருக்கு நேர் சந்திக்கத் துணிகிறேன். என் கற்பனையைவிட யதார்த்தம் சாந்தமானது. காடு.

*நவம்பர் 2022.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை: **ஆழியாள்**

## காலை

என்றைக்கும்
கைத்தட்டல்கள் எழாத
அந்த காரவிளையாட்டரங்கில்
அமைதி, அமைதி
பேரமைதி!

வட்டெறியும் வீராங்கனை
தகதகக்கும் கலசப்பரிதியைக்
கையிலேந்தி
தோள்புடைக்கத் தசைமுறுக்கி,
உடல்கிறுக்கி
விட்டெறிந்து
ஒருசுற்றுச்சுழன்றாடிப்
பின் நரம்பதிரக்
களத்தில் ஊன்றினாள்
காலை.



## காலம்

காலத்தில்
கழுதைதேய்ந்து
கட்டெறும்பாயிற்று

குட்டிச்சுவர்
மதிற்கல்லாயிற்று

காலாகாலத்தில்
மனைகள் செழிக்க

வாழையடிச் சொந்தங்கள்
உலகெலாம் கிழங்குவிட்டுத்
தழைத்தன

குளிர்நிலத் திணையில்
புதுமொழிப்பேச்சில்
இடக்கரடக்கலும், இயல்புவழக்கும்
காலம்அசையக்
கலைபோல் கைவந்தது

கண்முன்னே
பேத்திபேரர்
அரைக்கு அரையாய்
ஐம்பதுக்கு ஐம்பதாய்
சீனராய், யூதராய்,
சூடானியராய், குஜராத்தியாய்,
ஜெர்மனியக்கலப்பாய்
இன்னும் கலவைகளின் சேர்வையாய்
நீடூழி என்றும் வாழவே


தமிழா
யாதும் நம் ஊராயிற்று
யாவையும் நம் மொழியாயிற்று
யாவரும் நம்மவர் ஆயினரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் ஆமை விஞ்ஞானி

இது ஓர் உண்மைக் கதை. அமெரிக்காவின் மொன்ரானா மாநிலத்தில் நடந்தது. அவருடைய பெயர் டேவிட் (பொய்ப் பெயர்). அமெரிக்காவில் கடல் ஆமைகள் ஆராய்ச்சி மையம் ஒன்றில் விஞ்ஞானியாக பணியாற்றுகிறார். ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாத முடிவில் தவறாமல் காட்டுக்குச் சென்று ஒரு கிறிஸ்மஸ் மரம் வெட்டி வருவார்.



அவரும் மனைவியும் கிறிஸ்மஸ் மரத்தை சோடித்து வண்ணமயமான மின்விளக்குகள் பூட்டி கொண்டாடுவார்கள். இந்த வருடம் விசேடமானது. அவர்களுடன் மூன்று வயது மகனும் சேர்ந்துகொள்வான். மனைவியின் பெயர் லூசி (உண்மையான பெயர்), மணமுடித்து ஏழு வருடங்கள் ஆகின்றன. லூசி வீட்டிலிருந்தபடியே கம்ப்யூட்டர் வரைபடங்களை ஒப்பந்தத்துக்கு வரைந்து நல்ல வருமானம் ஈட்டினார். மகிழ்ச்சியான குடும்பம்.

இம்முறை, அதாவது நவம்பர் 2022ஆம் வருடம், டேவிட்டும் அவருடைய இரண்டு நண்பர்களும் காட்டுக்குள் கிறிஸ்மஸ் மரம் வெட்டப் போனார்கள். மூன்று மரங்கள் வெட்டுவது என்று திட்டம். டேவிட் பல வருடங்களாக இந்தக் காட்டில் மரம் வெட்டுகிறார். அவருடைய நண்பர்களுக்கு இது முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை. நல்ல கிறிஸ்மஸ் மரங்களை இலவசமாக வெட்டலாம் என்று சொல்லி அவர்களை அழைத்து வந்திருந்தார். டேவிட் நல்ல அழகான, நேர்த்தியான மரம் ஒன்றை தெரிந்துவிட்டு அதை வெட்ட முன்னர் நண்பர்களுக்கு அவர்களுக்கு விருப்பமான மரங்களை தேர்வு செய்யச் சொன்னார். அவர்கள் இடத்தை விட்டு அகன்றதும், தன்னுடைய சங்கிலி வாளை எடுத்து டேவிட் மரத்தை வெட்ட ஆரம்பித்தார். வெட்டிய பின்னர் மரம் இன்னும் அழகாகவும், அவர் வீட்டுக்கு அளவானதாகவும் இருந்தது. லூசிக்குப் பிடிக்கும் என மனதில் நினைத்துக் கொண்டார். மரத்தை தூக்கி தன்னுடைய பொதி சுமக்கும் வாகனத்தில் ஏற்றினார்.

நண்பர்களைத் தேடிய போது, கறுப்பு பூட்ஸ்போட்ட, காட்டுவாசிகளின் போர்வையை எறிந்து உடலில் சுற்றிகொண்ட, உருண்டையான மனிதர் ஒருவர் உரத்துக் கத்தியபடி ரெமிங்டன் துப்பாக்கியைத் தலைக்கு மேல் தூக்கியவாறு வேகமாக வந்தார். அவருடைய அகலமான முகம் சூரிய ஒளியில் சிவந்துபோய் கிடந்தது. பற்கள் தாறுமாறாக இருந்தபடியால் அவர் பேசியது குளறுபடியாக வெளியே வந்தது. சட்டென்று நின்று, ஒரு நிமிடம் ஒன்றுமே பேசாமல் டேவிட்டையும் அவர் சாய்த்த மரத்தையும் கூர்மையாகப் பார்த்தார். 'யார் அனுமதியுடன் மரத்தை வெட்டினீர்கள்?' என்றார். காடு அதிரும் சத்தத்தைக் கேட்டு நண்பர்கள் சூழ்ந்து விட்டார்கள். விஞ்ஞானி திடுக்கிட்டு 'மன்னிக்க வேண்டும். கடந்த ஏழு வருடங்களாக நான் இங்கே வந்துதான் கிறிஸ்மஸ் மரம் வெட்டுவேன்.' 'நான் கேட்ட கேள்விக்கு இதுதான் பதிலா? இந்த இடம் உங்களுக்குச் சொந்தமானதா?' 'இல்லை, ஆனால் நான் இங்கேதான் கிறிஸ்மஸ் மரங்கள் வெட்டினேன்.' 'ஏழு வருடங்களாக நீங்களும் நண்பர்களும் மரம் திருடி—யிருக்கிறீர்கள்.' நண்பர்கள் இதை எதிர்பார்க்கவில்லை. நடுங்கத் தொடங்கிவிட்டார்கள்.

டேவிட்டுக்கு ஒருவாறு நிலைமை புரிந்தது. 'ஐயா, எனக்கு இந்த இடம் உங்களுக்குச் சொந்தமானது என்று தெரியாதே?' 'அது எப்படி? இங்கே பலகையில் கொட்டை எழுத்தில் எழுதி வைத்திருக்கிறதே. கடந்த ஒரு வருடமாக இந்த இடம் எனக்குச் சொந்தம்.' 'பெரிய தவறு நடந்துவிட்டது, ஐயா. இம்முறை எங்களை மன்னித்துவிடுங்கள். இனிமேல் இப்படியான பிழை நடக்காது.' 'உங்களை எப்படி நம்புவது. மூன்றுபேர் திட்டமிட்டு மரம் திருட வந்திருக்கிறீர்கள். பார்த்தால் திருடர்கள் மாதிரியே தெரிகிறீர்கள். உங்களுக்குத் தெரியுமா மொன்ரானாவில் மரம் திருடுவது பாரதூரமான குற்றம்.'

'தயவுசெய்து சொல்லுங்கள். எவ்வளவு பணம் வேண்டுமானாலும் நாங்கள் கட்டத் தயாராக இருக்கிறோம். இப்பவே பணத்தை செலுத்திவிடுகிறோம். நாங்கள் விஞ்ஞானிகள். நான் கடல் ஆமைகளைக் காப்பாற்றும் விஞ்ஞானி.' இப்படிச் சொல்லியபடி டேவிட் தன்னுடைய அலுவலக அடையாள அட்டையை எடுத்து நீட்டினார். இத்தனை நேரமும் அவருடைய நெஞ்சைக் குறிவைத்த துப்பாக்கியை நிமிர்த்தி ஆறுதலாக அட்டையை வாங்கி எழுத்துக்கூட்டி படித்தார். முகத்தில் பெரிய மாற்றமில்லை.

'உங்கள் நண்பர்களும் விவரங்களைத் தரட்டும். போலீஸ்காரர் முடிவு செய்வார்.' சிக்கல் அதிகமாகிக்கொண்டே போனது. இந்த மனிதருக்கு என்ன தேவை? எதற்காக இப்படி பழிவாங்குவதிலேயே குறியாக இருக்கிறார். மறுபடியும் துப்பாக்கிக்காரர் பேசினார். 'விஞ்ஞானியான உங்களுக்கு நாட்டின் சட்டம் தெரியும்தானே. மரம் திருடுவது மாநிலச் சட்டத்தை மீறுவது மட்டுமல்ல; நாட்டின் சட்டத்தை மீறுவதும் கூட. இதற்குச் சிறைத்தண்டனை உண்டு.'

பிரச்சினை என்னவென்றால் மூன்று விஞ்ஞானிகளுக்கும் மன்றாடத் தெரியவில்லை. அவர்கள் தொழில்கள் அப்படி. இப்பொழுது மற்ற விஞ்ஞானிகளும் சேர்ந்துகொண்டு, அழுகை வாசலில் நிற்க, தாங்கள் திருட வரவில்லை. இம்முறை மட்டும் மன்னிக்க வேண்டும் என்று அவரவருக்குத் தெரிந்த முறையில் கெஞ்சினார்கள். இறுதியில் துப்பாக்கிக்காரரின் கண்களில் ஒரு சொட்டு கருணை தெரிந்தது. 'சரி, நான் மரங்களை காப்பாற்றுகிறேன். நீங்கள் போய் கடல் ஆமைகளை காப்பாற்றுங்கள். என் முடிவு இதுதான். உங்கள் சங்கிலி வாளையும், வெட்டிய மரத்தையும் இங்கே இறக்கி வைத்துவிட்டுப் போங்கள். இப்பவே ஒரு கிறிஸ்மஸ் மரக்கன்று வாங்கி வந்து அதே இடத்தில் நட்டுவிட்டு வாளையும், மரத்தையும் மீட்டுக்கொண்டு போகலாம். இனிமேல் இந்தப் பக்கம் நான் உங்களை பார்க்கக்கூடாது.' பெருந்தன்மையுடன் சிரித்தார். ஒரு சுறா மீன் சிரித்ததுபோல இருந்தது.

மூவரும் பாய்ந்து வெளியேறினார்கள். வெறும் 150 டொலர் பெறுமதியான கிறிஸ்மஸ் மரத்துக்கு இந்த மனிதன் துப்பாக்கியைத் தூக்கி விரட்டிவிட்டான். விஞ்ஞானிகள் என்றதும் எவ்வளவு இளக்காரமாகப் பார்த்தான். மூவரும் தங்கள் தங்கள் யோசனைகளில் குமைந்தார்கள். டேவிட்டுக்கு மிகவும் அவமானமாகப் போய்விட்டது. அதுவும் தன் நண்பர்கள் முன்னிலையில், ஏதோ தலைமைக் கொள்ளைக்காரனைப் பிடித்ததுபோல நெஞ்சுக்கு நேராக அவன் துப்பாக்கி நீட்டியதை நினைத்தார். கேவலமாகவிருந்தது. அவருடைய நண்பர்கள் வெளியே அமைதியாக காணப்பட்டாலும் உள்ளுக்குள் என்ன நினைத்திருப்பார்களோ?

இரண்டு நண்பர்களும் அவருடன் பல்கலைக்கழகத்தில் படித்தவர்கள்தான். குர்தி மயக்க மருந்து துறையில் நிபுணராக கடமையாற்றுகிறார். அவர் வேண்டாமென்று சொல்லியும் அவருக்கு நல்ல கிறிஸ்மஸ் மரம் இலவசமாக கிடைக்கும் என்று ஆசைகாட்டி டேவிட் கூட்டி வந்திருந்தார். வயது 31, கொசோவோ நாட்டுக்காரர். தன் நாட்டின் வயதிலும் பார்க்க தன் வயது அதிகம் என்று பெருமையடித்துக்கொள்வார். புதுக் கார் வாங்கினால் அதை ஓட்டிப்பார்ப்பதுபோல அவருடைய 31ஆம் பிறந்த தினம் வந்தபோது அந்தப் புதிய வயது சரியாக வேலை செய்கிறதா என்பதை நாள் முழுக்க பரீட்சித்துப் பார்த்தார் என்று நண்பர்கள் சொல்வார்கள். சில வேளைகளில் ஏதாவது தப்பாகச் செய்துவிட்டு பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிப்பு கேட்பார். லூசிக்கு அவரை பிடிக்காது. ஒருமுறை அவர் வீட்டுக்கு விருந்துக்குப் போய்விட்டு திரும்பும் சமயம் வாசலில் அவர்கள் பேசிக்கொண்டு விடைபெறும்போதே கதவைச் சாத்திவிட்டர். இப்படி ஏதாவது சின்னப் பிழை விடுவாரே ஒழிய விசுவாசமான நண்பர்.

ஸ்டீவ் உயிர் வேதியியல் துறையில் உயர் பதவியில் இருந்தார். பின்னர் என்ன காரணமோ வேலையை வேண்டாமென்று உதறிவிட்டார். அஞ்சலகத்தில் போய் கையொப்பம் வைக்கும்போதும் தன் பெயரை எழுதி பி.எச்டி என்று பதிய மறக்கமாட்டார். இப்பொழுது உச்சரிப்பு பயிற்சியாளராக பணிபுரிகிறார். அக்கா,

**'எனக்கு எல்லாமே தெரிந்துவிட்டது. இனிமேல் மறைக்கவேண்டிய அவசியம் இல்லை. உங்களுக்கு இரண்டு வாழ்க்கை தேவையில்லை. எனக்கு ஒரு வித தடையும் இல்லை. நான் அம்மா வீட்டுக்கு போறேன்'**

தங்கைகளை ஒருவர் பின் ஒருவராக காதலித்தார். பின்னர் இருவரையும் விட்டுவிட்டு தான் ஒருபால் விருப்பினன் என முகப்புத்தகத்தில் அறிவித்திருக்கிறார். கிறிஸ்மஸ் மரத்து சம்பவத்துக்குப் பின்னர் அவர் நட்பை தொடர்வாரோ தெரியாது. முகத்தை இறுக்கிப் பிடித்துக்கொண்டு ஒரு வார்த்தை பேசாமல் வாகனத்தில் பயணம் செய்கிறார்.

கிறிஸ்மஸ் மரங்கள் விற்கும் கடை வந்ததும் டேவிட் மரக்கன்று தேடி உள்ளே நுழைந்தார். மற்றவர்கள் அலங்காரத்துக்கு வைக்கும் கிறிஸ்மஸ் மரங்களைத் தங்கள் தங்கள் வீடுகளுக்குக் காசு கொடுத்து வாங்கினார்கள்.

திரும்பவும் காட்டுக்கு போனபோது துப்பாக்கிகாரரை காணவில்லை. அவர் வேறு திருடர்களைப் பிடிக்கப் போயிருக்கலாம். ஆனால் மரமும், சங்கிலி வாளும் கவனிப்பாரின்றி கிடந்தன. வாக்கு கொடுத்தபடி கிறிஸ்மஸ் மரக்கன்றை நட்டுவிட்டு, வெட்டிய கிறிஸ்மஸ் மரத்தையும், சங்கிலி வாளையும் வாகனத்தில் ஏற்றிக்கொண்டு திரும்பினார்கள். ஒருவரும் ஒரு வார்த்தை பேசவில்லை.

கதை இங்கே முடியவேண்டும். ஆனால் முடியவில்லை. இனிமேல்தான் ஆரம்பமாகிறது.

லூசியை அழகி என்று சொல்ல முடியாது ஆனால் அவருக்கு அழகியாக வர விரும்பும் முகம் இருந்தது. சமீபத்தில் டேவிட்டுக்குப் பதவி உயர்வு கிடைத்தபோது அவருக்குத் தெரியாமல் ரகஸ்யமாக அவர்கள் நண்பர்களுக்கு ஒரு விருந்து ஏற்பாடு செய்து கணவனை ஆச்சரியப்படுத்தினார். மிக நல்ல மனைவி, ஆனால் அபூர்வமாக எப்பவாவது கோபம் வரும்போது ஆக மலிவான இரண்டு கோப்பைகளைத் தேடியெடுத்து போட்டு உடைப்பார்.

லூசிக்கு கிறிஸ்மஸ் மரம் நன்றாகப் பிடித்துக்கொண்டது. கணவனும், மனைவியும் மகனுமாக மரத்தை சோடித்தார்கள். அன்றிரவு சீன உணவகத்திலிருந்து வரவழைத்த உணவை கிறிஸ்மஸ் மரத்துக்குக் கீழே அமர்ந்து உண்டார்கள்.

அடுத்தநாள் காலை டேவிட் வழக்கம்போல அலுவலகத்துக்கு புறப்பட்டுப் போய்விட்டார். லூசி மகனை குழந்தைகள் காப்பகத்துக்குக் கூட்டிக்கொண்டு போனார். பின்னர் அன்று முடிக்கவேண்டிய கம்புயூட்டர் வரைபடங்களைச் செய்து அனுப்பினார். வீட்டைச் சுத்தமாக்கினார். துணிகளைச் சலவை யந்திரத்தில் போட்டார். அஞ்சல் பெட்டியில் சேகரமான கடிதங்களை எடுத்துவந்து மேசையில் வைத்தார். முதல்நாள் வாங்கிய சீன உணவு கொஞ்சம் மீதம் இருந்தது. ஒரு கோழிக்கால் சூப் செய்தார். காப்பகத்துக்குப் போய் மகனை அழைத்து வந்தார். அவருடைய மனம் அலை பாய்ந்தது. நிம்மதி போய்விட்டது. எப்படி யோசித்தாலும் மனம் ஓர் இடத்தில் வந்து நின்றது, மேலே நகரவில்லை.

நாற்காலியை இழுத்து வரவேற்பு அறையின் நடுவில் போட்டு அதன் மேல் உட்கார்ந்தார். அப்படித்தான் அவர் மனதை அமைதிப்படுத்துவார். பக்கத்தில் தரையில் உட்கார்ந்து மகன் புத்தகப் பக்கங்களைத் திருப்பி விளையாடினான். ஒவ்வொரு பக்கம் புரட்டும் போதும் ஒரு புது மிருகம் எழும்பி நின்று சத்தம் போடும். அவனைப் பார்க்கப் பார்க்க லூசிக்குத் துயரம் பொங்கியது. வாய்விட்டு அழுதார். மகனை எடுத்து மடியில் வைத்து கொஞ்சினார். அவன் தாயாரை நோக்கி ஒன்றுமே புரியாமல் கன்னத்தைத் தடவினான். அவனுடைய சின்ன விரல்கள் கண்ணீரில் நனைந்தன. அவன் ஆச்சரியத்தோடு நிமிர்ந்து பார்த்தான்.

லூசிக்குத் தன்னுடைய அம்மாவின் யோசனை வந்தது. அம்மாவுக்கு தொலைபேசினார். அவர் என்ன சொல்வார் என்று லூசியால் ஓரளவுக்கு ஊகிக்க முடிந்தது. லூசி சொன்னதில் தாயார் பாதியைத்தான் கேட்டார். உடனேயே குழறத் தொடங்கினார். 'நான் உனக்கு சொன்னேனே. விஞ்ஞானிகளை நம்பக்கூடாது என்று. இதுதான் எனக்கும் நடந்தது. உன் அப்பா உனக்கு மூன்று வயது நடந்தபோது ஒருவித காரணமும் இல்லாமல் திடீரென்று மறைந்தார். நான் உனக்குத் தந்த ஆலோசனைகளை நீ எப்பவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதித்தது கிடையாது. இப்ப ஒன்றுக்கும் யோசியாதை. குழந்தையைத் தூக்கிக்கொண்டு உடனே புறப்படு. சிலந்தி தான் உண்டாக்கிய நூலில் தொங்குவதுபோல நீ தொங்கிக்கொண்டு இருக்கிறாய். தேவை இல்லை. உன்னுடைய அறை அப்படியே இருக்கிறது. நான் இருக்கிறேன், நீ இங்கே வா. நாங்கள் பேசி ஒரு முடிவுக்கு வருவோம்.'

லூசி தனக்கு வேண்டிய அத்தியாவசியமானப் பொருள்களை ஒரு சூட்கேசில் அடுக்கினார். இன்னொரு பெட்டியில் குழந்தையின் சாமான்களை அடைத்தார். இரண்டுக்கும் நடுவில் ஒரு கதிரையில் உட்கார்ந்து காத்திருக்கத் தொடங்கினார். கிறிஸ்மஸ் மரம் அழகாக அலங்கரிக்கப்பட்டு மின்விளக்குகள் எரிந்து நூர்ந்து மறுபடியும் எரிந்தன. மகனைப் பார்க்க லூசிக்கு மறுபடியும் துக்கம் பொங்கி வந்தது. அவனை அணைத்துக்கொண்டு பேசினார். 'நீ இனிமேல் தகப்பன் இல்லாமல் வாழப்பழக வேண்டும். நான் அப்படித்தான் வளர்ந்தேன். துணிவாக இரு' என்று சொல்லிக்கொண்டே குழந்தையைத் தூக்கி கொஞ்சினார். அது புரியாமல் மிரள மிரள விழித்தது.

டேவிட் வழக்கத்திலும் பார்க்க ஒரு மணி பிந்தி அலுவலகத்திலிருந்துப் புறப்பட்டார். எப்பவும் அவர் கிளம்பத் தயாராகும் போதுதான் தலைமைச் செயலகத்திலிருந்து முக்கியமான தகவல் ஏதாவது வரும். கடந்த வருடங்களிலும் பார்க்க நடப்பு வருடத்தில் மீன் வலையில் மாட்டி இறக்கும் கடல் ஆமைகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. ஒரு பத்திரிகை விளக்கம் கேட்டிருக்கிறது. அது சம்பந்தமாகச் சிந்தித்தபடி வேகமாகக் காரை ஓட்டினார்.

கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. டேவிட் இறங்கி உள்ளே நுழைந்தார். மனைவியின் கோலத்தைப் பார்த்து ஒரு கணம் திகைத்து அப்படியே நின்றார். லூசிக்கு அவரைக் கண்டதும் கோபத்தை மீறி அழுகைதான் வந்தது. 'என்ன? என்ன நடந்தது?' டேவிட் பதறினார்.

'எனக்கு எல்லாமே தெரிந்துவிட்டது. இனிமேல் மறைக்கவேண்டிய அவசியம் இல்லை. உங்களுக்கு இரண்டு வாழ்க்கை தேவையில்லை. எனக்கு ஒரு வித தடையும் இல்லை. நான் அம்மா வீட்டுக்குப் போறேன்' என்றபடி லூசி எழும்பினார்.

'என்ன பேசுகிறீர். ஏன் அம்மா வீட்டுக்குப் போகவேண்டும்? என்ன நடந்தது? சொன்னால்தானே தெரியும். விளையாடுகிறீரா?'

'விளையாட்டா? நான் மணத்தை முறிக்கப் போறேன்.'

'பரவாயில்லை. என்ன குற்றம் என்றாவது சொல்லலாம். இல்லையா?'

'நீங்கள் இனி இன்னொருத்தியுடன் வாழ்வதுதான் முறை. அம்மாவுடன் பேசிவிட்டேன். அங்கேதான் நானும் பிள்ளையும் போகப்போகிறோம்.'

'இன்னொருத்தியா? இது என்ன கூத்து. அவரை



எனக்கு அறிமுகம் செய்து வைத்தால் பெரும் உதவியாக இருக்கும்.'

'விளையாட்டாய் பேசினால் போதுமா? உங்களுடன் கதைப்பதில் ஒருவித பிரயோசனமும் இல்லை.' லூசி சூட்கேசைத் தூக்கினார்.

துப்பாக்கிக்காரனுடைய சம்பவத்துக்குப் பிறகு டேவிட்டுக்கு நன்றாக மன்றாடுவதில் பயிற்சி இருந்தது. கெஞ்சும் குரலில் கேட்டார், 'அந்த இன்னொருத்தி யார் என்றாவது சொல்லிவிட்டு போகலாமே. நான் நிறுத்த மாட்டேன்.'

'சரி, சொல்கிறேன். எங்கள் வீட்டுக்கு ஒரு கிறிஸ்மஸ் மரம் காட்டிலிருந்து வெட்டிக்கொண்டு வந்தீர்கள். அது இங்கே சோடிப்போடு இருக்கிறது. உங்கள் கோட்டுப் பையில் நேற்று இன்னொரு கிறிஸ்மஸ் மரம் வாங்கிய ரசீது காணப்பட்டதே. அது யாருக்கு, அவளுக்குத்தானே?'

நூறு மில்லியன் ஆண்டுகளாக இந்தப் பூமியில் வாழும் கடல் ஆமைகளின் வழித்தடத்தை ஆராய்ந்து, அவை அடுத்து எந்தப் பாதையில் போகும், எங்கே முட்டை இடும், அதற்கு எத்தனை நாட்கள் செல்லும் என்பதை முன்கூட்டியே துல்லியமாக கணித்துச் சொல்லும் வல்லமை படைத்த கடல் ஆமை விஞ்ஞானி, அரைக் கணம் திகிலடித்து சும்மா நின்றார். பின்னர் அவர் வாய், பட்டனை அழுத்தினால் கார் பின்கதவு மெள்ள மெள்ள திறப்பதுபோல, ஆவென்று திறக்க ஆரம்பித்தது.

அது மூட முன்னர் கதை முடிந்தது.

—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நேர்காணல்: **தியாகு**

நேர்கண்டவர்: சாம்ராஜ்

# இந்த வாழ்வு எனக்கு அலுப்புத் தருவதே இல்லை

தோழர் தியாகு இந்திய நக்சல்பரி இயக்கத்தின் தலைவரான சாரு மஜூம்தாரின் அழைப்பை ஏற்று, புரட்சிக்காக வீட்டை துறந்து, தலைமறைவு வாழ்க்கைக்கு போன முதல் தமிழக இளைஞர்.

தலைமறைவு வாழ்க்கை, அழித்தொழிப்பு, கைது, தூக்குத் தண்டனை, சிறைக்குள் போராட்டங்கள், தூக்கு தண்டனை ஆயுள் தண்டனையாக குறைப்பு, தோழர்களின் உதவியுடன் தனியொரு நபராக காரல் மார்க்ஸின் மூலதனத்தை மொழிபெயர்ப்பு, பதினைந்து வருடமும் எட்டு மாதமுமான சிறை தண்டனையுமான இவரது வாழ்க்கை, புனைகதையை மிஞ்சும் திருப்பங்கள் கொண்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டின் ஆகச்சிறந்த மொழிபெயர்ப்பாளர், பேச்சாளர், மார்க்ஸியத்தை செரிவாகவும் எளிமையாகவும் விளக்குவதில் அவருக்கு நிகர் அவரே.

காங்கிரஸ், இடதுசாரி இயக்கம், இடதுசாரி தமிழ் தேசியம் என அவரது அரசியல் பயணம் விரிகிறது.

தனது 72வது வயதிலும் அபாரமான ஞாபகசக்தியுடன், கூரிய அவதானிப்புகளோடும், உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்களின் கூரிய தர்க்கங்களோடு நாள்முழுக்க எழுத்து, தோழர்களுடன் உரையாடல், வாரத்தில் ஐந்து இனையவழி கூட்டங்கள், தினந்தோறும் தோழர்களுக்கு தாழி மடல், பயணங்கள் என அயராது தான் நம்பும் அரசியலில் இயங்கிக்கொண்டிருப்பவர்.

சுவருக்குள் சித்திரங்கள், கம்பிக்குள்வெளிச்சங்கள், விலங்கிற்குள் மனிதர்கள் தோழர் தியாகுவின் இந்த முன்று சிறை அனுபவ நூல்கள்தான் தமிழின் தலையான சிறை இலக்கியங்கள்.

உங்கள் பிறந்தநாள் எப்பொழுது தோழர் என்று கேட்டால், சிரித்தபடியே

"ஜனவரி 30 (காந்தி இறந்த தினம்), ஒரே நாளில் இரண்டு துக்கங்களாம்'' என்கிறார். தோழர் தியாகு தமிழ் நிலத்தின் மகிழ்ச்சி, பெருமிதம், செல்வம்,

பொள்ளாச்சியிலும், சென்னையில் அவரது கீழ்கட்டளை அலுவலகத்திலும் அவருடனான நீண்ட உரையாடலின் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதி இது.

**பொதுவாக இடதுசாரிகள், புரட்சியாளர்களின் குழந்தைப் பருவம் பெரும்பாலும் அவர்களின் நிகழ்காலத்தின் தோற்றத்திற்குத் தலைகீழாக இருக்கும், உங்களது குழந்தைப் பருவம் எத்தகையது?**

திருவாரூரில் புகழ் பெற்றது தியாகராஜ சாமி கோவில், அந்தக் கடவுளின் பெயரைத்தான் எனக்கு வைத்தார்கள். அப்பாவின் முதல் தாரத்திற்கு இரண்டு பெண் குழந்தைகள், முதல் தாரம் இறந்த பிறகு இரண்டாம் தாரமாக என் அம்மாவைத் திருமணம் செய்து கொண்டார்.

எனக்கு மூத்தவர் காந்திமதி. சுதந்திரம் பெற்ற காலம் என்பதால் காந்திமதி என பெயர் வைத்தார்கள். 1950 ஜனவரி 30இல் நான் பிறந்தேன். அப்பா உயர்நிலைப்பள்ளி ஆசிரியர். ஆகையால் கல்வியில் தனி அக்கறை கொண்டவர். எதையும் திட்டமிட்டுச் செய்வார்.

எங்கள் வீட்டில் யாருடைய வயதாவது தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் அனைவரையும் நிற்க வைத்து மூத்த பிள்ளையின் வயதிலிருந்து இரண்டரை வயதைக் குறைக்க வேண்டும். என் அக்கா எனக்கு இரண்டரை வயது மூத்தவர். என் தம்பி எனக்கு இரண்டரை வயது இளையவர். அடுத்து என் தம்பி இன்னும் இரண்டரை வயது குறைவு. அடுத்து அதே வரிசையில் இரண்டு தங்கைகள்.

என் அம்மாவிற்கு மூன்று பெண்கள். மூன்று ஆண்கள். முதலில் அக்கா, அப்புறம் நான், எனக்குப் பின் செல்வம், மணிவாசகம், அதற்குப் பிறகு கமலா, திருவாருரில் இருக்கும் குளத்தின் பெயர் கமலாலயம், இறுதியாகக் கருணா, என் அப்பாவின் அம்மா பெயர்.

கமலாலயம் தெப்பக்குளத்தின் தென்கரையில் இருக்கும் பள்ளிக்கூடத்தில்தான் அப்பா ஆசிரியராக இருந்தார். முதலில் என்னை பாத்திமா கான்வென்ட் என்ற பள்ளியில் சேர்த்தார்கள், எங்கள் வீட்டுக்குப் பக்கம். மாதா கோயிலோடு இணைந்த பள்ளிக்கூடம். சின்ன வயதிலிருந்தே வீட்டிலேயேப் படிப்புத் தொடங்கி விட்டது. நடந்தால் படிப்பு, அப்பாவுடன் சைக்கிளில் உட்கார்ந்துகொண்டு போகும்போதும் படிப்பு என இருப்பேன்.

நான் நன்றாகப் படித்ததால் எடுத்தவுடனே இரண்டாம் வகுப்பில் சேர்ந்தேன். அதிலும் நன்றாகப் படித்ததால் டபிள் புரமோசன், நான்காம் வகுப்பிற்கு அனுப்பினார்கள்.சிறு வயதில் இப்படிப் படித்ததால் என் வாழ்க்கையில் பின்னால் சில திருப்பங்கள் ஏற்பட்டன. நான் படித்த பள்ளியில் கிறிஸ்துமஸ் காலங்களில் மெழுகுவர்த்தி வாங்கக் காசு கொண்டுவரச் சொல்வார்கள். ஒரு முறை நான் அம்மாவிடம் கேட்டேன், அம்மா அப்பாவிடம் கேட்டார்கள், அப்பா உடனே, "அப்படியா, காசு கேட்டாங்களா, பள்ளிக்கூடம் நடத்துறாங்ககளா? மதம் வளர்க்கிறாங்களா?" என்று கேட்டு, நேரே என் கையைப் பிடித்து பள்ளிக்கு இழுத்துச் சென்றார், எதுவுமே கேட்கவில்லை "டிசி குடுங்க" என்றார். அழைத்துப்போய் நேராக வேறு ஒரு பள்ளியில் சேர்த்துவிட்டார்.

எங்கள் அப்பாவிற்கு ஊரில் மக்களிடையே நல்ல செல்வாக்கு, பல வருடமாக அங்கேயே இருக்கிறோம், வெளியூர்களிலிருந்து படிக்க வரும் சிலர் எங்கள் வீட்டிலேயேத் தங்கிப் படிப்பதும் உண்டு.

தலைமை ஆசிரியர் கூட என் அப்பாவிடம் ஆலோசனை கேட்டே எந்தத் தீர்மானமும் எடுப்பார். உள்ளாட்சித் துறையில் மாவட்டக் கழகம் (District Board) சார்பில் நடத்தப்பட்ட பள்ளிக் கூடம் அது. என் அப்பாவை அவ்வளவு எளிதில் வேறு ஊருக்கு மாற்றிவிட முடியாது.

அப்பா ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சி பெற்றவர். அவர் பெயருக்கு முன்னால் ரென் & மார்ட்டின் (WREN & MARTIN) என்று சேர்த்துச் சொல்வார்கள். அவரிடம்தான் முதலில் ஆங்கிலம் கற்றேன். இடக்குமடக்கான கேள்வியெல்லாம் கேட்பேன்.

"FURTURE PERFECT CONTINUOUSஇல் PASSIVE VOICE வராது என்கிறீர்கள், நான் வர வைத்துக் காட்டட்டுமா?" என்று கேட்பேன். அவர் வீட்டில் வந்து அம்மாவிடம் "பாருடி அவன் எனக்கே பாடம் சொல்றான்" என்று சொல்லிக் கேட்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழக உயர்நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பில் சேர்ந்ததிலிருந்து அப்பாதான் எனக்கு வகுப்பு ஆசிரியர். 7ஆம் வகுப்பு சென்றால் அங்கேயும் அப்பாதான் வகுப்பாசிரியர். 8ஆம் வகுப்பு சென்றால் அங்கேயும் அப்பாதான். 9ஆம் வகுப்புக்கு அவரால் வர முடியாது. இந்தி பிரச்சார சபாவின் பிராத்தமிக், மத்தியமா என்று அப்போதே இந்தி கற்கத் தொடங்கிவிட்டேன்.

அப்பா என்னை விளையாட அனுமதிக்கவில்லை, ஆனால் அவர் நல்ல ஓட்டக்காரர் பிற்காலங்களில் கூட ஓட்டப்பந்தயத்தில் முதல் ஆளாக வெற்றி பெறுவார். அவர் கடுமையான உடல் உழைப்பாளர். எல்லா வேலையும் செய்வார், உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருப்பார்.

வீட்டில் எதாவது ரிப்பேர் ஆனால், நாங்களே சரிசெய்து கொள்வோம். நோட்டுப் புத்தகங்கள் எல்லாம் கடைகளில் வாங்கியது இல்லை. தாளும் அட்டையும் வாங்கி வந்து வீட்டிலேயே தைத்துக் கொடுப்பார்.

வீட்டில் கல்யாணம் நடந்தால் பந்தக்கால் நடுவ—திலிருந்து அப்பாவே அனைத்தும் செய்வார். நாங்கள் உடனிருந்து உதவி செய்வோம். எதாவது தப்பு செய்தால் அடித்து விடுவார். "உங்கச் செல்லம், திங்கச் செல்லம், படிப்பில் செல்லம் கிடையாது" என்பார்.

மற்றப் பிள்ளைகளை விட என் மீது தனி அக்கறை உண்டு, சைக்கிளில் என்னைப் பின்னே உட்கார வைத்துக் கூட்டிச் சென்று, பிறகு அதேபோல் வீட்டுக்குக் கொண்டுவந்து விடுவார், ஒருவேளைச் சோர்வாக இருந்தால் கடைக்கு அழைத்துப் போய் அல்வா, மிக்சர், காபி வாங்கிக் கொடுத்து வீட்டுக்கு அழைத்து வருவார்.

திருவாரூர் கீழ வீதியில்தான் அப்பொழுதெல்லாம் கூட்டங்கள் நடக்கும், இப்போது வேறு இடங்களில் நடக்கிறது, அந்த மாதிரியான அனைத்து கூட்டங்களுக்கும் அப்பா என்னை அழைத்துச் செல்வார். சைக்கிளில் அமர வைத்துத் தலைவர்கள் பேசுவதைக் கேட்கச் சொல்வார். சில நேரம் தோளில் தூக்கி அமர வைத்துக் கூட்டம் கேட்க வைப்பார்.

பெரியார், அண்ணா, குன்றக்குடி அடிகளார், நெடுஞ்செழியன், கலைஞர், ஜீவா இப்படித் தமிழ்நாட்டின் மிக முக்கியமான பேச்சாளர்கள் எல்லாருடைய பேச்சையும் கேட்டு வளர்ந்தவன் நான்.

**தமிழ் நாட்டின் தலைசிறந்த பேச்சாளர்களில் நீங்களும் ஒருவர், திராவிட இயக்கங்களுடன் ஒப்பிட்டால் இடதுசாரி இயக்கங்களில் பேச்சாளர்கள் குறைவுதான், உங்களுக்கு எப்பொழுது மேடைப் பேச்சின் மீது ஈர்ப்பு ஏற்பட்டது?**

1962இல் இந்திய—சீன எல்லைப் போர், அப்போது எனக்கு 12 வயது, 9ஆம் வகுப்பு படித்துகொண்டு இருந்தேன். இந்திய—சீன யுத்தத்தின் பொழுது அண்ணா சிறையில் இருந்து வந்து நேருவுக்கு ஆதரவு அளிக்கிறார். "வீடு இருந்தால் தானே தம்பி ஓடு மாற்ற முடியும்" என்று பேசினார்.

அப்போது அந்தக் கூட்டத்தில் நானும் இருந்தேன், அண்ணாவின் பேச்சு என்னை வெகுவாக ஈர்த்தது, ஏன் நாமும் இவரைப்போல் மேடை ஏறி பேசக் கூடாது எனத் தோன்றியது, நான் முன்பே பல பேச்சாளர்களின் பேச்சைக் கேட்டிருந்தேன். ஆனால் யாருடைய பேச்சும் அண்ணாவின் அந்தப் பேச்சைப்போல் எனக்குள் தாக்கம் கொண்டதில்லை.

பள்ளிக்கூடத்தில் பாதுகாப்புக்கு நிதி கொடுப்பதற்கான கூட்டம் நடந்துகொண்டிருந்தது, தலைமை ஆசிரியர் சிவசண்முகம், அவருக்கு ஒரு காது கேட்காது, காது கேட்கும் கருவி வைத்திருப்பார், இதுதான் அவருடைய அடையாளம்.

என்னுடைய வகுப்பு ஆசிரியர் பி.சி. கணேசன் (பிற்காலத்தில் புகழ் பெற்ற தன்னம்பிக்கை எழுத்தாளர்) நன்றாகப் பாடம் நடத்துவார், நன்றாக அடிக்கவும் செய்வார். அரசியலுக்காக ஆசிரியப் பணியிலிருந்து சென்று விட்டார்.

சிவசண்முகம் மாணவர்களைப் படிப்பு, மேடைப் பேச்சு என அனைத்திலும் ஊக்கப்படுத்துவார். அப்போது பள்ளியில் அந்தப் பொதுக்கூட்ட நிகழ்ச்சி நடந்தது, அதில் கலந்துகொண்ட மக்கள், தங்கம், பணம் எனத் தங்களால் முடிந்ததை பாதுகாப்பு நிதிக்குக் கொடுத்தார்கள்.

சீனாக்காரன் வந்துட்டான் நம்ம நாட்ட புடிக்கப்போறான், நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்று, "ஜவஹர் என்னும் புன்னகை இருக்க, பெண்ணே உனக்கு பொன்னகை எதற்கு" என்று கண்ணதாசன் கவிதை எழுதினார். இதைக் கேட்ட குடும்பப் பெண்கள் கை, கால், மூக்கு, காது எனப் போட்டிருந்த நகைகளைக் கழற்றிப் பாதுகாப்பு நிதிக்காகக் கொடுத்தார்கள்.

கூட்டத்தில் தலைமை ஆசிரியர் சிவசண்முகம் "யாராவது இங்கு வந்து பேச விரும்பினால் பேசலாம்" என்றார். என் காதில் அண்ணா பேசியதுதான் ஒலித்துக் கொண்டிருந்தது.

ஒரே ஒரு பிரச்சினைதான், அந்தப் பக்கமாக அப்பா இருந்தார். என் நண்பன் நாராயணன் அருகிலிருந்தான், அவனிடம் "நாம் போய் எதாவது பேசலாமா" என்றேன். அவனும் "பேசலாம்டா" என்றான்.

இருவரும் கடகடவென்று மேடைக்கு வந்து விட்டோம், என்னை மேடையில் பார்த்த என் அப்பா "இவன் அங்க போய் என்ன பேசப் போறான், அவன இங்க வரச்சொல்லுங்க" என்று சொல்லிக் கொண்டு இருந்தார்.

நாராயணன் ஆரம்பித்தான் "துப்பாக்கித் தூக்க வேண்டும், பாம்பு தின்னும் சீனாக்காரனை தூக்கி எறிய வேண்டும்" என அவனுக்குத் தெரிந்ததெல்லாம் பேசினான், பிறகு நான் பேசினேன், "என் நண்பர் நாராயணன் துப்பாக்கி எடுக்கணும்னு சொல்றாரு, சீனாவோட சண்டை போடணும்னு சொல்றாரு, அவருக்கு என்ன பண்ணனும்ன்னே தெரியல, முதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விசயம் துப்பாக்கி இவர விட உயரமாகவும் கனமாகவும் இருக்கும், அதுனால நம்ம எல்லாரும் போய் சண்ட போடணும் என்றெல்லாம் அவசியம் இல்லை, துப்பாக்கித் தூக்கி நிற்பவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும், அவர்கள் குடும்பத்தைப் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்று பேசினேன்.

இப்போதும் நான் பெரும்பாலும் இறுதியாகவே பேசுவேன், எனக்கு முன்னவர்கள் எப்படிப் பேசு கிறார்கள் என்பதை பார்த்து, அவர்கள் பிழையை எடுத்துக்காட்டிப் பேசுவேன்.

வீட்டிற்குச் சென்றபின் அப்பா "ஏய் உன் புள்ள எப்படி பேசுனான் தெரியுமா? ஆள் அனுப்புனேன், சிக்கல. ஆனா நல்லாத்தான் பேசினான்" என்றார்.

அதற்குப் பிறகு பேச்சுப் போட்டிகளில் கலந்துகொண்டேன், பாரதி பேச்சுப் போட்டி, வங்கிச் சேமிப்பு போட்டி போன்றன, எங்கு பேச்சுப் போட்டி நடந்தாலும் நான் கலந்து கொண்டு பரிசு வாங்கி வருவேன். அப்பாவுக்கு மகிழ்ச்சி.

**சிறுவயதில் தெருவில் இறங்கி விளையாடுவதுண்டா?**

அப்பாவிற்குத் தெரியாமல்தான் பம்பரம் போன்றவை விளையாடுவேன். என் அக்கா விளையாடுவதற்காக என்னைத் தோளில் சுமந்துகொண்டு செல்வார். எனக்குச் சேவல் என்றால் பயம், கோவிலுக்கு விட்ட சேவல் ஒருநாள் என்னை நெற்றியில் கொத்திவிட்டது, அன்றிலிருந்தே சேவல் என்றால் பயம்.

நீலா அக்காதான் என்னைத் தூக்கி வளர்த்தார். வீட்டில் அம்மா வெளியே சென்றுவிட்டால் பீரோவுக்குள்ளிருந்து எனக்கு வெல்லம் எடுத்துக் கொடுப்பார். அம்மாவுக்குத் தெரிந்தால் அடி பின்னி விடுவார்கள். என் அப்பா திருவாரூரிலிருந்து வலங்கைமான் பள்ளிக்கு மாற்றலாகி வரும் போது திருவாரூரிலிருந்து புறப்பட மனமில்லாமல் அழுதேன். அப்பாவின் நண்பர் ஆண் செவி—லியரான ஜெயராஜ் எனக்கு 'ஆட்டோகிராஃப்' போட்டுத் தந்தார். அதில் "LIVE A DANGEROUS LIFE" என எழுதியிருந்தார். நான் அப்படித்தான் வாழ் கிறேன் என்று இப்போது அவருக்குச் சொல்ல வாய்ப்பில்லை.

**சிறுவயதில் சினிமா பார்க்கும் பழக்கம் உண்டா?**

சின்ன வயதில் நான் சினிமாவிற்கே சென்றதில்லை, நண்பர்கள்கூட குறைவுதான், எந்நேரமும் படிப்பு, பள்ளி, வீடு என்றே இருந்துவிட்டேன். சினிமாவிற்கு போவதே அரிதுதான். அப்பாவின் நண்பர்களில் சிலர் அவரை அழைத்துச் சென்றால் நாங்களும் உடன் செல்வோம்.

**வாழ்வு வேறு திசைக்கு எப்போது மாறுகிறது?**

நான் பதினொன்றாவது வகுப்பு, அதாவது எஸ்.எஸ். எல்.சி. தேர்வு எழுதி முடித்த தருணம், எனக்கு 14 வயது, அடுத்துக் கல்லூரி செல்ல வேண்டும். ஆனால் குறை வயது என்று எந்த கல்லூரியும் என்னைச் சேர்த்துக் கொள்ளவில்லை.

என் அப்பாவிற்கு படிப்பு இல்லாமல் ஒரு வருடம் நான் சும்மாவாக இருக்கக் கூடாது என்ற எண்ணம், இந்தியாவெங்கும் பல கல்லூரிகளிலும் முயன்று பார்த்தார். ஆனால் எந்த கல்லூரியும் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை. எனக்கு உடல் தகுதியும் மனத் தகுதியும் இருப்பதாக மருத்துவச் சான்றிதழ் வாங்கிக் கொடுத்துத்தான் தேர்வு எழுதவே முடிந்தது. தேறியும் விட்டேன் என்றாலும் சென்னைப் பல்கலைக்கழகம் வழங்கும் உயர்நிலைப் பள்ளி நிறைவுச் சான்றிதழில் "PROVISIONLY SELECTED FOR UNIVERSITY COURSE" என்பதை சிவப்பு முத்திரையால் அடித்துக் கொடுத்து விட்டார்கள். உரிய வயதடைந்து அனுப்பி வைத்தால் தேர்ச்சி முத்திரை குத்திக் கொடுப்பார்கள். அதுவரை கல்லூரியில் சேர முடியாது.

அதே காலத்தில்தான் திருவாரூரிலிருந்து வலங்கைமானுக்கு மாறி வந்தோம். திருவாரூரில் இருந்தவரை தீவிரமான கடவுள் பக்தி இருந்தது. என் பிள்ளையார் பக்தி பற்றி ஏற்கெனவே சுவருக்குள் சித்திரங்களில் எழுதியுள்ளேன். ஆனால் அப்போதே எனக்குள் சில கேள்விகள் எழத் தொடங்கியிருந்தன. கடவுள் உண்டா? இல்லையா? இந்த உலகம் எப்படி வந்தது? சூரியனிலிருந்து வந்தது என்றால் சூரியன் எங்கிருந்து வந்தது? என்பன போன்ற கேள்விகள் என்னை ஆட்டி அலைக்கழிக்கலாயின.

வலங்கைமான் வந்த பின் அந்த ஓராண்டுக் காலம்தான் என் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனைக் காலம். என் மனக் குழப்பங்களை அப்பா உணர்ந்திருந்ததால் மிகவும் கவலைப்பட்டார். என் நேரம் முழுக்க ஏதாவது படிப்பிலேயே கழிய வேண்டும் என்று நினைத்தார். என் இந்திக் கல்வியைத் தொடர இந்தி பண்டிட் ஒருவரிடம் தனிப் பயிற்சிக்கு அனுப்பினார். ஒரு மணி நேரம் சொல்லிக் கொடுப்பதை இரண்டு மணி நேரமாக மாற்றச் சொன்னார், அதற்கு இரட்டைக் கட்டணமும் கொடுப்பார்.

பிறகு தட்டச்சுப் பயிலகத்துக்கும் அனுப்பினார். ஒரே ஆண்டில் லோயர், ஹையர் இரண்டும் முடிக்க வைத்தார். அந்தப் பயிலகத்தில்தான் அமீர் ஜான் அவர்களைப் பார்த்தேன். என் வாழ்க்கையே புரண்டு விட்டது.

பயிலகச் சுவரில் அவ்வப்போது எழுதப்பட்டு வந்த குறள்களில் ஒன்று: "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு." யார் இதை எழுதி வைத்தது என்று கேட்டேன். அவர் ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் இங்கு வருவார், இந்த இடம் அவருடையதுதான் என்ற விடை கிடைத்தது. அவர் கூட்டுறவுத் துறையில் ஆய்வாளராக இருக்கிறார். ஞாயிற்றுக் கிழமையில் பார்க்கலாம் என்றார்கள்.

ஞாயிற்றுகிழமை எப்போது வரும் எனக் காத்திருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று விடிந்தவுடன் சென்று பார்த்து என்னை அவரிடம் அறிமுகம் செய்து கொண்டேன். என் எல்லாக் கேள்விகளுக்கும் அவரிடம் விடை இருந்தது. அந்தக் காலத்து கிரேக்க அறிஞர்களைப்போல் அவர் வாதிடுவதில் வல்லவர்.

நான் அவருக்குச் சீடன் ஆகிவிட்டேன் என்றுதான் சொல்ல வேண்டும். தோற்றம், உடை, உணவு, தலைவாருதல் என்று அவரைப்போலவே மாறலானேன். அவரைப் போலவே கதர் உடுத்தினேன். அவரைப்போலவே புலால் மறுப்பாளன் ஆனேன். என் அப்பாவுக்கு சந்தேகம்: ஏன் இங்கு வந்து இவன் இப்படி மாறிவிட்டான்? என்று.

கடவுள் இல்லை என்று பேசும் கூட்டங்களுக்கு அமீர் ஜானுடன் சேர்ந்து போகத் தொடங்கினேன். கும்பகோணத்தில் குத்தூசி குருசாமி, தி.பொ. வெங்கடாசலம், எம்.கே.டி. சுப்பிரமணியம் ஆகியோர் நடத்திய மாநாட்டுக்குப் போயிருந்தேன். தெருவெங்கும் சுவர்களில் "சக்தி உள்ள சாமிக்கு சாவியும் பூட்டும் ஏன்?" என்று எழுதப்பட்டிருந்தது. மெஸ்லியர் என்று ஒருவர் இருந்தார், பின்னாட்களில் சிறிவிக்குப் போய் ஸ்டாலின் ஆகிவிட்டார்.

மரத்துக்கடியில் இருக்கும் பிள்ளையார் சிலையைத் தூக்கிப்போய் மாமாங்குளத்தில் வீசி விடுவார். அந்த மரத்தில் துளைப்போட்டுப் பாதரசம் ஊற்றிக் கொஞ்சம் கொஞ்சமாகக் கருக வைத்து விடுவார். சாமிக்கு சக்தி இருந்தால் அந்த மரத்தைக் காப்பாற்றட்டும், பிள்ளையார் குளத்திலிருந்து எழுந்து வரட்டும் என்பார். இவை அனைத்தும் எனக்குப் பிடித்தமாய் இருந்தன. நாம் என்ன செய்வது என்ற கேள்விதான் மிச்சமிருந்தது.

## கல்லூரி வாழ்க்கை?

அப்பொழுது எனக்கு 15 வயது. 1965 நடுவில் குடந்தை அரசினர் கல்லூரியில் புதுமுக வகுப்பில் (PUC) சேர்ந்து விடுகிறேன். அதன் பின் அமீர்ஜானுடைய தொடர்பு கொஞ்சம் குறைகிறது, வீட்டிலிருந்து 6 மைல் இருக்கும் சைக்கிளில் போய் வரணும். சைக்கிள் இல்லாத போது பஸ்ஸில் போய் வருவேன். 1967 தேர்தல் வருகிறது, அப்பொழுது நான் பிஎஸ்சி முதல் ஆண்டில் இருக்கேன்னு நினைக்கிறேன்.

இடைக்காலங்களில் படம் பாப்பேன் சிவாஜி படங்கள் எல்லாம் விரும்பிப் பாக்குறது. "ஆறு மனமே ஆறு அந்த ஆண்டவன் கட்டளை ஆறு" என்றெல்லாம் சத்தம் போட்டுப் பாடுவதுண்டு, தெய்வத்தாய்—னு எம்ஜிஆர் படம் வந்துச்சே, அதில் "ஒரு பெண்ணைப் பார்த்து நிலவைப் பார்த்தேன் நிலவில் குளிர் இல்லை. அவள் கண்ணைப் பார்த்து மலரைப் பார்த்தேன் மலரில் ஒளி இல்லை" என்று பாடிக்கொண்டு வீட்டில் ஊஞ்சலில் உட்கார்ந்து ஆடிக்கிட்டிருக்கிறேன், பின்னால் இருந்து கேட்டுக்கிட்டே வந்த அப்பா என் அக்காவிடம் "அவன் என்னமோ பாத்தானாம்ல, பெண்ணப் பாத்தானாம், நிலவப் பாத்தானம்!" என்று சொல்ல, அம்மா "அவனுக்கு ஒன்னும் தெரியாது. நீங்களே எதுக்கு இதெல்லாம் பேசுறிங்க"ன்னு கண்டிக்கிறாங்க.

சில படங்களை மட்டும் விரும்பிப் பார்ப்பேன். சர்வர் சுந்தரம் மட்டும் ஐந்து முறை பார்த்தேன். சினிமா நுட்பங்களையெல்லாம் அழகாக் காட்டுவாங்க. திருவிளையாடல் பாத்திருக்கிறேன், எந்த வருடம்—னு தெரியல. காதலிக்க நேரமில்லை ஸ்ரீதர் படம் நகைச்சுவைக்காகப் பார்த்தேன். ஆனால் சினிமாவில் பெரிய ஆர்வமில்லை. அரசியல் ஈடுபாடுதான் வளர்ந்து கொண்டிருந்தது.

## முதல் அரசியல் மேடை? (அல்லது) அரசியல் பேச்சு?

67 தேர்தல் நெருங்குகிற நேரம், ஒரு தேர்தல் பிரச்சாரக் கூட்டம் வலங்கைமானில் நடக்கிறது. ஆவூர் மைதீனும் இன்னொருவரும், மைதீன் சகோதரர்கள் என்பார்கள். அவருடைய சித்தப்பாதான் பக்கீர் முகமது, வட்டாரக் காங்கிரஸ் தலைவர். மைதீன் சகோதரர்கள் பேசும் கூட்டத்தில் நான் போய் உட்காந்திருக்கிறேன். நான் மேடையில் பேசுவேன் என்பது எல்லோருக்கும் தெரியும், காமராஜரைப் பற்றிப் பேசுவேன், நாத்திகம் பேசுவேன், பொது மேடைகள், இலக்கிய மேடைகளில் பேசுவேன், பாரதியார் பற்றிப் பேசுவேன் என்பது அவர்களுக்குத் தெரியும். "நீ பேசுறியா" என்று என்னைக் கேட்டார்கள். எனக்கும் ஆசை வந்தது, பேசலாமே என்றேன். எனக்குப் பெரியார் பிடிக்கும். அண்ணா பேச்சு பிடிக்குமே தவிர, திமுக பிடிக்காது, பெரியார், காமராஜரை ஆதரித்தும் திமுகவைக் கடுமையாகச் சாடியும் பேசுவார். தி.மு.க—ன்னே சொல்லமாட்டார் கண்ணீர்த் துளிகள்—னுதான் சொல்வார். திராவிட எதிர்ப்பும் காமராஜ் மயக்கமும் என்னிடம் மிகுந்திருந்தன.

இந்த மனநிலையோடுதான் அந்தக் கூட்டத்தில் உட்கார்ந்திருந்தேன். "பேசுறியான்னு" கேட்டார்கள். "சரி பேசுறேங்க". பேசினால் பெரிய வரவேற்பு. எனக்கு முதல் அரசியல் மேடை என்றால் அதுதான். கங்கிரசுக்காக தேர்தல் பிரசாரம் செய்யத் தொடங்கி விட்டேன். உடனே, நாளைக்கு அடுத்தக் கூட்டத்துக்கு வா. அங்க போலாம், இங்க போலாம்—ன்னு அவர்கள் எனக்கு புரொக்ராம் போட ஆரம்பித்துவிட்டார்கள்.

## காங்கிரசுடனான தொடர்பு?

1967 தேர்தல் முடிந்த பின் காமராஜர் ஆசி பெற்று தஞ்சை இராமூர்த்தி தலைமையில் தேசிய மாணவர் தமிழ் வளர்ச்சிக் குழு என்று ஆரம்பித்தோம். முதல் மாநாடு சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் திடலில். 1967இல் அந்த மாநாட்டுக்காகத்தான் முதன்முதலாகச் சென்னைக்கு வந்தேன். வாழப்பாடி ராமூர்த்தி, தண்டாயுதபாணி, பசுபதி தனராஜ், ஜெகவீர பாண்டியன், ஸ்ரீதர் என்ற திருமாறன் இன்னும் பல மாணவர்கள் இருந்தார்கள். ஈவெகி சம்பத், கண்ணதாசன், தமிழ்வாணன், ஜெயகாந்தன், பாலதண்டாயுதம் இவர்கள் முக்கியப் பேச்சாளர்கள். காமராஜர் நடுநாயகமாகத் திண்டில் சாய்ந்து உட்கார்ந்திருப்பார். நானும் அத்தனைத் தலைவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிலையிலும் அந்தப் பெரும் கூட்டத்தில் மாலை 7 மணியளவில் பேசினேன்.

எனக்குத் தமிழ்வழிக் கல்வி பற்றி அமீர் ஜான் என்ன சொல்லிக் கொடுத்தாரோ, அதைப் பேசினேன், மொழிப்பற்று, சாதிப்பற்று, மதப்பற்று எதுவும் எனக்குக் கிடையாது என்றேன்.

"விழியல்ல எனக்கு மொழி, இரண்டு கால் செருப்பு போலத்தான். எங்கே போடவேண்டுமோ அங்கு போட்டுக் கோங்க, எங்கு கழற்ற வேண்டுமோ அங்கே கழட்டி வைங்க, நமக்கு என்ன வேண்டும்? தமிழ் இனத்திற்கு தமிழ் வேண்டும், தமிழ்வழிக் கல்வி வேண்டும். தமிழ்தான் நம்மை ஆள வேண்டும். இந்தியா நமக்கு வேண்டும். இந்தியாவிற்கு இந்தி வேண்டும். உலகம் மானுடமும் வேண்டும். அதற்கு ஆங்கிலம் வேண்டும்" என்று பேசினேன். பலருக்கும் அதிர்ச்சியான பேச்சு அது. பாலதண்டாயுதம் என்னிடம் "நல்லா துணிச்சலாப் பேசுறிங்க" என்றார்.

"துணிச்சல்லாம் இருக்கட்டும், உண்மையா இல்லையா, அதச் சொல்லுங்க" என்று பதிலளித்தேன்.

மாணவர்களை முன்னிறுத்தி மொழியுணர்வைத் தூண்டி திமுக வெற்றி பெற்றது. அதே மாணவர் களை வைத்து திமுக—வுக்கு பதிலடி கொடுக்க நினைத்தார் காமராசர். இப்படித்தான் தேசிய மாணவர் தமிழ் வளர்ச்சிக் குழு பிறந்தது. தேசியம் என்றால் இந்தியத் தேசியம். தமிழ்ப் பயிற்று மொழியை வலியுறுத்துவது, இந்தித் திணிப்பை எதிர்ப்பது. இதுமாதிரியான கொள்கைகளை வைத்துக் கொண்டு ஊர் ஊராக மாநாடு நடந்தது. பெரும்பாலான மாநாடுகளில் நானும் பேசினேன்.

**காங்கிரஸில் எவ்வளவு காலம் இயங்கினீர்கள்?**

அது ஒரு துடிப்பான வரலாறு, காங்கிரசுக் கட்சிக்குள் முனைப்புடன் செயல்பட்ட ஒன்றரை ஆண்டுகள், 1967இல் உள்ளே போகிறேன், 1968 முழுவதும் இருக்கிறேன், 1969 தொடக்கத்திலிருந்து உள்ளுக்குள் ஒரு போராட்டம் ஆரம்பிக்கிறது. 1969 செப்டம்பர் அல்லது அக்டோபரில் வெளியில் வந்துவிடுகிறேன்.

**மாணவர் காங்கிரஸ் பயிற்சி முகாமில் என்ன நடக்கிறது?**

பத்து நாள் என்று நினைக்கிறேன். காமராசர் முழுமையாக இருப்பார். மதியம் தூங்குகிற நேரம் தவிர எப்போதும் அங்கேயே எங்களோடுதான் இருப்பார். காலையில் ஒரு பிரமுகர், மாலையில் ஒரு பிரமுகர், காலையில் வடநாட்டு பிரமுகர், மாலையில் தமிழ்நாட்டு பிரமுகர் என்று வந்து பேசிக் கொண்டே இருப்பார்கள். சந்திரசேகர், மோகன்தாரியா, கிருஷ்ண மேனன் என்று பெரிய ஆட்கள். உரையாடவும் விவாதிக்கவும் நல்ல வாய்ப்பு, மற்றவர்களைவிட நான் இந்த வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு அரசியல் அறிவை வளர்த்துக் கொண்டேன். காங்கிரஸ் சோசலிசம் ஒரு பொய்மை என்பதில் தெளிவு பெற்றேன்.



அந்தக் கடைசி நாளில் ஒரு பட்டிமன்றம், சோசலிசத்தை அடைய எது வழி? நான் ஒரு அணிக்குத் தலைவர், பெரியகுளம் அன்பரசு என்று ஒரு மாணவர் இருந்தார், அவர் இன்னொரு அணிக்குத் தலைவர், கும்பகோணம் கல்லூரி மாணவர்கள் எப்போதும் என்னோடுதான் நிற்பார்கள், கும்பலிங்கம், அழகு சிவானந்தம் போன்றவர்கள். திருமாறன், பசுபதி தனராஜ், ஜெகவீர பாண்டியன் நாங்கள் எல்லோரும் ஒரு டீமாக இருப்போம். நான் ஆயுத வழியில் தான் சோசலிசத்த அடைய முடியும் என்று பேசினேன். அது என்னுடைய தலைப்பு.

அகிம்சை வழியில்தான் சோசலிசம் —— அது எதிர்த்தரப்பின் தலைப்பு. நான் முதலிலும் பேசுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுத்தும் பேசுவேன், அவரும் முதலிலும் பேசுவார் தொகுத்தும் பேசுவார். காமராஜர் நேரடியாக வந்து உட்கார்ந்திருக்கிறார்.

“அகிம்சை வழியில ஏன் முடியாது, நம்ம சுதந்திரம் பெறலயா?” இப்படியென்று கேட்கிறார் அன்பரசு. நான் அதற்குப் பதில் சொல்கிறேன்.

“அகிம்சை வழியில்தான் பெற்றோம் என்றால், இதுதான் சுதந்திரம் என்றால், அதைப் பெற்றோம் என்று எப்படி சொல்றது, அகிம்சை வழியில் பெற்றது வெறும் அதிகாரம் மட்டும்தான்.

இந்தியாவுலதான் காந்தியும் அகிம்சையும் சுதந்திரத்தைப் பெற்றுத்தந்தன என்றால், ஆப்பிரிக்க நாடுகளில் எந்த காந்தி பெற்றுத் தந்தார்? அன்னைக்கு இருந்த சூழ்நிலையில் எல்லா நாடுகளும் அப்படி விடுதலை பெற்றன. காக்காய் உட்காரப் பனம்பழம் விழுந்ததுபோல காந்தியின் போராட்டம் சுதந்திரத்துக்கு வழிசெய்து விட்டது. அப்ப சொல்லுங்க இலங்கையில எந்த காந்தி விடுதல வாங்கிக் கொடுத்தாரு? பர்மாவுல எந்த காந்தி வாங்கிக் கொடுத்தாரு. ஒவ்வொரு நாடாகச் சொல்லலாம், ஆப்பிரிக்க நாடுகள், லத்தீன் அமெரிக்க நாடுகள், எல்லாம் விடுதலை பெற்றிருக்குல்ல, அப்ப இந்தியாவுல காந்தி இல்லைன்னா வந்திருக்காதா? பின்ன. இந்தப் போராட்டத்துல நேதாஜிக்கு என்ன பங்கு?”

கடைசியாக முடித்துப் பேசும்போது, அன்பரசு சொன்னார்: பெருந்தலைவர் காமராசரின் எதிரிலேயே, மகாத்மா காந்தியைப் பழித்துப் பேசும் துணிச்சல் எங்கிருந்து வந்தது? காந்தியையும் காந்தியத்தையும் பழித்தால் நான் பொறுக்கமாட்டேன். குடலை உருவி மாலையாகப் போடுவேன்.”

நான் சிரித்துக்கொண்டே எழுந்து. என் நிறைவுரையில் சொன்னேன்: “இப்ப அன்பரசு பேசுனத கேட்டுருப்பிங்க, சோசலிசத்தை அடைய என்ன வழிங்கறது ஒரு கருத்து விவாதம்தான், இது சரியா அது சரியான்னு பாக்குறதுக்கு நாம விவாதிக்கிறோம், இத்தனையும் பெருந்தலைவருக்கு எதிரிலேயேதான் வச்சுப் பேசுறோம், இதுல எது சரியில்லங்கிறத விவாதிச்சே முடிவு பண்ணிக்கிடலாம். இதற்கே அவருக்குக் குடலை உருவி மாலையாகப்போடும் அளவிற்கு வன்முறை தேவைப்படுகிறது என்றால் சமூக மாற்றத்திற்கு வன்முறை இருந்தா என்ன குற்றம்?”

காமராஜர் மகிழ்ந்து போனார்: “அப்டி சொல்லுங் கன்னேன், அப்டி சொல்லுங்கன்னேன்.”

ஆனால் அவரை நம்பும் நிலையை நான் எப்போதோ கடந்துவிட்டிருந்தேன்.

**காமராஜரைக் கடைசியாக எப்போது பார்க்கிறீர்கள்?**

கொள்ளிடக்கரையில் நாயகனைப் பிரியாள் என்றொரு சிற்றூர். அங்குதான் அவரைக் கடைசியாகப் பார்த்தேன். கிட்டத்தட்ட அப்பொழுதே முடிவுக்கு வந்திருந்தேன். என்னுடன் சம்பத் என்று இன்னொரு மாணவர் இருந்தார். காமராஜர் எங்கிருந்தோ வருகிறார். “நீங்க பரிசல்ல வந்தீங்களா? ஆத்துல இறங்கி வந்தீங்களா? தண்ணி எவ்வளவு போகுது? அணைக்கரை போய் சுத்திட்டு வந்திங்களா?“ அந்த ரூட்டெல்லாம் தெளிவாகத் தெரிந்து கேட்கிறார், நாங்கள் இந்த கரையில் கொள்ளிடக்கரை வரைக்கும் போய், கொள்ளிடத்தைக் கடக்க வேண்டியதுதான், பரிசலில் அந்தப் பக்கம் போனால் ஊர் வந்து விடும், பரிசலில் போகவேண்டும், இல்லை என்றால் ஆற்றில் தண்ணீர் குறைவாக இருந்ததென்றால்,இறங்கி நடக்கலாம். அப்போது இதையெல்லாம் விசாரிக்கிறார், விசாரித்து விட்டுக் கூட்டம் ஆரம்பிக்கிறது. ஊராட்சியில் தண்ணீர்த் தொட்டி திறக்கிறார்கள், திறந்த பின் அவர் இன்னொரு ஊருக்கும் போக வேண்டும். காமராஜர் பேசி முடித்துவிட்டுப் புறப்பட வேண்டும், கூட்டத்தைப் பார்த்துச் சொன்னார்:

“நம்முடைய நண்பர்கள் தியாகு, சம்பத் பேச வந்திருக்கிறார்கள், நல்லா பேசுவாங்கன்னே, அவங்க பேச்சக் கேட்டுட்டுப் போகனும், யாரும் களையக் கூடாது, நான் அடுத்த ஊருக்குப் போக வேண்டிருக்கு, நான் போறப்ப நீங்க எழுந்திருச்சு வரக் கூடாதுங்கறேன்.”

அப்படியென்று சொல்லிவிட்டு, காரில் ஏறிப் புறப்பட்டார், கூட்டமே எழுந்தது. பின்னால் திரும்பிப் பார்த்தார் கூட்டம் நின்று விட்டது, நாங்கள் இரண்டு பேரும் மேடையில் உட்கார்ந்திருக்கிறோம், கதவைச் சாத்திவிட்டு, மேடைக்கே திரும்பி வந்து விட்டார்.

“நீங்க பேசுங்கன்னேன், நான் கேக்குறேன்னேன்”

கூட்டம் திரும்பிவந்து உட்கார்ந்தது, காமராஜர் மைக்கை வாங்கினார்,

“எதுக்கு வந்திங்கன்னே? கேட்டாச்சுல்ல என் பேச்சு. போலாங்கறேன். அவங்க பேசுறத கேளுங்கன்னு சொன்னேன், கேட்டீங்களா? இப்ப நீங்க எல்லாரும் போயிருங்க, நான் கேக்குறேன், அவங்க பேசுவாங்க”

ஜனங்கள் அப்டியே அமைதியாகிவிட்டார்கள்.

அப்பறம் ஊர்ப் பெரியவர்கள் வந்து சொன்னார்கள். “ஐயா, அவங்க யாரும் எந்திரிக்க மாட்டாங்க, தம்பிங்க பேசட்டும்”

“நீங்களே என்னோட வரக்கூடாதுன்னேன், நான் போறன்னேன்.”

கூட்டம் அப்டியே உட்கார்ந்து எங்கள் உரை கேட்டது. அவர் புறப்பட்டுப் போய் விட்டார், அதுதான் நான் கடைசியாக அவரைப் பிரிந்த இடம்: நாயகனைப் பிரியாள்.

**கல்லூரி வாழ்வு என்னானது?**

போதுமான வருகைப் பதிவு இல்லை, நான்காம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டும் கல்லூரி செல்ல வேண்டிய சூழல், இயற்பியல் துறையில் SOCIAL BREAK-UP நடக்கிறது, அதில் கலந்து கொண்டு கவிதை படிக்கப் போகிறேன்.

SOCIAL BREAKUP-ன்றது GETTOGETHER மாதிரி, எல்லாரும் பணம் போட்டு நடத்துவோம், AUTOGRAPH எல்லாம் வாங்குவோம், சந்தோசமாக ஒருநாள் செலவிடுவோம்.

PROFESSOR தவிர மற்ற எல்லா ஆசிரியர்களும், நான் கலந்துக்கிறேன் என்பதற்காகப் புறக்கணித்து விட்டார்கள்,

**ஒரு வாழ்க்கையை தேர்ந்தெடுக்கிறோம் என்றால், அதை எப்பொழுது தேர்ந்தெடுத்தாலும், சிறைக்கு செல்ல நேரிடும், சிறையிலேயே நீண்டநாள் கழிக்க வேண்டியிருக்கும், சிறையிலேயே நாம் இறந்து போகவும் நேரிடலாம் என்ற ஒரு தெளிவு இருக்கவேண்டும்.**

**மற்ற ஆசிரியர்கள் வராததுக்கு காரணம் நீங்க கலந்துக்கிட்டது தானா?**

ஆமாம். நான் பேசுகிறேன். போராட்டங்கள் பண்ணுகிறேன். எனக்கும் அந்த DEPARTMENT—ட்டிற்கும் என்ன சம்பந்தம் இருக்கு? பார்ட்டிக்கு மட்டும்தானே வருகிறேன். அதில் கவிதை வேறு படிக்கிறேன்.

**கவிதை ஞாபகம் இல்லையா தோழர்?**

ம்ம், ஒரு சில வரிகள் மட்டும் நினைவிருக்கிறது,

“எல்லோரும் செல்லுகின்றீர்,

என்னை விட்டுச் செல்லுகின்றீர்,

சொல்லி விட்டுச் செல்லும் உம்மை

சிறையினிலே பூட்டிவிட்டேன்,

உள்ளபடி சொல்லுகின்றேன்,

உம்மையெல்லாம் என்

உள்ளச் சிறையினிலே பூட்டிவிட்டேன்.”

அப்போதே கவிதையில் வரிசையாக சிறைதான் வந்துகொண்டு இருக்கிறது

**ஏ.எம்.கே.வை எப்பொழுது சந்திக்கிறீர்கள்?**

திடீரென்று ஒருநாள் ஏ.எம்.கே வருகிறார்.

**அப்ப தான் முதல் தடவை பாக்குறீங்க?**

முதல் முறை அப்போதுதான் பார்க்கிறேன்.

கும்பகோணத்துக்கு வருகிறார். பேராசிரியர் வீட்டிற்கே வருகிறார், அப்போது நாங்கள் மாடியில் உட்கார்ந்திருக்றோம், இயக்கத் தோழர்களை யெல்லாம் வரவழைத்திருக்கிறோம். எங்களுக்கு ஒரு வகுப்பு இரவு முழுவதும் எடுக்கிறார், “ANNIHILATIONதான் புரட்சி, உடனடிப் புரட்சி, ANNIHILATION தான் வழி, இதெல்லாம் சரியா இருக்குமா? ANNIHILATIONலாம் சரியா வருமா” அப்டியென்று சந்தேகம் எங்களுக்கெல்லாம் வந்தது, அப்போது சாரு மஜூம்தார் லெனினுடைய ஒரு கட்டுரையைக் காட்டி எங்களை CONVINCE பண்ணினார். மாஸ்கோ எழுச்சி ON THE MOSCOW UPRISING என்று ஒரு கட்டுரை, ஏஎம்கே இந்தக் கட்டுரையைப் படித்துக்காட்டி எங்களுக்கு விளக்கிச் சொல்கிறார்.

**எப்ப வீட்டிலிருந்து முழுமையா விடுபட்டு நக்சலைட் தலைமறைவு வாழ்க்கைக்குப் போறீங்க? வீட்டுல யாரெல்லாம் இருந்தாங்க தோழர்?**

அப்பா அம்மா இருக்கிறார்கள், தம்பி தங்கைகள்.

**அவங்கள்ட்டையெல்லாம் நீங்க விடைபெறணும்னு உங்களுக்குத் தோணலயா? சொல்லிட்டு போகணும்னு?**

அதெல்லாம் ஒன்றும் இல்லை, அந்த மாதிரியான SENTIMENTS என்பதே கிடையாது,

**மனசுக்கு ரொம்ப துக்கமா இருந்துச்சா?**

அதெல்லாம் ஒன்றுமில்லை, மனசுல மகிழ்ச்சிதான் இருந்துச்சு. இப்போ புரட்சிக்குப்போகிறோம், அவ்வளவுதான், வேறெதுவுமில்ல, வருத்தமாவோ துக்கமாவோ இல்ல.

**அப்பாவிடம் இருந்து தப்பி எப்படித் தலைமறைவு வாழ்க்கைக்குப் போனீர்கள்?**

ஒரு முடிவோட கிளம்பும்போது அப்பாவிடம் வசமாக மாட்டிக்கொண்டேன். அன்றைக்கு அவர் என் கையை மட்டும் பிடித்தபடி, நேராகக் கூப்பிட்டுக் கொண்டுப் போனார், கும்பகோணம் பஸ் வந்தது, ஏறி பஸ்ஸில் உட்காரும் போதும் பிடியை விடவில்லை, வேறு எதுவும் பேசவில்லை, பஸ்டான்டில் போய் ‘எப்படிடா இவர விட்டுத் தப்பிக்கிறது’ என்று யோசிக்கிறேன், பஸ் ஸ்டான்டில் போய் இறங்கிய பிறகு, “என் FRIEND பாலு இருக்கான், (திருப்பூண்டி பாலுன்னு, இப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகப்பட்டினத்துல வக்கிலா இருக்காரு, நாங்கெல்லாம் நெருங்கிய நண்பர்கள், அவரதான் கன்வீனர் பாலுன்னு கூப்பிடுவோம், மாணவர் காங்கிரசின் LOCAL CONVENOR அவ்வளவுதான், (கும்பகோணம் கல்லூரியில) அவன் ரூம்ல ரெக்கார்ட் நோட்டு இருக்குது, நான் போயி எடுத்துட்டு வந்துர்றேன்" என்று சொன்னேன்,

"நானும் வர்றேன்" என்றார்.

பிறகு பஸ் ஸ்டான்டில் சைக்கிள் எடுத்துக் கொள்வோம், அவருக்கு யாரைத் தெரியும்? எனக்கு எல்லோரையும் தெரியும், நான் போனேன், இரண்டு சைக்கிள் எடுத்தேன், போகும் போது என்ன சொல்லி விட்டார் என்றால், "நீ போயி எடுத்துக்கிட்டு வந்திடு, நான் காலேஜ்ல போயி, உங்க ஆசிரியர் கூட, PRACTICAL—க்கு INCHARGE ஒருத்தர் இருப்பாரு, அவரோட, உக்காந்து பேசிக்கிட்டு இருக்குறேன்" என்று சொல்லி விட்டு, சைக்கிளில் நான் ஒருபக்கம் அவர் ஒருபக்கம் போய் விட்டோம், அதுதான் கடைசியாக அவரை பார்த்தது.

**மறுபடியும் உங்க அப்பாவ எத்தன வருசம் கழிச்சு பாக்குறீங்க?**



*1969—க்குப் பிறகு 1982இல் சந்திக்கிறேன்.*

**அதாவது பதிமூணு வருசங்களுக்குப் பிறகு, பரோல்ல வந்த்தப்ப?**

ஆமா.

**ஈழ எழுத்தாளர் செ. கணேசலிங்கன் உங்கள் தலைமறைவு வாழ்க்கைக் காலத்தில், அந்தப் பகுதிக்கு வருகிறாரல்லவா?**

அப்போதெல்லாம் கனேசலிங்கன், கைலாசபதி என்றால் மிகவும் பிரபலமான தமிழ்ப் பெயர்கள், போர்க்கோலம், செவ்வானம், அவர் எழுதிய நாவல்கள், மண்ணும் மக்களும், இந்தப் பெயர்தான் ஞாபகம் வராமல் இருந்தது. இந்த மண்ணும் மக்களும் நாவலில் நானே ஒரு கதாபாத்திரம்.

**அந்த நாவல்ல நீங்க பாட்டெடெல்லாம் பாடுவீங்களே, நீங்க படிச்சதில்லையா தோழர்?**

அதை நான் இன்னும் படித்ததே இல்லை. சொல்லுவார்கள். ஏஎம்கே—வும் நானும் அதில் கதாபாத்திரம் என்று சொன்னார்கள்,

அவர் அப்போது எதற்கு வருகிறார் என்றால், கிராமப்புறங்களில், சேரியில் மக்களுடைய வாழ்க்கை அதெல்லாம் தெரிந்துகொள்வது, அவருடைய கதைக்கான கருப்பொருள்.

வருகிறார், எங்களுக்குத் தகவல் கொடுக்கிறார்கள், இந்த மாதிரி ஒருவர் வருகிறார் என்று.

ஏ.எம்.கே மூலமா அவரு பெரும்பண்ணையூருக்கு அனுப்பி விடுறாரு, எங்களோட ஒரு ரெண்டு மூணு நாள் இருந்தாரு. பெரும்பண்ணையூர்ல இருந்தாரு, அப்பறம் எண்கண். நடிகை E.V. சரோஜாவுடைய ஊரு இருக்குப் பாருங்க, அங்கயும் வந்தாரு.

இவரக் கூட்டிட்டு போறோம், சரி இவரு வந்திருக்குற நேரம் பசி பஞ்சம்னு ஆயிடக் கூடாதேன்னு, எப்படியோ காசு சேர்த்து அவரக் கவனிச்சுகிட்டோம். அங்க அவரு எல்லாம் எங்களோடதான் உக்காந்து சாப்பிடுவாரு, எங்களோடதான் படுத்திருப்பாரு, இவ்வளவுக்கு நல்லா பேன்ட் சட்டையெல்லாம் போட்டு வந்திருந்தாரு, நெடுநெடுன்னு உயரமா இருப்பாரு.

அவரு என்ன கூர்மையா பாத்தாருன்னா, நீண்ட காலம் கம்யூனிஸ்ட் இயக்கத்திலிருக்கிற ஊர்கள் இதெல்லாம், எல்லாம் செங்கொடியத்தான் நேசிக்கிறாங்க, அங்க சேரியில வேற கட்சியில்ல கொடியில்ல, ஆனா அங்க குழந்தைக்கு வச்சிருக்கிற பேரெல்லாம் விசாரிப்பாரு, எம்ஜிஆர்—னு ஒரு பேர், சரோஜாதேவினு பேரு இருக்கு, மக்கள்ட்ட அந்தளவுக்கு சினிமா ஈர்ப்பு நிறைய இருந்துச்சு.

**வெண்மணிக்குப் போனிங்களா தோழர், கோபாலகிருஷ்ண நாயுடுவை ANNIHILATION பண்ண முயற்சி செஞ்சீங்களா?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனோம். இந்த ஊர்ல இருந்து குட்டாரு, கலியமூர்த்தி, மாரிமுத்து இப்படி ஐந்தாறு இளைஞர்களக் கூப்பிட்டுக்கிட்டு அறுவடை வேலை செய்யிற மாதிரி போனோம்.

அங்க போயி கண்காணிச்சுக் கண்டுபுடிச்சிட்டு வரனும், ஏன்னா அதுதான் முதல் ANNIHILATIONனா இருக்கணும்னு நான் விரும்புறேன், அதுக்காகத் தான் வந்திருக்கோம் நாம, அப்டிண்ணே சொல்றேன்.

ஆமா, ஊர் பக்கத்துல மேல வெண்மனி, கீழ வெண் மனி, இங்க எல்லாம் பேசுறோம், ஊர் மக்கள்ட்ட பேசு றோம், சம்பவம் நடந்த இடத்த முழுசாப் பாக்குறோம்.

தென்னைமரத்துல தோட்டாக்கள் துளைத்திருக்கு, துவாரங்கள் புள்ளி புள்ளியா இருக்கு, அதெல்லாம் பாக்குறோம்.

இந்த எல்லா விவரங்களையும் சேகரிச்சோம், ரெண்டு ரூட் இருக்கு, தேவூருக்கும் வெண்மணிக்கும், ஒரு பக்கமா போனா இன்னொரு பக்கமா திரும்பி வருவான். ரெண்டு காரு வச்சிருக்கிறான், கால்ல ஒரு கட்டை விரலு முழுசா இருக்காது, இவ்வளவு தகவல்கள் மக்கள்ட்ட இருந்து நாங்க சேகரிக்கிறோம்.

இரிஞ்சூர்ல அவன் வீடு ரொம்பப் பெரிசு. அலங்கம் மாதிரினு சொல்லுவாங்க, அலங்கம்னா தெரியும்ல? இப்ப நம்ம தஞ்சாவூர்ல தெற்கு அலங்கம், வடக்கு அலங்கம்னு இருக்கு அலங்கம்னா பெரிய வீதின்னு அர்த்தம், ஒரு ரோடு போட்டு ரெண்டு பக்கமும் அறை கட்டியிருந்தோம்னா எப்டியிருக்குமோ அந்த மாதிரி இருக்கும், இடையில இடையில திறந்த முற்றம் இருக்கும்.

அந்த மாதிரி அவன் வீடு ஒரு பெரிய அலங்கம் மாதிரி. பெரிய திண்ணை இருக்கும், உள்ள தொலைவுல அவன் உட்கார்ந்திருக்கறத நாங்கப் பாக்குறோம், தொலைவில இருந்துப் பாக்குறோம், அப்ப என்ன பண்ணலாம், போயிட்டு நல்ல தயாரிப்புகளோட வந்துருவோம், அவன் வெளிய வர்ற நேரம் பாத்தோ எப்டியோ தீத்துறணும், முடிக்கணும், எப்டியாவது முடிக்கணும்.

எனக்கு ரொம்ப அவசரம், இப்ப விட்டா நீங்க உள்ள போயி குத்தச் சொன்னா குத்திருவேன், அந்தளவுக்கு அவசரத்துல இருக்கேன், இல்ல தம்பி நாம எல்லாரும் சேர்ந்து வருவோம், தோழர், வாங்க போவோம்னுட்டு, ஊருக்கு அழைச்சிட்டு போயிட்டாங்க,

நான் *1969* செப்டம்பர்—லதான் அங்க போறேன், அப்ப ஏ.எம்.கே வர்றாரு வெண்மனிக்கு நீங்க இப்ப போக முடியாது, YOU NEED STRENGTH, அந்த STRENGTH எங்க கிடைக்கும்னா, ஒரு மூணு நாலு ANNIHILATION முடிங்க, எல்லா SQUADஐயும் ஒன்னு சேருங்க, அவங்களோட போயி நீங்க நடத்துங்க, அது வரைக்கும் இந்த முயற்சிய விட்டுடுங்கனுட்டாரு ஏ.எம்.கே.

**உங்களுடைய சிறை வாழ்க்கைப் பற்றி?**

புரட்சித்தன்மையுள்ள ஒரு வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கிறோம் என்றால், அதை எப்பொழுது தேர்ந்தெடுத்தாலும், சிறைக்குச் செல்ல நேரிடும், சிறை—யிலேயே நீண்டநாள் கழிக்க வேண்டியிருக்கும், சிறை—யிலேயே நாம் இறந்து போகவும் நேரிடலாம் என்ற ஒரு தெளிவு இருக்கவேண்டும். இப்போது எனக்கு அந்த தெளிவு உண்டு. அப்போது அந்த தெளிவு எனக்கில்லை.

சிறைக்குப் போய்விடுவோம் என்கிற வாய்ப்பையே நாம் எதிர்பார்க்க வில்லை. நம்முடைய யோசனைகள் எல்லாமே, புரட்சியை நாம் தொடங்கிவிட்டோம், புரட்சியை நடத்தி வெற்றிபெற போகிறோம் என்பது மட்டும் தான். அதனுடையை பகுதியாக நாம் சிறைக்கு போகவேண்டிய அவசியம் இருக்கும் என்கிற ஒரு சிந்தனையே இல்லை. ஒரே ஒரு துணிவு தான் இருக்கிறது, நாம் எல்லாவற்றிற்கும் தயாராக இருக்கிறோம், மற்றபடி சிறையை எதிர்பார்த்துப் போகவில்லை. அங்கு போனபின்பு அதற்குப் பக்குவப்படுத்திக்கொண்டோம்.

ஒரு முழுநேர புரட்சிக்காரனுக்கு, வாழ்க்கையே புரட்சிதான் என்று ஏற்றுக்கொண்டவனுக்குச் சிறைக்குச் செல்வது என்பது, அவன் பணிசெய்யும் அரங்கத்தின் ஒரு மாற்றம் என்பதாக இருக்க வேண்டும். இந்தத் தெளிவு தோழர் எ.ஜி.கே—விற்கு இருந்தது, அவரிடமிருந்து தான் எங்களுக்கு வந்தது. வெளியில் நான் என்ன செய்து கொண்டிருந்தேனோ, அதை சிறை அரங்கத்திலிருந்துத் தொடரப்போகிறேன். வெளியில் எந்த மக்கள் இருக்கிறார்களோ அதே மக்கள் தான் நமக்குச் சிறைக்கு உள்ளேயும் இருக்கிறார்கள் என்கிற கோணத்தில் அணுகினோம்.

ஒரு அரசியல் நோக்கத்திற்காக சிறைபடுகிறபோது, சிறையில் எப்படி தொடர்ந்து அந்த அரசியல் நோக்கத்தை கடைபிடிக்கப் போகிறோம் என்பது மற்றொன்று. அதில் சிறையை தனித்துன்பமாக ஏற்க இடமில்லை. புரட்சி வெற்றிபெற போகிறது. புரட்சிக்காக நாம் உழைக்கின்றோம் என்கின்ற தெளிவு. ஆனால் இந்த சிறைப்படுதலுக்குப் பின் வெளியிலிருக்கும் தோழர்களுக்கு நாங்கள் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை வெளிப்படுத்த, நாங்கள் சில போராட்டங்கள், உண்ணாவிரதங்கள் செய்வதின் வழியாகத் தோழர்களுக்கு செய்தியாகக் கொண்டு சேர்த்தோம். அதன் மூலம் அவர்கள் ஊக்கமாக செயல்படுவார்கள் என்கின்ற ஒரு கோணம் இருந்தது.

ஆனால் புரட்சிக்கு இந்த அணுகுமுறை மட்டும் போதாது என்பது பின்னாளில் நமக்குப் புரிகிறது. அது எ.ஜி.கே—வுடனான விவாதம், எங்களுக்குள்ளான விவாதம், புத்தகங்கள் வாசிப்புதான் காரணம். லெனினுடைய புத்தகங்கள்தான் நம்மில் மேலும் தலையெடுக்கிறது. புரட்சி என்பது காலவரையறைகளுக்கு அப்பாற்பட்டது என்பதை உணர்த்துகிறார். இவ்வளவு காலத்திற்குள் புரட்சி வெற்றிபெறும் என்பது வெறும் வாய்ச்சொல் என்று கடுமையாகச் சாடுகிறார். அப்படி யாக இதன்மேல் கேள்வி கேட்க ஆரம்பித்து, மற்றுமொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணத்திலும் இந்தச் சிறை வாழ்க்கைப் பயணிக்கிறது.

இந்தப் புரிதல் வளர வளர, நம் அரசியலுக்காக வந்திருக்கிறோம், நாம் ஒரு புரட்சிக்காரன், நம்மை இந்த அரசு அப்படித்தான் அணுகவேண்டும், இது நமக்கான மரியாதை இல்லை, இந்த இயக்கத்திற்கான மரியாதை. அதுபோல் புத்தகங்கள் கொடுப்பது, நமக்கான குறைந்தபட்ச வசதிகளை செய்து கொடுக்கச் சொல்லி கேட்பது போன்றவற்றின் வழியாக நடத்தப்படும் போராட்டங்கள், அதன் வழியாக சிறை அதிகாரிகளால் ஏற்படும் கொடிய தாக்குதல்கள் போன்றவற்றிற்கு வழி செய்கிறது. அதற்குப் பிறகு அந்த மக்களோடு கலப்பது, அவர்களோடு சேர்ந்து போராடுவது, இயக்க பணிகளை பற்றிய பார்வை இவை எல்லாம் மாறிப்போய்விடுகிறது.

கடைசி கட்டப் போராட்டத்தின்போது 1983இல் விடுதலை செய்துவிடுவார்களோ என்ற அச்சம் வந்து விட்டது, நம்மை இந்தப் போராட்டத்திலிருந்து பிரிப்பதற்காகவே விடுதலை செய்துவிடுமோ இந்த அரசு என்கிற தன்மைக்கு நாங்கள் போய்விட்டோம். மூலதனத்தை மொழிபெயர்க்கும் வரையாவது விடுதலை செய்யாமலிருக்க வேண்டும் என்கிற ஒரு அச்சம். மற்றவர்களுக்கு ஒவ்வொரு நிமிடமும் மணியாக, ஒவ்வொரு மணியும் ஒரு நாளாக, ஒரு நாள் ஒரு மாதமாக கழிகிற இடம் என்கிற ஒரு ஆஸ்கார் வைல்ட் கவிதை இருக்கிறது. ஆனால் எங்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒரு நிமிடமாக கழிந்து விடும்.

மற்றவர்கள் வியப்பாகக் கேட்பார்கள், நீங்கள் சிறையில் இருப்பதுபோல தெரியவில்லையே என்று. எ.ஜி.கே சொல்வதைப்போல, "நீ தான் சிறை—யிலிருக்கிறாய், தேசம் என்பது மதிகளால் சூழப்பட்ட ஒரு திறந்தவெளிச் சிறை, அதில் இருந்துகொண்டு நீ எனக்காக அனுதாபப்படுகிறாயா" என்பதைப்போல் எனது சிறை வாழ்க்கை இருந்தது.

**கேரளத்தில் C.P.M, மலையாளத்தில் மூலதனத்தை மொழி பெயர்க்க வேண்டும் என்று தீர்மானித்த பொழுது, ஒன்பது பேர் கொண்ட ஒரு குழுவை நியமித்து, அவர்களுக்கு இந்த பணிக்காக ஐந்து வருடம் கட்சியிலிருந்து விடுப்பு கொடுக்கப்பட்டது என்று சொல்வார்கள். நீங்கள் தனியொரு நபராக, சிறையில் அதை மொழிபெயர்க்கிறீர்கள் அந்த அனுபவத்தைப் பற்றி?**

1972இல் தூக்குத் தண்டனை கொடுக்கப்படுகிறது. அப்போது திருச்சி சிறையில், பழைய கண்டத்தில் இருக்கும் போது அக்காள் காந்தி அவர்கள் நேர்காணலுக்கு வருவார்கள். அப்போது அவர்கள் என் தாய்மாவின் வீட்டில் சென்னையில் இருக்கிறார்கள். அடிக்கடி அங்கிருந்து வருவார்கள். என் மாமா ராமநாதன் அவர் ஒரு திராவிட இயக்க பற்றாளார். அப்படியான பின்னனியில், அக்கா ஒருமுறை அங்கிருந்து வரும் பொழுது, மாமா NCBH—ல் குறைந்த விலைக்குப் புத்தகங்கள் கிடைக்குமிடத்திற்குப் போய், அதில் இந்தக் கேப்பிட்டல் வால்யூம்ஸ் வாங்குகிறார். அந்தப் புத்தகங்களைக் கொண்டுவந்து "நீ படிப்ப—னு சொல்லி மாமா உங்கிட்டக் கொடுக்கச் சொன்னாரு" என்று சொல்லி அக்கா என்னிடம் கொடுக்கிறார்.

வந்தவுடனேயே "ஏய் படி தியாகராஜா, மார்க்ஸோட மூலதனம் வந்திருக்கு கேப்பிட்டல், தேடி வந்திருக்கு பாரு படி," என்று அதைப் படிக்கச் சொல்லி லெனின் ஊக்கப்படுத்துகிறார். நான் அதை படித்ததுமில்லை அதற்கு முன்னால் அதை பார்த்ததுமில்லை, அதை பார்த்தேன் " இது கொஞ்சம் கடினமா இருக்கு லெனின், பிறகு நம்ம படிப்போம், உனக்கும் படிச்சு சொல்றேன், இப்ப நமக்கு அந்த அவகாசம் இல்ல" என்று சொல்லி அதை ஒதுக்கிவைத்துவிட்டேன்.

உள்ளுக்குள் தத்துவ விவாதங்கள் நடக்கிறது, 1973இல் அது கடுமையாகத் தீவிரமடைகிறது. அதற்காக அவரை சிலவற்றைப் படிக்கவைப்பது, கையில் மொழிபெயர்ப்பு இல்லை என்றால் நான் மொழிபெயர்த்து படிக்க வைப்பேன். அதைப்பற்றிய விவாதம், கட்டுரைகள் எழுதுவது, அதை உள்ளேயே அறைகளுக்குள்ளேயே மாற்றி படிக்கச் சொல்வது போன்ற வேலைகள் நடந்துகொண்டிருக்கிறது. அது தான் "சிமிலுக்குள் ஒரு புயல் — THE STROM IN THE TEA CUP" அதை பற்றி விரிவாக "சுவருக்குள் சித்திரங்கள்" புத்தகத்தில் பின்னாளில் எழுதியிருக்கிறேன்.

அந்த வேலைகளிலில் ஈடுபட்டிருக்கும் போது, லெனின் சொல்கிறார். "இல்ல தியாகராஜா, நம்மள தூக்குல போட்டுறப் போறாங்க, அதுக்கு முன்னால எதாவதும் சாதிக்கனும்னா கேப்பிட்டல மொழிபெயர்க்கலாம், இதுதான் நல்ல வழி. நீ சொல்லு நான் எழுதுறேன்" என்கிறார். அவர் தமிழ் எழுத்துக்களை மணிமணியாகத் திருத்தமாக எழுதுவார். "அதனால நீ சீக்கிரம் முயற்சி பன்னு நான் எழுதுறேன்" என்று முயற்சி பன்னிக்கொண்டே இருந்தார். "உள்ள முழுசா படிச்சு புரிந்துகொண்டு, அத உனக்கும் புரியவச்சு, அப்பறம் தான் அத செய்ய முடியும், அதனால படிப்போம்" என்று சொல்லி ஒதுக்கி வைத்திருந்தோம். அப்போதும் ஒன்றும் செய்யவில்லை. பிறகு அதைத்தான் "சாவதற்குள் ஒரு சாதனை" என்று சொல்லித் திட்டமிட்டோம்.

1974இல் தண்டனை குறைப்பு, மே மாதம் போராட்டம் தொடங்கிவிடுகிறது. செப்டம்பர் 25 பாலகிருஷ்ணன் தூக்கு. பிறகு மீண்டும் ஒரு போராட்டம், மீண்டும் ஒரு அடக்குமுறை எல்லாம் நடந்து 1974 கடைசி, எ.எம்.கே வருகைக்காக நாங்கள் காத்திருக்கிறோம். அதேபோல் தண்டனை பட்டு வருகிறார். அப்போது அவருடன் விவாதிக்கிறோம். அப்போது ஆங்கில நாளிதழை தோழர்களுக்குப் படித்து காண்பிக்கச் சொல்வார், அதை தமிழிலேயே வாசிப்பேன். அவர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள். நான் ஆங்கில நாளிதழை தமிழில் படிப்பேன் என்று.

பிறகு அவர் சொல்கிறார். நமக்குள் நிறைய வேறு பட்டுவிட்டோம், நீங்கள் அடிப்படையையே கேள்விக்கு உள்ளாக்குகிறீர்கள். அதனால் நாம் அரசியல் விஷயங்களை விட்டுவிடுவோம். சிறைக்குள்ளிருந்து என்னென்ன சேர்ந்து செயல்பட முடியும் என்று பார்ப்போம் என்று. நான் எ.ஜி.கே—வின் லைன் அடிப்படையில், அவருக்கு ஒரு கடிதமாக எழுதுகிறேன். மற்ற தோழர்கள் என்னோடு பேசுவதையே விரும்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுக்கிறார்கள். அந்த கடிதத்தில் சிறைக்குள் அமைப்பு கட்டுதல், மக்களைத் திரட்டுதல், கோரிக்கை பட்டியல், அரசியல் பணி இதையெல்லாம் நான் கொடுக்கிறேன். அவருக்கு அதில் உடண்பாடு இல்லை. இது சிறையில் சாத்தியமில்லை. பிரச்சினைகள் முன்னுக்கு வரும் போது போராடவேண்டியது தான். மற்றபடி உங்களுக்கு நம்பிக்கையிருந்தால் நீங்கள் செய்யுங்கள். நாம் இதில் கூட்டாக செயல்பட முடியாது என்று சொல்லிவிடுகிறார். பிறகு நான் சொல்கிறேன். கேப்பிட்டலை மொழி பெயர்க்கலாம் என்று ஒரு யோசனை உண்டு, அதை கையிலேயே வைத்திருக்கிறேன். அவ்வப்போது படித்துக் கொண்டிருக்கிறேன். இதை நாம் இருவரும் சேர்ந்து செய்யலாமே என்று கேட்டேன். அவர் ஆங்கிலத்தில் நல்ல புலமை பெற்றவர். அப்போது சொல்கிறார். இதற்கு ஆங்கிலமும் தெரிந்திருக்க வேண்டும், தமிழும் தெரிந்திருக்க வேண்டும், அது உங்களுக்கு நன்றாக வருகிறது, நீங்கள் செய்யுங்கள். இதை நீங்கள் செய்யவில்லை என்றால் யாரும் செய்யப்போவதில்லை என்று சொல்கிறார்.

அப்போது 1975 ஜனவரியில் பழைய கண்டத்தில் என்னையும், லெனினையும் அடைத்துவிடுகிறார்கள், நெருக்கடி நிலை பிரகடணம், அந்த ஆண்டில் அதில் ஒரு பெரும் பகுதியை படித்து லெனினுக்குப் புரியவைத்து, குளிப்பது, கழிவறை நேரம் போன்ற நேரங்களில் வெளியிலிருந்து அல்லது உள்ளிருந்து வாசித்து அதை புரிந்துகொள்ள வைப்பது போன்று எல்லா நேரத்தையும் முழுமையாகப் பயன்படுத்தி ஒன்றறை வருடத்தில் அதை எழுதிவிட்டோம். பிறகு அதை திருத்தி பிரதியெடுக்கும் வேலை. 1976இல் எங்களுக்குப் பழைய கண்டத்திலிருந்து கொஞ்சம் தளர்வுகள் கிடைத்தது. பிறகு ஒருவழியாக முடித்து அதை வெளியில் அனுப்பி, தெரிந்துகொண்டு மேலும் வேலையைத் தொடங்கலாம் என்று காந்தி அக்கா வழியாக வெளியில் அனுப்பிவைத்தோம். பிறகு நண்பர் / நீதியரசர் சந்துருவின் உதவியால் ஒரு பல்கலைக்கழக அகராதி, நோட்டு, எல்லாமே கிடைக்கிறது. 1980இல் ஜனவரி முதல் நாள் மூலதனம் இரண்டாம்பாகத்தை எடுத்தேன். ஏப்ரல் 22 அன்று அதை முடித்தேன். பிறகு அக்காவின் இறப்பு. மே தினத்தில் மூன்றாம் பாகம் தொடங்கி நவம்பர் 7இல் முடித்துவிட்டேன். அந்த பழைய கண்டத்திலேயே வைத்து இந்த வேலைகளையெல்லாம் முடித்தோம். சிறையில் மூலதனம் பற்றிய பணி என்பது இதுதான்.

**உங்கள் அரசியல் பயணம். காங்கிரஸ், ML, C.P.M, தமிழ் தேசியம் என நீள்கிறது. இந்த அரசியல் பயணம் உங்களுக்கு என்ன தந்திருக்கிறது?**

காங்கிரஸில், சோசலிசம் என்கிற கருத்து. ஏற்றத்தாழ்வு இல்லாத, சாதி ஒழிந்த ஒரு சமத்துவ சமுதாயம் என்பதுதான். சோசலிசம், கம்யூனிசம் என்பது அமீர் ஜானிடமிருந்து அந்தப் பிடிப்பு எனக்கு வருகிறது. அவர் வெறும் நாத்திகமாக மட்டும் இல்லாமல், பொதுவுடமை தான் சரி என்று இதிலும் பிடிப்புடன் இருக்கிறார். "கட்சின்னு பார்த்தால் நாத்திகம் பேசுவோம், சாதி மறுப்பு பன்னுவோம், கட்சிய அவங்கப் பாத்துக்கட்டும். ஆனால் கட்சி என்று ஒன்று சரியாக இருக்குமென்றால் C.P.M சரியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்". C.P.M காங்கிரஸ் மாதிரியான ஒரு கட்சி என்கிற கருத்தை உண்டு பன்னினார்கள்.

1967 தேர்தல் வருகிறது, சுதந்திரா கட்சியுடன் D.M.K கூட்டணி சேருகிறது, அதில் எனக்கொரு ஒவ்வாமை இருந்தது. பிறகு பெரியார், காமராஜரை பற்றியெல்லாம் ஒரு மயக்கங்களை உண்டு பன்னி வைத்திருந்தார்கள். காமராஜர் சோசலிச சிற்பி, நேருவின் மேல் இருந்த பிடிப்பு, இதெல்லாம் நான் காங்கிரஸ் அரசியலுக்குள் போவதற்கு காரணமாக இருந்தது. பிறகு அதன் பின் சோசலிச கருத்துக்காகப் போராட்டங்களை விடாமல் செய்தோம். கட்சி மாநாடுகள் மேடைகளில் பேசுவது, கிருஷ்ணமேனிடம் கேள்வி கேட்பது, சந்திரசேகருடனான விவாதங்கள் இதெல்லாம் சேர்ந்து இது சரிவராது என்கிற என்னத்தை ஏற்படுத்திவிட்டது.

அடுத்து எங்கு போவது, அப்பொழுது பழையபடி C.P.M. இருக்கிறது, அதிலிருந்து விலகிய M - L ஒன்று இருக்கிறது. அச்சமயம் வெண்மனி தாக்குதல். அதற்குப் பதில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு ஒரு அரசியல் பொருத்தமாக இருக்க வேண்டும். அப்போது இந்தக்கோடி அந்தக்கோடிக்கெல்லாம் போகிறோம், ஆயுதப் போராட்டம் தான். அதை யார் முன் வைக்கிறார்கள். தேர்தல் அரசியல் என்றில்லாமல், இப்படி முன்வைக்கிற ஒரு அமைப்பு வேண்டும். அதற்கேற்ற மாதிரி பேராசிரியர் மருத முத்து ஒருபக்கம், சி.றி.வி தலைவர்கள் ஒருபக்கம், அவர்களுக்குள்ளே கடுமையான விவாதங்கள். அதில் தான் நான் வி — லி பக்கம் போய்விடுகிறேன்.

அங்கு போனதற்குப் பிறகு அந்த மாதிரியெல்லாம் ஒரு மனிதன் நம்ப முடியுமா என்று சொன்னால், அது ஒரு மயக்கநிலைதான். புரட்சி வந்திடுச்சு, எல்லாமே நெருங்கிடுச்சு, ஒரு நான்கைந்து ANNIHILATION செய்தால் மக்கள் கிளர்ந்து எழுவார்கள். கிராமப்புரங்கள் விடுவிக்கப்படும், படை கட்டலாம். அப்போது மேற்கு வங்கத்திலிருந்து, மற்ற இடங்களிலிருந்து வரக்கூடிய செய்திகள், இதெல்லாம் ஒரு பெரிய நம்பிக்கையைக் கொடுக்கிறது. ஒரு சர்வதேச அளவில் கோட்பாட்டளவில் பார்க்கும் பொழுது சீனப்புரட்சி—யினுடைய தலைவர், மார்க்சியத்தை ஒப்புக்கொள்கிறார், மிகப்பெரிய புரட்சியை நடத்தி முடித்தவர். அவர் ஒப்புக்கொள்ளக்கூடிய அரசியல் இதுவாகத்தான் இருக்கிறது. அந்த அணுகுமுறைதான், அதன்மேல் நம்பிக்கை வைத்தது. உழைத்தோம். சிறைக்குப் போன பிறகு நம் நினைத்த மாதிரி நடக்கவில்லை என்கிற எண்ணம் எங்களுக்குப் புரியவருகிறது.

பிறகு இந்த ஈழப் போராட்டங்கள் வரும் பொழுது மீண்டும் கடுமையான கருத்து வேறுபாடுகள் வருகிறது. தேசிய இனச் சிக்கல்களில் கருத்து வேறுபாடு பொதுவாக இருக்கிறது. ஈழம் தொடர்பாக இந்திய அரசின் நிலைப்பாட்டை முழுதாக ஆதரித்ததையும், ராஜீவ் காந்தியின் கையை வலுப்படுத்துவோம் என்றும் சொன்னார்கள். அதைப்பற்றி தீக்கதிரிலும், முரசொலியிலும் விவாதங்கள் நடந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி ஒவ்வொன்றாக வேறுபாடுகள், தமிழ் தேசிய நிலைப்பாடு, ஈழ ஆதரவு என இதில் கடுமையான வேறுபாடுகள் வருகிறது. அதற்குப் பிறகு தான் ஒரு முடிவெடுத்து C.P.M—ல் இந்த தேசிய இன பிரச்சினை, மொழிச் சிக்கல், அது தொடர்பான விவாதங்கள், கடைசி கட்டமாக மாவட்ட மாநாட்டில் நான் பேசினேன். அடுத்தக்கட்டமாகத் தொடர்ந்து போராடுகிறோம், கூட்டங்களில் கடுமையாக C.P.M—மையே சாடி பேசினேன். பிறகு அவர்களே கட்சியை விட்டு நீக்கி விட்டார்கள். அப்படியாகத்தான் C.P.M—மை விட்டு வெளியேறினேன்.

## ஈழத்தினுடைய எதிர்காலம் என்னவாக இருக்கிறது?

தமிழீழ விடுதலை, தமிழீழ தனியரசு என்பது வரலாற்றுத் தேவை. அதனுடைய பொருள் என்னவென்றால். புறநிலை காரணிகளால் அந்தத் தேவை அந்த மக்கள் மீது சுமத்தப்படுகிறது. ஒரு தலைவரோ, ஒரு இயக்கமோ அவற்றை நடத்த முடியாது. 1948இல் நடந்த அதிகார மாற்றம், தங்களுக்கான ஒரு அரசு வேண்டும் என்கிற நிலைக்கு அந்த மக்களை நகர்த்துகிறது.

அவர்களுக்கான இறைமையையும், தேசிய தனித்தீவு உடைமையையும், அவர்கள் நிலைநாட்டிக் கொள்ளக்கூடிய தேவை வருகிறது. 1977இல் ஜனநாயக கட்டளை ஒன்றும் பெறப்படுகிறது. தேர்தல் முழக்கமாக வைத்து ஒரு DEMOCRATIC MANDATE வாங்குகிறார்கள். இதை அந்த அரசியல் சக்திகள் தொடர்ந்து முன்னெடுக்க முடியாமல் போகும்போது, அந்த இடத்தை இளைஞர்கள் வந்து நிரப்புகிறார்கள். அந்த இளைஞர்கள் 1983—க்கு பிறகு தான் பெரிய அளவில் மக்கள் செல்வாக்கைப் பெறுகிறார்கள். அப்போது இந்தியாவினுடைய குறுக்கீடுகள், திப்பு கோட்பாடுகள், பின் இந்திய போர்தொடுப்பு போன்றவை.

முள்ளிவாய்க்கால் இனவொழிப்பு என்பது அந்த மக்கள் சக்தியில் எந்தவித தீர்வும் காணவில்லை. அது என்ன செய்ததென்றால், இந்தச் சிக்கல்களை யெல்லாம் தீவிரப்படுத்திவிட்டது. தனிநாடு வேண்டும், மொழிச்சிக்கல் என்று பல காரணிகள் வேலை செய்த பொழுது, தற்பொழுது உயிர் பிழைப்பதற்குத் தனிநாடு வேண்டும் என்கிற கட்டத்திற்கு கொண்டுவந்து நிறுத்திவிட்டது. அப்படி பார்க்கும் பொழுது இன்று நீதி பெறுவதற்கானப் போராட்டத்தில் மக்கள் சக்தி நின்றிருக்கிறது. நீதிக்கான போராட்டம் முன்னேறி போய்க்கொண்டிருக்கிறது. சென்ற முறைக்கும் இந்த முறைக்குமான மாற்றங்கள் என்னவென்றால், சிங்கள பேரினவாதத்தினுடைய, சமூக கட்டமைப்பு ஆட்டம் கண்டிருக்கிறது. அப்படி பார்க்கும் பொழுது அந்த மக்கள் மத்தியில் ஒரு பெரிய மாற்றம் வந்திருக்கிறது. குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் ஒரு கனிசமான உடைப்பு ஏற்பட்டிருக்கிறது. இவர்கள் மீண்டும் ஒரு அரசியல் சக்தியாக ஒன்று சேர்ந்தார்கள் என்றால் அது சௌகரியமான ஒரு சூழலாக உருவாகிவிடும்.

## இந்த வாழ்வு எப்பொழுதாவது உங்களுக்கு அலுப்பாக இருக்கிறதா தோழர்?

ஒருபோதும் இல்லை. ஏதோ ஒரு காரணத்திற்காக இந்த வேலைகளைச் செய்யாமலிருந்தால் ஒரு குற்ற உணர்வு ஏற்படும். எங்காவது ஒரு திருமணம் நிகழ்வு, அல்லது வேறு நிகழ்வுகள் தான் அலுப்பை ஏற்படுத்துகின்றன. மற்றபடி இது ஒரு கற்பனை இல்லை, ஒரு அறி—வியல்ரீதியிலான நம்பிக்கைதான் இந்த வேலைகள். அதானலேயே இவை அலுப்பை தருவதே இல்லை.

## தோழர் தியாகு தனது ஒரு நாளை எப்படி செலவிடுகிறார்?

இயற்கையின் தேவை கருதி செலவிடும் நேரங்களை தவிற மற்ற நேரங்கள் எல்லாம் என்னுடைய இலக்கு நோக்கிய பயணத்திற்காகத்தான் செலவிடுகிறேன். மொழிபெயர்ப்பு, வாசிப்பு, எழுத்து, உரையாடல், தோழர்களுக்கு வகுப்பு நடத்துதல் போன்றவை எல்லாமே என்னுடைய இலக்கு நோக்கிய பயணம் தான். எனக்கு விடுமுறை நாட்கள் என்று எதுவும் கிடையாது.

### அடிக்குறிப்புகள்

**அமீர் ஜான்:** *இஸ்லாமியராகப் பிறந்து சமய மறுப்பாளராக வளர்ந்த முழுமையான இறைமறுப்பாளர். மக்கள் தொண்டராகவே வாழ்ந்து முதிர்ந்த வயதில் ஈராண்டு முன்பு காலமானார். வாழ்க்கைத் துணை சாந்தி ஓராண்டு முன்பு காலமானார். ஒரே மகள் பிரில்லியன்சி கல்லூரியில் ஆங்கில விரிவுரையாளராகப் பணி செய்கிறார். அமீர் ஜான் ஏற்றிய அறிவுச் சுடரே என் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டது என்பதால் அவரையே என் அறிவுத் தந்தையாக மதிக்கிறேன் என்பார் தியாகு.*

**ஏஜிகே:** *(ஏஜி கஸ்தூரி ரெங்கன்) 1960களில் கீழத் தஞ்சை உழவுத் தொழிலாளர் எழுச்சியின் வழிகாட்டிகளின் முகன்மையானவர். பொய் வழக்கில் தூக்குத் தண்டனை பெற்று, 15 ஆண்டுகள் ஆயுள் கைதியாக இருந்தவர். சிறைப் போராட்டங்களின் முன்னோடி. அந்தப் போராட்டங்களில் தியாகு அவருடன் இணைந்து செயல்பட்ட வரலாறு ஜூனியர் விகடனில் சுவருக்குள் சித்திரங்களாக வரையப்பட்டது. சிறையிலிருந்து விடுதலையான பின் அவரும் தியாகுவும் தமிழ்த் தேசிய முன்னணியில் அமைப்பாளர்களாகச் செயல்பட்டனர்.*

**ஏஎம்கே:** *(ஏஎம் கோதண்டராமன்) 1960களின் பிற்பகுதியில் சென்னை நகரத்தின் போர்க்குணமிக்க தொழிற்சங்கத் தலைவராக வளர்ந்தவர். நக்சல்பாரி இயக்கத்தின் தொடக்கத் தலைவர்களில் ஒருவர். அவரின் தலைமையில்தான் தியாகு தஞ்சை மாவட்டத்தில் புரட்சி இயக்கத்தில் செயல் பட்டார். 40 ஆண்டு மேல் தலைமறைவாக வாழ்ந்து நான்காண்டு முன்பு வயது முதிர்வாலும் நோயினாலும் மறைவுற்றார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கட்டுரை: **கலாநிதி க.ஆனந்தராஜா**

# பூட்டுப் போடாத வீடு: சோவியத் கண்ட கனவு

ரியாபவுக்கு அப்பொழுது 72 வயதிருக்கும். அதே ஆய்வு கூடத்தில் 70 வயது மதிக்கத்தக்க ஒரு ரியாபவுக்கு ஆய்வுகூட உதவியாளராக வேலை செய்தார். அந்த ஆய்வுகூடத்தில் வேலை செய்பவர்களுக்கு தெரிந்த உண்மை என்னவென்றால் வாலிப காலத்தில் ரியாபவின் காதலியாக இருந்தார். ஆனால் ரியாபவ் அவளை நிராகரித்துவிட்டுத் தன்னைப் போல் கலாநிதிப் பட்டம் பெற்ற இன்னுமொரு பெண்ணை மணந்துவிட்டார். அந்தப் பெண் தான் இனிமேல் எவரையும் திருமணம் செய்யப் போவதில்லை என்று சொல்லிவிட்டார். ரியாபவும் மனைவியும் கலாநிதிப்பட்டம் முடித்துக் கொண்ட பின் அதே ஆய்வுகூடத்தில் வேலை வாய்ப்பு கிடைத்து வேலை செய்ய தொடங்கியவுடன் ரியாபவினுடைய பழைய காதலி அவருக்கு ஆய்வு துணையாளராக வேலை செய்ய ஆசைப்படுவதாக அறிவித்து வேலையையும் பெற்றுக் கொண்டாள். ரியாபவின் மனைவி அதற்கு எதிர்ப்புச் சொல்லவில்லை. 30 வருடங்களுக்கு மேலாக அந்த வேலையை செய்துகொண்டிருந்தாள். நான் 70 வயதான அந்த வயோதிகப் பெண்ணிடம் மற்றவர்கள் உங்களுடைய பழைய உறைவைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிக் கதைப்பது உண்மையா என்று கேட்டபோது அவர் சிரித்துக்கொண்டு ஒப்புக்கொண்டார். ரியாபவ் தன்னுடைய ஆய்வுக் குறிப்புகளையும் கடிதங்களையும் ஒழுங்குப்படுத்தி வைப்பதில்லையென்றும் அதைக் கோப்புகளாக தான் ஒழுங்குபடுத்தி வைப்பதாகச் சொல்லி பெருமைப்பட்டாள். நான் ஒருநாள் ரியாபவினுடன் கதைக்கும் பொழுது 25 ஆண்டுக்கு முன் அரசியல் சம்பந்தப்பட்ட சுவாரஸ்யமான சம்பவமொன்று சொன்னார்.

சோவியத் நாட்டின் ஒரு அங்கமாக இருக்கும் இந்த கிறிமியா குடாநாட்டை இரண்டாவது உலக மகா யுத்தம் நடந்த காலத்தில் 1942இல் ஜெர்மனியன் பட்டாளம் ஆக்கிரமித்து விட்டது. அதன்பின் 1944இல் ஜெர்மனிய பட்டாளத்தை சோவியத் நாட்டுப் பட்டாளம் தோற்கடித்து திரும்பவும் தங்களுடைய ஆட்சிக்குக் கீழ் கொண்டுவந்தது. ஜெர்மனியின் ஆக்கிரமிப்பில் இருந்த காலத்தில் ஒருநாள் ஜெர்மனியின் பட்டாளத் தளபதி ரியாபவ் வேலைசெய்யும் நிகற்ஸ்கி தாவரப் பூந்தோட்டத்திற்கு விஷயம் செய்தான். அங்கு அந்தக் காலத்தில் சோவியத் நாட்டின் பிரதம மந்திரியாக இருந்த மோலோடோவ் (Molotov) என்பவரின் மார்பளவு சிலையைக் கண்டவுடன் அதை உடனடியாக உடைத்துவிடச் சொல்ல கட்டளையிட்டான். உடனேயே உடைத்தெறியப்பட்டது. இந்த மோலோடோவ் 1939இல் சோவியத் நாட்டின் தலைவர் ஜோசப் ஸ்டாலினால் பிரதமராக்கப்பட்டவர். 1939ஆம் ஆண்டு இரண்டாவது உலக மகா யுத்தத்தின் தொடக்கத்தில் ஸ்டாலினும் ஜெர்மனியின் நாசிச தலைவரான ஹிட்லரும் இரு நாடுகளும் ஒன்றை ஒன்று தாக்கப் போவதில்லை என்ற நாசிச சோவியத் ஒப்பந்தத்தை செய்துகொண்டார்கள். அந்த ஒப்பந்தத்தில் ஸ்டாலினின் பிரதிநிதியாகக் கையெழுத்திட்டவர் இந்த மோலோடோவ் தான். கிரிமியா சோவியத் வசமானபின் 1944இல் பூந்தோட்டத்தின் அதிபருக்கு மொஸ்கோவிலிருந்து ஒரு தந்தி வந்தது. அந்த தந்தியின் பிரதமர் மோலொடோவ் கிரிமாவுக்கு விஷயம் செய்யப் போவதாகவும், அவர் பூந்தோட்டத்துக்கும் பார்வையிட வருவாரென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அவர் வருகைக்கு 5 நாட்கள் இருந்தது. அவர் வந்து பார்த்து தன்னுடைய சிலை உடைக்கப்பட்டுக் கிடப்பதைக் கண்டால் பூந்தோட்ட அதிகாரிகளுக்குக் கட்டாயம் தண்டனை கிடைக்கும். பூந்தோட்ட அதிபர் மொஸ்கோவிற்குச் சென்று மோலொடோவின் சிலை ஒன்றைச் செய்து கொண்டு வரும்படி ரியாபவை அனுப்பி வைத்தார். சிற்பிகள் 2&3 நாட்களில் கல்லிலோ அல்லது உலோகத்திலோ செய்ய முடியாதென்று மறுத்துவிட்டார்கள். ரியாபவின் வேண்டுகோள்படி களிமண்ணால் செய்து வண்ணத்தால் மறைத்து உலோகத்தால் வார்த்தெடுத்தது மாதிரி ஆக்கிவிட்டார்கள் அதை மாற்றப்பட்ட அந்த சிலையால் ஒரு பிரயோசனமும் இருக்கவில்லை. ஏனென்றால் பிரதமர் மோலொடோவ் பூந்தோட்டத்திற்கு வரவேயில்லை. நான் அங்கு இருந்த காலத்தில் அது லெனினுடைய சிலையாக மாற்விட்டது.

பூந்தோட்டத்தில் பபோவ் (Papov) என்ற பெயருடைய தம்பதிகள் வேலை செய்தார்கள். ஒரு நாள் வயது 45 மதிக்கக்கூடிய திருமதி பபோவுடன் இரண்டாவது உலகயுத்த காலத்தைப் பற்றி கதைத்தோம். யுத்த காலத்தில் தாங்கள் பட்ட இன்னல்களையும் பட்டினியைப் பற்றியும் சொல்லி வேதனைப்பட்டார். ஜெர்மனியின் ஆக்கிரமிப்பால் பறிபோன கிரிமியா குடாநாட்டை திரும்ப கைப்பற்றுவதற்கு 1944ஆம் ஆண்டு கடும்போர் நடந்து கொண்டிருந்தது. பூந்தோட்டத்திலிருந்து 6 கி.மீ. தூரத்தில் யால்டா (Yalta) என்ற நகரம் கருங்கடலை எல்லையாகக் கொண்ட ஒரு மலைப் பிரதேசம். அவளுடைய கணவன் பபோவ் ஒரு படையணிக்குத் தலைமை தாங்கி மற்றப் படைவீரர்களுடன் ஜெர்மனி படையைத் தாக்கச் சென்றனர். பபோவின் கையில் இரண்டு சக்கரங்களுடன் உருட்டிக் கொண்டு போகக் கூடிய இயந்திரத் துப்பாக்கி மற்றவர்களிடம் சாதாரண துப்பாக்கிகள் மலைப் பிரதேசமென்பதால் சிரமப்பட்டு ஏறி உச்சத்துக்கு வந்ததும் அவர்கள் கண்டது நூற்றுக்கும் அதிகமான ஜெர்மன் பட்டாளத்தினர் அண்மையில் வந்துவிட்டார்கள். படையணியின் தளபதியாயிருந்த பபோவ் தன் படையாளிகளை ஓடித் தப்பச் சொல்லி உத்தரவிட்டார். தான் கொண்டு சென்ற இயந்திரத் துப்பாக்கியுடன் ஓடுவது சிரமமென்று அதை அப்படியே விட்டு விட்டு அவரும் ஓடிவிட்டார். நடந்த சம்பவத்தைத் தன் மேலதிகாரிக்குப் பபோவ் விளக்கினார். அதிகாரிக்கோ கோபம் வந்துவிட்டது. ஆயுதப் பற்றாக்குறையுடன் நாங்கள் போரில் ஈடுபட்டிருக்கும் இந்நேரத்தில் நீ இயந்திரத் துப்பாக்கியை விட்டு விட்டு வந்தது மிகப் பெரிய குற்றம். நீ உடனடியாகபோய் இயந்திரத் துப்பாக்கியுடன் வரவேண்டும். அங்கு நீ ஜெர்மன் படையினரால் பலியாகினாலும் எனக்குக் கவலையில்லை. அந்தத் துப்பாக்கி இல்லாமல் வந்தால் நீ என்னால் பலியாக வேண்டும். வேறு வழியில்லாமல் பபோவ் மலைச்சாரலில் பயந்துகொண்டு ஏறி மேலே போனார். தன்னுடைய இயந்திரத் துப்பாக்கியைக் கண்டுவிட்டார். அதை எடுக்கப் போகும் போது ஜெர்மன் படை அவரை நோக்கிச் சுட்டார்கள். அவர் இயந்திர துப்பாக்கியை கீழே தள்ளிவிட்டு தானும் கீழே ஓடித்தப்பிவிட்டார். துப்பாக்கியை தன் அதிகாரியிடம் ஒப்படைத்து தன் உயிரையும் காப்பாற்றினார். ஜெர்மனிய படைகள் சுட்ட போது அவருக்கு ஏற்பட்ட அதிர்ச்சியாலும் பயத்தாலும் சில நாட்களிலேயே அவருடைய கறுத்த தலைமயிர் நரைத்து வெள்ளையாகி விட்டது. அவருக்கு அப்பொழுது வயது 26. நான் அவரைப் பார்த்தபோது அவருடைய வயது 52. தலைமயிர் முழுமையாக நரைத்திருந்தது. அவர் அப்பொழுது சதுரங்கம் விளையாடுவதில் திறமைசாலியாக இருந்தார்.

இரண்டாவது உலக மகா யுத்தத்தில் சோவியத் நாட்டின் அழிவுகளையும் மக்கள் பட்ட இன்னல்களையும் பற்றி திருமதி பபோவ் சொல்லிக்கொண்டே கண்கலங்கிவிட்டார். ஜெர்மனியின் விமானத் தாக்குதலால் பெரும்பாலான கட்டடங்கள் உடைந்து கிடந்தன. 24 மில்லியின் (2.4கோடி) மக்கள் போர் நடந்த காலம் (1941 & 1945) அழிந்துவிட்டார்கள். மிஞ்சிய ஆண்களில் கணிசமான அளவு போரில் காயப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



அங்கக் குறைவுடன் காணப்பட்டனர். தொழில்சாலைகள் மூடப்பட்டும், அழிக்கப்பட்டுமிருந்ததால் விவசாய இயந்திரங்கள் எதுவுமில்லை. விவசாய மிருகங்களான மாடுகள், குதிரைகள் பட்டினியால் இறந்ததுடன், மக்களுடைய பசிக்கு இரையாகிவிட்டன. இந்த நிலைமையில் போர் முடிந்தபின் பெண்களை விவசாயம் செய்யச் சொன்னார்கள். ஆண்கள் கட்டட வேலைகளுக்குக் கூட்டிக் கொண்டு போய்விடுவார்கள். திருமதி பபோவுக்கு பருத்த உடம்பு கலப்பை கட்டி நிலத்தை உழுவதற்கு அவளைப் பாவித்தார்கள். அவள் இதைச் சொல்லும் பொழுது அவமானப்பட்டதாக இல்லை. பெருமையோடுதான் சொன்னாள். இரண்டாவது உலக யுத்தம் 1945இல் முடிவடைந்தது. போரில் இறந்தவர்களும் அங்கயீனப்பட்டவர்கள் தொகை நாட்டின் ஜனத்தொகையில் கிட்டத்தட்ட 20 சதவீதம். எந்த நாட்டினுடைய உதவியுமில்லால் மிகக் குறுகிய காலத்தில் நாட்டைக் கட்டியெழுப்பினார்கள். அதற்கு மக்களுடைய நாட்டுப்பற்றும் சோவியத் நாட்டின் தலைவரான ஸ்டாலினின் ஏதேச்சதிகார ஆட்சியும் உதவிசெய்தன. விஞ்ஞானம் வளர்ச்சியடைந்து உலகத்தில் முதன் முதலாக செயற்கைகோளை 1957ஆம் ஆண்டிலும், மனிதனை 1961ஆம் ஆண்டிலும் வெளிக்கு அனுப்பி வைத்ததை நினைத்து வியந்தேன். கடந்த 75 வருடகாலத்தில் அசுர வேகத்தில் வளர்ந்த விஞ்ஞான வளர்ச்சிக்குக் குறிப்பாக மொபைல் தொடர்புகளின் வளர்சிக்குக் காரணமாக இருக்கும் செயற்கை கோள்களின் (Satelite), எங்கள் எல்லோருக்கும் தெரியும். ஆனால் இன்றைய சந்ததிகளுக்கு ஸ்புட்னிக் என்ற பெயரில் சோவியத் நாட்டிலிருந்து செயற்கை கோள் வைக்கப்பட்ட சரித்திரம் தெரியாது.

பூந்தோட்டத்தில் இருக்கும் போது என்னுடைய படப்பிடிப்பின் ஒரு அங்கமாக தாவர ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தேன். பழமரங்களின் மொட்டுக்களின் குளிரைத் தாங்கும் சக்தியை பரிசோதனை செய்வதற்காக ஒரு குளிரறையில் மைனஸ் 4 டிகிரியில் மரக்கிளைகள் வைத்துவிட்டு 12 மணித்தியாலங்களின் பின்பு வந்து பார்த்தேன். கிளைகளிலுள்ள மொட்டுகள் முழுமையாக கருகிவிட்டன. குளிரைக் கொடுக்கும் இயந்திரக் கோளாறினால் குளிரறையிலுள்ள உஷ்ணம் திடீரெனக் குறைந்து மைனஸ் 16 டிகிரி க்கு மாறிவிட்டது. அந்தக் குளிரைத் தாங்கமுடியாமல் மொட்டுக்கள் கருகிவிட்டன. இதைப்பற்றி பூந்தோட்ட விஞ்ஞான அதிபரிடம் முறைப்பாடு செய்தேன். அவரோ அந்தக் குளிரறைக்கு ஒரு சரித்திர முக்கியத்துவம் இருக்கிறது என்று சொல்லிவிட்டுச் சிரித்தார். இரண்டாவது உலக மகாயுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் ஹிட்லரின் நாசிச ஜெர்மனியை எதிர்த்துப் போராடிய முக்கிய நாடுகளின் தலைவர்களான சோவியத் நாட்டின் தலைவர் ஸ்டாலின், அமெரிக்காவின் ஜனாதிபதி பிரான்கிள் னுஸ்வெல்ட், பிரித்தானியாவின் பிரதமர் வின்ஸ்டன் சேர்சில் மூவரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதைப் பற்றி கலந்தாலோசிக்க யால்டா நரத்தில் 1945ஆம் ஆண்டு மாசி மாதம் ஒன்று கூடினார்கள். இதுதான் சரித்திர பிரசித்தி பெற்ற யால்டா மகாநாடு அல்லது கிரிமியா மாநாடு என்று அழைப்பார்கள். அந்தத் தலைவர்களின் உணவுக்கு வேண்டிய இறைச்சி வகைகளை நான் பரிசோதனைக்காகப் பாவித்த குளிரறையில் இரண்டு நாட்களுக்கு வைத்திருப்பதற்காக மைனஸ் 4 டிகிரி ரியில் வைத்துவிட்டுச் சென்றார்கள். எனக்கு நடந்தது போல் இயந்திரக் கோளாறினால் குளிர்நிலை மைனஸ் 16டிகிரிக்கு குறைந்துவிட்டது. இறைச்சி வகைகள் மரக்கட்டைபோல் ஆகிவிட்டன. இறைச்சி வகைகளை எடுக்க வந்தவர்கள் பூந்தோட்ட அதிகாரிகளைத் திட்டிவிட்டு எடுத்துக்கொண்டு கொண்டுபோனார்கள். 25 வருடங்களாக எந்த மாற்றமும் செய்யாமல் அதே இயந்திரத்தையும் குளிர் அறையையும் பாவிக்கிறார்களே என்று ஆச்சரியப்பட்டேன். சில மாதங்களுக்குப் பின் அழகான, அடக்கமான காலநிலை அறையொன்றை மேற்கு ஜெர்மனியிடம் வாங்கினார்கள். அத்துடன் பழைய குளிரறைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்கள்.

பூந்தோட்டத்தின் அருகாமையிலுள்ள சிறிய நகரமான குர்சூவ் (*Gursuv*) கருங்கடலோடு அமைந்திருக்கிறது. கோடைக்காலத்தில் சுற்றுலாப் பயணிகள் ஏராளமாக வருவார்கள். அங்கு எனக்கு வலோதியா என்ற பெயரில் ஒரு நண்பரிருந்தார். அவர் ஹோட்டல்களில் பியானோ வாசிப்பவர் அவருடைய குடும்பத்திற்கு ஒரு அடுக்குமாடி இல்லம் ஒன்று அந்த நகரத்திலிருந்து ஒருநாள் அவர் அந்த இல்லத்துக்குக் கூட்டிக்கொண்டுப் போனார். அந்த வீட்டு கதவுப் பூட்டில்லாமல் இருந்தபடியால் சும்மாவே திறந்துகொண்டுபோனார். தனக்கு ஒரு ஆண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை கிடைத்தவுடன் பிள்ளையின் வசதிக்காக நானும் மனைவியும் கடந்த ஆறு மாதங்களாக மனைவியின் பெற்றோர் வீட்டில் தங்குவதாகச் சொன்னார். நீங்கள் வீட்டில் இல்லாமலிருக்கும் பொழுது ஏன் கதவைப் பூட்டாமல் வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டேன். எங்கள் அரசாங்கம் கம்யூனிசத்தை அடையும்போது மக்களுடைய வாழ்க்கைத் தரம் நன்றாக இருக்குமென்றும், மக்களுடைய சகல தேவைகளையும் அரசாங்கம் கொடுக்குமென்றும் சொல்கிறார்கள். அப்பொழுது ஒருவர் மற்றவருடைய பொருளைத் திருடப் போவதில்லை. மக்கள் எந்த அளவுக்கு அப்படியான ஒரு வாழ்க்கைக்குப் பக்குவப்பட்டிருக்கிறார்கள் என்று அறிவதற்காக நான் வீட்டுக் கதவைப் பூட்டாமலே விட்டிருக்கிறேன். என் வீட்டில் விலை மதிக்கக்கூடிய பொருட்கள் எதுவும் கிடையாது. ஆகவே நான் அதைப் பற்றி கவலைப்படவில்லை. இந்த ஆறு மாத காலத்தில் எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை என்று சொல்லிவிட்டுச் சிரித்தார்.

நான் படித்த மக்கள் நட்புறவுப் பல்கலைக்கழகத்தின் *(People's Friendship University)* தலைவர் பெயர் சிர்கேய் ருமியான்சவ் *(Rumyantsev)* அவர் ஒரு சிறந்த விஞ்ஞானியும் பேராசிரியருமாவார். அவர் பல்கலைக்கழகத்தின் தலைவராக ஆகும் முன் சோவியத் அரசாங்கத்தின் உயர் படிப்புக்கான கல்வி அமைச்சகத்தின் பிரதி மந்திரியாகக் கடமையாற்றியவர். நான் பூந்தோட்டத்தில் இருந்த காலத்தில் அவர் தன்னுடைய மனைவியுடன் கோடைக்கால விடுமுறையைக் களிப்பதற்காக குர்சூவிலுள்ள சுகாதார விடுதியொன்றில் தங்கி—யிருந்தார். நான் ஒருநாள் அவரைப் பார்ப்பதற்காக அந்த விடுதிக்கு ஒரு சாயந்தரம் சென்றேன். அவர் என்னை இன்முகத்துடன் வரவேற்று தன்னுடைய மனைவிக்கும் மற்றும் அங்கிருந்தவர்களுக்கும் அறிமுகம் செய்து வைத்தார். அவரின் வேண்டுகோளின்படி இரவுச் சாப்பாடும் அவர்களுடன் சேர்ந்து சாப்பிட்டேன். அதன்பின் விடுதியில் ஓடிக்கொண்டிருந்த திரைப்படம் ஒன்றையும் ஒன்றாகப் பார்த்தோம். குர்சூவிலிருந்து பூந்தோட்டத்திற்குப் பஸ் வண்டியில் போக வேண்டும். கடைசி பஸ் சாயந்தரம் 9 மணிக்கு புறப்படும். விடுதியிலிருந்து 10நிமிட நடைதூரம் பஸ் நிலையம். நான் தலைவர் ருமியான்சவிற்கு விடைகூறிவிட்டு போவதற்கு தயாராகினேன். அவர் தன் மனைவியுடன் பஸ் நிலையம் மட்டும் நடந்து வந்து வழியனுப்பி விட்டார். அவரிடமிருந்து பிரியும் போது என் கண்கலங்கிவிட்டது. பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகத்தின் தலைவர் என்ற உயர் ஸ்தானத்திலிருப்பவர், ஒரு காலத்தில் அந்த வல்லரசு நாட்டின் பிரதிக் கல்வியமைச்சராக இருந்தவர். ஒரு மாணவனான என்னுடன் எவ்வளவு அன்புடன் பழகினார் என்று அடிக்கடி நினைத்துப் பார்ப்பேன். ஒருமுறை ரஷ்ய நண்பர்களிடம் இந்த சம்பவத்தைப் பற்றி சொல்லிப் பெருமைப்பட்டேன். அவர்கள் அதைக் கேட்டுவிட்டு இப்படியான சிறந்த மனிதர்களைத்தான் உண்மையான கம்யூனிஸ்டுகள் என்று சொல்வோம். ஆனால் இன்று கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்களில் பலர் அதிகாரித்துவராக ஆகிவிட்டார்கள் என்று சொன்னார்கள். இந்த சம்பவம் நடந்து அடுத்த வருடம் (1971) என்னுடைய இரண்டு வருட தாவர ஆராய்ச்சி வேலையைப் பூந்தோட்டத்தில் முடித்துவிட்டு மொஸ்கோவிலுள்ள என்னுடைய பல்கலைக்கழகத்திற்குத் திரும்பினேன். அங்கு எனக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. பல்கலைக்கழகத்தின் தலைவர் பேராசிரியர் ருமியான்சவ் அவருடைய பதவி—யிலிருந்து கலைக்கப்பட்டு சிறிய கல்விநிறுவனத்திற்கு அனுப்பப்பட்டார். அந்த மாமனிதருக்கு அப்படி ஒரு சம்பவம் நடந்ததை அறிந்து மிகவும் கவலைப்பட்டேன். பல்கலைக்கழக முக்கியஸ்தர் ஒருவருடன் கதைக்கும் பொழுது நான் அறிந்தது என்னவென்றால் அங்கு படிக்கும் வெளிநாட்டு மாணவர்களில் சிலர் நாட்டின் சட்டதிட்டங்களுக்குப் பாதகமான குற்றங்களில் ஈடுபட்டார்கள். சோவியத் மக்களுக்கு சுதந்திரமாக வெளிநாடு போகமுடியாது. ஆனால் வெளிநாட்டு மாணவர்கள் விடுமுறை காலங்களில் கடவுச்சீட்டைப் பெற்று ஐரோப்பிய மேற்கத்திய நாடுகள் சென்று திரும்பிவரும் பொழுது ஆடம்பரப் பொருட்கள், உடைகள், அந்நிய நாட்டுப் பணம் போன்றவற்றை சோவியத் மக்களுக்கு கறுப்புச் சந்தையில் விற்பார்கள். தண்டிக்கப் படவேண்டிய அந்த மாணவர்களை உரிய முறையில் தண்டிக்காததுதான் அவர் விட்ட குற்றம் அவருடைய நல்ல உள்ளம் ஒரு நல்ல நிர்வாகியாக இருக்க விடவில்லை அதற்காக ஒரு சிறந்த அறிவாளியை அவ்வளவு தூரத்துக்குப் பதவிக் குறைப்புச் செய்ய வேண்டுமா? இப்படியான தண்டனைகள் சோவியத் ஆட்சியில் எப்பொழுதும் இருந்தது. மிகப்பெரிய பதவி—யிலிருப்பவர்கள் விஞ்ஞானிகள், அறிஞர்கள் திடீரென பதவியிறக்கப்படுவார்கள். கம்யூனிசக் கட்சி ஆட்சி பீடத்திலுள்ளவர்களின் அதிகாரத்துவம் தான் அதற்குக் காரணம். நான் படித்த காலத்தில் மொஸ்கோவில் இரண்டு நிறுவனங்களில் தமிழை ஒரு பாடமாகப் படிப்பிடித்தார்கள். அதில் ஒன்று ஆசியா & ஆப்பிரிக்கா ஆய்வுகளுக்கான நிறுவனம் *Institute of asia and African studies)* இந்த நிறுவனம் 1956ஆம் ஆண்டு மொஸ்கோ மாநில பல்கலைக்கழகத்தினால் நிறுவப்பட்டது. இந்த நிறுவனத்தில் எம்.எஸ்.சி பட்டதாரிப் படிப்புக்குப் படிக்கும் மாணவர்கள் ஏதாவது ஒரு முக்கிய ஆசிய ஆப்பிரிக்க நாட்டு மொழியையும் படிக்க வேண்டும். அதில் தமிழ் மொழியும் சேர்க்கப்பட்டிருந்தது. பிதிகோர்—ஸ்கி என்ற பேராசிரியர் தமிழ் துறைக்குப் பொறுப்பாக இருந்தார். இவர் தமிழ் இலக்கணத்தைப் பற்றி நிறைய ஆய்வுகள் செய்தவர். அதில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றியவர் கிளசோவ் *(Glasov)* அவருடைய பெயர் ருஷ்ய மொழியில் கண்ணைக் குறிப்பதால் தனக்கு கண்ணன் என்ற புனைப்பெயரையும் சூட்டியிருந்தார். தமிழைக் கற்பித்த இரண்டாவது நிறுவனம் மொஸ்கோ மாநில வெளிநாட்டு உறவு நிலையம் *(Moscow state institute for foreign relationship)*

இந்த நிறுவனத்தில் 5 வருட பட்டதாரிப் படிப்பை முடித்தவர்கள் வெளிநாட்டு தொடர்பு நிலையங்களில் குறிப்பாக அரசாங்க தூதரகங்களில் தொழில் செய்வார்கள். அந்த நிறுவனத்தின் இந்தியத் துறையில் ஹிந்தி, குஜராத்தி, வங்காளம், தமிழ் ஆகிய 4 இந்திய மொழிகளையும், இலங்கை மொழியான சிங்களமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பித்தார்கள். அதற்கு தமிழ் விரிவுரையாளராக இருந்தவர் ஸ்விந்ளானா என்ற பெண்மணி பாரதியார் கவிதைகள் சிலவற்றை ருஷ்ய மொழியில் வெளியிட்டவர் தமிழ் கற்பவர்களுக்கு தற்காலிக உதவியாளனாக நான் கடமையாற்றினேன். என்னுடைய பொறுப்பு தமிழ் உச்சரிப்பும், தமிழ் பேச்சு மொழியையும் கற்பித்தல்.

நான் படித்த காலத்தில் இலங்கையிலிருந்து வந்த பல முக்கிய அரசியல்வாதிகளையும் தொழில் சங்கவாதிகளையும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதில் முக்கிய தமிழ் அரசியல்வாதிகளான இலங்கை சமசமாஜக் கட்சியின் தத்துவராகக் கணிக்கப்பட்ட காராளசிங்கம், இலங்கைக் கம்யூனிச மத்திய குழு அங்கத்தவர் பொன்னம்பலம் அத்துடன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அண்ணாத்துரைக்கு வலதுகை போன்று இருந்த நாஞ்சில் மனோகரன் 1968ஆம் ஆண்டு பல்கேரியா நாட்டின் தலைநகரான சோவியாவில் 9ஆவது உலக வாலிப விழா நடந்தேறியது. நட்புறவுப் பல்கலைக்கழகத்தின் பிரதிநிதியாக நானும் பங்கு பெற்றினேன். அங்கு தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரதிநிதியாக வந்திருந்த நாஞ் சில் மனோகரனைச் சந்தித்தேன். அவர் அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழக எம்.பி.க்களின் தலைவராக இந்திய பாராளுமன்றத்தில் *(Lok Sabha)* பணியாற்றினார். அவர் இருந்த அறைக்குப் பக்கத்தில் வட இந்தியாவிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சியின் பாராளுமன்ற பிரதிநிதி இருந்தார். ஒருநாள் நாங்கள் பகல் உணவு ஒன்றாக எடுத்துக் கொண்டிருந்தோம். கம்யூனிஸ்ட் கட்சி எம்.பி. நாஞ்சில் மனோகரனைப் பார்த்து நீங்கள் ஏன் ஹிந்தி மொழியை வெறுக்கிறீர்கள் என்று கேட்டார். நாங்கள் ஹிந்தி மொழியை வெறுக்கவில்லை, ஹிந்தி மொழியைத் திணிப்பதைத்தான் வெறுக்கிறோம் எங்கள் கட்சி ஆங்கில இணைப்பு மொழியாக இருப்பதைத்தான் விரும்புகிறது என்று பதில் கொடுத்து மற்றவருடைய வாயை அடக்கி விட்டார். பல்கேரிய மொழிக்கும் ருஷ்ய மொழிக்கும் ருஷ்ய மொழிக்கும் ஒற்றுமை இருந்தபடியால் சோவியத் நகரத்தை நாஞ்சில் மனோகரன் பார்ப்பதற்கு உதவியாக இருந்தேன். விழாவை முடித்துக் கொண்டு அவருடன் ஒன்றாக ரயில் மூலமாக ஒரு முழு நாள் பயணத்தில் மொஸ்கோ வந்தோம். மூன்று நாட்கள் அவர் மொஸ்கோவில் நின்றார். அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழக தூதரகக்குழுக் குழு ஒன்று அங்கு வந்து நாஞ்சில் மனோகரன் இருந்த ரஷ்யா *(Russia)* என்ற ஹோட்டலில் தங்கினார்கள். நான் அவர்கள் எல்லோரையும் கூட்டிக்கொண்டு செஞ்சதுக்கத்திலிருந்த கல்லறையில் வைக்கப்பட்டிருந்த லெனினுடைய உடலைக் காட்டுவதற்கு கூட்டிக் கொண்டு போனேன். 44 வருடத்தை தாண்டிய லெனினின் இறந்த உடலில் இருக்கும் கம்பீரத்தைப் பார்த்து நாஞ்சில் மனோகரன் பிரமித்துப் போனார். ஒருநாள் அவர் சொன்னார் இலங்கை அரசாங்கத்தினால் வருங்காலத்தில் இலங்கைத் தமிழர்கள் புறக்கணிக்கப்படுவார்கள். எனக்கு வேறு சகோதரர்கள் இல்லாததால் என்னையும் என்னுடைய அம்மாவையும் இந்தியாவில் வசிப்பதற்கு பிரஜாவுரிமை எடுத்துத் தருவதாகச் சொன்னார். இந்திய பாராளுமன்றத்தில் அப்பொழுது பிரதமராக இருந்த இந்திரா காந்தியின் பிரேரணைகளை அங்கீகரிப்பதற்குத் தான் நிறைய உதவிகள் செய்ததாகவும், அந்த அம்மையாரின் உதவியுடன் அதைச் செய்துதர முடியுமென்று சொன்னார். எனக்கு அப்படியான நோக்கம் இருக்கவில்லை. ஆனாலும் வருங்காலத்தில் இலங்கை அரசினால் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுவார்கள் என்பதை பல ஆண்டுகளுக்கு முன்பே சரியாகக் கணித்திருந்தார்.

1917இல் நடந்த அக்டோபர் புரட்சிதான் சோவியத் நாட்டை உருவாக்கியது. அதன் 50ஆம் விழா 1967இல் நடந்தது. அதில் பங்கேற்பதற்கு இலங்கையிலிருந்து பல்வேறு கட்சிகளால் நடத்தப்படும் தொழில் சங்கங்கள் பங்காற்றின. முதன் முறையாக இலங்கை சமசமாஜக் கட்சியின் பிரதிநிதியாக காராளசிங்கம் மொஸ்கோ வந்திருந்தார். அவரை சந்தித்த பொழுது என்னிடம் ஒரு உதவி கேட்டார். லெனின் 1918இல் நடந்த துவக்குச் சூட்டால் காயமடைந்து நோயாளியாய் இருக்கும் பொழுது கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப்பீடத்திற்குத் தனக்குப் பதிலாக இன்னுமொருவரைத் தெரிவுசெய்வதற்காக கட்சியின் மத்திய குழு அங்கத்தவர்களுக்கு எழுதிய கடிதம். 1922இல் ஸ்டாலின் கம்யூனிஸ்ட் கட்சியின் பொது காரியதாரியாக பதவியேற்ற பின் அந்தக் கடிதத்தை மறைத்துவிட்டார். ஸ்டாலின் 1953இல் மரணமடைந்த பின்பு குருசேவ் பதவிக்கு வந்ததும் லெனின் எழுதிய கடிதம் பிரசுரிக்கப்பட்டது. அந்தக் கடிதத்தின் சாரம் என்னவென்றால் ஸ்டாலினும், திரொஸ்கியும் பதவிக்குச் சாத்தியமானவர்களாக இருந்தாலும் அவர்களுக்கிடையே இருக்கும் திறமைகளையும் குறைகளையும் குறிப்பிட்டு மத்திய குழு தான் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும் என்பதே. கொள்கை அடிப்படையில் சமசமாஜக் கட்சி திரொஸ்கிக்கு ஆதரவான கட்சி ஆகவேதான் காராளசிங்கம் அந்தக் கடிதத்தின் பிரதியொன்றை கேட்டுக் கொண்டார். ஆங்கிலப் பிரதியொன்றை என்னால் எடுத்துக் கொடுக்க முடிந்தது. லெனின் கிராட் என்ற நகரத்திற்கு அவர் சென்றபோது அங்கு நடந்த அக்டோபர் புரட்சி சம்பவத்தைப் பற்றி ஒரு ரஷ்யப் பெண்மணி காராளசிங்கத்துக்கு விளக்கிக் கொண்டிருக்கையில் அவள் சம்பவம் நடந்த திகதிகளில் பிழை கண்டுபிடித்து திருத்திவிட்டார் காராளசிங்கம். 1971ஆம் ஆண்டு இலங்கை கம்யூனிசக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரான வி. பொன்னம்பலம் வந்திருந்தார். அவரைப் பார்ப்பதற்கு வெளிநாட்டிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்கள் தங்கும் ஹோட்டலுக்கும் சென்று சந்தித்தேன். அங்கு ரஷ்ய நாட்டு தமிழ் ஆய்வாளர் ஒருவரை அறிமுகப்படுத்தினார். அவர் பெயர் அன்றபோவ். இருவரும் ஏற்கனவே ஆளாளுக்கு தெரிந்தவர்கள். அவர்கள் மற்றைய ஐரோப்பிய சோசலிச நாடுகளில் இருக்கும் தமிழ் ஆய்வாளர்களைப் பற்றி கலந்துரையாடிக் கொண்டிருந்தார்கள். வி.பொன்னம்பலத்தை தான் ஒரு தலைசிறந்த அரசியல் வாதியாகவும் பேச்சளாருமாகத்தான் நினைத்திருந்தேன். ஆனால் தமிழவளர்ச்சியைப் பற்றி மிகவும் ஆர்வம் கொண்டவராக அப்பொழுதுதான் அறிந்திருந்தேன். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை: **பா.அ.ஜயகரன்**



# நீ என்ன மொழி பேசுகிறாய்?

**க**ட்டிலோடு கால்களும், கைகளும் கட்டப்பட்டிருந்தன. கைகளின் வழி மருந்து ஏற்றப்பட்டவண்ணம் இருந்தது. அவனில் எந்த அசைவையும் காண முடியவில்லை. அவனுக்கு செழுத்தப்பட்டிருக்கும் மயக்க மருந்தின் வீரியம் குறையும்போது மருந்துகளைப் பிடுங்கி எறியக்கூடும் என்ற அச்சத்தில்தான் அவனது கால்களும், கைகளும் கட்டப்பட்டிருக்கின்றன.

பொதுவாக அப்படித்தான்.சிவத்திடம் கொடுக்கப்பட்ட குறிப்பில் தற்கொலைக்கான எண்ணம் உடையவர். தொடர்ச்சியாக கண்காணிக்கப்படவேண்டும் என்று இருந்தது. நோயாளியான ஜேம்சை கவனிக்கக்கூடியதாய் கமராக்கள் பொருத்தப்பட்டு இருந்தன. தாதியர், மருத்துவர்களுக்கான இடத்தில் அங்கு வைக்கப்பட்டிருந்த 21 நோயாளிகளையும் அவதானிக்கக்கூடியதாய் கமராக்களும், மருத்துவ கண்காணிப்பு இயந்திரங்களின் குறிப்புகளைப் பார்க்கும் கணினித் திரைகளும் இருந்தன. ‘தற்கொலை செய்ய முயற்சி செய்பவன் கொலை செய்யவும் தயங்கமாட்டான். எதற்கும் அவதானமாக இருக்கவேண்டும்’ என்றுசிவம் யோசித்தபடியிருந்தான். அவனது முகத்தைப் பார்த்தான். அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம் மழையின் பின்னரான காட்டின்பசுமையை கொண்டிருந்தது. அவன் கொலை செய்பவனாய் இருக்க முடியாது. அவன் முகத்தில் தெளிவான ஏரியின் மென்னீல, மென்பச்சை குழைவின் அழகைப் பார்க்ககூடியதாய் இருந்தது. அவன் கொலை செய்யத் துணிந்தவன் அல்லன். மருந்தின் வீரியம் குறையத் தொடங்கியிருந்தது. அவன் சிறிதாக அசைய முற்பட்டான். பின்னர் சிறிது முனகத் தொடங்கினான். கைகளையும், கால்களையும் சற்று கடுமையாக அவன் அசைக்கத் தொடங்கினான். அவனது பிதற்றல் இப்போது

"என்னைப் போக விடுங்கள்" என்றாக இருந்தது.

கண்களைச் சற்றுத் திறந்தான். சுற்றும் பார்த்தான். கண்களில் ஒளியில்லை. சோரும் இமைகளைத் திறந்து தலையைச் சாய்த்து மீளமீளப் பார்த்தான். அவனுக்குப் பார்வையில் இன்னமும் சுடர் இல்லை. அவன் அசைந்தவுடனேயே சிவம் தாதிகளுக்குத் தெரிவித்துவிட்டிருந்தான்.

"யோசிக்காதே! அவன் பிரச்சினையான ஆள் இல்லை. இன்னம் ஒரு மணிநேரத்தில் இன்னுமொரு மருந்து கொடுக்கவேண்டும்" என்றாள் தாதி.

ஜேம்சுக்கு வயது முப்பத்தைந்துதான் இருக்கும். அவனைப் பார்க்க அவனது தந்தை வந்திருந்தார். சில மனிதர்களைப் பார்க்கும்போது நல்ல மனிதர்களாக தெரிந்துவிடுவார்கள் அல்லவா? இவரும் அப்படித்தான் இருந்தார். அந்த மனிதரில் தேனீக்கள், வண்டுகள் மொய்க்கக்கூடும். இனிமையாக இருந்தார். அவரின் குரலால் விழும் வாக்கியங்களும் இனிப்பாகவே கொட்டியது. எண்பதை அண்டிய வயதிருக்கும். ஆறு அடி உயரமான மனிதர். அவருக்குத் தூரப்பார்வை சிக்கல் உள்ளதுபோலும். மகனின் அருகில் சென்று கண்ணாடியைக் கழட்டி அவனின் முகத்தைப் பார்த்தவாறு நின்றார்.

"பிரச்சினை கொடுத்தானா?" என்று சிவத்தைப் பார்த்தார்

"இன்னும் இல்லை" என்று அவரைப் பார்த்து புன்முறுத்தான்.

"இவன் பேசுவதை நிறுத்த முடியுமா என்று சிலவேளைகளில் எண்ணுவதுண்டு. அவனை பேசாது வைத்திருப்பது எவ்வளவு கொடுமை" என்றவாறு மீண்டும் கண்ணாடியை அணிந்தார்.

தாதிகளும், வைத்தியர்களும் அவரை நன்கு அறிந்திருக்கிறார்கள். இந்த சிறு நகர் ஒருவரை ஒருவர் அறிந்து வைத்திருக்கிறது. ஏனைய நகர்களைப்போலவே இங்கும் கியூன், கிங், மெயின் வீதிகளும் இருக்கின்றன. சிறு நகர் சற்று பருத்து விரிவடைந்திருந்தது. அதன் பழைய நகர்ப் பகுதி இன்னமும் அதே பொலிவுடன் இருந்தது. பழைய நகர்ப்பகுதியில் வசிப்பவர்கள் அனேகர் வெள்ளையின முதல் வந்தேறு குடிகள்தான். நகரின் விரிவோடும் வீக்கத்தோடும் வந்தேறிய புதிய குடிகள் நகருக்கு இன்னுமொரு பொலிவை கொடுத்திருந்தனர்.

மெயின் வீதியில் இருந்த லிபேர்ட்டி சினிமாவை எவரும் இலகுவில் மறந்துவிடார்கள். அந்தச் சிறு நகரைச் சூழ்ந்திருந்த கிராமங்களுக்கு அதுதான் சினிமாக் கொட்டகையாய் இருந்தது. அதுமட்டுமல்லாது பிரபல பாடகர்கள் சிலரது ஆரம்பகால கச்சேரிகளும் இங்கே இடம்பெற்றிருக்கின்றன. பல நிகழ்வுகளை அந்த சினிமாக் கொட்டகை கண்டிருக்கிறது. குறைந்தப் பொருட் செலவில் எடுக்கும் சுதந்திர சினிமாக்கள், விவரணப் படங்கள் என்பனவற்றுக்கு லிபேர்ட்டி சினிமா இடம் கொடுத்திருந்தது.சிறு நகரின் புதிய குடிவரவாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த பின்னர் அதன் பிரதிபலிப்பில் சீன, கொரிய, தமிழ், பிரஞ்சு, இத்தாலிய இன்னும் பல்வேறு மொழிப் படங்களும் லிபேர்ட்டி சினிமாவில் ஓடியது. ஐம்பதுகளில் கட்டப்பட்ட சினிமா அது. பெரும் திரையரங்குகளின் தாக்கத்தால் இப்போ சந்தையாக மாற்றம் பெற்றிருக்கிறது. 2004இல் 'மெல்கிப்சனின் த பசன் ஒவ் த கிறைஸ்' இறுதிக் காட்சியை ஓட்டியவர் சாம் தான். இன்னமும் லிபேர்ட்டி சினிமாவின் பெயர்ப்பலகை அந்த கட்டிடத்தில் தொங்கியவண்ணம் வெளியில் அதன் பழைய தோற்றம் மாறாமல் நகரசபையால் காப்பாற்றப்பட்டு இருக்கிறது. இந்த சினிமா அரங்கில் கிட்டத்தட்ட முப்பது வருடங்களுக்கு மேல் பணியாற்றியவர்தான் திருவாளர் சாம். சாமின் ஞாபக சக்தி ஆச்சரியமானது. படங்களின் அனைத்து விபரங்களும் அவரது மூளையின் சேகரத்தில் உள்ளன. அவரது சேகரத்தில் இல்லாத ஒன்று அவரது காதலிகளின் எண்ணிக்கை. ஜேம்சின் தாயும் லிபேர்ட்டியில் பணிபுரிந்தவர்தான். சாமுக்கும் அவளுக்கும் இருபது வயது இடைவெளியிருக்கும். ஜேம்ஸ் பிறந்து ஐந்து வயதுவரை ஒன்றாக இருந்தார்கள். பின்னர் ஜேம்சை சாமிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறிவிட்டாள். அவ்வப்போது அவள் வந்து போவாள். ஜேம்சுக்கு தாயோடு ஈடுபாடு இருந்ததில்லை.

ஜேம்ஸ் சிறுவயதிலிருந்தே லிபேர்ட்டி சினிமாவோடு ஒட்டி வளர்ந்தவன். அங்கு ஓடும் படங்கள் ஒன்றையும் அவன் தவறவிட்டிருக்க முடியாது. வயது வந்தோருக்கான சினிமாக்களைக்கூட அவனால் லிபேர்ட்டி சினிமாவின் கள்ளத்துளைகளுக்கூடாக பார்க்குமளவுக்கு லிபேர்ட்டி அரங்கின் துளைகளை அறிந்தவன். அதனாலோ என்னவோ அவனது நண்பர்கூட்டம் பெருகியிருந்தது. தந்தையின் உதவியுடன் பட புரொஜக்ரை இயக்கவும் கற்றுக்கொண்டான். அவன் பதின்ம வயதிலேயே அரங்கின் சாப்பாட்டுக் கடையில் பகுதி நேரமாக வேலை செய்தான். படிப்படியாக லிபேர்ட்டி சினிமாவைத் தனியே இயக்கக்கூடிய வல்லமை அவனுக்கு இருந்தது. சினிமா எடுக்கவேண்டும் என்ற கனவு அவனுக்கு இருந்தது. அதே கனவோடு இருந்த காதலிகள் அவனுக்கு உற்சாகத்தை கொடுத்தவண்ணமிருந்தார்கள். அரங்கின் மூலைக்குள் அவர்களது காதல் லீலைகள் ஓடிக்கொண்டிருந்தன.

படம் எடுக்கும் அவனது கனவை 'பிரைன் அடம்ஸ்' மாற்றியிருந்தார்.பாட்டுக்காரனாக வரவேண்டும் என்ற கனவு பிறந்திருந்தது.அவன் பியானோவையும், கிற்றாரையும் பழக ஆரம்பித்திருந்தான். படம் ஓடாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதுகளில் அவன் தன்னை பாடகர்'பிரைன் அடம்ஸ்' ஆக உருவகித்து மேடையில் நின்று பாடிக்கொள்வான். வெறும் கதிரைகளிலிருந்து எழும் கரவொலிகளும், விசில் சத்தங்களும் அவனது உச்ச தொனியை மீறி அவனுக்கு கேட்டபடியிருக்கும்.உயர்கல்வியை முடித்து வெளியேறும் நிகழ்வில் அவர்களது இசைக்குழுவான 'இலையுதிர்காலவண்ணங்கள்' தனது முதல் கச்சேரியை நிகழ்த்தியது. அவர்களது இரண்டு புதிய பாடலையும் அறிமுகப்படுத்தி பாடியிருந்தார்கள். காதல் பாடல்கள். 'இலையுதிர்க்காலக் காதலி' பாடல் இளையவர்களின் மனங்களை கவர்ந்திருந்தது. அவனது காதலிகளுக்கும் பிடித்துப்போயிருந்தது. சிறு நகரின் சுற்றாடலில் அவர்கள் நிகழ்ச்சிகள் நடாத்தத் தொடங்கியிருந்தார்கள். மெயின் வீதியில் அமைந்திருந்த 'ஒக் இன் பார் அன்ட் கிரில்' இல் வார இறுதியில் நிகழ்ச்சி செய்வதற்கு ஒப்பந்தமாகி—யிருந்தார்கள். அவர்கள் வெளியிட்ட தனிப்பாடல்கள் சில பெரும் வரவேற்பையும் பெற்றன. அதன் பின்னர் அயர்ச்சியை ஜேம்ஸ் உணரத் தொடங்கினான். படைப்பாளிகளுக்கு வரும் சோர்வுதான். ஒரு படைப்பாளி தொடர்ந்தும் வெளிச்சத்துக்குள் இருப்பது சாத்தியமற்றது.அவன்வெளிச்சத்திலிருக்க விரும்பினான். அது அவனுக்கு சிக்கலைக் கொடுக்கத் தொடங்கி—யிருந்தது. தமது குழுவைப்பற்றியோ தன்னைப்பற்றியோ நெடுநாளாக யாரும் பொருட்படுத்தவில்லை என்பது அவனைக் குடையத் தொடங்கியது.இறுக்கம். தானே தங்களது இசைக்குழு பற்றிய குறிப்புகளை அனாமதேயமாக பத்திரிகைகளுக்கு எழுதினான். நேயர் விருப்பத்தில் தங்கள் பாடல்களை ரேடியோவில் அநாமதேயமாக கேட்டான். பத்திரிகைக்காரர்கள், தொலைக்காட்சிகாரர்களுடன் உறவை வளர்த்துக்கொண்டான். அவர்கள் மூலமாக தன்னை முன்னிறுத்த முயன்றான். அதிலும் அவனால்திருப்தி கொள்ள முடியவில்லை.நிகழ்வுகளில் இரசிகர்களின் அதிருப்தி ஒலி அவனை கோவப்படுத்தத் தொடங்கியது. தன்னில் உள்ள குறைகளை அவன் தேட முற்படவில்லை. போதைக்குள் தன்னை ஆழ்த்தினான். போதைக்குள் வீழும்போதில் அவனுக்கு இரசிகர்களின் விசில் சத்தங்களும், கூக்குரல்களும் மட்டுமே கேட்கத் தொடங்கியிருந்தன. அவன் போதையில் உற்சாகமாக பாடத் தொங்கினான். அதைக் கேட்பதற்கு எவரும் இருக்கவில்லை. அது அவனுக்கு போதுமானதாய் இருந்தது. இசைக்குழு இப்போது கலைந்துபோயிருந்தது.

போதைக்குள் மகன் சிக்கிவிடக்கூடாது என்ற கரிசனையோடு சாம் இருந்தார். அவனின் நிலையை அவர் புரிந்துகொண்டு போதைக்குளிருந்து வெளியேறும் வழிகளைத் தேடத் தொடங்கியிருந்தார். அவரின் பல முயற்சிகள் பயனளிக்கவில்லை. லிபேர்ட்டி சினிமாவில் இடம்பெற்ற ஒரு நகைச்சுவை நிகழ்வு அவனை மாற்றியிருந்தது. தானும் ஒரு நகைச்சுவை யாளன் என்பதை அவன் அறியத் தொடங்கினான். நகைச்சுவையை இவர்கள் போன்று ஒப்புவிக்காமல் தன்னால் புதிதாக செய்ய முடியும் என்று எண்ணத் தொடங்கினான். அதற்கான பிரதியொன்றையும் எழுதித் தன்னைத் தயார்ப்படுத்தினான். புதிய குடிவரவாளர்களின் வருகையால் வெள்ளையர்களின் மனச்சங்கடங்களை நகைச்சுவையாக்கினான். அதற்கு உகந்தாட்போல் பாடல்களை நகைச்சுவையாக மாற்றி பாடினான். வேற்று மொழிக்காரர் பற்றிய நகைச்சுவை வரும் சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு மொழியிலும் உள்ள ஏற்ற இறக்கங்களை அவன் அச்சொட்டாக ஆங்கிலத்தில் கொணர்ந்தான். அதற்கு அவன் பார்த்த வேற்றுமொழிப்படங்கள் உதவியிருக்கவேண்டும். எல்லோர் மத்தியிலும் அது பெரும் வரவேற்பைப் பெற்றது. ஒரு கட்டத்தில் ஒரே நகைச்சுவையை மீளமீள ஒப்புவிப்பதுபோல அவன் உணரத் தொடங்கினான். அதிலிருந்து மீள்வதற்கான முயற்சிகள் அவனுக்கு உதவவில்லை. மனச்சோர்வு. பார்வையாளர்களிடமிருந்தான வரவேற்பும் குறைந்த வண்ணமிருந்தது. அதற்கானக் காரணத்தை அவனால் அறிந்துகொள்ள முடியவில்லை. நகைச்சுவையால் எழும் மகிழ்வு இப்போது அருகி வன்மமாய் மாறியிருந்தது.

"புதிய குடிவரவாளர்களுக்குக் கனேடிய கலாச்சாரம் தெரியாது. அவர்களுக்கு எனது பகடியும் விளங்காது"

என்று கத்தி வெறுப்பேற்றி பார்வையாளர்களினால் மேடையால் கலைக்கப்பட்டதோடு அவனது நகைச்சுவை அளிக்கைகள் முடிவுக்கு வந்தன.நகைச்சுவை அரங்குகள் அவனை நிராகரித்தன. ஏற்கனவே முன்பதிவாகியிருந்த நிகழ்வுகள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டன.

அவனை இப்போது இந்த சிறு நகர வீதிகளில் காண முடிகிறது. இலவசமாக யாராவது அவனுக்கு மதுபானத்தையோ, போதைப் பொருட்களையோ கொடுக்கிறார்கள். லிபேர்ட்டி அரங்கில் முன்னே—யிருந்த வாங்கு அவனது மேடையாக மாறியிருந்தது. அவ்வப்போது ஏதாவது முயற்சி செய்வான். பாடலை முனகுவான். எல்லோரும் விரும்பும் அவனது 'இலையுதிர்க்காலக் காதலி' பாடலை பாட விளைவான். எந்த சுரங்களும் கூடாமல் கலைந்து போவான். அவன் போதையில் தெருக்களில் படுத்திருந்த பொழுதுகளில் அவனது பாடலுக்காக, பகிடிக்காக அனைவரும் எழுந்து நின்று கைதட்டி மகிழ்ந்தார்கள். கூக்குரலும், சிரிப்பொலியும் கேட்டபடியிருந்தன. அப்போதெல்லாம் அவனுள் விளித்திருந்தான்.

அவன் முன்பு ஈடுபாடு காட்டிய விடயங்களுக்கூடாக அவனை மீட்டு எடுப்பதற்கு சாம் முயன்று கொண்டிருந்தார். அவன் சாரமற்று அரற்றும் விடயங்களைப் பகிடி மிக்கவை என்று சாம் விழுந்து விழுந்து சிரித்துப் பார்த்தார். அவன் சுரமற்றுப் பாடும் பாடல்களைப் புகழ்ந்து தள்ளினார். அவருக்குத் தெரிந்த கீதங்களை ஜேம்சுக்கு முன்னால் பியானோவில் வாசித்தார். அவனின் பாடல்களை ஒலிக்கவிட்டார். அவனால் போதைக்குள்ளால் மீள முடியவில்லை. அவனில் எந்தவொரு மாற்றத்தையும் அவரால் தரிசிக்க முடியவில்லை.

அவன் எழுந்திருந்தான். அவனுக்கு பசித்திருந்தது.

"அப்பா எனக்கு ஒரு சன்விஜ் செய்து தரமுடியுமா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைப் பார்த்தார். துருதுருவென கேள்விகளோடு அவரைச் சுற்றி ஓடித்திரிந்த சிறுவன் மீண்டிருந்தான். அவனுக்கு அப்போதெல்லாம் அடிக்கடி பசிக்கும். ஏதாவது செய்து தரும்படி சாமைக் கேட்டவண்ணமிருப்பான். சன்விஜ்ஜையும், கோப்பியையும்; தயார் செய்து சாப்பாட்டு மேசையில் வைத்தார். அவனுக்கு எதிர்க் கதிரையில் தானும் அமர்ந்தார். இப்படி அமர்ந்து ஆண்டுகள் ஆகின்றன. பல விடயங்களை அவர்கள் இருவரும் இவ்வாறு இருந்துதான் பேசியிருக்கிறார்கள். அவன் சாப்பிடுவதைப் பார்த்தவாறு இருந்தார். மார்பில் அமர்ந்து முகத்தில் முத்திமிட்ட ஜேம்சின் பிஞ்சு முகம் அவருக்குத் தோன்றிற்று. ஆத்மார்த்தமாக அவனோடு கதைக்கக்கூடிய சந்தர்ப்பமாக அவர் இதை உணர்ந்தார்.

"மகன் உங்களோடு கதைக்கலாமா?" என்றார் சாம்

அவன் 'ம்' என்றவாறு கோப்பியை அருந்தினான்.

"மகன்! ஒருநினையாத் தருணத்தில் நான் பார்த்த படங்களின் காட்சியொன்று முன்னே தோன்றும். வசனமொன்று பேசிச் செல்லும். அல்லது பின்னணி இசைமனதை வருடும். அந்தப் படைப்பாளிகளை நினைந்து கொள்வேன். அவர்களது மேன்மையைப் போற்றுவேன். இந்தக் கணம்வரை என்னோடு அவை பயணிக்கின்றன. இவையெல்லாம் எப்படி நிகழ்கின்றன?" சாம் மகனைப் பார்த்தார். அவன் தந்தையைப் பார்த்தவாறு இருந்தான்.



"படைப்பாளி படைப்பின் உரிமையாளராய் இருந்துவிட முடியுமா?. மகன்! அது மீளமுடியாத அயர்ச்சியைப் படைப்பாளிக்குக் கொடுத்துவிடும். படைப்பை அதன் இயல்போடு சேதனமாய் விட்டுவிட வேண்டும். அதுகாலத்துக்கும் பயணிக்கும். நீ பொதுவெளியில் ஊடகங்களுக்கூடான மதிப்பீட்டில் உன்னை நிலைநிறுத்த முயற்சிக்கிறாயா? மகன்! இந்தக் கணத்தில் உங்கள் பாடலை பலர் கேட்டுக்கொண்டு இருக்கக்கூடும். இந்தக் கணத்தில் பலர் உங்கள் பாடல்களை முணுமுணுத்தபடி இருக்கக்கூடும். பாடலின் வரிகளை வியக்கக்கூடும். உங்கள் பகடிகளை நினைந்து இந்தக் கணத்தில் பலர் சிரித்துக்கொண்டிருக்கக்கூடும். அதுதான் படைப்பின் துடிப்பு. படைப்பின் வாழ்வு."

ஜேம்சின் முகத்தில் தேர்ச்சியிருந்தது. தந்தையை உற்றுப் பார்த்தவாறே இருந்தான். அந்த முகத்தில் குழந்தையின் ஆச்சரியம் இருந்தது.

"கலை, இலக்கியங்கள் யாரோ ஒருவரை ஏதோ பொருட்டு ஆட்கொண்டபடியேயிருக்கும். உன்னை யாரும் கைவிட்டதாக எண்ணாதே. நீ நல்லதொரு கலைஞன்"

சாம் மகனைப் பார்த்தார். அவன் கண்களில் நீர் வழிந்திருந்து. மெல்லவாக எழுந்து தந்தையின் பின்னால் சென்று அவரை அரவணைத்து தலையில் முத்தமிட்டான்.

"அப்பா நீங்களொரு அறிவாளி. உண்மையாக. நீங்கள் தத்துவஞானியாக இருக்கவேண்டும். நன்றி அப்பா"

என்றவாறு தந்தையை தழுவியபடி மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டிருந்தான் ஜேம்ஸ். சாமுக்கு சற்று ஆறுதலாக இருந்தது. அவன் தந்தையை இப்படி அரவணைத்து முத்தமிட்டு ஆண்டுகள் ஆகின்றன. அதன் பின்னர் அவனில் சிறு மாற்றம் தெரிந்தது.

சாம் அவனை வீட்டில் தன்னோடு வைத்திருந்தார். போதைப் பொருட்களிலிருந்து அவன் சற்று அகற்றிருந்தான். சாராயமும், பியரும் அவனுக்கு அளந்து கொடுத்தார். ஓரளவு பயனளித்தது. அவன் போதைப் பொருட்களிலிருந்து முற்றிலும் விலகியிருக்கக்கூடியதாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. மருத்துவர்களின் ஆலோசனையில் சில மருந்துகளையும் உட்கொள்ளத் தொடங்கியிருந்தான். வீட்டுக்குள் பொழுதுப் போக்குவதற்கு அவனுக்கு 'சட்டலைற் டிவீ' உதவியது. இருபத்திநான்கு மணிநேரமும் தொலைக்காட்சி இயங்கியபடியிருந்தது. அவன் எதையும் புறந்தள்ளாது பார்த்தபடியிருந்தான். தொடர்ச்சியாக அவனால் தொலைக்காட்சியைப் பார்க்கக்கூடியதாய் இருந்தது. மொழிகள், நிகழ்ச்சிகள் அவனுக்குச் சிக்கலாக இருக்கவில்லை. கண்வெட்டாது அவற்றைப் பார்க்க அவனால் முடிந்தது. சாமுக்கு சங்கடமாய் இருந்தாலும் வீட்டுக்குள் தன்னோடு இருப்பதில் அவருக்கு மகிழ்ச்சி இருந்தது. தொழில்நுட்ப கோளாறால் 'சட்டலைற் டிவீ' நிறுத்தப்பட்டபோதுதான் அவனில் உண்டான மாற்றம் சாமைத் திகைக்க வைத்தது. தொலைக்காட்சிபோல் அவன் வேறுவேறு மொழிகளில் பேசத்தொடங்கி—யிருந்தான். திடீர் திடீரென மாற்றப்படும் 'சனல்கள்'போல் அவனும் மொழிகளுக்குள் மாறினான். இருபத்திநான்கு மணிநேரமும் சலிக்கமால் பேசிய வண்ணமிருந்தான். தொலைக்காட்சி இயங்க ஆரம்பித்தபோதுதான் அவன் பேசுவதை நிறுத்திக்கொண்டான்.

தொலைக்காட்சி குழம்பும் வேளைகளில் அவனின் பேச்சை நிறுத்துவதற்காக "எதையாவது எழுது" என சாம் கொப்பியையும் பல் நிறப்பேனைகளையும்; ஜேம்சிடம் கொடுத்தார். அவன் எழுதத் தொடங்கினான். புதிய கொப்பிகள் வந்து சேர்ந்தன. அவற்றிலும் தொடர்ந்து எழுதினான். புதிய பேனாக்களும் வந்தன. ஆயிரமா—யிரம் பக்கங்களை எழுதி முடித்தான். சாமுக்கு அவனது எழுத்துகள் எதுவும் விளங்கவில்லை. சில இடங்களில் ஆங்கிலம் தெரிந்தது. பெரும்பான்மை வேற்று மொழிகள்போல் தோன்றின. ஒவ்வொரு பத்தியும் வேறுவேறு மொழிகளில் இருந்தன. ஒரே பத்தி வேறுவேறு வண்ணங்களால் எழுதப்பட்டிருந்தன.

**எழுத்துக்களின் அழகு அவனை ஈர்க்கத் தொடங்கியது. உலகின் அனைத்து மொழிகளின் கோடுகளும், வளைவுகளும், புள்ளிகளும் அதில் இருந்தன. அவன் கண்களுக்குத் தமிழ் எழுத்துப்போல் சில தோன்றின. கோடுகளும் வளைவுகளும் புள்ளிகளும் கலைத்துவ நேர்த்தியின் கோர்ப்பில் இருப்பதுபோல் தோன்றிற்று.**

அவை கிறுக்கல்கள் அல்ல. எழுத்துக்கள் செம்மையாய் அச்செழுத்தாய் எழுதப்பட்டிருந்தன. வைத்தியர்கள் ஜேம்சின் மாற்றங்களைப் புரிந்து கொள்ள முடியாதிருந்தனர். புதிய மாத்திரைகளை பரிந்துரைத்தார்கள். அவன் உணர்ச்சியற்ற தசைப் பிடிப்புள்ள மனிதனாய் மாறியிருந்தான்.

'ரூச் பள்ளத்தாக்கின் மரங்கள் இலையுதிர் கால நிறங்களை கொண்டிருந்தன. வண்ணம்கொண்ட இலைகள்சூரிய ஒளியில் பளிங்காய் பிரகாசித்தன. முந்திய இலைகள் வீழ்ந்து தரையில் கம்பளம் விரிக்க தயாராயிருந்தன. இலையுதிர் காலத்தின் நிறங்கள் அவன் மனதின் இழைகளோடு குழைந்து இயற்கையோடு இசைந்திருந்தான். நீண்ட நாட்களின் பின்னர் அவனுக்கு பள்ளத்தாக்குக்குள் நடக்கவேண்டும் போலிருந்தது. ரூச் ஆற்றின் கரையே ஜேம்ஸ் நடக்கத் தொடங்கினான். அவனுக்குள் 'இலையுதிர்க்காலக் காதலி' பாடல் ஒலித்துக்கொண்டிருந்தது. இளமைக் காலத்தில் பெரும் பகுதி அவனும் நண்பர்களும் இந்த பள்ளத்தாக்குக்குள் செலவழித்திருக்கிறார்கள். 'மவுன்டின் பைக்' ஓட்டத்திற்கு இங்கு இயற்கையாய் அமைந்த பாதைகள் இளைஞர்கள் மத்தியில் பிரபல்யம். இயற்கை அவர்களுக்காக சில மறைவு இடங்களைக் கொடுத்திருந்தது. காதலியை இலையுதிர்கால வண்ணங்களாய் வர்ணிக்கும் பாடலை வீடியோவாகப் பதியும் முயற்சியையும் இங்கேயே செய்தார்கள். நடக்கத் தொடங்கினான். ஆற்றின் இரைச்சல் அவனைத் தொடர்ந்தபடியிருந்தது. ஆச்சரியத்தோடு ஒரு கணம் உறைந்துபோய் நின்றான்.

"இலையுதிர் வண்ணமே! என் காதலியே! வண்ணத்தின் நாட்டியமே" என்று உரக்கப் பாடினான்.

மாலை. மேற்கு வானம் செம்மை கொண்டிருந்தது. அவன் முன்னே வண்ணங்கள் மாயம் கொண்டன. அவன் நடக்கத் தொடங்கினான். அவன் கால்களில் ஈரம் ஏறிக்கொண்டது. ஆற்றைக் கடந்திருக்கவேண்டும். வண்ணங்களின் மாயம் அவனை அழைத்துச் சென்றது. இப்போது அவனை ஆறு பின்தொடர்ந்தது. முதிர் இலைகள் அவன் மேல் விழுந்தபடியிருந்தன. அவனைத் தொற்றியபடி இலைகள் தொடர்ந்தன. வண்ணங்களின் சுகிப்பில் திளைத்தபடி நடந்தான். மேட்டில் ஏற ஆரம்பித்தான்.ஆற்றைக் கடக்கும் பாலத்தின் ஒரு கரையை வந்தடைந்திருந்தான். பாலத்தை தாங்கியபடி—யிருந்த தூண் ஒன்று நோக்கி பாலத்தில் நடக்க ஆரம்பித்தான். பாலத்தால் இறங்கிதூணிலிருந்த குந்தில் அமர்ந்து செவ்வானத்தின் பின்னணியில் இலையுதிர் வண்ணங்களோடு ஆடும் காதலியின் நடனத்தைப் பார்த்தவாறு இருந்தான். ஆற்றின் படுக்கையிலிருந்து ஐம்பதடி உயரமாவது இருக்கும். தற்கொலைப் பாதுகாப்பிற்காகப் போடப்பட்டிருந்த வலைகள் அவனுக்குக் கீழே தொங்கியபடியிருந்தன. அவனை தீயணைப்புப் படையினர் மீட்டபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபம் அவனை ஆட்கொண்டது.

"என் வண்ணங்களை களைத்தவர்கள்" என்று அவர்களை அவன் திட்டியபடியிருந்தான்.

தற்கொலை முயற்சி. மனநிலைக் கோளாறு. அதற்காகத்தான் வைத்தியசாலையில் படுக்கையோடு கட்டப்பட்டிருக்கிறான். அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த மருந்துகளின் தீரம் சற்று குறைந்திருக்க வேண்டும். அவன் தந்தையைப் பார்த்தான்.

"ஜேம்ஸ்!எப்படி இருக்கிறாய்? நான் அப்பா" என்றார் சாம்.

"நானும் அப்படித்தான்; நினைக்கிறேன்" என்றான் ஜேம்ஸ்.

சாம் வாய்விட்டுச் சிரித்தார். அவன் சிவத்தைப் பார்த்தான். ஏதோ கதைக்கத் தொடங்கினான். அவனுக்கு எதுவும் விளங்கவில்லை.

"நீ கூறுவது எதுவும் எனக்கு விளங்கவில்லை" என்று சிவம் அவனுக்கு திரும்பத் திரும்ப கூறியபடியிருந்தான். அவன் தொடர்ந்து அவ்வாறே பேசியவாறு இருந்தான்.

"நீ என்ன மொழியில் பேசுகிறாய் ஜேம்ஸ்? நீ பேசுவது அவனுக்கு எதுவும் புரியவில்லையாம்" என்றார் சாம்

"நான் இந்திய மொழி பேசுகிறேன்" என்றான் ஜேம்ஸ்

"நான் இலங்கைத் தமிழர். இந்தியாவில் பல மொழிகள் உண்டு" என்றான் சிவம்.

அவன் திரும்பவும் அவ்வாறே பேசத் தொடங்கினான். சிவம் அவனோடு தமிழில் பேசத் தொடங்கினான். அவன் சிவம் போன்று ஏற்ற இறக்கத்தோடு பதில் அளிப்பதுபோல் எதையோ பேசினான். அவர்களின் உரையாடலை பார்த்தபடியிருந்தார் சாம்.

"உனது மொழி அவனுக்குத் தெரிகிறதா?" என்றார் ஆர்வமாக

இல்லை என்று அவருக்குச் சொல்ல முடியாதுசிவம் புன்னகைத்தான்.

"ஹாய் சாம், ஹாய் ஜேம்ஸ்" என்றவாறு மருத்துவர் அறைக்குள் நுழைந்தார்.

அவர் சீனப்பின்னணி கொண்டவராக இருக்கவேண்டும்.

"ஜேம்ஸ் எப்படி இருக்கிறீர்கள்?" என்றவாறு மருத்துவர் ஜேம்சின் அருகில் சென்றார்.

அவன் சீனத்து மொழியைக் கதைக்கத் தொடங்கி—யிருந்தான்.

"இவர் என்ன மொழி கதைக்கிறார்?" என்று சாமைப் பார்த்துக் கேட்டார் மருத்துவர்.

"ஜேம்ஸ் நீ என்ன மொழி கதைக்கிறாய்? மருத்துவருக்கு விளங்கவில்லை. ஆங்கிலத்தில் கதைப்பாயா?" என்றார் சாம்.

"நான் சீன மொழி கதைத்தேன்" என்றான் சாம்.

"கொரிய மொழி தெரியுமா ஜேம்ஸ்?" என்று கேட்டார் மருத்துவர்.

அவன் கொரிய மொழி போன்று கதைக்கத் தொடங்கினான்.

"நீங்கள் கதைப்பது கொரிய மொழியில்லை. எனக்கு எதுவும் விளங்கவில்லை" என்றார் மருத்துவர்.

மருத்துவர் ஆங்கிலத்திலும் ஜேம்ஸ் கொரிய மொழியிலும் கதைத்தவாறு இருந்தார்கள். மருத்துவர் புதிய மருந்துகளைப் பரிந்துரைத்துவிட்டு அகன்றார். ஜேம்ஸ் இப்போ சிவத்தின் பக்கம் திரும்பி கதைக்கத் தொடங்கியிருந்தான். தாதி வந்து சேர்ந்தாள். அவளோடு டகாலோவில் கதைக்கத் தொடங்கினான். அவளும் டகாலோவில் கதைத்தாள்.

"உங்கள் மொழி அவனுக்குத் தெரிகிறதா" என்று ஆர்வத்தோடு தாதியைக் கேட்டார் சாம்

"மருந்து கொடுத்திருக்கிறேன் அவர் தூக்கத்துக் போய்விடுவார். நாளைக்குச் சீராகக் கூடும்" என்று தாதி நகர்ந்தாள்.

அவன் சிவத்தைப் பார்த்தான். எதையோ சொன்னான். மயக்கம் அவனை அரவணைக்கத் தொடங்கியது. மௌனமானான். அறை நிசப்தமாய் இருந்தது.சாம் சிவத்திடம் ஒரு கொப்பியை நீட்டினார்.

"இது ஜேம்ஸ் எழுதியவை. இதற்குள் உங்கள் மொழி இருக்கிறதா பார்" என்றார்.

எழுத்துக்களின் அழகு அவனை ஈர்க்கத் தொடங்கியது. உலகின் அனைத்து மொழிகளின் கோடுகளும், வளைவுகளும், புள்ளிகளும் அதில் இருந்தன. அவன் கண்களுக்குத் தமிழ் எழுத்துப்போல் சில தோன்றின. கோடுகளும் வளைவுகளும் புள்ளிகளும் கலைத்துவ நேர்த்தியின் கோர்ப்பில் இருப்பதுபோல் தோன்றிற்று. அவன் கொப்பியை வேறுவேறு கோணங்களில் வைத்துப் பார்த்தான். அவை நுட்பமாய் புதிய புதிய பரிமாணங்களைக் காட்சிப்படுத்தியவாறு இருந்தன. ஆச்சரியம். வளைவுகளும், கோடுகளும், புள்ளிகளும், நிறங்களும் பிணைந்து இழைந்திருந்தன. அபத்தத்தின் அற்புத நேர்த்தி. நிறங்களின் மாட்சிமை. நீண்ட நேரமாக ஒவ்வொரு பக்கத்தையும் பார்த்தவாறு இருந்தான் சிவம்.

"நீ அறிந்த மொழி ஏதும் உண்டா?" என்று கேட்டார் சாம்

பக்கங்களைப் புரட்டியபடியே அதற்குள் ஆழ்ந்துபோயிருந்தான் சிவம். சாம் மீளவும் கேட்டார். பக்கங்களுக்குள்ளால் கண்களை அகற்றாது

"அனைத்தும் நல்ல ஓவியங்கள்" என்றான் சிவம்.

—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கட்டுரை: **மு. புஸ்பராஜன்**

# இனப்பிரச்சினை:
# வரலாறும் இலக்கியமும் - 16

சிறிலங்கா இராணுவம் 'சத்ஜெய' நடவடிக்கைக்குப் பின்னர் மேற்கொண்ட சில தாக்குதல்களில் சில வெற்றியையும் அதற்கு நிகரான பின்னடைவுகளையும் சந்தித்தனர் . அத்துடன் இராணுவம் வவுனியா— மன்னார் வீதியில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையும் வெற்றிபெற்றது. இதனைத் தொடர் ந்து இராணுவம் பெரும் எடுப்பிலான ஒரு படை நடவடிக்கைக்குத் தயாரானார்கள். அதற்கு 'ஜெயசிக்குறு' எனப் பெயரிட்டனர். இந்தப் படை நடவடிக்கைக்குப் பின்னணியாக இரு காரணிகள் இருப்பதாகச் 'சரிநிகர் ' பத்திரிகை கருதுகிறது. "வவுனியா விமானத்தளம் மீது புலிகளின் ஆட்டிலறி எறிகணைகள் வந்துவிழத் தொடங்கியுள்ளதால் வவுனியாப் பிரதேசத்தின் பாதுகாப்பு நிலையைப் பேணுவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. புலிகளைக் குறைந்த பட்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறிகணைகள் வீசக்கூடியத் தூரத்திற்கு அப்பால் விரட்டுவது உடனடி அவசரமாக உள்ளது. இரண்டாவது தனிப்பட்ட முறையில் பாதுகாப்பு அமைச்சருக்கு ஏற்பட்ட அரசியல் நெருக்கடி. அண்மையில் கொழும்பில் நடைபெற்ற கொலை ஒன்றில் அமைச்சரின் மகன் சம்மந்தப்பட்டிருந்த போதிலும் அவரது மகன் மீதான எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை. யுத்தம் தீவிரமுறும் பட்சத்தில் இப்போது எதிர் கட்சியினர் அவர் மீது எழுப்புகின்ற கேள்விகள் ஏற்படுத்தக்கூடிய அரசியல் நெருக்கடியைக் குறைத்துக் கொள்வது இலகுவாக இருக்கும். வன்னியில் ஓரளவு கணிசமான வெற்றி கிடைக்கும் பட்சத்தில் அவர் மீதான தாக்குதல்கள் அவ்வளவு தூரம் எடுபடாது என்பது அவரது கணிப்பு. (வன்னி ஆக்கிரமிப்பு யுத்தத்தை நிறுத்து— சரிநிகர் இதழ் 122 மே 23 —ஜுன் 04 —1997)

“இந்த ஜெயசிக்குறு நடவடிக்கை வன்னியின் இதயபூமியில் இரண்டு போர் முனைகளைத் திறந்துவிட்டது. ஒன்று கண்டி — யாழ்ப்பாணம் நெடுஞ்சாலையிலுள்ள ஓமந்தை நொச்சிமோட்டைப் பகுதியிலும் இரண்டாவது நெடுங்கேணிக்கு அண்மை—யிலுள்ள கெண்ட் — டொலர் பண்ணைப் பகுதியிலும் போர் முனைகள் திறக்கப்பட்டன. வன்னியின் மையப் பகுதியூடாக வவுனியாவில் இருந்து கிளிநொச்சிவரை செல்லும் 80மீற்றர் தூரமான நெடுஞ்சாலையைக் கைப்பற்றுவதே இப்படையெடுப்பு நடவடிக்கையின் தந்திரோபாய நோக்கமாகும். வன்னிப் பிரதேசத்தை இரு பிரதேசங்களாகப் பிளவுபடுத்தி விடுதலைப்புலிகளின் இராணுவத் தளங்களை அழிப்பதே இப்படையெடுப்பின் அந்தரங்கத் திட்டமாகும். இலங்கை இராணுவப் பிரிவின் தகவலின்படி திரு பிரபாகரனின் தளமும் வன்னியில் மையப் பகுதியில் அமையப் பெற்றிருக்கிறது என்பது அரசாங்கத்தின் கணிப்பு. எனவே புலிகளின் தலைவரது பிரதான தளத்தைத் தேடி அழிப்பதும் இப்படையெடுப்பின் முக்கிய குறிக்கோள் ஆகும்.”[1] (சு.வே. பக்: 436)

நாள் நேரம் பார்த்து பௌத்தத் துறவிகள் பிரித் ஓத 1997 மே 13 இல் ஆரம்பித்த இந்த இராணுவ நடவடிக்கை கிட்டத்தட்ட 20.000 இராணுவத்தினர் விமானக்குண்டு வீச்சுக்களின் உதவியுடன் பீரங்கிகள், ராங்கிகள் சகிதம் இரு முனைகளிலிருந்து முன்னேறினர். இதை எதிர்கொள்ள மரபுவழிப் யுத்தத்தில் தேர்ச்சிபெற்ற புலிகளுடன், கிழக்கு மாகாணத்தின் போராளிகளும் இணைந்து கொண்டனர் . ஒருங்கிணைப்புத் தளபதியாக கேணல் கருணா அம்மானும் களநிலைத் தளபதிகளாகக் கேணல் திலீபன் கேணல் ஜெயம் ஆகியோர்கள் செயற்பட்டனர் .

“போர் தொடங்கிய மூன்றாம் நாள் ஓமந்தைக்கு அண்மையிலுள்ள குருவிக்குளத்தில் கடும் மோதல் ஏற்பட்டது. இருதரப்பு இழப்புக்களும் உடனடியாக அறியமுடியவில்லை. இராணுவத்தினர் அங்குலம் அங்குலமாக நகர்கையில் இராணுவத்தின் தகவலின்படி விடுதலைப்புலிகளின் தற்கொலைப் படைத் தாக்குதலில் இரண்டு ராங்கிகள் அழிக்கப்பட்டதாகவும் இறுதியில் படையினர் பலத்த இழப்புக்களுடன் ஓமந்தையையும் நெடுங்கேணியையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாக அறிவித்தனர். இச்சண்டையில் இராணுவத்தினா 85 பேர்கள் கொல்லப்பட்டனர். காயமடைந்த 600 பேர்களில் 100 பேர்கள் படுகாயமும் அடைந்தனர்”[2] (போ.ச.பக் 523—24)

‘இரண்டாம் கட்டமாக 1997 மே 24இல் இரம்பைக்குளம் பகுதியைக் கைப்பற்றும் சண்டை உக்கிரம் அடைந்தது. அன்றைய தினம் இரு ராங்கிகளும் ஒரு கவசத் துருப்புக்காவியும் அழிக்கப்பட்டன. 25க்கு மேற்பட்ட படையினரும் பலியாகினர் . புலிகள் எறியும் ஏவுகணைகளும் கவச எதிர்ப்பு ஆயுதங்களும் ஜெயசிக்குறு படையினரின் போர் வலுவைப் பெரிதும் பாதித்தன. ஆள் இழப்புக்களும் ராங்கி இழப்புக்களும் தொடர்ச்சியான நகர்வுக்குச் சவாலாக எழுந்தன. இதனால் படைநகர்வைச் சற்று நிறுத்தவேண்டிய நிர்ப்பந்தம் படைத் தலைமைக்கு எழுந்தது. சுமார் பத்து நாட்கள் எறிகணைத் தாக்குதல்களுடன் கழிந்தது. மீண்டும் 1997 ஜுன் 03இல் ஓமந்தை முனையிலிருந்து படையினர் சமரை ஆரம்பித்தனர் . அடுத்த சில நாட்கள் விளக்குவைத்தகுளம் சந்திக்கு அண்மைவரை படையினர் நகர்ந்தனர். 1997 ஜுன் 06இல் பனிக்கநீராவி நோக்கிய ஒரு திடீர் நகர்வை இராணுவம் மேற்கொண்டது. அது புலிகளின் கடுமையான எதிர்ப்பிற்கு இலக்கானது. இச்சமரில் 20 படையினர் பலியாகியதுடன் 40 இக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். அதனைத் தொடர்ந்து பெரியமடு பகுதியைக் கைப்பற்றி—விட்டதாகவும்... அடுத்து புளியங்குளத்தைக் கைப்பற்றப் போவதாக படைத்தலைமை அறிவித்தது. (ஜெயசிக்குறு நடவடிக்கை களவெற்றிகள் முடிவு பற்றிய சிறப்புப் பார்வை — திரு வேந்தனார். —தாரகம்.கொம் 04—12—2019)

“ஜெயசிக்குறு படையின் கட்டளைத் தலைமையகம் தாண்டிக்குளத்தில் அமைந்திருந்தது. படை நடவடிக்கைக்குத் தேவையான வெடிபொருட்களும் மருந்துப் பொருட்களும் இப்பகுதியிலேயே களஞ் சியப்படுத்தப்பட்டிருந்தன. 1997 ஜுன் 10 அன்று தாண்டிக்குளம் — நொச்சிமோட்டைப் பகுதியில் உள்துழைந்து தாக்கும் அதிரடித் தாக்குதலைப் புலிகள் நிகழ்த்தினர் . இத்தாக்குதலில் பல்லாயிரம் எறிகணைகளும் பல நூறு யுத்த ராங்கிக் குண்டுகளும் தீயில் அழிந்தன. பல இராணுவ வாகனங்கள் அழிக்கப்பட்டன. 400 படையினர் கொல்லப்பட்டு 570இக்கும் அதிகமானோர் காயமடைந்தனர் . ஓமந்தையில் இருந்த உதவிக்கென நொச்சிமோட்டைப் பகுதிக்குள் நுழைய முயன்ற படையினர் மீது தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. குறைந்தது 24மணி நேரம் தாண்டிக்குளம் நொச்சிமோட்டைப் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. இந்தத் தாக்குதலில் மூன்று கரும்புலிகள் உட்பட 80 போராளிகள் வீரச்சாவடைந்தனர் . (விடுதலைப்புலிகள் — வைகாசி — ஆனி இதழ் — 1997)

தாண்டிக்குளம் தாக்குதலின் பின்னர் இலங்கை அரசு ஜெயசிக்குறு மூலம் ஏற்கனவே கைப்பற்றியிருந்த பண்றிக்கெய்தகுளம் பனிக்கர் நீராவி, பெரியமடுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியில் அமைந்திருந்த படைத்தொகுதியின் மீது விடுதலைப்புலிகள் 1997 ஜூன் 24இல் மீண்டும் ஒரு வலிந்த தாக்குதலை நடத்தினர். இதில் புலிகளால் 120 எம்.எம் பீரங்கியொன்று கைப்பற்றப்பட்டது. பின்னர் குறிப்பிட்ட இடத்தைவிட்டுப் பின்வாங்கினர். இத்தாக்குதலை வழிநடத்திக்கொண்டிருந்த தளபதி லெப். கேணல் தனம் களத்திலேயே கொல்லப்பட்டார். பெரியமடுத் தாக்குதலின் பின்னர் புலிகள் ஓமந்தையில் ஆட்டிலறிகள் உள்ளடங்கிய இராணுவக் கூட்டுத்தளம் மீது 1997 ஒகஸ்ட 01இல் தாக்குதல் நடத்தினர். ஏனைய வலிந்த தாக்குதல்களோடு ஒப்பிடுகையில் இது புலிகளுக்கு எதிர் பார்த்த பலனைத் தராது தோல்வியில் முடிந்தது. இத்தாக்குதலில் விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து செயற்பட்ட சிறந்த பாடகரான சிட்டு உட்பட 130 பேர்கள் கொல்லப்பட்டனர்.

1997 ஒகஸ்ட் 19 அன்று இராணுவத்தினர் புளியங்குளம் நோக்கிய படை நகர்வினை மேற்கொண்டனர். நெடுங்கேணியிலிருந்து புளியங்குளத்திற்கு ஒரு வீதி செல்கிறது. அதன் வழியாக நெடுங்கேணியிலிருந்தும் கண்டி வீதி வழியாக ஓமந்தையிலிருந்தும் புளியங்குளம் நோக்கிப் படையினர் நகர்ந்தனர். புளியங்குளம் சந்தியை அண்மித்த இராணுவம் விடுதலைப்புலிகளால் மறிக்கப்பட்டுக் கடும் சமர் நடந்தது. மூன்று மாதங்கள் கடந்தும் இராணுவம் புளியங்குளத்தை கைப்பற்ற முடியவில்லை. எனவே "புளியங்குளத்தைத் தனிமைப்படுத்தித் துண்டாடும் தந்திரோபாய நோக்கத்துடன் 1997 செப்ரெம்பர் 10 அன்று சிறப்புக் கொமாண்டோ அணியொன்று புளியங்குளத்திற்கு வடக்கே 5 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள புத்தூர் சந்தியைக் கைப்பற்றியது. அன்றிரவே புத்தூர் சந்தியில் நிலைகொண்டிருந்த படையினர்மீது முறியடிப்புத் தாக்குதலைப் புலிகள் மேற்கொண்டு முறியடித்தது மட்டுமல்ல புளியங்குளத்தை அசைக்கமுடியாத பாதுகாப்பு அரணாகத் தக்கவைத்துக் கொண்டனர்."[3] (போ. ச —243)

"1997 ஒக்டோபரில் இராணுவம் ஏ9 நெடுஞ் சாலைக்குக் கிழக்குப் பக்கமாக உள்ள மாங்குளம் — ஒட்டிசுட்டான் வீதியிலுள்ள கரிப்பட்ட முறிப்பு என்னும் இடத்திற்கு நகர்ந்தது. கனகராயன் குளத்தில் நிலைகொண்டிருந்த புலிகள் அணிக்கு இந்த நகர்வு ஆபத்தாக மாறியது. எனவே மாங்குளம் சந்திக்கு புலிகள் அணி நகர்ந்தனர். இச்சண்டையில் அரச படைகள் மாங்குளம் ஒட்டிசுட்டான் வீதியில் உள்ள கரிப்பட்டமுறிப்பு என்ற இடத்தைக் கைப்பற்றிக்கொண்டனர். இதே காலப்பகுதியிலே மன்னாரிலிருந்து பூநகரியூடாக பாதையொன்றைத் திறக்க இராணுவம் முயன்றது. புலிகளிடம் உள்ள ஆட்பலம் இச்சமரை எதிர்கொள்ளப் போதாது என்பது இராணுவத்தினரின் கணிப்பாக இருந்தது. 'ரணகோச' என்ற குறியீட்டுப் பெயருடன் 1, 2, 3 என்று தொடர் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதுவும் புலிகளால் முறியடிக்கப்பட்டது. 4[4] (போ.ச. பக்:54)

கரிப்பட்டமுறிப்புச் சந்தியும் அதன் சுற்றுப்புறங்களும் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து "மாங்குளத்தித்துக் கிழக்கே 5மைல் அருகாமையில் ஜெயசிக்குறு படையணிகள் நிலைகொண்டமை புலிகளுக்குச் சவாலாக அமைந்தது. புதிய நிலையில் சில தந்திரோபாயப் பின்வாங்கல்களைச் செய்து மாங்குளத்தைப் பலப்படுத்தப் பிரபாகரன் முடிவெடுத்தார். புளியங்குளம் பகுதியில் நிலைகொண்டிருந்த படையணிகளைப் பின்வாங்கச் செய்ததுடன் மாங்குளம் பகுதியை இறுக்கமான பாதுகாப்பு அரணாக மாற்றியமைத்தார்.'[5] (போ.ச.546) புலிகளின் விலகலைத் தொடர்ந்து படையினர் கனகராயன் குளத்தைக் கைப்பற்றும் நடவடிக்கையை மேற்கொண்டனர். கனகராயன் குளத்திற்கு அண்மை—யிலுள்ள மன்னங்குளத்தில் இடம்பெற்ற வழிமறிப்புத் தாக்குதலில் அமெரிக்கப் பயிற்சி பெற்ற 300 சிறப்பு அதிரடிப் படையினர் கொல்லப்பட்டனர் ".[6] (போ. சு. 546) மாங்குளம் பகுதியைக் கைப்பற்றப் பல மோதல்கள் இடம்பெற்றபோதும் அரசபடைகளால் அதைக் கைப்பற்ற முடியவில்லை.

இந்த நிலையில் ஜெயசிக்குறு போர் நடவடிக்கை தொடங்கி ஒரு வருடம் பூர்த்தியானது. இதை விடுதலைப்புலிகள் கொண்டாடினர். இந்த ஒரு வருட நிறைவின்போது ஊடக அமைச்சரும் அரசின் பேச்சாளருமான மங்கள சமரவீர "இராணுவத்திலிருந்து தப்பியோடிய 15.000 பேர்களைத் திரும்பவும் சேர்ப்பதற்கு வேண்டிய எல்லாவித உடனடி நடவடிக்கைகளை எடுப்பதற்கான வாக்குறுதியை அளித்தார். பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுரத்த ரத்வத் தப்பியோடிய இராணுவத்தினரை திரும்பவும் சேர் க்கும் முயற்சி வெற்றியளிக்காதுவிடின் கட்டாய இராணுவச் சேவையினை அரசாங்கம் நடைமுறைப்படுத்த முடிவெடுத்திருப்பதாகத் தெரிவித்தார்.[7] (போ.ச.பக்.545)

இந்த ஓராண்டு நிறைவையொட்டி விடுதலைப் புலிகளின் தலைவர் "எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் இன்றைய தினம் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நாளாகும். ஜேயசிக்குறு என்னும் பெயரில் சிறிலங்காவின் அரசபடைகள் எம்மீது முன்னெப்போதும் இல்லாத வகையில் நடத்திய மிகப் பெரும் தாக்குதலை நாம் எதிர்த்துப் போராடிய நிகழ்வானது இன்றுடன் ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ளது. மூன்று மாதமே போதுமானதெனத் திட்டமிடப்பட்டு மிகப்பெரிய விளம்பரத்துடனும் பிரச்சாரத்துடனும் எமக்கு எதிராய் ஆரம்பிக்கப்பட்ட இத்தாக்குதல் ஒரு வருடத்திற்கு நீடித்தும் முடிவுக்கு வரவில்லை. ஈழப் போராட்ட வரலாற்றில் மட்டுமல்ல உலகின் எப்பகுதியிலும் நிகழ்ந்த ஆயுதப் போராட்ட நிகழ்வுகளிலும் இவ்வாறான நீண்டகால தொடர் யுத்தம் நிகழாத நிலையில் இந்த ஜெயசிக்குறு நடவடிக்கையானது ஒரு வருடத்தைப் பூர்த்திசெய்ததன் மூலம் ஒரு சரித்திர முக்கியத்துவத்தைப் பெறுகிறது. இந்த ஜெயசிக்குறு நடவடிக்கை சாதாரணமான யுத்தமல்ல. இது எமது மண்ணில் நிகழ்த்தப்படும் யுத்தங்கள் எல்லாவற்றினதும் தாய் யுத்தமாகும்" என்றார்.[8] (போ.ச.பக் .546)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதுவரை இராணுவத்தினர் வன்னியில் இருந்து கிளிநொச்சி நோக்கிய படைநகர்வுடன் இப்போது கிளிநொச்சியிலிருந்து வவுனியா நோக்கிய படை நடவடிக்கையையும் ஆரம்பித்தனர் . ஒரே நேரத்தில் இரு முனைகளிலிருந்தும் ஏ9 நெடுஞ் சாலையைக் கைப்பற்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

“இதற்கு எதிராக புலிகளின் தாக்குதல்1998 ஒக்ரோபர் 27 அதிகாலையில் கிளிநொச்சிப் படைமுகாம்மீது ஆரம்பமாகியது. புலிகள் முகாமின் முன்னரங்க நிலைகள்மீது தாக்குதல் நிகழ்த்தி பாதுகாப்பு வேலிகளை உடைத்துக்கொண்டு முன்னகர்ந்தனர். கடும் போராட்டத்தின் பின்னர் முன்னரங்குகள் புலிகளிடம் வீழ்ச்சி அடைந்தன. ஆயினும் இராணுவத்தினர் கடுமையாகப் போராடிச் சில பகுதிகளை மீளக் கைப்பற்றினர் . பின்னர் புலிகள் மீண்டும் போராடி அந்த நிலைகளைக் கைப்பற்றினர் . அதனைத் தொடர்ந்து புலிகள் உள்ளக பாதுகாப்பு அரண்களை உடைத்து முகாமின் மையப் பகுதிக்குள் நுழைந்தனர் . தலைமைப் பகுதியைச் சூழவிருந்த உப முகாம்களும் புலிகள் வசம் விழுந்தன. இறுதியில் பிரதான தலைமை முகாமும் தலைமையகமும் புலிகளினது தீவிர தாக்குதலுக்கு இலக்கானது. இராணுவத்தின் தொலைத்தொடர்பும் துண்டிக்கப்பட்டதால் தலைமைப் பீடமும் நிலைகுலைந்தது. சிதறியோடிய படைகளை ஒருவாறு ஒருங்கிணைத்த தலைமையகம் புதிய பாதுகாப்பு வியூகங்களை அமைத்துப் போராடின. இதில் புலிகளின் மோட்டார் குண்டுகள் இராணுவத்திற்குப் பெரும் உயிர்ச் சேதங்களை ஏற்படுத்தின.”[9] *(போ.ச. பக்: 552—553)*

“நிலமை மோசமடைந்த பிரிகேட் தலைமையகம் ஆனையிறவுப் பெரும் தளத்திலிருந்து உதவியை நாடியது. 28ஆம் நாள் காலை 10 மணியளவில் பரந்தனில் இருந்து உதவிக்கு வந்த படையணிகள் ராங்கிகள் கவசவாகனங்கள் சகிதம்; கரடிப்போக்கு ஊடாகக் கிளிநொச்சி படை முகாமிற்குள் நுழைய முயன்றனர். இதை எதிர்பார்த்துக் காத்திருந்தப் புலிகளின் கவச எதிர்ப்புப் படையணி பரந்தனக்கு அருகாமையில் உக்கிரமான வழிமறிப்புத் தாக்குதலை நடத்தியது. இத்தாக்குதலில் இரண்டு ராங்கிகள் அழிக்கப்பட்டன. புலிகளின் தாக்குதலுக்கு முகம்கொடுக்கமுடியாத உதவிப்படை சிதறி ஓடின. ஆனையிறவு தரைப் பாதைத் தொடர்பும் துண்டிக்கப்பட்டு கிளிநொச்சி படைத் தலைமையகம் தனிமைப்படுத்தப்பட்டது. தப்பியோடுவதைத் தவிர வேறுவழி இல்லையெனக் கண்டுகொண்ட படைப் பொறுப்பதிகாரி உப்பாலி எதிர் சிங்க 28ஆம் நாள் மாலை 4.30 மணிக்கு படை முகாமிலிருந்த எரிபொருள் களஞ்சியத்தையும் ஆயுதத் தளபாடங்களையும் எரிமூட்டிய பின்னர் பின்வாங்கிச் சென்றனர் . கிளிநொச்சி நகரும் அதன் சுற்றுப் புறங்களும் புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டன”[10] *(போ.ச.பக் 554)* இதனைத் தொடர்ந்து 1998 டிசம்பர் 4இல் ஜெயசிக்குரு சமர் முடிவுக்கு வருவதாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரபூர் வமாக அறிவித்தது.

இச்சமரின் இழப்புகள் பற்றி இக்பால் அத்தாஸ் அவர்கள் குறிப்பிடுகையில் “கிளிநொச்சியில் உள்ள தற்காப்பு நிலையத்தின்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் எத்தனை பேர் இறந்தனர்? செப்ரெம்பர் மாதம் 28இல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட ‘ஜெயசிக்குறு’ தாக்குதலின் பின்னர் எத்தனை பேர் இறந்தனர்? வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களில் எத்தனை பேர்கள் இறந்தனர்? முழு உலகமுமே இதற்கான பதிலை அறிந்திருந்தனர். அனேக இலங்கையர் களுக்கு இது தெரியாது. தணிக்கை முறையில் ஏற்பட்ட நிச்சயமற்ற நிலை. அரசு 663 பேர்; இறந்தனர் எனக் கூறியது. ஆனால் அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்கமோ தாம் மல்லாவியில் வைத்து 660 இராணுவத்தினரின் உடல்களைப் பெற்றுக்கொண்டதாக உறுதிப்படுத்தினர். அவ்வுடல்களை 25 லெறிகளில் ஏற்றிக்கொண்டு சென்று வன்னி — மன்னார்; வீதியில் அமைந்த பூவரசங்குளம் இராணுவத்தினரிடம் ஒப்படைத்தனர். அடுத்த வியாழக்கிழமை மேலதிகமாக 74 பேரின் உடல்களை அந்த இராணுவத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர். மொத்தமாக தமிழீழ விடுதலைப்புலிகள் செஞ் சிலுவைச் சங்கத்திடம் கொடுக்க அதனை அவர்கள் இராணுவத்தினரிடம் கொடுத்துள்ளனர். 11 *(548—49; போ.ச.பக்.)*

இதுசார்ந்து இந்திய இராணுவ லெப்ரினன் ஏ.எஸ். கல்கட் அவர் கள் ஞாயிறு ‘ரைம்ஸ்’ பத்திரிகையுடனான தொலைபேசி நேர்காணலில்: கிளிநொச்சியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்தபோதும் விடுதலைப்புலிகளின் முக்கிய கேந்திரமான மாங்குளம் அரசின் கட்டுப்பாட்டில் வந்தமையையிட்டு இராணுவத்தின் மூலநிலையினர். மகிழ்வடைந்தனர். ஆனால் மாங்குளமானது கண்டி — யாழ்ப்பாண பெருவீதியில் ஒரு இடமே தவிர பெரிதாக ஒன்றுமில்லை. கிளிநொச்சியானது யாழ் குடாநாட்டிற்கான கேந்திரத்துவமான நுழைவா—யிலாகும். விடுதலைப்புலிகள் மாங்குளம் பற்றி பெரிதும் அக்கறை கொள்வார் என நான் நினைக்கவில்லை. ஒரு பிரதேசத்தைத் தக்கவைத்துக்கொள்ளும் காரணத்திற்காக மட்டுமே எந்தக் கெரில்லாப் படை—யினரும் அதனை வைத்துக்கொள்ளார். கிளிநொச்சி கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடம் என்பதைப் பிரபாகரன் கணித்துள்ளார்." சிறிலங்காவின் தோல்விக்குரிய காரணமாக ஜெனரல் கல்கட் மேலும் கூறியதாவது "இராணுவம் பாரம்பரியப் போர் முறை—யின்படி நிலையான இடங்களைப் பாதுகாக்கும் முறையில் நம்பிக்கை கொள்ள விடுதலைப்புலிகளோ சுலபத்தில் நகர் கின்ற போர் முறையில் நம்பிக்கை கொண்டிருந்தனர் . எனவே போரானது இரு மனநிலைகளில் காணப்பட்டது. இராணுவத்தினரின் தற்காப்பு மனநிலையும் விடுதலைப்புலிகளின் தாக்குதல் மனநிலையுமாகும்.'[12] ( போ.ச.பக்.: 549—50)

இத்தகைய போர்ச் சூழலில் இதன் பின்னணியில் எந்த நாவலும் ஈழத்தில் வெளிவரவில்லை. எனவே இத்தகைய அரசியல் சூழலில் தமிழ் மக்களின் வாழ்வு முறைகள் எவ்வாறு இருந்தது என்ற அடிப்படையில் புலத்திலும் புலம்பெயர்ந்த நாட்டின் வாழ்வையும் கொண்டிருக்கும் சோபாசக்தியின் 'கடவுளும் காஞ்சனாவும்' சிறுகதை இங்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

### கடவுளும் காஞ்சனாவும்

பாரிஸ் நகரத்தின் 'நொய்ஸி லீ கிராண்ட் போயரில்' ஈழத்து தமிழ் பெண் அதுவும் ஒரு குமரி கடவுளைக் காணப்போகிறேன் என்று தவம் செய்யத் தொடங்கி நாலு நாட்கள ஆயின. 'சம்மணம் போட்டு இருந்து கொண்டு ரண்டு கையையும் உயர்த்திப் பிடிச்சுக் கொண்டு விடாமல் கடவுளே கடவுளே எண்டு கூப்பிட்டு கொண்டிருக்கிறாளாம்'. அவள் பிரடிப் பக்கமிருந்தும் வண்ண ஒளிச் சிதறல்கள் வேறு ஓடிக்கொண்டிருப்பதையும் பலர் கண்டதாகவும் செய்தி பரவியது. அவளைத் தூர நின்று கும்பிட்டவன் கும்பிட்ட கையோடு எடுத்த லொத்தருக்குப் ஐம்பதினாயிரம் பிராங் விழுந்திருக்கிறது. இது போதாதா லோகாயுதப் பிரச்சினைகளுக்குள் சிக்குப்பட்டவர்கள் வரிசையில் நின்று அந்தக் குமரியைக் கும்பிட முண்டியடித்துக்கொண்டனர். பத்திரியையாளர்கள் சுற்றிச் சுற்றிப் படங்கள் எடுத்தனர். ஐயர் மார், சுவாமிமார் தத்தமது கோவில்களை மூடிவிட்டு அங்கு வந்தனர். ஆக அந்த இடமே அல்லோல கல்லோலப்பட்டது. இந்த அமளிகளை எல்லாம் அவதானித்துக் கொண்டிருந்த கடவுளின் மனதில் யார் இந்தக் கடும் தவம் புரிபவள்? என்ற கேள்வி எழுந்தது.



ஐஸ்பழம் என்று அறியப்பட்ட சிறிக்கும் —ராசாத்திக்கும் 1971—10—11இல் மண்டை தீவு ஆஸ்பத்திரியில் பிறந்தவள் காஞ்சனா. ஐஸ்பழம் தன் மகளுக்கு முன்னாள் காதலியான நாகம்மாள் பெயரை வைக்கத்தான் விருப்பினான். காதலியின் பிரிவின் போதய வேண்டுகோள். ஆனால் நிலவிய ஆதிக்கம் சார்ந்த சாதிய மனநிலையில் அது முடியாது என்பதால் தனக்கு பிடித்த நடிகை காஞ்சனாவின் பெயரைத்தான் வைக்க முடிந்தது. மகள் யாழ்ப்பாணக் கொண்வென்ரில்தான் படிக்கவேண்டும் என்று ராசாத்தியின் தாய் மனம் விரும்பியது. தந்தை மனதோ பொருளாதார நிலையில் தயங்கியது. ஆயினும் ராசாத்தியோ விடாப்பிடியாக நின்று சாதித்துக்கொண்டாள்.

ஐஸ்பழத்தின் தாய் மணிக்கு யாழ்ப்பாணம் பழைய மார்க்கெட்டில் சுண்ணாம்பு வியாபாரம். பழைய மார்க்கெட்டைப் பொலிசார் தீவைத்துக் கொழுத்தியதால் அவளது வியாபாரம் முடிவுக்கு வந்தது. புதிய மார்க்கெட்டில் தனக்கான ஒரு இடத்ததைப் பெற்றுக்கொள்ளும் வசதியும் செல்வாக்கும் அற்றவள். அதனால் மகன் வீட்டிற்குப் பக்கத்தில் ஒரு கொட்டில் போட்டு சீல் சாராய வியாபாரம். இந்த வியாபாரம் சார்ந்து தாய்க்கும் மகனுக்கும் சதா சண்டை. ஏழைபாளைகள் வாழ்க்கையை ஓட்டியாக வேண்டுமல்லவா?

காஞ்சனா ஏழாம் வகுப்பிற்குச் செல்லும் முதல் நாள். ஐஸ்பழம் மகளைச் சைக்கிள் பாரில் ஏற்றியபடி பண்ணைப் பாலத்தால் வந்துகொண்டிருந்தான். பாலம் கழிந்து கோழிக் கடைகள் தாண்டி பொன்னம்மாள் மில்லுக்கு அருகே வருகையில் "சனமெல்லாம் அலக்க மலக்க ஓடுதுகள். பொலிஸ்காரர்களும் ஆமிக்காரர் களும் கண்டபடி சுடுகிறாங்களாம். ஐஸ்பழத்திற்கு என்ன செய்யிறதெண்டு தெரியேல்ல. சைக்கிள திருப்பி மிதிக்க முத்தவெளிக்குள்ளால ஒரு பொலிஸ் கூட்டமே ஓடிவந்து சுழட்டிச் சுழட்டிச் சுட்டார்கள்." ஐஸ்பழத்திற்கு வெடி விலாவில். றொட்டோரம் விழுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செத்தான். காஞ்சனாவோ தகப்பனின் இரத்தத்தில் நனைந்து நடுறொட்டில் விக்கி விக்கி அழுதுகெண்டு நின்றாள்.

காஞ்சனா பள்ளிக்கூடம் செல்வதை நிறுத்தலாம் என்ற மணியின் யோசனையை மறுத்த ராசாத்தி மிளகாய் ஆய அருவிவெட்டப் போனாள். தனித்த பெண்ணால் மானத்தோடு வேலைசெய்ய முடியாதிருந்தது. அதனால் மணி மருமகளுடனேயே தங்கினாள். அவளையும் காச்சல், இருமல் என நோய் கொண்டுபோக மணியின் தொழிலை ராசாத்தி தொடர அவள் சீல் ராசாத்தியானாள். சுவக்கீன் வாத்தி போட்ட பெட்டிசத்தால் ஊர் காவற்துறை இன்ஸ்பெக்டர் சிவப்பிரகாசம் இரவு ஜீப்பில் வந்தார். ஜீப்பைக் கண்டவுடன் குடித்துக்கொண்டிருந்த ஓரிருவரும் ஓடிப்போக இன்ஸ்பெக்டர் ராசாத்தியை அடித்து உள் அறைக்குள் இழுத்துச் சென்றார். நித்திரையால் எழுந்த காஞ்சனா அழுதுகொண்டு நின்றாள். இப்போது ராசாத்தியின் வியாபாரத்திற்கு எவ்வித இடைஞ்சலும் இல்லை. ஞாயிற்றுக்கிழமை காலையில் ராசாத்தியின் குடிசைக்கு இன்ஸ்பெக்டர் வந்தால் விதம் விதமான கறிவகைகளுடனான கொண்டாட்டம். ஜீப் திரும்பிச் செல்ல இரவாகிவிடும். இப்போதெல்லாம் ராசாத்தி அதிகமாகவே குடிக்கிறாள்.

ஒரு நாள் இரவு நாலு பொடியன்கள் ராசாத்தியின் குடிசைக்கு வந்து சாராயப் போத்தல்களை எல்லாம் அடித்து நொருக்கி ராசாத்தியையும் அழைத்துச் சென்று மொட்டையும் அடித்துவிட்டனர் . "இஞ்சுபெற்றரோட தொடுப்பு வைச்சுக் கொண்டு சாராயத்தையும் வித்தால் பொடியள் விடுவாகளோ" எனச் சனங்கள் கதைத்தனர். இச்சம்பவம் "ஊரைத் திருத்தப் போறம் எண்டு வெளிக்கிட்ட கொஞ்சம் வெள்ளாம் பொடியளின்ர சொறித்தனமாமது." மொட்டை அடிப்பிற்குப் பின்னர் காஞ்சனா பள்ளிக்கூடம் போக மறுத்துவிட்டாள்.

இரண்டு மாதம் கழித்து உண்மையான இயக்கமே அங்கு வந்தது. மாட்டு விதானையார் உதவியுடன் அவர் வீட்டிற்குப் பக்கத்தில் இருந்த பழைய வீட்டைக் 'காம்' ஆக்கினார்கள். விதானையின் பெடியனும் இயக்கத்தில்தான். அதனால் அவருக்கு இயக்கத்தோடு வாரப்பாடு. ராசாத்தி குடிசைக்கு முன்னால் சடைச்சு நின்ற புங்கை மரத்திற்குக் கீழே இயக்கப் பொடியன்கள் சென்றி அமைத்துள்ளனர். அந்தப் பொடியன்களுள் குணா என்ற இளைஞனும் அடக்கம். விடியற் காலையில் ராசாத்தி தேனீர் போட்டு மகளிடம் கொடுத்துவிட அவள் அதைப் பொடியன்களுக்குக் கொடுப்பதும் வழக்கமாயின.

மாட்டு விதானையார் மனைவிக்கு பாம்பு கடித்ததால் ராசாத்தி கையுதவிக்கு காஞ்சனாவை விதானையார் வீட்டிற்கு அனுப்பினாள். இந்த உறவில் ஒருநாள் விதானையார் மனைவி இயக்கக் குணா காஞ்சனாவை லவ் பண்ணுவதாகவும் தமிழீழம் கிடைச்ச கையோட அவளைக் கட்டுவதாகவும் அதை அவளிடம் கூறும்படி கொன்னதாகவும் கூறினாள். பதினைந்து வயதுப் பெண் மனதுள் ஆயிரம் வண்ணாத்திப் பூச்சிகளின் சிறகடிப்பை




உருவாக்கும் வார்த்தைகள்தானே.

வழமைபோல் காஞ்சனா விதானை வீட்டில் இருக்கும் போது குணாவும் அங்கு இருந்தான். காஞ்சனா விதானைக்குத் தேனீர் கொடுத்துவிட்டு குணாவுக்கும் குடுக்கப் போகையில் மகளை அழைக்க அங்கு வந்த ராசாத்தி குணாவைக் கண்டவுடன் மண்வாரித் தூற்றினாள். விதானையார் விசாரித்தபோது அவள் 'ஆடித்திரிஞ்சவள் எண்டு போட்டுத்தானே உவரும் ராத்திரி என்னட்ட ஆட வந்தவர் ' என்று குணாவைப் பார் த்து உறுமினாள். விதானையார் அவளை அடித்து தரதரவென இழுத்து எறிந்தார் . மறுநாள் காலை ராசாத்தியின் பிரேதம் பலர் நினைத்ததுபோல் மாதாகோயில் கிணற்றில் மிதந்தது.

செத்த வீட்டிற்குக் கொய்யாத் தோட்டத்திலிருந்து ராசாத்தியின் பப்பாவும் தங்கை யூஸ்ரினாவும் வந்து இறுதிக்காரியங்கள் செய்துதனர். பின்னர் காஞ் சனாவைத் தம்முடன் வரும்படி அழைத்தனர். அவள் மறுத்து விதானை விடே கதியெனக் கிடந்தாள். குணா அங்கு வரும்போதெல்லாம் இருவரும் கதைப்பது வழக்கம். இவர் கள் 'ஒரு பெற்றனா' கதைக்கிறதைப் பார் த்த விதானையார் காஞ்சனாவை கொய்யாத்தோட்டம் கொண்டுபோய் விட்டுவந்தார் . பிரியும்போது காஞ்சனாவின் நெஞ்சம் முழுவதும் நிறைஞ்சிருந்த குணா மெல்ல மெல்ல ஒரு புள்ளியாய் போனான்.


ஏழு வருடங்களின் பின் விதி இருவரையும் கொழும்பில் சந்திக்க வைத்தது. காஞ்சனா தன் பப்பாக் கிழவனுடன் பிரான்ஸ் போக வந்திருந்தாள். குணாவும் வெளிநாடு போவதற்காக அங்கு நிற்கிறான். இருவரது காதலுக்கு பப்பாக் கிழவன் குணாவின் சாதியை தந்திரமாக அறிந்தபின் சம்மதித்தார் . இருவரது உரையாடலின் போது 'நானும் பிரான்சிற்குத்தான் வரப்போறன் லூட்சிலதான் எங்கட கலியாணம்' என்றான் குணா. காஞ்சனா பப்பாவுடன் பிரான்ஸ் செல்ல அவர்களை வழியனுப்ப குணா விமானநிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றிருந்தான். பிறகென்ன? தொலைபேசி உரையாடல்கள்தான். கடந்த இரண்டு வருடங்களாக தொலைபேசி உரையாடல்கள்தான். குணாவின் அழைப்புகள் சிங்கப்பூரில் இருந்து பின்னர் சென்னையில் இருந்து பின்னர் ஏஜன்சி ஏமாத்திவிட்டான் என்று கொழும்பில் இருந்து.

இப்போது காஞ்சனாவின் சித்தியும் அவள் கணவரும் காஞ்சனாவிற்கு வேறு மாப்பிள்ளை பார்க்கத் தொடங்கினர். அவள் மறுப்பதும் அவர்கள் வற்புறுத்தும் தொடர் விவாதங்களா—யின. இறுதியில் 'நாங்க சொல்லுறதக் கேக்காட்டி உன்னக் கூப்பிட்ட காசு அம்பதினாயிரம் பிராங்கையும் வைச்சுப் போட்டு மற்ற அலுவலப் பார்' என்றனர். காஞ்சனாவும் தெரிந்த எல்லா மாதாக்களையும் வேண்டினாள். இறுதியில் பிரெஞ்சு கற்பித்த ஆசிரியர் ஆலோசனையில் 'போயருக்'குச் சென்று தங்கினாள். இந்தியாவில் இருந்து குணாவின் போன் எடுத்தபோது காஞ்சனா தன் துயரங்களைச் சொல்லி அழுதாள். அவன் 'என்ர குஞ்சு ஒரு கிழமையில அங்க வந்திடுவன்' என்றான். சொன்ன தவணைக்கும் குணா வரவில்லை. இறுதியில் அவளே கொழும்பிற்குப் போன் செய்து 'அவர் எப்ப பிரான்சுக்கு வருவார்' எண்டு கேட்டாள் 'பிரான்சுக்கோ? குணா யாழ்ப்பாண எலெக்சனுக்கு போஸ்ரர் அடிக்கவல்லோ இந்தியாவுக்குப் போனவர்' என்று பதில் வந்தது.




நிலைகுலைந்து போனாள் காஞ்சனா. தன் காதல் வாழ்வில் மீள் பயணம் செய்தாள். அந்த நேரம் பார்த்து குணா போண் பண்ணினான். அவள் கேட்ட முதல் கேள்வியே 'நோட்டீஸ் அடிச்சு முடிஞ்சுதோ' என்பதுதான். அவர்கள் உரையாடல் முத்தி முறுகி வெடிக்கத் தயாராகி நின்றது. 'நீங்க உருட்டும் புரட்டும் நான் இஞ்ச சிரட்டையும் கையுமா திரியிறன்' என்றாள். அவனோ 'ஹலோ நீர் திரியிறது விளங்குது. நான் வருமட்டும் பொறுக்கேலாமலுக்கு சுதி எழும்பித் திரியிறீர் எண்டால் அங்கினேக்க ஆரும் காப்புலியப் புடிச்சுப்படும்'

அக்கினி வார்த்தைகளினால் அதிர்ந்து நின்றாள். பாலிய காலத்தில் இருந்து தனக்கும் மம்மிக்குமான உறவை மீண்டும் நினைத்துப்பார்த்தாள். 'மம்மி சாக முன்னுக்குக் கூடி என்னைத்தானே கூப்பிட்டவ பிறகு கடவுளக் கூப்பிட்டவ. நானும் கடவுளும் சேர்ந்துதானே மம்மியைக் கொலை செய்திருக்கிறம்' விளைவு 'ரூமை ஓவெண்டு திறந்து விட்டிட்டு சம்மணம் கட்டி இருந்து கொண்டு கையை மேலே தூக்கி கடவுளே எண்டு கூப்பிட்டாள். அப்படியே நாலு நாளா தின்னாமல் குடியாமல் கூப்பிட்டுக்கொண்டேயிருந்தாள்.'

கடவுளும் காஞ்சனாவின் கடும் தவத்தால் ஆனந்தப்பட்டார். மனம் இரங்கிக் காஞ்சனாவிற்கு பாவமன்னிப்புக் கொடுத்து தனது நிரந்தர ஊழியக்காரராக்க முடிவுசெய்து காஞ்சனாவின் முன்வந்து நிற்க, அவளும் கண்ணைத் திறந்தாள். 'கடவுள். ஒரிஜினல் கடவுள் வேசிப் பிள்ளயள் என்ர ஏரியாவுக்குள்ள வரக்கூடாது வேசிப்பிள்ளயின்ர பத்தாம் ஜெனரெசனும் என்ர ஏரியாவுக்குள்ள வரக்கூடாது எண்டு மோயீசனுக்குச் சட்டம் போட்ட அதே கடவுள் காஞ்சனாவைப் பார்த்து ஒரு மார்க்கமாய் சிச்சுக்கொண்டு நிக்க...

காஞ்சனா இடுப்பில செருகியிருந்த பிஸ்டலைத் தூக்கினாள். முதலாவது வெடி கடவுளின்ர கண்ணைப் பொத்தி விழுந்தது.'



இச்சிறுகதையின் தலைப்பைப் பார்த்தவுடன் புதுமைப்பித்தனின் 'கடவுளும் கந்தசாமியும்'தான் ஞாபகம் வந்தது. இரண்டும் ஒன்றல்ல. ஆயுதப் போராட்டம் நிலவிய சமூக முறைமைகளை எவ்வாறு பாதித்தது, கிளைகள் கொண்டு எவ்வாறு விரிந்து சென்றன என்பதை மண்டைதீவுப் பின்னணியில் கடுமையான எள்ளல் கலந்த விமர்சனத்துடன் முன்வைக்கின்றது.

"ஊரில் சாதிக்கொரு கோயிலாக நாலு வேதக்கோயிலும் நாலு சைவக்கோயிலும் இருக்கு. பத்தாததுக்கு கொஞ்சம் தள்ளிப் போனா வெள்ளக்கடக்கரையில ரெண்டு பள்ளிவாசலும் கிடக்கு. ஆனா பள்ளிக்கூடம் ஒண்டும் இல்லை. அஞ்சாம் வகுப்புக்கு மேல படிக்கிறதெண்டால் யாழ்ப்பாணத்துக்கோ இல்லாட்டி வேலணைக்கோதான் போய்ப் படிக்கவேணும். ஆரும்ரிச்சா; மார் வாத்திமாரின்ர பொடி பொட்டயள்தான் அங்கினேக்க படிக்கப் போகுங்கள்." (பக்:78) "இந்தச் சாதி சமயமெல்லாம் குணாவா சொல்லவில்லை. அவன்ர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரையும் கோயிலையும் படிச்ச பள்ளிக்கூடத்தையும் வச்சு கிழவன் றேஸ் பண்ணிப் பிடிச்ச விசயங்கள்." (பக்: 91) 'பழைய மாக்கற்றை பொலிசுக்காரன் எரிச்சதோட மணியின் சுண்ணாம்பு வியாபாரம் முடிந்தது.' 'பொலிஸ்காரரும் ஆமிக்காரரும் கண்டபடி சுட்டதனால் ஐஸ்பழம் நடுறௌட்டில் செத்தான்' 'இன்ஸ்பெக்டர் சிவப்பிரகாசத்தால் ராசாத்தி வாழ்வு நொந்து நூலானது. காஞ்சனாவின் கல்வியும் நின்றுபோனது.'.

இவை குறிப்பிட்ட நிலப்பரப்பின் நிலை மாத்திரமல்ல. தமிழர் தாயகம்வரை உள்ள சமூக முறைமைதான். சில மாவட்டங்களை மாகாணங்களைப் பொறுத்தவரை கூடிக் குறைந்திருக்கும். இயக்கங்களின் வரவு இவற்றை எவ்வாறு பாதித்தன?

இயக்ககாலம் பற்றி 'ஊர் ஒரு கொறௌளுக்க வந்தது. சின்னச் சின்ன சண்டியன்மாருக்கெல்லாம் கையை காலை முறிச்சாச்சு. ஆரும் சாதிக்கதை பேசினால் பச்சைமட்டை அடிதான். சீல் சாராயம் செருக்கள் பனம்சாராயம் வெட்டிரும்பு வித்த எல்லோரையும் இயக்கம் பிடிச்சு வெளுவெளுவெண்டு வெளுத்துப்போட்டு கலைச்சு விட்டுது'. (பக்:84) 'ஈச்சப்பி பூரணத்தா இயக்கத்துக்கு பத்துப் பவுண் தாலியக்கொடிய கழட்சிக் குடுத்தா இயக்கத்துப் பொடியள் மண்ணில படுத்து எழும்புறாங்கள் எண்டுபோட்டு மரியம் விக்கிறதுக்கு இழைச்சு வைச்சிருந்த சாயப்பாய்களைக் கொண்டே இயக்கத்துக்குக் குடுத்துப்போட்டு புரியனட்ட தும்புத் தடியால அடிவாங்கினா.' (பக்: 85) சாவகச்சேரி பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது. அத்தோடு இன்ஸ்பெக்டர் சிவப்பிரகாசமும் கொல்லப்பட்டார். 'இயக்கப் பொடியன்கள் பற்றி 'இந்தியாவுக்கு ஒரு காரியமாய் போனவனாம் ஆமி சுட்டுதோ? நேவி சுட்டுதோ? மற்ற இயக்கக்காரங்கள் சுட்டாங்களோ? இல்லாட்டி அவங்கட இயக்கமே ஆளைச் சுட்டுதோ ஒண்டும் தொரியாது.' (பக்:89)

புலம்பெயர் முனைவும் வாழ்வும் பரிசில் நின்ற காஞ்சனாவின் நிலையும் கொழும்பில் நின்று பரிஸ் போக முனையும் குணாவின் நிலையும் தனித்த அனுபவங்கள் அல்ல. கூடவே முகவர்களினால் ஏமாற்றப்பட்டு பல நாடுகளில் அனாதையாகக் கைவிடப்பட்டவர்கள் ஆற்றோடு அடித்துச் செல்லப்பட்டவர்கள். எல்லை கடக்கும் முனைவில் பனியில் விறைத்து மடிந்தவர் களும் வாகனங்களில் மூச்சுத் திணறி மடிந்தவர் களுமாய் எத்தனை உயிர்கள். ஒரே அலைவரிசையில் காலத்திற்குக் காலம் வந்து போகின்றார்கள்தான். இச் சிறுகதை ஒரு தலைமுறைத் துயரங்களின் பொதுமுகம்.

சோபா சக்திய வாய்த்த மொழி தனித்துவமானது. கூரிய எள்ளல்களுடன் பட்டாசாய் வெடிப்பவை. வாசக மனங்களுக்கு மிகவும் நெருக்கமானது. சில வேளைகளில் ஒரே அர்த்தம் தரும் வாக்கியங்களை சூழ் நிலைகளின் இயல்பிற்கு மீறி விசுறுவதும் உண்டு. யூஸ்னினாவின் கணவன் காஞ்சனாவிடம் 'காசு அம்பதினாயிரம் பிராங்கையும் வைச்சுப்போட்டு மற்ற அலுவலைப் பார் ' என்றவுடன் அவள் 'இரவிரவா கதிரைமாதா, பற்றிமாமாதா, உத்தரியமாதா, சிந்தாத்திரைமாதா, சேமாலைமாதா, சின்னமடுமாதா, சாட்மாதா, லூட்ஸ்மாதா, கோவலார் மாதா எல்லாரட்டையும் சொல்லி அழுவது' காஞ்சனாவின் துயரைவிட சோபாசக்தியின் வித்துவத்தனம்தான் வெளிப்படுகிறது.

'பழைய மாக்கற்றை பொலிஸ்காரன் எரிச்சதோட' என்பது பொலிஸ்காரர் என்றாவது வந்திருக்கவேண்டும். அது ஒரு தனி பொலிஸ்காரன் செயல் அல்ல. பலரால் நிகழ்த்தப்பட்டவை. பேச்சுமொழியில் என்று கடந்து செல்வது பொலிஸ்காரர் களின் அதிகாரத்தில் நிகழ்ந்த திட்டமிட்டலை மறுப்பதாகவே முடியும். இறுதிப் பகுதியில் காஞ்சனாவின் இடுப்பில் பிஸ்டல் எப்படி வந்தது? சூ மந்திரக் காளியோ!

'கடவுள். ஒரிஜினல் கடவுள் — வேசிப்பிள்ளையள் என்ர ஏரியாவுக்குள்ள வரக்கூடாது வேசிப்பிள்ள—யின்ர பத்தாம் ஜெனரேசனும் என்ர ஏரியாவுக்குள்ள வரக்கூடாது எண்டு மோயீசனுக்குச் சட்டம்போட்ட அதே கடவுள்' இதை எப்ப கடவுள் மோயீசனுக்குச் சொன்னார்...? 'விபச்சாரம் செய்யாதிருப்பாயாக' என மோயீசனுக்குச் சென்னதாக ஞாபகம். இப்படி வேசப்பிள்ளயள்... பத்தாம் ஜெனரேசன் எண்டெல்லாம் ...மண்டைய சொறியிறன். பிடிபடயில்ல.

எனது வாசிப்பு அனுபவத்தில் பெரும்பாலான சிறுகதைகள் மனித அனுபவங்களின் ஒரு குறிப்பான தருணங்களில்தான் மையங்கொண்டு விரிந்து செல்வதை அவதானித்துள்ளேன். நாவல்கள் ஈழத் தமிழ் சமூகத்தின் புலத்தின் புலம்பெயர் சமூகத்தின் பொதுத்தன்மைகளுடன் நாவல்கள்தான் உருவாகியுள்ளன. இரு தளங்களையும் கொண்ட முக்கியமான சிறுகதை கடவுளும் காஞ்சனையும்.

**உதவிய நூல்கள்:**


*1. சுதந்திர வேட்கை — அடேல் பாலசிங்கம். வெளியீடு: பெயா;மக்ஸ் பதிப்பகம் — ஓகஸ்ட 2002*

2. SRI LANK: WITNESS TO HISTORY: S.SIVANAYAGAM Published; Sivayogam. January 2015. 180-186,Upper Tooting Road, London SW17 7EJ

*3. போரும் சமாதானமும் — அன்ரன் பாலசிங்கம். வெளியீடு: தமிழர் தாயகம்—செப்ரெம்பர் 2005. 1—70 பூந்தமல்லி நெடுஞ்சாலைஇ சென்னை 600107*

*4.5.6.* Ibid

*7. 8.* SRI LANK: WITNESS TO HISTORY: S.SIVANAYAGAM

*9.10 . போரும் சமாதானமும் — அன்ரன் பாலசிங்கம். வெளியீடு: தமிழர் தாயகம்—செப்ரெம்பர் 2005. 1—70 பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை 600107*

*11.12.* SRI LANK: WITNESS TO HISTORY: S.SIVANAYAGAM Published; Sivayogam. January 2015. 180-186,Upper Tooting Road, London SW17 7EJ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை: ஷோபாசக்தி

# கருங்குயில்



தன்னுடைய வீட்டின் மதிற்சுவரில், ஏன் சுற்றுலாப் பயணிகளான வெள்ளைக்காரிகள் விழுந்து புரண்டு முத்தமிடுகிறார்கள் என்பது ரவிசங்கருக்குப் புரியவேயில்லை. மூன்று மாதங்களுக்கு முன்புதான் புதிதாக வெள்ளையடிக்கப்பட்டிருந்த அந்த மதிற்சுவரில், இப்போது எண்ணிப் பார்த்தால் குறைந்தது நூறு லிப்ஸ்டிக் அடையாளங்களாவது இருக்கும்.

ஒரே நிறத்தில் அந்த அடையாளங்கள் பதிந்திருந்தால்கூட ஒருவேளை அதுவொரு அழகாக இருந்திருக்கக் கூடும், ஆனால், சிவப்பு, ஊதா, பச்சை, கருப்பு என எல்லா வண்ணங்களிலும் அந்தச் சுவரில் உதட்டு அடையாளங்கள் பதிந்து, குரங்கு அம்மைநோய் வந்தவனின் முகம்போல அந்தச் சுவர் அசிங்கமாகயிருந்தது. போததற்குச் சிலர் சிறிய அட்டைகளிலோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாள்களிலோ துண்டுச் சீட்டுகளை எழுதி மதிற்சுவரின் மீது வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். இதுபற்றி ரவிசங்கர் தனது எண்பது வயதான தந்தையாரிடம் கேட்டபோது "நான் என்ன செய்வது மகன்? நானும் வரும் வெள்ளைக்காரர்களை முடிந்தவரை துரத்தத்தான் பார்க்கிறேன்... ஆனால், நான் சற்றே கண்ணயரும் நேரத்தில் வந்து அசிங்கப்படுத்திவிட்டுப் போய்விடுகிறார்கள். சிலர் வீட்டுக்குள் உள்ளிடவே முயற்சித்தார்கள். நானும் உன்னுடைய அம்மாவும் கதவை மூடிவிட்டு உள்ளே இருந்துகொள்வோம். எதற்கும் நீ வரட்டும் என்றுதான் காத்திருந்தோம்... கண்டறியாத கொழும்பு" என்று கொஞ்சம் அலட்சியமாகத்தான் கிழவர் பதில் சொன்னார். மகன் இந்த வீட்டுக்குச் சம்பளம் இல்லாத காவல்காரர்களாகத் தன்னையும் கிழவியையும் வைத்திருக்கிறான் என்ற கடுப்பும் அவரது குரலிலிருந்தது.

இலண்டனில் ஏழெட்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களை வைத்திருக்கும் முதலாளியான ரவிசங்கர் இணையத்தளமொன்றில், கொழும்பு நகரத்தின் வெள்ளவத்தைப் பகுதியில் 42ஆவது ஒழுங்கையில், 56ஆவது இலக்க வீடு விற்பனைக்குண்டு என்ற விளம்பரத்தைப் பார்த்துவிட்டுத்தான், இந்த வீட்டை ஆறு மாதங்களுக்கு முன்பு சகாய விலையில் வாங்கினான். அப்போது இந்த வீடு சிதைந்து பாழடைந்துதான் கிடந்தது. இலண்டன் பவுண்ட்ஸுகளாகக் கொட்டி—யிழைத்து, ரவிசங்கர் இந்த வீட்டைத் திருத்திப் பளிங்கு மாளிகையாக்கிவிட்டான். முன்பக்கத்து மதிற்சுவரையும் செப்பனிட்டு, வெள்ளையடித்து அதில் ஒரு துண்டு சலவைக் கல்லைப் பதித்து 'ரவிவில்லா' என்று பொன்னெழுத்துகளில் பொறித்தான். புளியங்கூடல் கிராமத்தில் கோயில் குளமென நிம்மதியாகயிருந்தப் பெற்றோரை வற்புறுத்தி அழைத்துவந்து, கொழும்பு வீட்டில் குடிவைத்துவிட்டு இலண்டன் சென்றவன், மூன்று மாதங்கள் கழித்து வீட்டைப் பார்க்கத் திரும்பிவந்தால், அது இந்த நிலையிலிருக்கிறது.

இப்போது 'ரவிவில்லா' என்ற பெயர் பதிக்கப்பட்டிருக்கும் மதிற்சுவரில் தொண்ணூற்றுச் சொச்ச ஆண்டுகளுக்கு முன்பாக, பறக்கும் கருங்குயில் வடிவத்தில் தொங்கிக்கொண்டிருந்த சிறிய பலகைத் துண்டில் மஞ்சள் வர்ணத்தால் பொறிக்கப்பட்டிருந்த பெயருக்கே இத்தனை முத்தங்களும் துண்டுச் சீட்டுகளும் வந்துகொண்டிருக்கின்றன என்பது ரவிசங்கருக்குத் தெரியவந்தால், அவனுடைய அற்புதமான வியாபார மூளை வேகமாக இயங்கி, வாங்கிய விலையிலும் பத்து மடங்கு விலைக்கு இந்த வீட்டை விற்றுவிடும். இது மகாகவி ஒருவன் 1929இல் வாடகைக்குக் குடியேறி, இரண்டு வருடங்கள் தங்கியிருந்த வீடு. தன்னுடைய இருபதாவது வயதிலேயே 'இருபது காதல் கவிதைகளும் ஒரு கையறு பாடலும்' என்ற நூலை வெளியிட்டு உலகத்தை மயக்கிய அந்த இளங்கவிஞன் இந்த வீட்டுக்குக் குடி வரும்போது, அவனுக்கு இருபத்தைந்து வயது. கொழும்பிலிருந்த கொன்ஸலேட் அலுவலகத்தில் பிரதிநிதியாக அவனுக்குப் பணி கிடைத்திருந்தது. அவனுடைய மிகப் புகழ்பெற்ற 'Residencia en la tierra' கவிதை நூலின் பெரும்பாலான பகுதிகளை, இந்த வீட்டின் மேற்கு அறையில் இலட்சத்தீவுக் கடலை நோக்கியிருக்கும் சாளரங்களுக்கு முன்னே அமர்ந்திருந்துதான் எழுதினான்.

தொங்கும் கருங்குயில் பலகையை அடையாளம் வைத்துத்தான் சம்பங்கி அந்த வீட்டை முதலில் அடையாளம் கண்டுபிடித்தாள். தந்தையார் முத்தான் அவளுக்கு வீட்டு அடையாளத்தை மட்டுமல்லாமல், எல்லாவற்றையுமே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொடுத்தார். காலையில் முதல் சூரிய வெளிச்சம் வரும்போதே அவள் அங்கே போய்விட வேண்டும். எப்படி அந்த வளவுக்குள் நுழைய வேண்டும்? பறக்கும் கருங்குயிலுக்கு அருகிலிருக்கும் ஒற்றை இரும்புக் கிறாதிப் படலையை ஓசைப்படாமல் திறந்து வளவுக்குள் நுழைந்தால், குரோட்டன் செடிகளுக்கு நடுவாக, வீட்டுக்கு இடதுபுறத்தில் ஓர் ஒற்றையடிப் பாதையிருக்கும். அந்தப் பாதையில் நடந்தால் வீட்டுக்குப் பின்புறத்தில், வீட்டிலிருந்து கொஞ்சத் தூரத்தில் மரப்பலகைகளால் கட்டப்பட்ட கழிவறை தனியாக இருக்கும். அங்கு மலம் கழிக்கும் வட்டத் துளையின் கீழே பொருத்தப்பட்டிருக்கும் இரும்பு வாளியை எடுத்துச் சென்று, நாலெட்டுத் தூரத்திலுள்ள கடலில் மலத்தைக் கொட்ட வேண்டும். கடலிலேயே வாளியைச் சுத்தமாக அலம்பிவிட்டு, மறுபடியும் அந்த வளவுக்குச் சென்று, கழிவறைத் துளையின் கீழே இரும்பு வாளியைச் சரியாகப் பொருத்தி வைத்துவிட வேண்டும். இதையெல்லாம் வேகமாகச் செய்ய வேண்டும். கழிவறைக் கதவருவே ஒரு சிறிய வெற்றுப் பால் டப்பா வைக்கப்பட்டிருக்கும். அதற்குள் எப்போதாவது சில சில்லறைக் காசுகள் கூலியாகப் போடப்பட்டிருக்கும். அந்த நாணயங்களைச் சம்பங்கி தொலைத்துவிடாமல், கவனமாகச் சேலைத் தலைப்பில் முடிந்து எடுத்துவர வேண்டும்.

இவ்வளவுக்கும், சம்பங்கி சிறுமியாக இருந்தபோது, தாயார் கந்தம்மாவோடு உதவிக்காக வேலைக்குச் சென்று வந்தவள்தான். ஆனாலும், முத்தான் திரும்பத் திரும்ப அவளுக்குச் சொல்லிக்கொண்டேயிருந்தார்:

"இவற்றில் எதையொன்றையும் நீ மறக்கக்கூடாது! முக்கியமாக அந்த வீட்டிலுள்ள வெள்ளைக்காரத் துரையைக் காண நேர்ந்தால் 'குட் மார்னிங்' என்று சொல்ல வேண்டும். சம்பங்கி எங்கே சொல்லு பார்ப்போம்! குட்....மார்னிங்..." என்று முத்தான் கேட்டபோது 'எனக்குத் தெரியும்' என்பது போல சம்பங்கி தலையை மெதுவாக ஆட்டினாளே தவிர வாயைத் திறந்து பேசினாளில்லை. அவள் வாயை அரிதிலும் அரிதாகத்தான் திறந்து பேசுவாள்.

சம்பங்கி பிறக்கும் போதே, மந்தப் புத்திக் குறைபாடோடு பிறந்தவள் என்பதைப் பெற்றோர் காலப்போக்கில் தெரிந்துகொண்டாலும், அது ஏதோ தெய்வ சாபமென்று அவர்கள் நினைத்திருந்தார்கள். அவளது புத்தியை ஒருநாள் தெய்வம் திருத்திவிடும் என்று அவர்கள் நம்பிக்கொண்டிருந்தார்கள். கந்தம்மா தெய்வங்களை நோக்கி அரற்றிக்கொண்டேயிருந்தார். சம்பங்கிக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பாகப் பிறந்த மூன்று குழந்தைகளையும் பால் குடி மறக்கும் முன்பே வாந்திபேதி கொண்டுபோய்விட்டது. தங்கியிருக்கும் தன்னுடைய ஒரே குழந்தைக்குப் புத்தி நேரானால் பொன்னியம்மன் கோயிலில் உப்பு, மிளகு எறிவதாகக் கந்தம்மா நேர்த்தி வைத்தார். கொச்சிக்கடை அந்தோனியார் கோயிலுக்குச் சென்று, குட்டி வெள்ளி நாக்கு வாங்கி வாசற்படியில் காணிக்கை வைத்தார். டச்சுக் கால்வாயில் இறங்கி அவரே கொய்த வெண்தாமரை மலர்களை மஹாபோதி விகாரையின் முன்னே வைத்தார்.

இந்தப் பதினேழு வயதுவரை சம்பங்கியின் குறைபாடு நீங்கவில்லை. போததற்கு அவள் வளர வளர அவளோடு சேர்ந்து மறதியும் வளர்ந்துகொண்டிருந்தது. முக்கியமான விஷயங்களைக் கூடச் சடுதியில் மறந்துவிடுகிறாள். அக்கம்பக்கத்தில் அவளை 'அரணை' என்று கேலி செய்வார்கள். இந்த குறைபாடுகளாலேயே அவளுக்கு மாப்பிள்ளை அமைவதும் தள்ளிப் போய்க்கொண்டிருந்தது. முத்தானின் கூட்டாளியான கேசவய்யா, தான் சம்பங்கியை மணம் செய்ய விரும்புவதாகச் சாடைமாடையாக முத்தானிடம் பேச்சுக் கொடுக்காமலில்லை. மனைவியை இழந்தவரும் முடாக் குடிகாரருமான அந்தக் கிழவருக்குச் சம்பங்கியைக் கட்டிக்கொடுக்க முத்தான் விரும்பவில்லை. ஆரம்பத்தில், மகளைக் குணமாக்குமாறு தெய்வங்களிடம் கெஞ்சியும் அரற்றியும் பேசிக்கொண்டிருந்த தாயார் இப்போது தெய்வங்களைக் கேளாக் கேள்வி கேட்டுத் திட்டத் தொடங்கிவிட்டாரர். அந்தக் குடிசைக்குள் ஏதாவது பேச்சுச் சத்தம் கேட்டால், அது கந்தம்மா தெய்வத்திடம் ஏசிப் பேசுவதாக மட்டுமேயிருக்கும்.

சம்பங்கிக்கு யாரோடும் பேசப்பிடிக்காது. அவள் எப்போதும் தனிமையில் இருக்கவே விரும்பினாள். மாப்பிள்ளை அமையாததைப் பற்றி அவளுக்குத் துளியும் கவலையில்லை. அவளுக்கு இந்த உலகத்திலேயே கடலைத்தான் மிகவும் பிடித்திருந்தது. அவளது அம்மாயி "சிலோனுக்குக் கப்பல் ஏறும் போதுதான் நான் முதன் முதலில் கடலைக் கண்டேன்" எனச் சொல்வதை, சம்பங்கி சிறுவயதில் கேட்டபோது, கடலில்லாமல் எப்படியொரு ஊர் இருக்கக்கூடும் என்றெல்லாம் கவலையோடு யோசித்திருக்கிறாள். அவளுடைய பெரும்பாலான பொழுதுகள் கடற்கரை—யிலேயே ஒற்றையில் கழியும். கடலில் ஒரு மிகப் பெரிய கப்பல் தரைதட்டி ஒதுங்கிக் கிடக்கிறது. அதை நூறாண்டுகளுக்கு முந்தைய டச்சுக்காரர்களின் போர்க் கப்பல் எனச் சொல்கிறார்கள். அந்தக் கப்பலின் மீது சுருள்வளையமாகவும், கோபுர அமைப்பிலும், சிலவேளைகளில் விரிந்த மலர் இதழ்களின் வடிவிலும் பறவைக் கூட்டம் இறங்கும். அக்கூட்டம் மறுபடியும் மேலேறிப் பறக்கும் போது, இன்னொரு சித்திர வடிமாகிப் பறக்கும். கரிய பறவைக் கூட்டமொன்று யானை வடிவில் எழுந்து பறந்ததைக்கூட சம்பங்கி பார்த்திருக்கிறாள். இந்தப் பறவை மாயத்தை அவள் கண்கள் விரியச் சலிப்பில்லாமல் பார்த்துக்கொண்டே—யிருப்பாள்.

சம்பங்கி மெல்லத்தான் நடப்பாள். சாப்பிட உட்கார்ந்தால் ஒரு சிரட்டைக் கஞ்சியை ஒரு மணிநேரமாக ஊதி ஊதிக் குடித்துக்கொண்டிருப்பாள். எந்த வேலையையும் மெதுவான அசைவுகளுடன் தான் செய்வாள். அவளிடம் கட்டுவதற்கு ஒரேயொரு சேலைதான் இருந்தது. பொன்னிறக் கரையுடன் கூடிய அந்த நைந்துபோன சிவப்புச் சேலையைக் கந்தம்மாவுக்கு யாரோ கூலியாகக் கொடுத்திருந்தார்கள். அந்தச் சேலையைச் சம்பங்கி வேப்பங்கொட்டைத் தூளிட்டு ஒவ்வொரு நாளும் ஒருமணிநேரம் துவைப்பாள். சேலையை விரித்து மணலில் காய வைத்துவிட்டு, அதைச் சுற்றி சுற்றி வந்து சரியாகத் துவைத்திருக்கிறாளா எனப் பார்த்துக்கொண்டிருப்பாள். பாத்திரம் கழுவுவதானாலும் சாம்பலைப் போட்டுப் பொன் போலத் துலக்குவாள். அதைக் கையிலெடுத்துக் கண்களுக்கு நேராக வைத்துப் பார்த்து இரசிப்பாள். மெதுவாகச் செய்தாலும் அவளது வேலை சுத்தமாகவும் திருத்தமாகவுமிருக்கும்.

அவர்களது கடற்கரையோரக் குடியிருப்பு அமைந்திருந்த பம்பலவத்தயில் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் மட்டுமே அரசாங்கத்தால் குடியேற்றப்பட்டிருந்தார்கள். கடலிலே கலக்கும் பழைய டச்சுக் கால்வாய்க் கரையில் இருபது குடிசைகள் வரை அமைக்கப்பட்டிருந்தன. தகரக் கூரையால் குடிசையின் மேற்பகுதி அனலாகத் தகித்தால், கீழே தரை சேறும் சகதியுமாக இருக்கும். மழைக்காலமானால் டச்சுக்கால்வாய் நிறைந்து, குடிசைகளுக்குள் வெள்ளம் ஏறிவிடும். இந்தக் குடியிருப்பில் இருந்தவர்கள்தான் அய்ந்து மைல்கள் சுற்றளவு தூரத்திலிருந்த வீடுகளில் மலம் அள்ளினார்கள். தெருக்களைப் பெருக்கினார்கள். வீட்டில் வளர்ப்புப் பிராணிகள் இறந்தால் அவற்றை அகற்றுவதும் இவர்களது வேலையே. ஆண்களும் திருமணமான பெண்களும்தான் இந்த வேலைகளுக்குப் போவார்கள். பருவமடைந்த பெண்களை அனுப்புவதில்லை. ஆனாலும், சம்பங்கி கருங்குயில் வீட்டுக்கு வரவேண்டியிருந்தது.

கொம்பனித் தெருவில், கேசவய்யாவின் வற்புறுத்தலால் அதிகமாகக் குடித்த மதியமன்றே முத்தான் நோயில் விழுந்துவிட்டார். கேசவய்யாவும் நோயில் விழுந்தார். 'கட்டுக்கம்பி' என்று சொல்லப்படும் அந்த வடிசாராயம் வெறுமனே மதுசாரம்தான். அதற்குள் எலுமிச்சம் பழச்சாறைப் பிழிந்து குடிக்கும் வழக்கம் கேசவய்யாவுக்கு உண்டு. குடித்த வடிசாராயத்தில் ஏதோ கோளாறு இருந்திருக்க வேண்டும். முத்தான் மணலில் சாய்ந்துபோனார். அவரது இரத்தம் எல்லாம் சோற்றுக் கஞ்சிபோல வாயாலும் வயிற்றாலும் வெளியேறிக் கொண்டிருந்தது. அவரால் எழுந்து நிற்கவே முடியவில்லை. காலையில், அவர் ஆறு வீடுகளில் மல வாளிகளைச் சுத்தம் செய்து, தலையில் காவிச் செல்லும் தகரவாளியில் மலத்தைச் சேகரித்துக் கடலில் கொட்ட வேண்டும். ஒருநாள் வேலைக்குப் போகாவிட்டாலும் வீட்டுக்காரர்கள் சகிக்கமாட்டார்கள். புதிய ஆளை வேலைக்கு அமர்த்திவிடுவார்கள். இந்த நிலையில் தான், கொள்ளுப்பிட்டியில் முத்தான் வேலை செய்த அய்ந்து வீடுகளிலும் கந்தம்மா வேலைக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவதாக ஏற்பாடானது. கந்தம்மா அந்த வேலைகளை முடித்துக்கொண்டு, அவர் வேலை செய்யும் கறுவாத் தோட்ட வீடுகளுக்கு ஓட வேண்டும். எதிர்த் திசையில் வெள்ளவத்தையில் எஞ்சியிருக்கும் ஒரே வீட்டுக்குச் சம்பங்கி போக வேண்டும். கூலியாகக் கிடைக்கும் சல்லிக் காசுகளில் அரைக் காசு குறைந்தால்கூட அந்தக் குடும்பத்தால் சமாளிக்க முடியாது என்பதுதான் உண்மை.

சம்பங்கி வேலைக்குப் போவதைக் குடியிருப்பில் முடிந்தவரை ஒளிவுமறைவாக வைத்திருக்க வேண்டும் என்று அந்தக் குடும்பம் முடிவெடுத்தது. கன்னியை வேலைக்கு அனுப்புவதை அறிந்தால் அக்கம்பக்கத்திலிருந்து நொட்டைச் சொற்கள் விழும். அவளுக்கு மாப்பிள்ளை அமைவது இன்னும் சிரமமாகிவிடும். தந்தையார் சொல்லிக்கொடுத்த எந்த அடையாளத்தையும் மறந்துவிடக் கூடாதே என்ற பதைபதைப்பில், அன்றிரவு

**தன்னுடைய உயிர் கண்களின் வழியாக வெளியேறிக்கொண்டிருப்பதாக சம்பங்கி நினைக்கும் போதே, அவளது கண்கள் தாமாகத் திறந்துகொண்டன. அவளது முகத்தை ஒரு பிராணி முகர்ந்துகொண்டிருந்தது.**

சம்பங்கிக்குத் தூக்கமே வரவில்லை.

அதிகாலையில், வெளிச்சம் வரமுன்பே குடியிருப்பிலிருந்து மெல்ல நழுவிய சம்பங்கி அடையாளங்களை நோக்கிக் கடற்கரையோரமாக மெதுவாக நடந்து சென்றாள். நடக்கும் போது, ஈர மணலில் முடிந்தவரை பாதங்களை ஆழப் பதித்து, மணலை அளைந்து செல்லும் பழக்கம் அவளிடமுண்டு. சம்பங்கி நல்ல உயரமும் மெலிந்த தோற்றமுள்ளவள். தேவைக்கு அதிகமாக ஓர் அவுன்ஸ் சதைகூட அவளுடலில் கிடையாது. அவள் தன்னுடைய நீளமான தலைமுடியை உச்சியில் பெரிய கொண்டையாகப் போட்டிருந்ததால், இன்னும் உயரமாகத் தெரிந்தாள். இரண்டு கைகளிலும் செப்பு வளையங்களைப் போட்டிருந்தாள். வாயின் இருபுறங்களிலுமிருந்த அழகிய தெற்றுப் பற்களை மூடியிருந்த தடித்த உதடுகளுக்கு மேலே, மூக்கின் இருபுறங்களிலும் அணிந்திருந்த கண்ணாடிக் கற்களாலான சிவப்பு மூக்குத்திகள் அவளின் முகத்தில் சிறு சுடர்களைப்போல ஒளிர்ந்துகொண்டிருக்கும். அந்தக் குடியிருப்பிலேயே சம்பங்கிதான் சிவந்த சருமமும் அழகும் கொண்டவள் என்று கந்தம்மா சொல்லாத நாளில்லை. “அவள் நாவற்பழத்தைத் தின்னும் போது, தொண்டையில் கருஞ்சாறு இறங்குவது உங்களது கண்களுக்குத் தெரியும்” என்பார்.

சம்பங்கியின் குடியிருப்பிலிருந்து கருங்குயில் வீடு அதிக தூரத்திலில்லை. பம்பலவத்தயிலிருந்து கடற்கரையோரமாகவே தெற்காக நடந்து வந்தால், பதினைந்து நிமிடங்களுக்குள் வந்துவிடலாம். ஆனால், சம்பங்கியின் மெதுவான நடைக்கு அரை மணிநேரம் தேவைப்படும். அவள் தயங்கித்தான் நடந்து வந்துகொண்டிருந்தாள். “அந்த வீட்டில் ஒரு சோம்பேறி நாய் இருக்கிறது சம்பங்கி. ஆனால், நீ பூனையைப் பார்த்தே பயப்படுவாய். அந்த நாய் உன்னை முகர்ந்துகூடப் பார்க்காது. அதுபாட்டுக்கு வீட்டு முகப்பில் படுத்துக் கிடக்கும்“ என்றுதான் முத்தான் சொல்லியிருந்தார். ஆனாலும், சம்பங்கியின் மனதில் அச்சம் ஓரமாக ஒட்டித்தான் கிடக்கிறது.

முத்தான் சொன்ன அடையாளக் குறிப்புகளை வாயில் திரும்பத் திரும்ப முணுமுணுத்தவாறே சம்பங்கி மெதுவாக நடந்து சென்றாள். தர்மசாந்தி விகாரையைக் கடந்ததும் கடல் தேங்காய் மரமிருந்தது. அந்த மரத்திற்கு எதிராகக் கிழக்கே செல்லும் மண்பாதையில் சம்பங்கி திரும்பி நடக்கும்போது முற்றாக விடிந்திருந்தது. காடுபோல செடிகொடிகளும், புதர்களும் மண்டிக்கிடந்த நிலத்தின் நடுவே புதிதாகக் கட்டப்பட்டிருந்த, உயரமான வெண்ணிற வீடு நின்றிருந்தது. மதிற்சுவரில் இரும்புக் கிறாதிப் படலைக்கு வலதுபுறத்தில் கருங்குயில் தொங்கிக்கொண்டிருந்தது. சம்பங்கி அந்தக் கருங்குயிலையே பார்த்தவாறு சில நிமிடங்கள் தயங்கி நின்றுகொண்டிருந்தாள். அந்த வீடு எந்தச் சலனமுமின்றி அமைதியாகக் கிடந்தது. இரும்புக் கிறாதிப் படலைக்குள்ளால் உள்ளே பார்த்தாள். முத்தான் சொன்னது போலவே சோம்பேறி நாய் வீட்டு முகப்பில் சுருண்டு கிடந்தது.

சம்பங்கி மெதுவாக இரும்புக் கிறாதிப் படலையைத் தள்ள அது ஓசையில்லாமல் திறந்துகொண்டது. முத்தான் சொன்ன குறிப்பு இடது பக்கமா வலது பக்கமா என அவளுக்கு இப்போது மறந்துவிட்டது. படலையைத் தாண்டி வளவுக்குள் அவள் மெதுவாகக் காலடி வைத்தபோது, சுருண்டு கிடந்த நாய் தலையைத் தூக்கிப் பார்க்கவும் இவள் தனது தலையைத் திருப்பிக்கொண்டாள். இடது புறத்தில் புதிதாக நாட்டப்பட்டு வளர்ந்துகொண்டிருந்த குரோட்டன் செடிகளிடையே பாதை தெரிந்தது. இவள் அந்தப் பாதையால் நடந்து சென்றாள். வீட்டைச் சுற்றிக்கொண்டு, கழிவறையை நோக்கி ஓசையில்லாமல் சென்றாள். கழிவறையின் கதவு திறந்து கிடந்தது. யௌவன வெள்ளைப் பெண் ஒருத்தி முழு நிர்வாணமாக மலக்குழியின் மீது குந்தியிருந்தாள்.

அதைப் பார்த்ததும் சம்பங்கி உறைந்து அங்கேயே நின்றுகொண்டாள். இப்போது என்ன செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்று அவளுக்குத் தெரியவில்லை. தனது கண்களைத் தாழ்த்திக்கொள்வதைத் தவிர அவளால் வேறெதுவும் செய்ய முடியவில்லை. அவளது கால்கள் கட்டைக் கால்கள் போலாகி அசைய மறுத்தன. அந்த வெள்ளைக்காரி நீலக் கண்களால் சம்பங்கியைப் பார்த்தவாறே குந்தியிருந்தாள். அவளது ஒரு கை பின்னால் அசைந்துகொண்டிருந்தது. அவள் திடீரெனத் துள்ளிப் பாய்ந்து ஓவெனக் கூச்சலிட்டபடியே நிர்வாணமாகவே வீட்டை நோக்கி ஓடினாள்.

சம்பங்கிக்கு உண்மையிலேயே மயக்கம் வரும் போலிருந்தது. அந்த வெள்ளைக்காரியின் சிறுநீர் மலக்குழியைச் சுற்றி நுரைத்துக் கிடந்தது. மலவாளியோ மலத்தாலும் சலத்தாலும் கந்தைத் துணித்துண்டுகளாலும் நிறைந்திருந்தன. முத்தான் சொன்ன இடமான கழிவறைப் புறச்சுவரில் மலவாளியின் மூடி தொங்கிக்கொண்டிருந்தது. சம்பங்கி மலவாளியை இறுக மூடிவிட்டு, அதைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு, அங்கிருந்து வெளியேறி கடற்கரையை நோக்கி நடந்தாள். வழியில் கிடந்த குரும்பட்டியொன்றைக் கால் விரல்களால் பற்றியெடுத்து, காலை இடது கை வரைக்கும் உயர்த்திக் கையில் குரும்பட்டியை எடுத்துக்கொண்டாள். கரையில் இருந்தவாறே, மலத்தோடு சேர்த்து வாளியைக் கடலில் கவிழ்த்தாள். அங்கிருந்து சற்று விலகி முழங்காலளவு தண்ணீர்வரை நடந்துசென்று, வாளியைக் குரும்பட்டியால் தேய்த்துத் தேய்த்து, நீரால் அலசிச் சுத்தம் செய்தாள். மறுபடியும் அந்த வீட்டுக்குப் போகவே அவளுக்கு அச்சமாக—யிருந்தது. அந்த நிர்வாண வெள்ளைக்காரியை ஒரு மோகினிப் பேய் போலத்தான் அவள் கற்பனை செய்தாள். கண்களைத் தாழ்த்திக்கொண்டு மறுபடியும் கருங்குயில் வீட்டை நோக்கிச் சென்று, வாளியை மலக்குழியின் கீழே பொருத்தினாள். அப்போது கழிவறையின் கதவருகேயிருந்த சிறிய டப்பாவைக் கவனித்தாள். இதுவரை அவளுக்கு இது மறந்தே போ—யிருந்தது. அந்த டப்பாவைத் தூக்கி பார்த்தாள். அது வெறுமையாகவேயிருந்தது.

சம்பங்கி பம்பலவத்தவுக்குத் திரும்பி, ஆறச்சோரக் கடலில் குளித்துவிட்டு, ஈரச் சேலையுடன் குடிசைக்குத் திரும்பும்போது, எதிரே வேலை முடிந்து கையில் ஒரு மரவள்ளிக்கிழங்குடன் கந்தம்மாவும் திரும்பி வந்துகொண்டிருந்தார். அவர்களது குடிசையில் காலையுணவு சமைக்கும் வழக்கமில்லை. மதியம் தாய்க்கும் மகளுக்கும் அந்த மரவள்ளிதான் உணவு. நோயாளியான முத்தானுக்கு மட்டும் கொஞ்சம் உப்பிட்ட அரிசிக் கஞ்சி. "அந்த டப்பாவுக்குள் சில்லறை இருந்ததா?" என்று கந்தம்மா கேட்ட போது 'இல்லை' என்பது போல சம்பங்கி மெல்லத் தலையை அசைத்தாள். "நன்றாக ஞாபகப்படுத்திச் சொல்! காசு இருந்ததா?" என்று மறுபடியும் கந்தம்மா கேட்டபோது, மறுபடியும் சம்பங்கி தலையசைத்தாள்.

சம்பங்கி மூன்றாவது நாள் கருங்குயில் வீட்டுக்குச் சென்றபோது, வீட்டுப் படிக்கட்டில் சீன முகமுடைய ஓர் இளம்பெண் சுருட்டுப் பிடித்தபடியே அமைதியாக உட்கார்ந்திருந்தாள். சம்பங்கித் தன்னை அவள் உற்றுக் கவனிப்பதைப் பார்த்தாள். அந்தப் பெண் வெண்ணிற முழுக்கைச் சட்டைபோட்டு, இடுப்பில் வானவில் போன்றதொரு லுங்கியைக் கட்டியிருந்தாள். சம்பங்கி கண்களைத் தாழ்த்தியவாறே வீட்டுக்குப் பின்புறம் சென்றபோது, சருகுகளை மிதித்துக்கொண்டு அந்தப் பெண்ணும் பின்னாலேயே வருவது தெரிந்தது. சம்பங்கி திரும்பிப் பார்க்காமலேயே கழிவறையை நோக்கிச் சென்றபோது, சருகுகள் மதிபடும் சத்தம் நின்றுவிட்டது. சம்பங்கி மலவாளியை மூடும்போது, அந்தப் பெண் ஒரு செப்பு நாணயத்தை எடுத்துச் சம்பங்கியின் முன்னால் தரையில் சுண்டிவிட்டாள். சம்பங்கி அதை எடுத்துச் சேலைத் தலைப்பில் முடிந்துவிட்டு, மலவாளியைத் தலையில் வைத்துக்கொண்டு நடந்தாள். அடுத்த நாள் சம்பங்கி கருங்குயில் வீட்டுக்குச் சென்றபோது, அந்தப் பெண்ணைக் காணவில்லை.

ஆனால், அடுத்தடுத்த நாட்களில் விதவிதமான பெண்களைச் சம்பங்கி கருங்குயில் வீட்டில் கண்டாள். ஒருநாள் சம்பங்கி உள்ளே நுழையும்போது, வெள்ளைக்காரியும் மலாய்காரியும் சிலோன்காரியுமாக மூவர் சிரித்துப் பேசியபடியே, மதுவால் கிறங்கிய கண்களோடு வெளியேறிக் கடற்கரையை நோக்கி நடந்து சென்றார்கள். சம்பங்கி மலவாளியோடு கடற்கரைக்குச் சென்றபோது, அவர்கள் கொக்குகளைப்போல ஒற்றைக்கால்களில் நின்று கிழக்கு முகம் பார்த்துக் கைகளை உயர்த்திக் கும்பிட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஒன்பதாவது நாள், கருங்குயில் வீட்டுக்குச் சம்பங்கி சென்றபோது, வீட்டின் முகப்புச் சாளரம் திறந்திருந்தது. உள்ளேயிருந்து வெள்ளைக்கார இளைஞனொருவன் விரிந்த கண்களால் இவளையே பார்த்துக்கொண்டிருந்தான். சம்பங்கி கண்களைத் தாழ்த்தியவாறே கழிப்பறையை நோக்கிச் சென்றாள். அவள் தலையில் மலவாளியுடன் திரும்பிவரும் போது, அவன் வீட்டு வாசற்படியில் கையிலொரு புத்தகத்துடன் உட்கார்ந்திருந்தான். கட்டுடலுடன் வாட்டசாட்டமாக—யிருந்தவனின் உடம்பில் ஓர் அரைக் காற்சட்டை மட்டுமேயிருந்தது. சம்பங்கி வெற்று வாளியுடன் திரும்பி வரும்போது, அவன் இரும்புக் கிறாதிப் படலையைப் பிடித்துக்கொண்டு வெளியே நின்றவாறே, சம்பங்கியையே புன்னகையுடன் பார்த்துக்கொண்டிருந்தான். சம்பங்கி அருகில் வந்தும், தனது வலது கைச் சுட்டுவிரலால் கருங்குயில் பலகையைத் தொட்டுத் தொட்டுக் காட்டி ஏதோ சொன்னான். சம்பங்கியோ செய்வதறியாமல் திகைப்பேறி அசையாமல் நின்றுவிட்டாள். "அந்த வீட்டுத் துரையைப் பார்த்தால் குட் மார்னிங் சொல்ல வேண்டும்" என முத்தான் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொடுத்திருந்ததை சம்பங்கி முற்றாக மறந்துவிட்டாள். வெள்ளைக்காரன் அங்கிருந்து புன்னகையுடன் நகர்ந்து, உரக்கப் பாடியவாறே கடலை நோக்கி நடந்துபோனான்.

அடுத்தநாள், சம்பங்கி கருங்குயில் வீட்டுக்குச் சென்றபோது, அந்த வெள்ளைக்காரன் வீட்டின் பின்புற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசலில் அரையிருளில் நின்று கொண்டிருந்தான். அவனது உடலில் முழங்கால் வரைக்கும் தொங்கும் மெல்லிய அங்கியும், முகத்தில் குறும்புப் புன்னகையுமிருந்தன. அந்த அங்கிக்குள்ளிருந்து ஏதோவொரு விநோதமான சத்தம் எழுந்துகொண்டிருந்தது. இதுவரை அப்படியொரு சத்தத்தைச் சம்பங்கி கேட்டதேயில்லை. சம்பங்கி கழிவறையை நெருங்கியபோது, கதவுக்கு அருகிலிருந்த டப்பா சில்லறை நாணயங்களால் நிரம்பியிருந்ததைப் பார்த்தாள். தன்னுடைய சிவப்புச் சேலைத் தலைப்பில் அந்த நாணயங்களைக் கொட்டி முடிந்துகொண்டாள். அவள் மலவாளியோடு வெளியேறும் வரை, அவன் அங்கேயே நின்று கொண்டிருந்தான். சம்பங்கி அந்த நாணயங்களை முத்தானின் முன்னே பாயில் வைத்தபோது "வெள்ளைக்காரர்கள் இப்படித் தான்... அவர்களுக்கு நமது வேலை பிடித்துப் போனால் அள்ளித் தருவார்கள்" என்றார்.



அடுத்தநாள், சம்பங்கி கருங்குயில் வீட்டுக்குச் சென்றபோதும் அவன் அந்த இடத்திலேயே நின்றிருந்தான். டப்பாவுக்குள் சில கண்ணாடி வளையல்கள் போடப்பட்டிருப்பதைக் கண்டாள். உடனேயே முழந்தாள்களில் கழிப்பறைக்கு முன்னால் உட்கார்ந்திருந்து, தன்னுடைய இரண்டு கைகளிலும் அந்த வளையல்களை அணிந்துகொண்டாள். பின்பு மலவாளியைத் தூக்கிக்கொண்டு, கண்களைத் தாழ்த்தியவாறே வெளியேறினாள்.

மறுநாளும் அவன் வீட்டின் பின்புறக் கதவு அருகேயே நின்றிருந்தான். அவள் கழிவறையை நோக்கிச் சென்றபோது "ஹே..ஹே" என்று மெதுவாகச் சத்தமெழுப்பினான். சம்பங்கி கண்களை நிமிர்த்தி அவனைப் பார்த்த போது, அவன் தன்னுடைய வலது கையை முன்னால் நீட்டினான். அந்தக் கையில் பச்சை நிறத்தில் புதிய சேலையொன்று இருந்தது. அவன் புன்னகைத்தவாறே சேலையை ஆட்டிக்காட்டி, அருகில் வருமாறு சம்பங்கிக்குச் சைகை செய்தான். சம்பங்கியின் கால்கள் அசைய மறுத்தன. அவன் வாசற்படியில் சேலையை வைத்துவிட்டு, திறந்திருந்த கதவு வழியாக வீட்டுக்குள்ளே போய்விட்டான். சம்பங்கி மெதுவாக நடந்துசென்று அந்தச் சேலையை எடுத்துக்கொண்டாள். அவள் சேலையைத் தாயாரிடம் காட்டியபோது "பத்திரமாக வைத்துக்கொள், உன்னுடைய கல்யாணத்துக்குக் கட்டிக்கொள்ளலாம்" என்றார்.

அடுத்தநாள், கருங்குயில் வீட்டுக்குச் சென்றபோது, சம்பங்கியின் மனம் நன்றியுணர்வால் ததும்பிக் கொண்டிருந்தது. கழிவறையை நோக்கிச் சென்ற போது, பின்னால் சருகுகள் மிதிபடும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். இவளுக்கு நெருக்கமாக அந்த வெள்ளைக்கார இளைஞன் நின்றுகொண்டிருந்தான். சம்பங்கியின் கண்களைப் பார்த்தவாறே, அவளது வலதுகை மணிக்கட்டை மெல்லப் பற்றினான். சம்பங்கிக்கு உடலில் இரத்தம் வற்றித் தண்ணீராகிவிட்டது. அவள் தனது கையை அவனிடமிருந்து விடுவிக்க முயன்றாள். இப்போது அவனின் பிடி முரட்டுத்தனமாக அழுத்த, சம்பங்கியின் கண்களில் பொட்டென நீர் துளிர்த்து அவளது கன்னங்களில் விழுந்தன. அவன் திறந்திருந்த பின் வாசல் வழியாக அவளை வீட்டுக்குள் இழுத்துப் போனான். சம்பங்கியின் கால்கள் மரக்கட்டைகளாகிவிட்டன. ஒரு பொம்மையை நகர்த்திச் செல்வதுபோல அவன் சம்பங்கியைக் கொண்டு சென்றான். சம்பங்கி வாயைக் கோணிக்கொண்டு விசும்பினாள். இப்போது அவன் தன்னுடைய வலிமையான கைகளால் சம்பங்கியைத் தூக்கி வீட்டின் நடுவாகயிருந்த அகலமான கயிற்றுக் கட்டிலில் கிடத்தினான். அவன் தன்னைக் கொல்லப் போகிறான் என்றுதான் சம்பங்கி நினைத்தாள். சாவைப் பார்க்கப் பயந்து அவள் தனது கண்களை இறுக மூடிக்கொண்டாள். அப்போது அவளது பொன்னிறக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையிடப்பட்ட சிவப்பு நிறச் சேலை அவளிடமிருந்து உருவப்படுவதை அவள் உணர்ந்தாள். அவளது இரண்டு கைகளும் கீழேயிறங்கி அவளது நிர்வாணத்தைப் பொத்திக்கொண்டன.

அவன், தன்னுடைய கைளால் முரட்டுத்தனமாகச் சம்பங்கியின் கைகளை விலக்கிப் போட்டான். சம்பங்கியின் மீது அவன் கவிழ்ந்த போது, சாவுதான் தன்மீது இறங்குகிறது என்றே சம்பங்கி நம்பினாள். இந்த வீட்டுக்கு வேலைக்கு வந்த முதல் நாளன்று கண்ட மோகினிப் பேய் அவளது ஞாபகத்திற்கு வந்தது. அந்தப் பேய்தான் இப்போது ஆணுருவில் இருக்கிறதோ என்ற கொடுமையான அச்சம் அவளுக்குள் பரவியது. அவளால் மூச்சுவிட முடியாதவாறு அவனுடைய கனத்த உடலின் பாரம் அழுத்தியது. அவனிலிருந்து சீறிக்கொண்டு வெளியேறிய மூச்சுக்காற்று அவளது மார்பில் சுட்டது. பேய் கொள்ளிக் கண்களைத் திறந்துள்ளது என அவள் நடுங்கினாள்.

அவனுடைய ஒரு கை அவளது உச்சிக் கொண்டையைப் பற்றியிழுக்க, அடுத்த கை அவளது மூடியிருந்த கண் இமைகளை வலுகட்டாயமாகத் திறக்க முயன்றது. அவளோ எக்காரணத்தாலும் மரணத்தை பார்ப்ப தில்லை என்ற முடிவோடு மறுபடியும் மறுபடியும் கண்களை மூடிக்கொண்டாள். அவன் அவளிலிருந்து எழுந்து மெதுவாக மிக மெதுவாகச் சீட்டியொலி எழுப்பினான். பதிலுக்கு இன்னொரு சத்தம் எழுந்தது. அவளது வயிற்றிலிருந்து ஏதோவொன்று சத்தமெழுப்பியவாறே நகர்ந்து கண்களை நோக்கி வந்தது. தன்னுடைய உயிர் கண்களின் வழியாக வெளியேறிக்கொண்டிருப்பதாக சம்பங்கி நினைக்கும் போதே, அவளது கண்கள் தாமாகத் திறந்துகொண்டன. அவளது முகத்தை ஒரு பிராணி முகர்ந்துகொண்டிருந்தது. அவன் கிரியா...கிரியா என்றழைத்து உத்தரவிட, அந்தக் கீரிப்பிள்ளை அவன் காட்டிய பக்கமெல்லாம் சம்பங்கியின் உடலில் தாவிப் போயிற்று. சம்பங்கி அச்சத்தால் செத்து, பிணம் போல அசையாமல் கிடந்தாள். அதன் பின்பு அவளது கண்கள் மூடவே—யில்லை.

கந்தம்மா வேலை முடிந்து வரும்போது, குடிசைக்கு வெளியே முத்தான் உட்கார்ந்திருந்தார். அவர் கந்தம்மாவைப் பார்த்ததும், தனது முகத்தை உள்ளே அடுப்படியை நோக்கித் திருப்பினார். அங்கே சாம்பலுக்குள் தலைவைத்துச் சம்பங்கி சுருண்டு கிடந்தாள். திகைத்துப்போன கந்தம்மா ஓடிப்போய் மண்டியிட்டு உட்கார்ந்து சம்பங்கியின் முகத்தைக் கையால் திருப்பிப் பார்த்த போது, சம்பங்கியின் கண்கள் அகலத் திறந்தே கிடந்தன. தாயாரைப் பார்த்ததும் சம்பங்கி வாயைத் திறந்து "வலிக்கிறது ஆயி" என்று முனகினாள். "எங்கே வலிக்கிறது?" என்று கந்தம்மா கேட்டபோது, சம்பங்கி அடிவயிற்றைத் தொட்டுக் காட்டினாள். கந்தம்மா நடுங்கும் கைகளால் சம்பங்கியின் சேலையை விலக்கிப் பார்த்த போது, சம்பங்கியின் பெண்ணுறுப்பிலிருந்து இரத்தம் கசிவதைக் கண்டார்.

மறுநாள் மதியப் பொழுதில் "முத்தான்...முத்தான்" என்று அழைக்கும் சத்தம் கேட்டு, முத்தான் குடிசையிலிருந்து மெதுவாக வெளியே வந்தார். நீண்ட கைகளும், கால்களும், கரிய தோற்றமும் உள்ளதால் 'களு மஹாத்தயா' எனச் சொல்லப்படும் புராம்பி வெளியே நின்றிருந்தான். அவன் கருங்குயில் வீட்டுக்கு மதிய வேளையில் வந்து, சமையலும் வீட்டு வேலைகளும் செய்துவிட்டு மாலையில் திரும்பிச் செல்பவன். அவன் தான் பம்பலவத்தவுக்கு வந்து முத்தானிடம் பேசி, அவரைக் கருங்குயில் வீட்டில் வேலைக்கு அமர்த்தியவன்.

"முத்தான் காலையில் ஏன் கக்கூஸ் வாளி எடுக்க வரவில்லை? நானா அதை எடுக்க முடியும்?"

"எனக்கு உடம்பு சுகமில்லை களு மஹாத்தயா... நேற்றுத்தான் பாயிலிருந்து எழுந்து கொஞ்சம் நடக்கிறேன்..."

"கொஞ்ச நாளாக வேலைக்கு ஒரு குட்டி வருவதாகத் தானே துரை சொன்னார்..."

"அவளுக்கு நாளை கல்யாணம் நிச்சயமாகியிருக்கிறது களு மஹாத்தயா. புத்தி குறைவான அந்தப் பிள்ளையை நம்முடைய கேசவய்யா தான் மனமிரங்கிக் கல்யாணம் செய்யப் போகிறார்."

புராம்பி திரும்பிச் சென்ற பின்பாக, குடிசைக்கு வெளியே வந்த கந்தம்மா மணலில் உட்கார்ந்துகொள்ள, எதிரே முத்தானும் உட்கார்ந்தார். அவரருகே முகத்தை நெருக்கமாகக் கொண்டுவந்து, மெல்லிய குரலில் கந்தம்மா பேசினார்:

"கல்யாணத்துக்கு கேசவய்யா கோடித் துணி வாங்கிக் கொடுப்பாரல்லவா? இல்லாவிட்டாலும் பரவா—யில்லை... சம்பங்கியிடம் புதிய சேலையிருக்கிறது."

"அந்தப் பறங்கி கொடுத்ததா? அதைக் கொழுத்திப் போடு. அந்தச் சேலையைப் பார்க்கும் போதெல்லாம் அவளது மனம் என்ன பாடுபடும்!"

கந்தம்மா கொஞ்ச நேரம் அமைதியாக இருந்தார். பின்பு தலையை இடதுபுறம் திருப்பிக் குடிசையை ஒருகணம் பார்த்தார். பின்னர் தலையை வலது பக்கம் திருப்பிக் கடலைப் பார்த்தவாறே சொன்னார்:


"கருணையுள்ள கடவுள் என் பெண்ணுக்கு மறதியைக் கொடுத்திருக்கிறான். அவள் சீக்கிரமே எல்லாவற்றையும் மறந்துவிடுவாள். காலப்போக்கில் எல்லோருமே எல்லாவற்றையும் மறந்துவிடுவார்கள்."

ஆனால், கருங்குயில் வீட்டிலிருந்த வெள்ளைக் கவிஞன் அதை மறக்கவில்லை. அவன் இலங்கையை விட்டு, தன்னுடைய செல்லப் பிராணியான கிரியாவுடனும் வெளியேறியதிலிருந்து, சரியாக நாற்பத்து மூன்று வருடங்களுக்குப் பின்னால் வெளியிடப்பட்ட 'பப்லோ நெரூடா: நினைவுக் குறிப்புகள்' என்ற நானூறு பக்கங்களைக் கொண்ட சுயசரிதை நூலில் ஒரு பக்கத்தைச் சம்பங்கிக்காக ஒதுக்கியிருக்கிறான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை: **தெய்வீகன்**

# பயனிலை



மிளிர் மஞ்சளாய் சடைத்திருந்த கிங்கோ மர நிழல் அந்தச் சிறு வீதியை முழுவதுமாகப் போர்த்திருந்தது. மூத்த புலம்பெயரிகள் கட்டிய அடுக்குமாடி மனைகளை வரிசையாக அணைத்துக்கொண்டு அருகிலேயே மூவான் ஆறு ஆழ்ந்த அமைதி கிங்கோ மரங்களுக்கும் மூவான் ஆற்றுக்குமாகத் தாவிக்கொண்டிருந்த சில மக் பை பறவைகளுக்கு, யில் தியானத்திலிருந்தது.

அன்றெறித்த மெல்லிய வெயில் சிறகுலர்த்தப் போதுமா—யிருந்தது. மேகங்களற்ற மெல்பேர்ன் வானம் மென் நீலமாய் தகித்துக்கொண்டிருந்தது.

குழியம்பலம் வீட்டுக்கு வெளியே இரண்டு பக்கமும் விருந்தினரின் வாகனங்கள் போக்குவரத்துக்கு இடையூறின்றி நீண்ட வரிசையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. அன்றைய நாளில் ஆஸ்திரேலியத் தமிழ் சனங்கள் தங்களது கௌரவத்தின் அடையாளமாக முன்னிலைப்படுத்திய "வோல்வோ" கார்கள்தான் பல வண்ணங்களில் அங்கு காணப்பட்டன. குழியம்பலம் வீட்டு வளாகத்திற்குள் அவரது அதி நவீன கறுப்பு நிற "சுபரூ" கார், அளந்து வாங்கியதுபோல வாசலுக்கு நேராக நின்றுகொண்டிருந்தது. இலக்கத்தகடு "TAM-IL" என்ற ஆங்கிலச் சொல்லைத் தலைகீழாகப் போட்டு "LIMAT" என்று எடுப்பாகப் பொருத்தப்பட்டிருந்தது. விக்டோரிய வாகனப் பதிவு அலுவலகத்தில் கூடுதல் பணம் கொடுத்துப் பெருமையோடு வாங்கிக்கொண்ட இலக்கத் தகடு அது.

தமிழர் உரிமைகளுக்காக ஆயுதமேந்திய விடுதலைப்புலிகள் அமைப்பின் ரமணனும் அதே உரிமைகளைத் தாங்களும் பெற்றுத் தருவதாக ஆயுதமேந்திருந்தியிருந்த டெலோ அமைப்பின் முகுந்தனும் இலங்கையிலிருந்து வந்த சந்திப்புக்காக குழியம்பலம் வீடு, மூவான் ஆறுபோல நிறைந்த அமைதியிலிருந்தது.

மெல்பேர்னில் தமிழால் பிரிந்திருந்த பல குழுவினர் அன்று அங்கு பிரசன்னமாயிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதங்களின் வழியாக அமைதியை அறுவடை செய்ய முடிவெடுக்கப்பட்டிருந்த அக்காலப்பகுதி, இலங்கையின் பல்வேறு பகுதிகளைப்போல, வெளிநாடுகளிலும் தமிழர்களின் மத்தியில் பதற்றங்களைப் பெருக்கியிருந்தது. புதிதாய் தவண்டு ஓடிக்கொண்டிருந்த பல நிறமேறிய தமிழ் இயக்கங்களில் யாருக்கு ஆதரவளிப்பது என்பதில் மக்களுக்கு எத்தனையோ குழப்பங்களிருந்தன.

ஈற்றில் புலிகளும் டெலோவும் புரட்சிக்குத் தகுதியானவை என்று வெளிநாட்டிலிருந்த பெரும்பாலான தமிழர்கள் ஏகபோகமாக நம்பினார்கள். அந்த இரண்டு அமைப்புக்களின் வழியாகவும், இலங்கையில் தாங்கள் விட்டுவந்த தேசத்தை பெரும்பான்மை சிங்களவர்களிடமிருந்து மீட்டுவிடலாம் என்ற நம்பிக்கை தமிழ் சனம் அநேகருக்குள் முகிழ்ந்துகொண்டது.

இந்த இரண்டு இயக்கங்களுக்கும், தாங்கள் உழைத்த வெள்ளிப்பணத்தை வெளிநாட்டவர்கள் வாரிக்கொடுத்தார்கள். உரத்த குரலில் அறிக்கைகளை எழுதினார்கள்.

அந்த நிதியை நேரில் வாங்கிப்போகவும் இன்னும் நிதி வேண்டும் என்று சொல்லிக்கொள்ளவும்தான் ரமணனும் முகுந்தனும் மெல்பேர்னுக்கு வந்திருந்தார்கள்.

எல்லோரும் நிறைந்திருந்த வீட்டில் நடுநாயகர்களாக ரமணனுக்கும் முகுந்தனுக்கும் அகன்ற இரண்டு இருக்கைகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

தாயக விடுதலைப் போரில் உயிர் நீத்த மாவீரர்களுக்கும் மக்களுக்கும் வணக்கம் செலுத்தப்பட்டது. கூட்டம் ஆரம்பமாகிச் சிறிது நேரத்தில், ஓயாது ஒலித்த தொலைபேசியை எடுத்துப் பேசினார் குழியம்பலத்தின் மனைவி யோகேஸ்வரி. அவசரமாக கணவரை உள்ளே அழைத்தார்.

எடுத்த மாத்திரத்தில், இலங்கையிலிருந்து எடுக்கப்பட்ட இரகசிய அழைப்பென்று புரிந்த குழியம்பலம், ஒரு காதைச் சாத்திக்கொண்டு மறுகாதில் தகவலைக் கேட்டார். சொல்லப்பட்ட செய்தியால் அவருக்குக் கைகளும் குரலும் இறுகிப்போயின. அருகிலிருந்து கதிரையைப் பிடித்தபடி அமர்ந்தார். யோகேஸ்வரி அருகில் ஓடிவரவும், தண்ணீர் கொண்டுவரும்படி சைகை செய்தார். கூட்டத்துக்கு வந்திருந்தவர்களுக்குப் பரிமாறுவதற்கு உள்மேசையில் பரப்பி வைக்கப்பட்டிருந்த உணவு வகைகளில், கருகிய வாடை வீசுவதுபோலிருந்தது குழியம்பலத்துக்கு.

டெலோவின் முக்கிய தளபதி கதிர்மோகனை யாழ்ப்பாணம் ஆலையடிச் சந்தியில் வைத்து புலிகள் சுட்டுக்கொன்றுவிட்டார்கள். கதிர்மோகனின் தலை சிதறிய உடலை எடுத்த டொலோ, உடனடியாகவே பதிலடி கொடுப்பதற்கு, புலிகளின் முகாம் ஒன்றிற்குள் புகுந்து, நான்கு பேரைக் கண்களைக் கட்டி இழுத்துச் சென்றிருக்கிறார்கள். இரண்டு இயக்கங்களும் கண்ட இடத்தில் ஆளையாள் இரத்தப்பலியெடுப்பதற்குக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

வெகுநாள் உட்பகை வெடித்துவிட்டதாக யாழ்ப்பாணத்திலிருந்து சொல்லிமுடித்த புலிகளின் வெளிநாட்டுப் பொறுப்பாளர், தொலைபேசியை உடனடியாக ரமணனிடம் கொடுக்கச் சொன்னார்.

குழியம்பலத்திற்கு முன்வரிசையின் மேலுள்ள உயரமான பல்லொன்று சில காலமாகவே வலியெடுத்துக் கரைச்சல் கொடுத்தபடியிருந்தது. பிடுங்கவேண்டும் என்று வைத்தியர் சொன்னபிறகும் அச்சத்தோடு அடைகாத்து வைத்திருந்தார். தொலைபேசியில் வந்த செய்தியோடு, அந்தப்பல் திடீரென்று கொதிக்கத் தொடங்கியது. மனுசியிடம் வாங்கி தொண்டையில் வார்த்த தண்ணீர், உள்ளே நிரம்பும் சத்தம் கேட்டது.

ரமணனை அழைத்துத் தொலைபேசியைக் கையில் கொடுத்தார். அவர் காதில் பொருத்திக்கொண்டு மீதிச் செய்தியை செவிமடுத்தார்.

தனது வீட்டுக்குள் அதுவரை நுழைந்திராத இருள் படர்ந்துகொண்டுவருதை குழியம்பலம் உணர்ந்தார். வெளியே ஆற்றங்கரையோர கிங்கோ மரங்கள் பெரும் சுவாலையுடன் எரிந்து மணந்தன.

ரமணனும் முகுந்தனும் ஆஸ்திரேலியாவுக்கு வந்த இருவழி விமானச்சீட்டுக்கள் ரத்துச் செய்யப்பட்டன. மெல்பேர்ன் தமிழ் தேசியப் பேரவையின் செயலாளர் ராஜவேலன் ஏற்பாடு செய்தபடி, இருவரும் வெவ்வேறு விமானங்களில் இலங்கை போவதற்கு டிக்கெட் பதிவு செய்யப்பட்டது. தன் வீட்டில் தங்கவைத்திருந்த ரமணனை, அடுத்தநாள் காலை ராஜவேலன் தனது காரில் விமான நிலையத்தில் கொண்டுபோய் வழியனுப்பிவைத்தார். முகுந்தனை அன்று மாலை நேர விமானத்தில், விமானநிலையம் வரைக்கும் தனது "சுபரூ" காரில் கொண்டுபோய் பயணம் அனுப்பிவைத்த குழியம்பலம் —

"எதையும் யோசிக்கவேண்டாம். பிரச்சினை சரிவரும்" — என்று கூறி, ஆஸ்திரேலியாவில் இரண்டு அமைப்புக்களுமென்று ஒன்றாகச் சேர்த்த பணத்தில் ஒரு தொகுதியை முகுந்தனின் கையில் பச்சைப்பையொன்றில் வைத்து ரப்பர் பாண்ட் போட்டுக் கொடுத்தார்.

மெல்பேர்ன் பெருஞ்சலனமடைந்தது. தமிழ் தேசத்துக்காக அடுத்த சந்தியில் காத்துக்கொண்டிருந்த விடுதலை, வீணாக விழுந்து காயமடைந்துவிட்டதுபோல பதற்றமானது.

தமிழ் அமைப்புக்களுக்கு இடையிலான கூட்டங்கள் வழக்கம்போல — தனித்தனியாகவும் — சிலது தனிநபர்களுக்கிடையிலும் — அவசர அவசரமாக நடைபெற்றது. புலிகளுக்கும் ரெலோவுக்கும் இடம்பெற்ற விரிசலின் நீட்சியான பல கதைகள், காவோலைகளாக எல்லோர் செவிகளுக்குள்ளும் சரசரக்கத் தொடங்கியது.

ஞாயிற்றுக்கிழமை மெல்பேர்ன் தமிழ்க்கடைகளில் ஆளையாள் காணும்போது, புலிகள் — ரெலோ பிளவு பிரதான பேச்சானது. வாங்கிய பொருட்களுக்குச் செலுத்திய பணத்துக்கு, மீதிக் காசு வேண்டுவதற்குக்கூடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பலருக்கு அவகாசமிருக்கவில்லை. கடைக்கு உள்ளேயும் வெளியேயும் நின்று புதுச் செய்தி சொல்பவர்களிடம் குறி கேட்டார்கள். மெல்பேர்னிலும் பதுங்குகுழிகள் அமைத்துத் தஞ்சமடையவேண்டியளவில், புலிகள் — ரெலோ பிளவில் உள்ளார்ந்த அச்சம் ஒவ்வொரு வீடுகளுக்குள்ளும் உருத்தெரியாமல் அலைந்தது.

இந்த நிலையில், ரெலோ என்ற அமைப்பு தமிழர்களின் தேசிய வேட்கைக்குக் குழிபறிக்கும் இயக்கமென்றக் கூட்டு முடிவுக்குள் மெல்பேர்ன் தமிழர்கள் எல்லோரும் கிட்டத்தட்ட ஒற்றுமைப்பட்டார்கள். ஆனால், உதிரிகளாகச் சிலர் ரெலோ மீதான உரிமை மீறல்களைக் கண்டித்தார்கள். ரெலோ அமைப்புக்குப் பரிந்து பேசிய தேவசகாயம் மாஸ்டர், ஒருநாள் ஞா—யிற்றுக்கிழமை தமிழ்க்கடைக்கு வந்தபோது, “இதயம்” நல்லெண்ணெய் போத்தலோடு தள்ளி வீழ்த்தப்பட்டார். அவரது மனைவி — “புலியள் அடிக்கிறாங்கள்” — என்று ஆங்கிலத்தில் குழறியதால், பக்கத்திலிருந்த லெபனான் கடைக்காரனின் மனைவி ஓடிவந்து பார்த்து குழம்பிப்போய்விட்டாள்.

அதற்குப் பிறகு மெல்பேர்னில் ரெலோ அமைப்புக்குப் பரவலாக எதிர்ப்புக் கிளம்பியபோதுதான், ஜேசுதாஸின் கச்சேரிக்கு வந்த குழியம்பலத்தின் “சுபரூ” கார் முதன் முதலாகத் தாக்கப்பட்டது.

அன்றைய தினம், “ப்ரமதவனம் வேண்டும்...” — என்று ஜேசுதாஸ் மலையாளப் பாட்டைத் தொடங்கியதும் “இனிப் போவம்...” — என்று மனைவி யோகேஸ்வரி இரகசியமாக சுரண்ட, கார் பார்க்கிற்கு வந்த குழியம்பலம், கார் முழுவதும் பெயின்ட் உரியும்வரைக்கும் தாறுமாறாகப் பிறாண்டிக் கிடப்பதைக் கண்டு மிரண்டுவிட்டார். தனது காரை உடைக்கவேண்டும் என்று யாரும் இதனைச் செய்யவில்லை, எரிச்சலைக் கிளப்பவேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காகத்தான் தனவியிருக்கிறார்கள் என்பது புரிந்தது. அவரது மனைவிக்கு அந்த நிதானமிருக்கவில்லை. பெரிய சத்தத்தில் குழறி பொலீஸைக் கூப்பிடப்போவதாகக் கூவினார். கச்சேரி மண்டபத்துக்கு வெளியே, பூட்டி—யிருந்த கடைத் தாழ்வாரத்திற்குள் சிவாஸ் ரீகல் போத்தலோடு பகிர்ந்துகொண்டிருந்த இரண்டொருவர் சத்தம் கேட்டு வந்து காரைப் பார்த்தார்கள். தங்கள் பங்குக்கு ஆச்சரியப்பட்டார்கள்.

அடுத்தநாள், ஜேசுதாஸ் கச்சேரியைவிட குழியம்பலத்தின் கார் காயமடைந்த கதை மெல்பேர்னின் சகல தமிழ் தொலைபேசிகள் வழியாகவும் வழிந்தோடியது. மதியத்துக்கு முன்னரே, “இது புலிகளின் வேலையாகத் தானிருக்கும்” — என்று வள்ளுவர் சங்கத் தலைவர் கணேசலிங்கம், குழியம்பலத்தின் வீட்டுக்கு இரகசியமாக வந்து சொல்லிவிட்டுப்போனார். ஏற்கனவே, ரெலோக்காரர் ஒருவரை வீட்டில் வைத்திருந்து அனுப்பியவர், டெலோக்காரனை ஏற்றிய காரின் உரிமையாளர் என்ற எல்லாக் காரணங்களின் அடிப்படைகளி லும் இந்தத் தாக்குதல் உத்தியோகபூர்வமாக நடத்தப்பட்டிருப்பதாகவே தான் நம்புவதாக கணேசலிங்கம் உறுதியாகச் சொன்னார்.



குழியம்பலம் இதனை எதிர்பார்க்கவில்லை. ஆஸ்திரேலியாவுக்கு வந்தநாள் முதல் புலிகளுக்கு ஆதரவான சீவன் அவர். இப்போதும்கூட, ரெலோவின் நியாயம் எதுவாக இருப்பினும், தான் புலிகளின் பக்கம் என்று, அங்கம் வகிக்கும் எல்லாக் கூட்டங்களிலும் வலியுறுத்திக்கூறுபவர். அப்படிப்பட்ட தேச விரும்பியை — மூத்த புலம்பெயரியை — சுபரூ வைத்திருக்குமளவுக்கு சமூக அந்தஸ்து கொண்டிருந்தவரை — ஒரேநாளில், மெல்பேர்ன் தமிழ் சமூகம் ஒரு நாசகார சக்தியாக முட்டித்தள்ளியது.

குழியம்பலம் புளொட்டுக்குக் காசு கொடுத்த கதையும் மெல்பேர்ன் சனத்துக்குத் தெரிய வர, அவர் எந்தத் தமிழ் நிகழ்வுக்குப் போனாலும், பழைய கார்போலக் கடந்து செல்லப்பட்டார். தம்பதிகளாகவே மெல்பேர்னின் பல மங்கள அழைப்புக்களில் தவிர்க்கப்பட்டார்கள்.

காலம் ஒரு கருநாகம் போல அவரது காலடியில் கிடந்தது. குழியம்பலம் மிகவும் உடைந்துபோனார். டெலோ காரனை வீட்டில் வைத்திருந்த காரணத்துக்காகவும் அவனை ஏற்றிய காரை இன்னும் வைத்திருப்பதற்காகவும் சொந்த சமூகத்தின் மத்தியிலேயே ஒரு குற்றவாளியாகத் திரியவேண்டியிருந்தது.

தனது “சுபரூ” காரை எப்படியாவது விற்றுவிடவேண்டுமென்று முடிவெடுத்த குழியம்பலம், தனக்குத் தெரிந்த எல்லா காராஜ்களுக்கும் போய் வந்தார். அந்தக் கார் தன்னோடு திரியும்வரைக்கும் தன் மீதான வன்மமும் அதற்கான ஆதாரமும் எல்லோர் கண்களிலும் சுடர்விட்டபடியிருக்கும் என்று உள்மனது அவருக்குப் புத்தி சொன்னது.

அந்த நேரம் பார்த்து. குழியம்பலத்தின் மகள் நிசாந்தினி திருமணமானாள். அவள் தனி வீடு போகும்போது, தகப்பனின் காரை தனக்குத் தருமாறு விநயமாகக் கேட்டாள். அந்த “சுபரூ” காரில்தான், தகப்பன் தன்னை ரியூசன்களுக்கு எற்றி இறக்கியதாகவும் அந்தக் கார் தனக்கு மிகவும் அதிஸ்டமானது என்றும் மிகுந்த அப்பாவியாய் திருமணத்தின்போதுகூட தனது சிற்றுரையில் குறிப்பட்டுக் கண் கலங்கினாள். வேறு வழியின்றிக் குழியம்பலமும் கூடவே கண் கலங்கினார்.

மகளிடம் காரைக் கொடுப்பதற்கு முன்னர், காரை முழுதாக சேர்விஸ் செய்வதற்காகக் கராஜுக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுபோய் வரும்போதுகூட, வீட்டுக்கு முன்பாக உள்ள மூவான் ஆற்றோரமாக நின்று, யாரோ காரை நோக்கி கல்லெறிந்துவிட்டு ஓடினார்கள். பின் சிக்னல் பக்கமாக சிறிய சிராய்ப்பு. அதை மீண்டும் சரி செய்யவேண்டியதாய் போனது.

வள்ளுவர் சங்கத் தலைவர் கணேசலிங்கம், இந்தத் தடவை பொலீஸிடம் போகச் சொன்னார். "இந்தக் குரங்குச் சேட்டையள இந்த நாட்டில அனுமதிக்கக்கூடாது மிஸ்டர் குழி" — என்றார். குழியம்பலம் மறுத்துவிட்டார். "அது எங்கட சமூகத்துக்கு மேலதான் பொலீ—ஸ்காரன்களுக்கு அவப்பெயரைக் கொண்டுவரும்" — என்றார் நிதானமாக.

அந்தக் காரினை இப்போதைக்கு மகளிடம் கொடுப்பது பாதுகாப்பாகப் படவில்லை. திருமணம் முடிந்து இரண்டு கிழமைகளுக்குப் பிறகு, நிசாந்தினி வீட்டுக்கு வந்திருந்த

**"இலங்கை அரசு நடத்துகின்ற கொடிய போரை நிறுத்துவதற்கு ஆஸ்திரேலிய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று உங்கள் எம்.பிக்களுக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்"**

சமயம், குழியம்பலம் அவளிடம் நிதானமாகப் பேசினார். ராசியான அந்தக் காரைத் தான் விற்கவில்லை என்றும் அது வீட்டு கராஜிலேயே நிற்கட்டும் என்றும் பட்டும் படாமல் சொல்லி, அவளுக்குப் புதிய காரொன்றை வாங்கிப் பரிசளித்தார். "சுபரூ" காரை நோக்கி பல பழைய நினைவுகளோடு ஓடி வந்தவள், புதிய காருக்குள் துள்ளி ஏறிக்கொண்டாள்.

குழியம்பலத்துக்குப் புலிகளையும் டெலோவையும் சேர்த்து வைத்ததுபோல பெரும் நிம்மதியானது.

தனது இரண்டடுக்கு வீட்டின் பின் வளவோடு சேர்ந்திருந்த உதிரியான தாழ்வாரத்திற்குள், சுபரூவை ரிவேர்ஸ் செய்து, அங்கு நிரந்தரமாக நிறுத்திய குழியம்பலம், அதற்கு மேல் பழுப்பு நிற படங்கொன்றை விரித்து மூடினார். சிறிலங்காவில் இரண்டு இயக்கங்கள் பிரிந்த குற்றத்துக்காக, மெல்பேர்னில் அடிவாங்கிக்கொண்டிருந்த அப்பாவி அலுமீனியக் குதிரை, பெரிய போர்வையை இழுத்துப் போர்த்துக்கொண்டு படுத்துக்கொண்டது. இந்தக் கார் தனது வாழ்வில் இப்போதைக்கு சிக்கலின் சின்னமென்பதை குழியம்பலம் உறுதியாக உணர்ந்துகொண்டார். வாரங்களோ — மாதங்களோ — கடந்துபோகட்டும், இரண்டு இயக்கங்களும் விரைவில் கூட்டுச்சேரும். அவர்கள் சார்பில் மீண்டும் போராளிகள் மெல்பேர்னுக்கு வரும்போது, இதே காரில் போய் விமானநிலையத்தில் அவர்களை ஏற்றிவரலாம் என்று சத்தமின்றித் தனக்குள் சபதமெடுத்துக்கொண்டார்.

*(2)*

ஆனையிறவு முகாம் புலிகளால் கைப்பற்றப்பட்ட வெற்றியின்போது மெல்பேர்ன் நகர மண்டபத்தின் உச்சியில் ஏறிப் புலிக்கொடியைக் கட்டிய நிசாந்தினியின் மகன் கோபி, மெல்பேர்ன் பொலீஸாரால் கைது செய்யப்பட்டான். சட்டத்தரணி சிவ வடிவேல் தலைமையில் ஆஸ்திரேலிய வழக்கறிஞர் குழு, கோபியை தண்டனை எதிலும் மாட்டிக்கொள்ளாமல் ஒருவாறு மீட்டுக்கொண்டது.

கோபி என்ற பெயர் அப்போது மெல்பேர்னில் மிகப்பிரபலமானது.

ஆஸ்திரேலியாவில் பிறந்து வளர்ந்தாலும் தமிழ் மீது கோபிக்குத் தீராத பற்றிருந்தது. தமிழில் சரளமாகப் பேசவும் எழுதவும்கூட அவனால் முடிந்தது. மிருதங்கம், புல்லாங்குழல், கிற்றார் போன்ற சில வாத்தியங்களை வாசிக்கக்கூடிய கலை மீதான ஆர்வம் அவனுக்கிருந்தது. மூன்று — நான்கு தடவைகள், பெற்றோருடன் இலங்கை போய் வந்தபோது, கண்ட காட்சிகளும் கூடப்படர்ந்துகொண்ட பூர்வீகமும், அவனுக்குள் வற்றாத தமிழ் வெறியாகத் தேங்கிக் கிடந்தது.

மெல்பேர்ன் இளையோர் அமைப்பின் தலைவனாகக் கோபி தெரிவு செய்யப்படுவதை, மெல்பேர்னில் பல பெற்றோர் விரும்பினார்கள். தங்கள் பிள்ளைகளும் அவன்போல தமிழில் தீராத பற்றோடு திமிர்கொண்டு எழவேண்டும் என்று உதாரணம் காட்டினார்கள். அவனது செயல்கள் எதிலுமிருந்த அளவுகடந்த வேகம் பலருக்கும் ரசிக்கும்படியாயிருந்தது. தமிழ் நிகழ்ச்சிகளில் அவன் மேடையில் கிற்றார் வாசிக்கும் திறன் முதல், அவனது தாயார் நிசாந்தினியின் "சுபரூ" காரை ஓட்டும் லாவகம்வரை சகலதும் பலருக்குப் பெரும் கிறக்கமா—யிருந்தது.

தமிழினத்தின் மீதான ஆக்கிரமிப்பிற்குச் சிங்கள மக்களும் காரணமென்ற தீராத வன்மம் அவனுக்குள் எப்போதும் சுரந்தபடியிருந்தது. சிங்களவர்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம்தான் தமிழர்களைக் கருவறுத்துவருகிறது என்று அவனது கறுப்பு — வெள்ளைப் பார்வையின் முன்னால், அவனுக்கு யாரும் எதிர் விளக்கம் சொல்லமுடியவில்லை.

இதன் விளைவாக, மெல்பேர்னில் சிங்கள இளைஞர்கள் பலருடனும் களியாட்ட விடுதிகளில் கைகலப்பில் ஈடுபட்டான். சிங்கள மொழி பேசுபவர்கள் எவரைக் கண்டாலும், அவர்கள் சிறிலங்கா அரசுடன் ஏதோவொரு வகையில் தொடர்புடையவர்கள் என்று மறுக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருந்தான். அந்த முடிவு அவர்களுக்கும் கோபிக்கும் ஏதோவொரு புள்ளியில் சிக்கலைக் கிளப்புவதாக அமைந்தது. அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்பேர்ன் சிங்கள அமைப்புக்களிலிருந்தவர்களுக்கும் பரவலாகத் தெரியத்தொடங்கியது. கோபி குறித்த பதற்றம் மெல்பேர்ன் சிங்கள சமூகத்திற்குள்ளேயும் பரவியது.

தனது நண்பர்களுடன் களியாட்ட விடுதிகளுக்குக் கோபி சென்றபோதெல்லாம், போதையேறிய சிங்கள இளைஞர்கள் வேண்டுமென்றே அவனைச் சீண்டத்தொடங்கினார்கள். இவனும் ஓயாமல் அவர்களுடன் கைகலப்பில் ஈடுபடுவதும் பிறகு, பொலீஸ் வாகனத்தில் தூக்கி எறியப்படுவதுமாக, கூண்டுகளுக்குள் போய் போய் வந்தான்.

தமிழ் சமூகத்துடனான நட்புறவுக்குப் பொறுப்பான மெல்பேர்ன் பொலீஸ் தலைமையதிகாரி சார்ள்ஸ், மெல்பேர்ன் தமிழ் அமைப்புத் தலைவர்களிடம் கோபியின் போக்குக்குறித்து கவனிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

இரண்டாயிரங்களின் இறுதியில் இலங்கையில் போர் நிறைவுக்கு வந்த காலம், கோபி மெல்பேர்ன் தமிழர் விடுதலைக் கழகத்தின் பொறுப்பாளராயிருந்தான். கருகிக் கருகிக் கடைசி விறகில் எரியும் அடுப்புப்போல, தமிழர் தேசம் சுருங்கிக்கொண்டுபோகும் காட்சிகளை அவனால் ஜீரணிக்கமுடியவில்லை. அதற்கு முன்னர் பல தடவைகள் இலங்கைக்கும் வன்னிக்கும்கூட போய் வந்த கோபி, இறுதிப்போர் தருணங்களைத் தன்னுடலில் சில அவயங்கள் எரிந்து வீழ்வதுபோல உணர்ந்தான்.

மெல்பேர்ன் நகர வீதிகளிலும் ஆஸ்திரேலியத் தலைநகரிலும் தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கில் வந்த எல்லா அறப்போராட்டங்களிலும், அணைக்கமுடியாத வெஞ்சினத்தோடு அலைந்தான். அவனது நிலை குறித்து நிசாந்தினி பெருந்துயரடைந்தாள். பயந்தாள். சில நாட்களில் கோபி வீட்டுக்கே போவதில்லை. ஆஸ்திரேலியாவில் எந்த மாநிலத்தில் போராட்டம் நடந்தாலும், அதற்காக ஆட்களைச் சேர்த்துக்கொண்டு, அங்கு போய் நின்றான். போராட்டங்கள் முடிந்த பிறகு, காரிலேயே தூங்கினான். அடுத்தடுத்த ஊர்களுக்குச் சென்று போர் நிறுத்தக் கோரிக்கைகள் அடங்கிய துண்டுபிரசுரங்கள் வழங்குவது, வெள்ளையின மக்கள் மத்தியில் தமிழர் அவலம் பற்றி உரைநிகழ்த்துவது என்று ஊர்சுற்றியாய் திரிந்தான்.

அவனுக்குள் திரண்டெரிந்த தீயை அணைப்பதற்கு அவனுடல் போதவில்லை.

மெல்பேர்ன் நகரின் பேர்க் வீதிக்கு அடுத்துள்ள ரஸல் தெருவில் அன்று அவனும் நண்பர்களும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்துச் சென்று கொண்டிருந்தார்கள்.

நகர்மைய உயர் மண்டபங்களுக்குள் பணிபுரிபவர்கள், வழக்கம்போல மதிய உணவு நேரத்தில் வெளியே வந்து காலாற உலாச் சென்றுகொண்டிருந்தார்கள். பாதையோரம் பவனி சென்றுகொண்டிருந்தவர்கள், குதி உயர்ந்த செருப்பணிந்த சீமாட்டிகள், கடைக்காரர்கள் என்று எல்லோரிடமும் கோபியும் நண்பர்களும் துண்டுபிரசுரங்களைக் கொடுத்தார்கள். "இலங்கை அரசு நடத்துகின்ற கொடிய போரை நிறுத்துவதற்கு ஆஸ்திரேலிய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று உங்கள் எம்.பிக்களுக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்" — என்பது அந்தப் பிரசுரங்களின் ஒற்றைக் கோரிக்கையா—யிருந்தது.

கோபியின் தூக்கமற்ற விழிகள் பெருங்களைப்பில் சோர்ந்தபடியிருந்தன.

பேரனார் குழியம்பலம் அடிக்கடி கோபியின் கைத்தொலைபேசிக்கு அழைத்தபடியிருந்தார். எடுத்துப் பார்த்தவிட்டு, பேசும் மனமின்றி பொக்கெட்டில் போட்டான்.

அந்நேரம், மதிய வெயிலை மீறி பேர்க் வீதியின் மேல் படர்ந்து நிழல் பரப்பிக்கிடந்த கிங்கோ மரக்கிளைகளிலிருந்து தீடீரென்று கருகும் வாசனை எழுந்தது.

மெல்பேர்ன் நகரின் பேர்க் வீதிக்குள் கோபி தனது காரைத் திரும்பியபோது — அடுத்த அந்தத்தில் — விக்டோரிய நாடாளுமன்றத்திற்கு முன்னால் — பல நூற்றுக்கணக்கான சிங்களக் கொடிகள் கொந்தளிக்க — பெரும் — வெற்றிக்கொண்டாட்டமொன்று நடைபெற்றுக்கொண்டிருந்தது.

துண்டுப்பிரசுரம் கொடுப்பதை நிறுத்திவிட்டுக் காரில் ஏறிய கோபி, தனது நண்பர்களையும் உள்ளே வரும்படி அழைத்தான். எல்லோரும் உள்ளே ஏறிக்கொண்ட "சுபரூ" கார் தற்போது, ஒற்றைப் புலிக்கொடியோடு மிக மெதுவாக ஊர்ந்தது.

தூரத்தில் நடைபெற்றுக்கொண்டிருப்பது பல்லா—யிரக்கணக்கான சிங்களவர்களின் போர் வெற்றிக்கொண்டாட்டம் என்பது கோபிக்கும் நண்பர்களுக்கும் தெரிந்தது. தன் இனம் உயிர் பிளந்து வீழ்வதை — தான் கண்ட பூர்வீக நிலம் அழிவதை — மெல்பேர்னிலுள்ள சிங்களவர்கள் கொண்டாடும் பெரும் திருவிழா அதுவென்று புரிந்தது. முகம் முழுவதும் வெற்றிக்களி பூசிய பூரிப்பான பெரும் கூட்டம் அது. அவர் எழுப்பிய ரபான் சத்தங்களும் சலங்கை ஒலிகளும், பூட்டியிருந்த கார் கண்ணாடிகளையும் ஊடுருவி காதில் எரி திரவமாய் தெறித்தது.

சிவப்பு — மஞ்சள் வண்ணக்கொடியுடன் வந்துகொண்டிருந்த கோபியின் காரைக் கண்டவுடன், பல நூற்றுக்கணக்கான சிங்கக்கொடிகள் அவனை நோக்கிப் பாய்ந்து வந்தன. பேர்க் வீதியை முழுதாக ஆக்கிரமித்தபடி ஓடிவந்த அக்கூட்டம், கோபியின் "சுபரூ" காரின் மீது பாய்ந்தார்கள். வன்மம் தீர சிங்கக் கொடிகளால் அடித்தார்கள். பெரும் வரலாற்றைச் சுமந்து நின்றுகொண்டிருந்த அந்த அடங்காப் பறவையின் மீது ஏறி மிதித்தார்கள். முப்பது வருடங்களுக்குப் பின்னரும் வரலாற்றின் எல்லாப் பழிகளுக்குமாக அந்தக் கார் மீண்டும் சிதைந்துகொண்டது.

—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுகதை: ஆனந்தப்ரசாத்**



# மாறுகண்

இலக்கம் 2455 'ரூ தெ புலோன்யா.... லோங்கே.... மொன்றியால்.' பிரெஞ்சு க்யூபெக் மாகாணம். மேற்படி அடுக்குமாடியின் முகவரியில் 192 அறைகள் கொண்ட ஒரு முதியோர் இல்லம். தினசரி அதிகாலையில் எனது ஓட்டம், நடைப் பயிற்சியை மேற்கொள்ளும் போது இதனைத் தாண்டித்தான் போயும், வந்தும் கொண்டிருக்கிறேன் கடந்த பதினொரு வருடங்களாக. நான்கு பருவகாலங்களிலும் 'பொன்ஜோர்னே' (இந்தநாள் நல்ல நாளாகட்டும்) என்று சொல்லி வாழ்த்திக்கொள்ளும் போதில் நான் பார்த்த முகங்கள், நடைவண்டிகளோடு மெதுவாகத் தடுமாறி நடக்கும் இருப்புகள், 'டெரஸ்' இலிருந்து கை அசைக்கும் அசைவு குறைந்த வாழ்வுகள், வெயில் நாட்களில் வெளியே முதியோர் இல்லத்தின் இடது பக்கத்—திலிருந்த வளவில் அவர்களுக்கான சிறு தோட்டப் பயிர்ச் செய்கைக்காக ஒதுக்கப்பட்டிருந்த திடலில் சிறிய...சிறுபிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளாண்மையும்.... அடர்ந்து திரண்டிருந்த 'மேப்பிள்' மரங்களின் கீழே புகை பிடிப்பதற்காகத் திரண்டிருக்கும் இறப்பை மறுதலித்த இறுமாப்பு ஜீவன்கள்..... சி.எல். எஸ்.சி என்கிற குடியிருப்பு மருத்துவ சேவைகள் அதே குடியிருப்போடு இணைந்திருந்தும்..... அவசரகால வாகனங்கள் தரித்திருந்தும்.... பலர் அடிக்கடி காணாதே போய்விடுவார்கள். புதியவர்கள் வருவார்கள்..... மீண்டும்! இந்தக் காட்சிகள் யாவும் நாளாந்தம் 'இளமை இனிது முதுமை இனிது.... உயிர் நன்று சாதல் இனிது' என்கிற பாரதியை விசாரணைக்குட்படுத்திக் கொண்டிருந்தன.

இருபதுக்கு இருபது பார்வை குறைந்த ஒரு முதிய, குள்ளமான பெண்மணிக்குக் கண்களாக அழைத்துச் செல்லும் அவளைவிடப் பெரிய 'மீரா' நாயைத்தவிர.... (இவள் எப்படித்தான் நடைபாதை ஓரத்தில் அந்த விழிகாட்டியின் கழிப்பை சுத்திகரித்துச் செல்கிறாள் என்பது விடுகதை) அனேகமானோர் சின்னஞ்சிறிய 'சுவாவா... பொஸ்டன் டெரியர்..... கோல்டன் ரிட்ரீவர் .... பொமரேனியன்' போன்ற இன்னோரன்ன பிற ஜீவன்களோடு ஏகாந்தத்தில் சம்பாஷித்தபடிக்கு..... என்றோ அவர்கள் பெற்று வளர்த்துவிட்ட மனிதக் குழந்தைகள் எப்போதோ இவர்களை இந்த முதியோர் இல்லத்தில் தள்ளிவிட்டு எங்கோ அஞ்ஞாத வாசங்கள் போய்.... வருடத்திற்கொருமுறை அன்னையர் தினத்திலும், தந்தையர் தினத்திலும் பூங்கொத்துகளும், சாக்லெட்டுகளும் (இவர்கள் நீரிழிவுக்கான 'இன்சுலின்' ஊசி குத்திக்கொண்டிருந்தாலும்.... அதனோடிணைந்த மும்மூர்த்திகளாகிய 'கொலஸ்ரோல்'... உயர் இரத்த அழுத்தம் இவற்றுக்கான மாத்திரைகள் முழுங்கிக் கொண்டிருந்தாலும்) கொடுத்து அரைமணிநேரம் அன்பைச் சொரிந்துவிட்டு அவரவர் குற்ற உணர்வுகள் சமனப்பட்டதும் காணாதே போய்விடுவார்கள். இந்த வருகைகளும் கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போலக் காலப்போக்கில் காலாவதியாகிவிடும்!

இந்த முதியவர்களோ அவரவர் நாய்க்குட்டிகளை அன்பாகக் கண்டித்து வளர்த்து இந்த வயதில் அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளை ஆளாக்கும் முயற்சியில் விக்கிரமாதித்தியப் பிடிவாதத்தில் நாட்களை நகர்த்திக்கொண்டிருப்பார்கள். ஆண்டவரால் வாக்களிக்கப்பட்ட எஞ்சிய நிமிடங்களை நகர்த்திச் செல்ல வேண்டுமே?

ஏதோவொரு வருடத்தின் ஒரு கோடையில் அந்தப் பெரியவரை நான் சந்தித்தேன்..... அவருடைய வெளிர்கருமை நிறத்து நாய்க்குட்டியோடு. காய்கறித் தோட்டத்தை அண்டி இருந்த.... மரத்தாலான மேசையுடன் இணைக்கப்பட்டிருந்த வாங்கில் அமர்ந்திருந்து சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தார்.... அருகிருந்த ஒரு காலியான 900 கிராம் 'மக்ஸுவல் ஹௌஸ்' தகரப் பேணியில் சாம்பலைத் தட்டியபடி. நான் 'ஜாக்கிங்' செய்துகொண்டு அவரைக் கடந்து போகையில் அந்த நாய்க்குட்டி குரைத்தபடியே என்னைத் துரத்திக்கொண்டு பின்னால் வந்தது. "ஏய்.... க்றே... ஸிலான்ஸ் ஸில்வுப்ளே....." என்று அவர் அந்தக் காலைப் பொழுதின் அமைதியை மீறிக் கத்தியதும்... தயவுசெய்து அமைதியாக இரு... என்று அவர் கேட்டுக்கொண்டபடி அமைதி காத்தது மட்டுமல்லாது குட்டிவாலையும் ஆட்டிக்கொண்டிருந்தது.

மெதுவாக அதனருகில் சென்று எனது குவித்திருந்த வலது கையின் பின்புறத்தை அதன் மூக்கருகே கொண்டுபோக.... முகர்ந்துவிட்டு முகத்தைப் பார்த்தது. தடவிக்கொடுத்தேன்.... ஒட்டிக்கொண்டு விட்டது. "குழந்தையை நன்கு வளர்த்திருக்கிறீர்கள்....." என்று சொன்னதற்குச் சிரித்தார். "க்றே.... வியேன் இசி" என்று அழைக்க அவரருகே உட்கார்ந்திருந்தது என்னிடம் வந்தது. "உங்களைப் பிடித்துவிட்டது" என்றார். "எதற்காக 'க்றே' என்று பெயர் வைத்தீர்கள்..... அதன் நிறத்துக்காகவா?" என்று கேட்டேன். "எனக்கு இரண்டு விஷயங்கள் மிகவும் பிடிக்கும்.... ஒன்று நிறம், மற்றது 'ஏர்ள் க்றே' தேயிலை.... அதனாலேயே...." என்று சிரிப்பு மாறாது பதில் தந்தார்.

இப்படியாக ஆரம்பித்த தொடர்பு அந்தக் கோடை முழுவதும் தொடர்ந்தது. தரையெங்கும் விரிந்திருந்த பசும் புற்கள் வெண்பனிப் போர்வைக்குள்ளே காணாது போயிருந்த காலங்களில் அவர்களும் காணாமல் போய்விட்டிருந்தார்கள். நான் வழமைபோல ஓட்டமும், நடையுமாக. இப்படியே அடுத்த.... அதற்கடுத்த கோடைகள் வந்து போயின. ஆரம்பத்தில் சந்திக்கும் போதெல்லாம் நிமிஷக்கணக்கில் இருந்த உரையாடல்கள் நாளாவட்டத்தில் ஒரு மணிக்கூறை நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது. அவ்வளவு நேரத்திற்கு எனது பிரெஞ்சு அறிவு போதாமையினால் ஆங்கிலத்தில் பேசினோம். அவருக்கு இரண்டு மொழியிலும் நல்ல தேர்ச்சி இருந்தது. எனினும் அவரது ஆங்கிலம் கிழக்கு ஐரோப்பிய ஒலிக்கலப்போடுக் கூடியிருந்ததில் இவர் 'க்யூபெக்குவா' இல்லை என்பதை என்னால் அனுமானிக்க முடிந்தது.

பெரியவருக்கு உலக நாடுகள் அனைத்திலும் அன்றாடம் நிகழ்ந்துகொண்டிருக்கும் அரசியல் மாற்றங்களும், அழிவுகளும் மிகத்துல்லியமாகத் தெரிந்திருந்தது. அதற்கான விமர்சனங்களும், கணிப்புகளும் மிகச் சரியாக இருந்தது. கூடவே மருத்துவத் துறையிலும் ஆழமான அறிவிருந்ததை நான் நாளடைவில் அவதானித்து வந்தேன். இவ்வளவு படிப்பும், அறிவும் கொண்ட மனிதர் ஏன் இந்த முதியோர் இல்லத்தில் தனித்துப்போய் வாழ்கிறார் என்கிற கேள்விகளும் என்கூடவே வளர்ந்தது. திடகாத்திரம் என்று சொல்ல முடியாவிட்டாலும் ஒரு ஓய்வு பெற்ற இராணுவத்தானின் கட்டுடல். நிமிர்ந்த மிடுக்கு. ஊடுருவிப் பார்க்கும் கண்கள். வெண்மையும், கருமையும் பரஸ்பரம் பகிர்ந்துகொண்ட கேசம். சுத்தமாக மழித்த முகம். நேர்த்தியான ஆடையணிகள். ஒருநாள் கேட்டேவிடலாம் என்று முடிவெடுத்தேன். அதற்கான கோடையும் வந்தது. கேட்டும் விட்டேன்.

எனது கேள்வியை உள்வாங்கிக்கொண்டு சில பொழுது மௌனமாக இருந்தார். எனினும் எனது கண்களினூடாக ஊடுருவி மூளையின் கலங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாக இருதயத்தைத் தூளைத்த அவரது பார்வைக் கோப்பு சற்றே என்னை அச்சுறுத்தியது. எனது கணநேரத்து மிரட்சியை உணர்ந்து கொண்டாரோ என்னவோ சிரித்துக்கொண்டே சொன்னார்.

"வழிப்போக்கரே.... நாளதுவரை நான் நம்பிக்கொண்டிருந்த ஆண்டவரோடு 'மோனலாக்'தான் பேசிக் கொண்டு இருந்திருக்கிறேன்.... ஒருவழிப் பாதையாக. சமீபத்தில் தான் அவருடன் 'டயலாக்' பேசவாரம்பித்திருந்தேன்.... அவர் உங்களை என்னிடம் சேர்ப்பித்துவிட்டார் இருவழிப்பாதையில்.... சொல்கிறேன்....."

யூகோஸ்லாவியப் பொதுவுடைமைக் குடியரசில் அங்கம் வகித்த ஆறு சோஷலிஸக் குடியரசுகளான பொஸ்னியா,

**உங்கள் நாகரீகமான பேச்சும், பண்பான நடத்தையும், திறந்த மனதோடு என்னுடன் உரையாடியதும்... முழுமையாக உங்களை எனது உடன்பிறவா சகோதரியாக ஏற்றுக்கொள்ளவைக்கிறது.**

க்ரொயேஷியா,மசடோனியா, மொன்டநேக்ரோ, சேர்பியா, கோசவோ ஒவ்வொன்றாகக் கழன்று போய்க்கொண்டிருந்த 1990களில் பொஸ்னியாவும் பிரிந்து போவதற்கான சர்வஜன வாக்கெடுப்பு 1992இல் நடந்து முடிந்த வேளையில் பொஸ்னியப் பழைமைவாத சேர்பியர்களுக்கும், இஸ்லாமிய பொஸ்னியாக்குகளுக்கும் இடையேயான முரண்பாடுகளைத் தொடர்ந்து கிளர்ந்த யுத்தப் படுகொலைகள் தலைநகரமான சரயேவோவில் குரூரமாக நிகழ்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில் பொஸ்னியப் பழமைவாத சேர்பியனாகிய ராடோமீர் பெத்ரோவிச் எப்படியோ தப்பித்துக் கனடாவின் டொரண்டோ நகருக்கு அகதியாக 1995ஆம் ஆண்டின் இறுதியில் வந்து சேர்ந்தார்.

அகதியாக அங்கீகரிக்கப்பட்டு மூன்று வருடங்களில் 'க்ளினிக்கல் ஸைக்காலஜிஸ்ட்' ஆக 'பாரீஸ்' இன் 'சொர்போன்' பல்கலைக்கழகத்தில் கற்றுத் தேறிப் பெற்றிருந்த தராதரப் பத்திரத்திற்கு இணையான கனேடியத் தரமும் தேறி 'ஸன்னிப்ரூக் ஹெல்த் ஸயன்ஸஸ் ஸென்ரர்' இல் மிக உயர்ந்த ஒரு பணியிலும் இணைந்தார். உடன் பணியாற்றிய சலோமே ட்ரூடேல் என்கிற 'க்யூபெக்' மாகாணத்துப் பிரெஞ்சுப் பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்து ஒரு ஆண் குழந்தையோடு வாழ்க்கை நிறைவாக நகர்ந்து கொண்டிருந்தது.

இந்தக் காலகட்டத்தில்தான் அவரது ஆழ்மனதில் பெரும் உபாதைதரும் மாற்றங்களினால் ஆட்கொள்ளப்பட்டார். பகலில் மருத்துவமனை... இரவில் மகன் அலெக்ஸாந்துடன் மகிழ்வாக இருந்துவிட்டு இரவுணவு முடித்துத் தூங்கப்போன நேரங்களிலெல்லாம் நரகவேதனைகள் அவரை அரவணைத்துக்கொண்டன.

ஒரு பழைமைவாய்ந்த கருங்கல் கட்டிடத்தின் அடித்தளத்தில் மிகவும் மங்கலான மஞ்சள் வெளிச்சத்தில் வரைபடங்களும், பொஸ்னிய ராணுவத்தின் அங்கத்தினர்களும் தீவிரமாக விவாதித்துக் கொண்டிருப்பதுபோலவும்... இன்று ஒரு மருத்துவருக்கான சீருடை—யில்லாது..... ராணுவச்சீருடையில் தன்னைத்தானே அடையாளப்படுத்திக் கொண்டிருப்பது போலவும்....குழப்பமான பிம்பங்கள் தோன்றி மிரட்டிக்கொண்டருந்தன. மகன் அலெக்ஸாந் ராணுவ உடையில் கையில் 'அஸோல்ட் ரைஃவுள்' உடன் ஒரு வெளியில் நிற்பதாகவும், எதிரேயிருந்த பாரிய மதிற்சுவரின் முன்பாக முதுகைக்காட்டியபடி கைவிலங்கிடப்பட்ட சில மனிதர்கள் அணிவகுத்து நிற்பதாகவும், அந்தப் பகற்பொழுதில் அவர் கொடுத்த ஆணையின்படி அவன் அவர்களை சுட்டுத்தள்ளிக் கொண்டிருப்பதாகவும்... ராடோமீர் பெத்ரோவிச் இரவில் தூக்கமின்மையால் மறுநாள் கடமைகளில் கருத்தூன்றவியலாது அவரை ஆட்டிப் படைத்துக்கொண்டிருந்தது.

இதனைச் சொல்லிக்கொண்டிருக்கும் போதில் புகைத்துக் கொண்டிருந்த சிகரெட் விரல்களைச் சுட்டதும் அவர் 'தபர்னாக்' என்று உரத்துக் குரைத்து வீசியெறிந்ததில் மிரண்டுபோன 'க்றே' வள்ளென்று குரைத்து அவர்மடியை விட்டு குதித்து ஓடிப்போனது. ஆனாலும் அவருடன் பிணைத்திருந்த 'லீஷ்' அதிகதூரம் போக விடவில்லை. என்னிடம் வந்து அகதிநிலைகோரியது. பெத்ரோவிச் முகத்தில் முன்னெப்போதும் நான் அவதானிக்காத ஒரு குரூரத்தை என்னால் அவதானிக்க இயன்றது.

*

'சலோமே ட்ரூடேல்' ஒரு இறுக்கமான ஆனால் மென்மையான மனதுடைய கத்தோலிக்கப் பெண்மணி. சலோமே அன்று அந்த முதியோரில்லத்தில் 'ராடோமீர் பெத்ரோவிச் 'உடன் என்னையும் அவர்கள் அவருடைய முதியோரில்லத்தில் அந்த வருடத்தின் டிஸெம்பர் 24இல் நத்தார்தினத்தின் முதல்நாள் மாலையில் அழைத்திருந்தார்கள். சலோமே என்கிற பெயரே எனக்கு மிகவும் சங்கடமாகவிருந்தது. திருமுழுக்கு யோவானுடைய தலையை வெட்டித் தரச்சொல்லிக் கேட்ட பெண்மணி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் பெத்ரோவிச் அன்போடு அழைத்திருந்த காரணத்தால் என்னிடம் அப்போதிருந்த சுமாரான உடைகளை அணிந்துகொண்டு எனது அகதி கௌரவத்தைக் காட்டிக்கொள்ள முனைந்தேன். அன்போடு உபசரித்தார்கள். அந்த இரவுமுழுவதும் எனது பாதங்கள் குளிர்ந்த நீரை அளைந்து கொண்டிருந்ததாகத் திளைத்துக்கொண்டிருந்தேன். 'க்ரே' என்னுடனேயே மிகவும் ஒட்டிக்கொண்டிருந்தது. இருவரும் மிக நேசத்தோடும், நெருக்கமாகவும் உரையாடிக்கொண்டும்....என்னிடமும் கூடத்தான்.....

சலோமே என்னைப்பற்றி விசாரித்தாள். எனது அகதி வாழ்வை எப்படியோ சொல்லிவிட முயன்றேன். ஆனாலும் எனது சுயமரியாதை விடவில்லை.'க்ரே'என்னையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தது.

முடிவில் சொல்லிவிட முயன்றேன். ஆனால் அந்த சகோதரி முகத்தைப் பார்த்துக்கொண்டு என்னால் பொய் சொல்ல முடியவில்லை. சலோமே உரையாடும்போது மிகவும் மிருதுவான குரலில் அன்பும், அக்கறையும் தொனித்திருந்த தில் ஒளிவு மறைவில்லாது எல்லாவற்றையும் சொல்லத் தொடங்கினேன்.

நீங்கள் அருந்திக்கொண்டிருக்கும் தேயிலை விளைந்த தீவான இலங்கையிலிருந்து வந்தவன். 'க்யூபெக்' மாகாணத்தில் நிலைகொண்டவன்... ஏராளமான ஆறுகளை, சமுத்திரங்களை ஒரு மயிரிழையில் உயிர் தப்பிக் கடந்து வந்தவன்... என்றவாறெல்லாம் எனது ஊழ்வினைகளை விபரமாக விளக்கினேன். 'க்ரே' தனது முன்னிரண்டு பாதங்களை எனது முழங்கால்களில் வைத்துக்கொண்டு என் முகத்தையே இமைத்து.... இமைத்து வைத்த கண் வாங்காது, குட்டி நாக்கையும் வெளியே துருத்தியபடி பார்த்துக் கொண்டிருந்தது.

'க்ரே'க்கு உங்களைப் பிடித்துவிட்டதென்றால் 'யூ ஆர் க்ரேற்' ஒளிவு மறைவில்லாது எனது கடந்து போன வாழ்நாட்களை விவரித்தது என்மீது அளவுகடந்த நம்பிக்கையைத் தந்திருக்கிறது என்று சலோமே சிரித்துக்கொண்டே சொன்னார். உங்களைப்பற்றி நானும், என் கணவரும் நிறையவே பேசுவோம்.நீங்கள் ஸ்ரீ லங்காவிலிருந்து இனஅழிப்புக் கலவரங்களிலிருந்தும் என்னவெல்லாமோ துன்பங்களையும், வலிகளையும் சுமந்து இந்த நாட்டை வந்தடைந்திருக்கிறீர்கள். பெத்ரோவிச் உங்கள் துணிச்சலான உயிராபத்தான புலம்பெயர் முயற்சிகளை என்னிடம் விவரித்திருக்கிறார். நாங்களெல்லோருமே புலன்களையும், புலத்தையும் விட்டுப் பெயர்ந்தவர்கள்தான். இந்த நாடு எங்களுக்குச் சொந்த மண்ணல்ல. இயற்கையோடு ஏகாந்தமாக, இனிமையாக சமரசம் செய்துகொண்டு ஆரோக்யமாக வாழ்ந்த ஒரு பூர்வீக குடிமக்கள் சமூகத்தை மூர்க்கத்தனமாக... மிலேச்சத்தனமாகச் சிதைத்து...உடைத்துச் சீரழித்த எனது முன்னோரும், அதன் பின்னராக வந்த ஆங்கிலேயரும், பிரெஞ்சு ஆதிக்கத்தை உடைத்துவிட்டு இன்று வாழ்வாங்கு வாழ்ந்துகொண்டிருக்க....அந்த மூத்த குடிமக்கள் இன்று அவலங்களின் மத்தியில்.... "ஜெ மே ஸ்வ்வியேன்" (நாங்கள் மறக்கவில்லை) என்று வாகன இலக்கத் தட்டுகளில் பொறித்துத் தெருத்தெருவாக தோல்வியைப் பரிதாபமாக ஒத்துக்கொண்டு பிரெஞ்சுகாரர்கள் அலைகிற நகைச்சுவைகள்...... இந்தப் பூர்வீக குடிமக்களின் இன்றைய ஒவ்வொரு இழப்புகளுக்கும் துர்ப்பாக்யங்களுக்கும் ஐரோப்பிய ஆதிக்கமே மூலகாரணம். எனது கணவர் இன்று இங்கே வாழத் தேர்ந்தெடுத்துக் கொண்டதும் ஒரு விபத்துத்தான்."என்று பேசிமுடித்தார் சலோமே. ஒரு பிரெஞ்சுப் பெண்மணி தன்னைத்தானே விமர்சித்துக்கொண்டது எனக்கு புதிதாக இருந்தது.

இவ்வாறு எனக்கு மகிழ்ச்சியாக நேரம் கடந்து போய்க்கொண்டிருக்கையில் ராடோமீர் பெத்ரோவிச் தூக்கம் வருகிறதென்று சொல்லி விடைபெற்றுக்கொண்டார். நாங்கள் தொடர்ந்தோம். ஏனோ சலோமேயுடன் பேச எனக்குப் பிடித்திருந்தது. அவரும் 'ஸன்னிப்ரூக் ஹெல்த் ஸயன்ஸஸ் ஸென்ரர்'இல் தலைமைத் தாதியாகப் பணிபுரிந்துகொண்டிருந்தார். அந்தப் பணிக்கேற்ற சாந்தம் தவழும் முகவாகு அவருக்கமைந்திருந்தது. கேட்க வேண்டும் போலிருந்தது... அது இந்த சந்தர்ப்பத்தில் சரியா, தவறா என்று அனுமானிக்க முடியாது கேட்டேவிட்டேன்.

"இவ்வளவு அன்யோன்யமாக நீங்கள் இருக்கையில் ஏன் நீங்கள் ஒண்டாரியோவிலும், இவர் இங்கே முதியோரில்லத்திலும்...இவ்வாறு கேட்டது அநாகரீகமாயிருந்தால் என்னை மன்னித்துவிடுங்கள்.

இன்றுதான் நான் உங்களைச் சந்தித்தேன். உங்கள் நாகரீகமான பேச்சும், பண்பான நடத்தையும், திறந்த மனதோடு என்னுடன் உரையாடியதும்... முழுமையாக உங்களை எனது உடன்பிறவா சகோதரியாக ஏற்றுக்கொள்ளவைக்கிறது."என்றேன். நன்றி சொல்லிவிட்டுத் தொடர்ந்தார்.

"வட்டத்துக்குள் சதுரம்....சதுரத்திற்குள் வட்டம்... இதுதான் எங்கள் வாழ்க்கை வட்டம். நான் எனது கணவரை மிகுதியாகவே காதலித்தேன்... இணைந்துகொண்டேன். மிகவும் மென்மையான மனமுடையவர். என்மீது அளவற்ற அன்போடும், நேசத்தோடும் இணைந்த ஒரு ஜீவன்.

காலப்போக்கில்.... ஒரு மனநோய் மருத்துவர்.... அவரே ஒரு மன நோயாளராக மாறியதை என்னால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. 'பொஸ்னியாவில்' அவர் வாழ்ந்த காலங்களின் ஞாபகங்கள் எதுவுமே அவருக்கு நினைவில் இல்லை. அதனால் அவர் மிகவும் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு ஏற்பட்ட உளவியல் சிக்கல்களுக்கு ஒரு தீர்வுகாண வேண்டுமானால் நாங்கள் மீண்டும் 'பொஸ்னியா' சென்று பார்ப்பதுதான் உகந்த வழியென்று தீர்மானித்தோம்."

*

விமானம் தரைதட்டியது. கால்பதித்த மறுநிமிடத்திலேயே ராடோமிர் பெத்ரொவிச் பிறிதொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனாக உரு மாறிப்போனார். ஏதொரு சலனங்களோ, சஞ்சலங்களோ இல்லாது ஒரு சராசரி மனிதனாக தரையில் வீழ்ந்து முத்தமிட்டார். மண்ணுக்கும், மனிதனுக்குமுள்ள பிணைப்பு. "என்னை 'செரப்ரனிக்கா'வுக்கு அழைத்துப்போ.... அழைத்துப் போ.."என்று மன்றாடினார்.

"நான் இதுதான் முதற்தடவையாக 'பொஸ்னியா' வருகிறேன். மொழியும் தெரியவில்லை..... எங்கள் குழப்பங்களைத் தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த ஒரு வாடகை வாகனவோட்டி எங்களை அணுகினார். "யூ வாண்டு ஹாவ் எ ரைட்...?" என்று ஆங்கிலத்தில் கேட்டார்.



'ஆம்' என்று பதிலிறுத்தேன். ராடொமிர் பெத்ரோவிச் 'அழைத்துப்போ...' என்ற 'செரப்ரனிகா' போக வேண்டும் என்றேன். ஒரு புதிரான பார்வையோடு எங்களை ஏற்றிக்கொண்டு வாகனத்தை ஓட்டினார். நகரத்தைத் தாண்டிப்போய் அழகிய கிராமத்துப்புறமாக ஒற்றயடித் தெருக்களால் அந்த வாகனம் விரைந்தது. இருபக்கமும் கண்ணுக்கெட்டிய தூரம் பசுமையான வயல் வெளிகள், பண்ணைகள் மனதிற்கு உவப்பானதாக இருந்தது. போகிற வழியெல்லாம் 'அலெக்ஸாந்.... அலெக்ஸாந்.... என்று புலம்பிக்கொண்டேயிருந்தார். சலொமே தொடர்ந்துசொல்லிக் கொண்டேயிருந்தாள் " ஒன்றுமே புரியவில்லை. "

சரயேவோவைத் தலைநகராகக் கொண்டிருந்த 'பொஸ்னியா'

*44% முஸ்லீம்களும், 32% பழமைவாத சேர்பியர்களும், 17% க்ரோயேஷியர்களும் அடங்கியிருந்த ஐரோப்பாவின் ஒரு பகுதியில் 1992 ஏப்ரல் 6ம் திகதியில் ஆரம்பித்து 1995 டிஸெம்பர் 14ஆம் திகதிவரை நீடித்த இஸ்லாமியர்களுக்கு எதிராகப் பழமைவாத சேர்பியர்கள் நடாத்தி முடித்த இனஅழிப்பில் ஆயிரக்கணக்கானவர்கள் மாண்டு போயினர்.*

"நாங்கள் 'செரப்ரனிகா' கிராமத்தை அண்மித்து விட்டோமென்று சாரதி சொன்னார். பரந்து விரிந்திருந்த வயற்காடுகளை ஊடறுத்துக்கொண்டு போகையில் ஒரு நாற்சந்தி எதிரே வந்தது. "இங்கே இடது பக்கம் திரும்பு" என்று உரத்துச் சொன்னார் பெத்ரோவிச். சாரதியும் திரும்பிப் போய்க்கொண்டிருக்கையில் அது ஒரு மாட்டுத் தொழுவமாக இருந்திருக்கலாம்.... இன்று சிதிலமாகிக் கிடந்தது. "இங்கே நிறுத்து... இங்கேயே இரு...."என்று அதட்டும் குரலில் பெத்ரோவிச் சேர்பியமொழியில் உரத்துக் கத்தினார். ஓட்டுனர் கொஞ்சம் அதிர்ச்சியடைந்தாலும் சுதாரித்துக்கொண்டு ஓரங்கட்டி வண்டியை நிறுத்தினார்.

நாங்கள் இருவரும் வாகனத்தைவிட்டு இறங்கினோம். திடீரென்று பெத்ரோவிச் ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கிக் கொஞ்சத் தூரம் ஓடினார். ஓடியதும் முடிவில் தரையில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து.... பின்னர் முழந்தாளிட்டு ஆகாயத்தை நோக்கி வெறித்துப் பார்த்தபடி சேர்பிய மொழியில் ஏதோ அரற்றிக்கொண்டும் இருக்கையில் நாங்கள் அவரை அண்மித்தோம். அவர் கண்களிலிருந்து நீர் தாரைதாரையாக வழிந்தோடியது. நான் அவர் தோள்களில் ஆதரவாகக் கைகளை வைத்து அமைதிப்படுத்த முயன்றேன். அவர் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. சிறிது நேரம் அது நீடித்தது. பின்பு ஒருவாறு சமனப்பட்டு எழுந்தார். மீண்டும் நாங்கள் சரயேவோவிற்குத் திரும்பி தங்குவதற்கு ஒரு இடம் தேடிப்பிடித்து அன்றிரவைக் கழித்தோம்....நான் எதுவுமே அவரைக் கேட்கவில்லை....அவரும் எதுவும் சொல்லவுமில்லை. நாங்கள் மீண்டும் டொரண்டோ வந்தடைந்தோம்" என்று சொல்லி நிறுத்தினாள் சலோமே.

*

பழமைவாத சேர்பியனான ராடோமீர் பெத்ரோவிச் ஒரு முன்னாள் ராணுவவீரர். பொஸ்னிய இன அழிப்பு நடந்தேறிய காலப்பகுதியில் இந்த இன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிப்பின் சூத்ரதாரியான 'ராடோலன் கராட்ஸிக்' என்பவனின் வலது கரமாக இயங்கியவர். ஏராளமான இஸ்லாமிய பொஸ்னியர்களைக் கொன்று குவித்தவர்.'ஸ்லோபடான் ப்ரால்ஜாக்' (பின்நாட்களில் இவன் சர்வதேச நீதிமன்றத்தின் விசாரணைகளின் பின்பு போர்க்குற்றவாளியென த் தீர்ப்பு வழங்கப்பட்ட அந்த நிமிடமே நீதவான் முன்னிலையில் விஷம் குடித்துத் தற்கொலை செய்துகொண்டான்)ஆட்சி—யிலிருந்த அந்த நாட்களில் படுகொலை செய்யப்பட்ட இஸ்லாமியர்களின் பிள்ளைகளை 'ட்ரக்'குகளில் ஏற்றி 'செரப்ரனிகா' கிராமத்துப் பண்ணையொன்றில் வரிசையாகத் துணியால் கண்கள் மறைத்துக் கட்டப்பட்டும், கைகள் பின்புறமாக கயிற்றால் பிணைக்கப்பட்டும் நிறுத்திவைக்கப்பட்டு 'ராடோமீர் பெத்ரோவிச்' ஆணை பிறப்பித்ததும் இயங்கத் துவங்கிய இயந்திரத் துப்பாக்கிகளினால் சுடப்பட்டுக் கீழே விழுந்த பின்னரும் அவர்களை அணுகிக் கைத்துப்பாக்கிகளினால் தலையிலும் துளை போடும்படி ராணுவத்தைப் பணித்தார் பெத்ரோவிச்.

'டொரண்டோ' திரும்பி வந்தபின்பு தனது இந்தக் குரூரச் செயல்களுக்கெல்லாம் பாவமன்னிப்புக் கேட்கும் பாவனையில் தான் ஆணை பிறப்பித்த அனைத்துப் படுகொலைகளிலும் மிகக் கொடூரமானது இதுவேயென்றும் பொஸ்னியாவில் 'செரப்ரனிக்கா' கிராமத்துப் பண்ணையில் தான் அப்படி நடந்துகொண்டதற்கான காரணம் இதுவேயென்றும் விளக்கிவிட்டு அழுதார்..... அழுதார்... ஒருமாதம் வரையில்....மகன் அலெக்ஸாந்துடனான பேச்சுவார்த்தைகளோ, தழுவல்களோ இல்லாது தன்னை மிகவும் அன்னியப்படுத்திக்கொண்டார். சலோமே ட்ருடெல் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருந்தார்.

"ஒரு மாதகாலத்தின்பின்னர் தனது வேலை—யிலிருந்து நீங்கி ஓய்வூதியத்திற்கு விண்ணப்பித்துவிட்டு ஒரு பின்னிரவில் என்னுடன் மனந்திறந்து தத்துவார்த்தமாகவும், கவித்துவமான படிமங்களோடும் பேசிக்கொண்டிருந்தார். இந்த உரையாடல் இவருக்குள்ளிருந்த இன்னுமொரு மனிதனை எனக்கு அடையாளம் காட்டியது.

"தோழி...சலொமே...உன்னோடு வாழ்ந்த கடந்த இருபது வருடங்கள் மிகச்சிறப்பானவை. எனது மிகச்சிறந்த தோழியாக என்னைத் தோளணைத்துக்கொண்டிருந்தாய். நன்றி... நன்றி. இப்போது என்னைப்பற்றிய எல்லாவற்றையும் அறிந்தும், உணர்ந்தும் கொண்டாய். நாங்கள் காதலித்து கொண்டிருந்த காலங்களிலிருந்து.... இந்த நிமிடம்வரையிலான என்னைப்பற்றிய.... எனது குணாதிசயங்கள் மிகவும் பிறழ்ந்து வேறுபட்டிருப்பதையும் இந்த பொஸ்னியப் பயணத்தின் பின்னராக நீ உணர்த்து தெளிந்திருப்பாய். நான் உன்னை இன்னமும் நேசிக்கிறேனா என்பதிலும்.... நீ இன்னமும் என்னை நேசிக்கிறாயா என்பதிலும் இருவருக்குமிடையே தர்க்கங்கள் எழும். இப்போது நான் சொல்வதை நீ கேட்டுக்கொண்டிருப்பதாலேயே இன்னமும் என்னை நீ உதாசீனப்படுத்தவில்லை என்பது ஊர்ஜிதமாகிறது. தோழி... நீ உனது ஊனக்கண்களால் பார்த்த, கேட்ட எனது கடந்த கால வாழ்வின் இருண்ட வரலாறு அனைத்தையும் நான் நியாயப்படுத்தவோ அன்றி நிராகரிக்கவோ முனையவில்லை. அதுவெல்லாம் எனது நினைவழிந்து போனதொரு காலம். நான் என்றும் உன்னை நேசித்தேன்.... இன்னமும் தான்....இனியும்தான்.

தோழியே....ஒரேயொரு வேண்டுகோளை மட்டும் உன்னிடத்தில் விண்ணப்பிக்கிறேன். என்னைச் சித்திரவதைப்படுத்திக்கொண்டிருந்த கனவுகள்..... இந்தப் பயணத்தால் மீண்ட ஞாபகங்கள் எல்லாமே ஒரு பௌதீக மாற்றங்கள்தான். இரண்டு கண்களும் ஒரே குவியத்திலிருந்தால்தான் பிம்பங்கள் தெளிவுறும். எனது கண்கள் அப்படியிருந்திருக்கவில்லை அப்போது. இடதுகண்ணில் குரூரமும்... வலதுகண்ணில் காருண்யமும் விகசித்திருந்தன.பொஸ்னியாவை விட்டு நான் விலகியபோது எனது வலது கண்ணே எனது இடது கண்ணின் குரூரங்களை மன்னித்து நிராகரித்துவிட்டிருந்தது.

"சலோமே... எனது தேவதையே..... நான் 'மொன்றியால்' இற்கு இடம் மாறுகிறேன். என்றும் உள்ளதெமது அன்பும், தோழமையும். இந்த முடிவுக்கான காரணத்தை உனக்கு விளக்கவேண்டும்..... எங்களது ஒரே மகன் 'அலெக்ஸாந்' இவனை நீ நல்லபடியாக உருப்படுத்துவாய் என்பதில் இரண்டாவது அபிப்பிராயம் எனக்கில்லை. எனவே நான் அவனோடிருந்தால் 'செரப்ரனிக்கா' பண்ணைத்திடலில் நடந்தேறிய நிகழ்வுகள் இறுதி மூச்சுள்ளவரை என் ஆழ்மனதை அறுத்துத் தள்ளிக்கொண்டிருக்கும்.... அச்சுறுத்திக்கொண்டே இருக்கும்"

சலனங்கள் ஏதுமில்லாமலே பார்த்துக் கொண்டிருந்தாள் சலொமே. திருமுழுக்கு யோவானின் தலையைப் பரிசாகத் தேடிய சலோமே. அவளுக்கும் ஒரு பாவமன்னிப்பு கிடைத்திருக்கலாம்.

*

இலக்கம் 2455 ' ரூ தெ புலோன்யா.... லோங்கே.... மொன்றியால்.' பிரெஞ்சு க்யூபெக் மாகாணம். முகவரியில் 192 அறைகள் கொண்ட ஒரு முதியோர் இல்லம். கடந்த கோடையில் வழமையேபோல எனது ஓட்டம்....பயிற்சி... ஓடி முடித்து வந்து நடந்து வரும்போது இந்த முகவரியைத் தாண்டும் போதில் சக்கர நாற்காலியில் உட்காந்திருந்த முதியவரின் மடியில் 'க்ரே'...... என்னைக்கண்டதும் குரைத்துக்கொண்டே ஓடிவந்து என்னை எதிர்கொண்டு முத்தமிட்டு..... உரசிக்கொண்டே.....

சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்தவரோ சமிக்ஞைகளால் எனக்கும் , 'க்ரே' யிற்கும் இடேயான தொடர்புகளை அறிந்துகொள்ள முனைந்தார். நானோ "ராடொமீர் பெத்ரோவிச்" மீதான விசாரணைகளிலிருத்தேன்.அவருக்குப் பேசவரவில்லை,,,, எனக்குப் பாஷை தெரிவில்லை.... ஆனால் எங்கள் மூன்றுபேருக்குள்ளும் ஒரு பொதுவான இணைப்பிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகம்: **சுகுமாரன்**

# காதல் குறுகியது: கவிதை முடிவற்றது

பரிசல் புத்தக நிலையம், சென்னை வெளியிட்டுள்ள 'பாப்லோ நெரூதா இருபது காதல் கவிதைகளும் ஒரு நிராசைப் பாடலும்' மொழியாக்க நூலுக்கு எழுதிய அறிமுகக் கட்டுரை.




**இருபது காதல் கவிதைகளும் ஒரு நிராசைப் பாடலும்**

**(கவிதைகள்)**

பாப்லோ நெரூதா

தமிழில்: சுகுமாரன்



இருபது காதல் கவிதைகளும் ஒரு நிராசைப் பாடலும் பாப்லோ நெரூதாவின் இரண்டாவது கவிதைத் தொகுப்பு. 1924 இல் அவரது இருபதாம் வயதில் வெளிவந்தது. அதற்கு முந்தைய ஆண்டு வெளியாகியிருந்த அந்தி வெளிச்சம் என்ற முதல் தொகுப்பு அவருக்குக் கவிஞன் என்ற அறிமுகத்தை அளித்தது. ஆனால் இரண்டாவது தொகுப்பே இலக்கியப் புகழையும் வாசக வரவேற்பையும் பெற்றுத் தந்தது. இன்றளவிலும் நெரூதாவின் கவிதை நூல்களில் அதிகம் பதிப்பிக்கப்பட்டதும் பரவலாக வாசிக்கப்பட்டதும் அநேகமாக இந்தத் தொகுப்பாகவே இருக்கலாம். நூற்றாண்டை நெருங்கும் நிலையில் அதன் பதிப்பு எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. வாசிப்பும் பரவலாகி—யிருக்கிறது

பாப்லோ நெரூதா கவிதைகளை அறிந்திராதவர்களும் அவரது காதல் கவிதைகளால் ஈர்க்கப்பட்டிருப்பார்கள். இருபது காதல் கவிதைகள் தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஏதாவது சில வரிகளைத் தங்கள் காதலைச் சொல்லப் பயன்படுத்தியிருப்பார்கள். குறிப்பாக, நூலின் பதினான்காம்கவிதை (ஒவ்வொரு நாளும் நீ விளையாடுகிறாய்) இன் கடைசி வரியான வசந்தம் செர்ரி மரங்களுடன் நிகழ்த்துவதை / நான் நிகழ்த்தவேண்டும் உன்னுடன் என்பதும் இருபதாவது கவிதை (இன்றிரவு என்னால் எழுத முடியும்) இன் இடையில் வரும் காதல் குறுகியது, மறதியோ மிக நீண்டது என்ற வரியும் எழுதப்பட்ட காலம் முதல் இன்றுவரை காதலர்களால் காதலிகளிடம் அந்தரங்கமாக முணுமுணுக்கப்படுகின்றன. நெரூதாவின் கவிதைகள் ஏறத்தாழ அறுபதுக்கும் மேற்பட்ட மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன. அதன் வாயிலாக இந்த வரிகள் அந்தந்த மொழிகளின் உணர்வாகவே மாறி—யிருக்கின்றன. அந்த மொழிகளின் கவிதையாக்கத்தில் நேரடியாகவோ மறைமுகமாகவோ செல்வாக்கும் செலுத்தியுள்ளன,

பரிசுத்த வேதாகமம், பழைய ஏற்பாட்டில் உள்ள சாலமோனின் உன்னதப் பாட்டுகளுக்கு இணையான காதல் கவிதைகளின் தொகுப்பாக நெரூதாவின் இருபது காதல் கவிதைகள் கருதப்படுகிறது. சாலமோனின் பாடல்களுக்கு மதத்தின் பின்புலம் உள்ளது என்ற வேற்றுமையைத் தவிர்த்தால் இரண்டு நூல்களும் பொது ஒற்றுமைகள் கொண்டவை. பெண்மீது ஆண் கொள்ளும் மாளாக் காதலையே இரண்டு நூல்களும் மையமாகக் கொண்டிருக்கின்றன. பெண்மீதான வேட்கையையே இரண்டும் கொண்டாடுகின்றன. முன்னது பழைமையின் பின்புலத்திலும் பின்னது நவீனப் பின்னணியிலும். காலமும் பின்புலமும் மாறினாலும் பெண்மீதான ஈர்ப்பு ஒன்றுதான்போல. சாலமோனிடம் பெண்ணுடல் 'அடைக்கப்பட்ட தோட்டமும் மறைவு கட்டப்பட்ட நீரூற்றும் முத்திரையிடப்பட்ட கிணறு'மாக உருவம் கொள்கிறது. நெரூதாவிடம் 'வெண் குன்றுகளாகவும் வெண்தொடைகளாகவும் சரணடைந்த உலக'மாகவும் உயிர்பெறுகிறது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் தொகுப்புக்குக் கிடைத்த கவனம் பாப்லோ நெரூதாவுக்குத் தனது வழியையும் பயணத்தையும் வகுத்துக்கொள்ள உதவியது. 'நமக்குத் தொழில் கவிதை' என்ற தீர்மானத்தைக் கடைப்பிடிக்க ஏதுவானது. 'அந்தி வெளிச்சம்' தொகுப்பின் கவிதைகள் பெரும்பான்மையும் அன்று நடைமுறையிலிருந்த ஸ்பானியக் கவிதைப் போக்கை ஒட்டி எழுதப்பட்டவை.

ஆனால் அவற்றிலிருந்து மாறுபட்ட கவிதைகளே என்னுடைய விருப்பமாக இருந்தன. என்னுடைய புலனும் உயிரும் பிரிக்கப்பட முடியாமல் இழைந்த கவிதைகளை எழுத ஆசைப்பட்டேன். அது ஒரு சாகசமென்பதை உணர்ந்துகொண்டேன். அதன் விளைவுதான் இருபது காதல் கவிதைகளும் ஒரு நிராசைப் பாடலும் தொகுப்பு. நூல் வெளிவந்த பின்னர் உண்மையிலேயே அது சாகசம் என்பது தெரிந்தது.

இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் கவிஞர் ராபர்ட்ப்ளைக்கு வழங்கிய நேர்காணலில் நெரூதா நினைவுகூர்ந்தார். இருபது காதல் கவிதைகளை எழுதத்தூண்டிய சாகசம் நெரூதாவின் இறுதிக்காலம்வரை கவிதையிலும் வாழ்விலும் தொடர்ந்தது.

நெஃப்தாலிரேயஸ்பஸ்வால்தோ என்ற எளிய மனிதன் உலகப்பெரும் கவிஞர் பாப்லோ நெரூதாவாக அறியப்படவும் இந்த சாகசமே காரணம்.

*2*

நெரூதாவின் கவிதையுலகம் எண்ணிக்கையால் பரந்தது. பாடுபொருட்களால் விரிந்தது. முதல் கவிதை வெளியான பதின்மூன்றாம் வயதுமுதல் மரணமடைந்த அறுபத்தொன்பதாம் வயதுவரையிலான ஐம்பத்து ஆறு ஆண்டுகளில் எழுதிக் குவித்த கவிதைகளின் எண்ணிக்கை மூவாயிரத்து ஐநூறுக்கும்மேல். இவற்றில் மூன்றில் ஒருபங்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. இலான்ஸ்டாவன்ஸ் தொகுத்திருக்கும் பெருந்திரட்டில் ஏறத்தாழ அறுநூறு கவிதைகள் இடம்பெற்றிருக்கின்றன. ஆங்கிலம் நீங்கலான பிற உலகமொழிகளிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. நெரூதாவின் கவிதைகள் பேசும் மையப் பொருள்களும் விரிவானவை. உப்புமுதல் பிரபஞ்சம் முடிய அனைத்தும் அவரது கவிதையாக்கத்தில் உள்ளடங்கியிருக்கின்றன. அவருக்கு முன்னும் பின்னுமான காலத்தின் எல்லாத் தருணங்களும் பதிவாகியுள்ளன. மானுட இருப்பின் சகலநிலைகளும் மனிதப் பிறப்பின் வெவ்வேறு உணர்வுகளும் கவிதைகளில் கூறுபொருளாகியுள்ளன. இந்தக் கருத்தை முன்னிருத்தக் காரணம், பாப்லோ நெரூதாவைக் குறிப்பிட்ட ஏதாவது வகைமைக்குள் முடக்கிவிட முடியாது என்பதை எடுத்துக்காட்டவும் அவரது கவிதைகளை ஏதாவது ஒரு பிரிவுக்குள் அடக்கிவிடக்கூடாது என்பதை வலியுறுத்தவும் தான்.

எனினும் அந்தக் கவிப்பேருலகை நான்கு நிலைகளிருந்து காணமுடியும். இருப்பு, இயற்கை, சமூகம், உலகம் என்று நான்கு பகுப்புகளில் அவரது கவிதைகளை அணுகலாம். இவை ஒவ்வொன்றும் ஒன்றையொன்று பாதிப்பவை. ஒன்றையொன்று சார்ந்தவை. ஒன்றுக்குள் ஒன்று பிணைந்தவை. இவையனைத்துக்கும் அடிப்படையான உறவாகக் காதலைச் சொல்லலாம். காதலின் வெவ்வேறு உணர்வு நிலைகளில்தான் நெரூதா தனது கவியுலகை உருவாக்கியிருக்கிறார் என்பதைக் கவிதைகள் காட்டுகின்றன. இயற்கை மீதான காதல் ஆராதனையாகவும் சமூகத்தின்மீதான காதல் போராட்டமாகவும் உலகத்தின்மீதான காதல் அரசியலாகவும் வெளிப்படுகின்றன. தனது மானிட இருப்பின் ஆதாரப்புள்ளியாக அவர் கருதியது பெண்மீதான மாளாக் காதலைத்தான் என்பதன் சான்றாக இருபது காதல் கவிதைகளைச் சொல்லமுடியும்.

*3*

இருபது காதல் கவிதைகள் வெளியான காலத்தில் எந்த அளவு புகழப்பட்டதோ அந்த அளவுக்குக் கண்டனங்களுக்கும் கடும்விமர்சனங்களுக்கும் உள்ளானது. மகத்தான கவிதைகளாகப் பாராட்டப்பட்ட அதே சமயம் 'விடலைப் பையனின் பிதற்றல்கள்' என்றும் விமர்சனம் எழுந்தது. அந்த விமர்சனங்களில் நெரூதாகவிதைகளின் ஆதாரமான அம்சம் கவனிக்கப்படவில்லை. இந்தக் கவிதைகளில் இயற்கையின் அற்புதமான பகுதியாகவும் தவிர்க்க இயலாத மானுடப் பங்காளியாகவும் பெண் சித்தரிக்கப்படுகிறாள். இதுவே இருபது காதல் கவிதைகளை விடலைப் பையனின் காமவிழைவாகவோ பெண்ணுடல்மீதான இச்சையாகவோ குறுகிவிடாமல் உயிரின் முடிவற்ற வேட்கையாக நிலைநிறுத்துகிறது. நெரூதாவின் இறுதிக்காலக் கவிதைவரை இந்த இயல்பு நீடித்துமிருக்கிறது.

பாப்லோ நெரூதாவை பாத்திரமாக வைத்து உருவாக்கப்பட்ட இத்தாலியத் திரைப்படம் 'தி போஸ்ட்மேன்'. சிலியைச் சேர்ந்த எழுத்தாளர் அந்தோனியோஸ்கர்மேதா ஸ்பானிய மொழியில் எழுதிய 'பர்னிங்க்பேஷன்ஸ்' நாவலை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட சினிமா. மையப்பாத்திரமான தபால்காரன் மரியா கவிதை எழுதவிரும்புகிறவன். முன்னுதாரணமாக அவன் கருதுவது பாப்லோ நெரூதாவைத்தான். அவரைப் போன்ற ஒரு கவிஞன் ஆகிவிட்டால் ஏராளமான பெண்கள் தன்னை நேசிப்பார்கள் என்று கனவும் காண்கிறான். ஒரு காட்சியில் தனது அதிகாரியான தந்தியாளரிடம் சொல்கிறான்..

''ஒருவர் கவிஞராக இருந்தால் பெண்கள் அவரை மிகவும் நேசிப்பார்கள். பாப்லோவைப் பாருங்கள். எவ்வளவு பெண்கள் அவரை நேசிக்கிறார்கள். அவருக்கு வருகிற தபால்கள் எல்லாம் பெண்களிடமிருந்துதான். அவர் பெண்களால் நேசிக்கப்படுகிறவர்''

தந்தியாளர் திருத்துகிறார். "இல்லை. அவர் மக்களால் விரும்பப்படும் கவிஞர்". என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியா அரைமனத்துடனேயே அதை ஒப்புக்கொள்கிறான்." சரி, மக்களாலும் பெண்களாலும் நேசிக்கப்படும் கவிஞர்".

இந்தக் காட்சி கற்பனையானதுதான். ஆனால் நெருதாவைப் பொருத்தவரை மிகமிக உண்மையானது. அவருடைய இயல்பையும் அவர் கவிதைகளின் குணத்தையும் சொல்வது. காதல் உணர்வு பாப்லோ நெருதாவின் உயிரணுவிலேயே ஓடிய ஒன்று. ஏனெனில் அவரது பெற்றோரே தம்மளவில் மாளாக் காதலில் மூழ்கித் திளைத்தவர்கள்.

4

பாப்லோ நெரூதா என்ற ரிக்கார்தோ எலிஸெர் நெஃப்தாலி ரேயஸ்பஸ்வால்தோசிலியின் மத்தியப் பகுதி நகரமான பர்ராலில் 1904 ஜூலை 12 அன்று பிறந்தார். தந்தை ஜோஸ்தெல்கார்மன்ரேயஸ் மொரலேஸ் இருப்புப் பாதைப் பணியாளர். தாய் ரோஸா நெஃப்தாலி பஸ்வால்தோ ஒபாஸோ பள்ளி ஆசிரியை. இருவருக்கும் தனித்தனியான காதல் கதைகள் இருந்தன. அவை சுவாரசியமானவை. அதே சமயம் கொந்தளிப்புமிகுந்தவை. பிள்ளைப் பருவத்திலும் பதின்வயதிலும் நெரூதாவை இந்தக் கொந்தளிப்பு ஆழமாகவே பாதித்தது.

ரோஸாவை மணந்துகொள்வதற்கு முன்னும் பின்னும் ஜோஸ்கார்மன் இரண்டு பெண்களைக் காதலித் திருந்தார். அந்தக் காதல்களை மறைத்துவைத்துத்தான் ரோஸாவையும் மணந்தார். இரு பெண்களில் ஒருவர் டிரினிடாட். மற்றவர் அவுரேலியா, அவர்களில் டிரினிடாடுடனான உறவில் ஓர் ஆண் குழந்தையும் பிறந்திருந்தது, ரொடால்ஃபோ என்ற குழந்தை குடும்பத்தின் நம்பிக்கைக்குரிய தாதியால் ஆற்றங்கரைச் சிற்றூர் ஒன்றில் வளர்க்கப்பட்டான். டிரினிடாடுக்கும் ஜோஸ்கார்மனுடனான உறவுக்கு முன்பு ருடேசிண்டோ ஆர்டெகா என்ற பண்ணைத் தொழிலாளியுடனான உறவில் முதலாவது ஆண் குழந்தை பிறந்திருந்தது. பெயர் ஆர்லாண்டோ. டிரினிடாடின் செல்வந்தக் குடும்பம் அந்தக் குழந்தையையும் ரகசியமாகவே வளர்த்தது. ஜோஸ்கார்மன் தன்னுடைய காதல் உறவுகளைப் பகிரங்கப்படுத்தியதில்லை. அவரது காதலிகள் அவற்றை மறைத்துவைத்ததும் இல்லை. டிரினிடாடுடன் ஜோஸ்கார்மன் கொண்டிருந்த காதல் குறுகியது. ஆனால் அது நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தியது.

ஜோஸ்கார்மன் இருப்புப் பாதைத் தொழிலாளியாக இருந்தவர். ஆனால் அது நிரந்தரமான வேலையல்ல. எனவே பிழைப்புக்காக கூலித்தொழிலாளி யாகவும் சுமைதூக்கும் பணியாளராகவும் வெவ்வேறு இடங்களில்அலைந்தார். வெவ்வேறு சிறுநகரங்களில் வாழ்ந்தார். வாழ்ந்த நகரங்களில் எல்லாம் அவருக்குக் காதலிகள் வாய்த்தார்கள். சிறுவயது முதலே காசநோயால் அவதிப்பட்டு வந்த ரோஸா, மருத்துவர் ஆலோசனையின் பேரில் பர்ரால் நகரில் குடியேறினார். குடியேறிய குறுகிய காலத்துக்குள் ஜோஸ்கார்மன் தனது காதலை ரோஸாவிடம் வெளிப்படுத்தினார்.

ரோஸா நெஃப்தாலி இறுக்கமான பெண் அல்லர். எனினும் திடமான எண்ணங்களும் தீர்மான செயலும் கொண்டவர். அதுவரையான நாட்களில் வறுமையையும் கடும் உழைப்பையும் ஓயாதஅலைச்சலையும் அனுபவித்து வந்த ஜோஸ்கார்மன் நிலையான குடும்ப வாழ்க்கைக்கு ஆசைப்பட்டார். அது ரோஸா மூலமாகவே அமையும் என்றும் நம்பினார். அந்த நம்பிக்கையுடன் ரோஸாவிடம் தன்னை மணந்துகொள்ளும்படி மன்றாடினார். தனது உடல்நிலை நீண்டகால உற்சாக வாழ்க்கைக்கு இணங்குமா என்ற சந்தேகத்தில் ஜோஸ்கார்மனின் கோரிக்கைக்குத் தயங்கிவந்த ரோஸா நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் ஒப்புக்கொண்டார். திருமணத்துக்குப்பிறகு பர்ரால் நகர எல்லைக்கு உட்பட்ட பகுதியில் குடியேறினார்கள். மணம்முடித்த ஒன்பதாவது மாதம் நெஃப்தாலி பிறந்தான். காசநோயால் பீடிக்கப்பட்டிருந்த ரோஸா, குழந்தைக்கு இரண்டு வயது நிறைந்த வேளையில் மரணமடைந்தார். தன்னுடைய பிறப்பேத் தாயின் மரணத்துக்குக் காரணம் என்ற அநாவசியக் குற்றவுணர்வை வாழ்நாள் முழுவதும் பாப்லோ நெரூதா சுமந்திருந்தார்.

'நான் பிறந்தபோது

அவமானத்துக்குள்ளான புனித ஆன்மாவுடன்

என் தாய் இறந்தாள்' என்று ஆரம்பக்காலக் கவிதையொன்றில் வருந்தியுமிருக்கிறார்.

ரோஸாவின் மறைவு ஜோஸ்கார்மனுக்குப் பெரும் இழப்பானது. சரியான வேலையும் அமையவில்லை. வருமானமும் இல்லை. இரண்டு மாதக் கைக்குழந்தையான நெஃப்தாலியைப் பராமரிக்கத் திணறினார். தன்னுடைய மாற்றந்தாயிடம் குழந்தையை ஒப்படைத்துவிட்டு வேலை தேடிப் போனார். ஆண்டிஸ்மலைகளுக்கு அப்புறமுள்ள பகுதியில் கால்நடைத் தொழுவத்தில் பணிபுரிந்தார். ஆறு மாதங்களுக்குப் பின்பு வெறுங்கையுடன் ஊர் திரும்பினார். ஜோஸின் முன்னாள் முதலாளிகளில் ஒருவரின் மகளான அவுரேலியாடோல்ராவுடன் காதலிலும் ஈடுபட்டார். காதல் சாகசங்களும் நாடோடி அலைச்சலும் இனிமேலும் சரிப்பட்டு வராது என்பதை எடுத்துச்சொன்ன அவுரேலியா அவரை டிரினிடாடிடம் திரும்பச்செல்லும்படி அறிவுறுத்தினார். "அவள் உன் முதல் பிள்ளையின் தாய் அல்லவா?" என்று சுட்டிக்காட்டினார். ஜோஸ்கார்மனும் டிரினிடாடும் முறைப்படி மணந்தார்கள். குழந்தை நெஃப்தாலி மாற்றாந்தாய் டிரினிடாடின் அணைப்பில் வளரத்தொடங்கினான். குடும்பப் பொறுப்பை உணர்ந்த ஜோஸ்கார்மன், தனது முதல் பிள்ளை ரொடால்ஃபோவையும் அழைத்து வந்தார்.

ஜோஸ்கார்மனுக்கு அவுரேலியாமீதான காதல் மறைக்க முடியாததாக இருந்தது. அவர்களுக்கு இடையில் நெருக்கமான உறவும் ஏற்பட்டது. முப்பதுகளின் நடுப்பகுதியிலிருந்த ஜோஸ்கார்மன்மீது பதினெட்டு வயது அவுரேலியானாவுக்கும் ஈர்ப்பு இருந்தது. திடகாத்திரரும் முகப்பொலிவு உள்ளவரும் வசீகரமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலக்கண்கள்கொண்டவரும் இதமானவருமான அவர்பால் ஈர்க்கப்பட்டார் அவுரேலியானா. நெஃப்தாலிக்கு இரண்டு வயதைக் கடந்தபோது ஜோஸ்கார்மனுக்கும் அவுரேலியானவுக்குமான உறவில் ஒரு தங்கை பிறந்தாள். லாராட்டா என்ற லாரா.

ஆனால் இந்த உறவில் அவுரேலியானா இடையறாத தார்மீகத் திணறலையே அனுபவித்தார். அவரது கத்தோலிக்க நம்பிக்கை பெரும் பதற்றத்தை அளித்தது. இன்னொரு பெண்ணின் கணவனும் ஒரு பிள்ளைக்குத் தகப்பனுமான நபருடன் கொண்டிருந்த உறவு குற்றவுணர்வையே கொடுத்தது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு குற்றஉணர்வுடன் லாராவைத் தன்னால் வளர்க்க முடியாது என்ற முடிவுக்கு வந்தார். ஒன்று ஜோஸ்கார்மன் தன்னுடனும் லாராவுடனும் மட்டுமாக வாழ்க்கை நடத்த வேண்டும். அல்லது டிரினிடாட், ரொடால்ஃபோ, நெஃப்தாலி அடங்கிய குடும்பத்துடன் வாழ வேண்டும். தன்னுடன் வாழ விருப்பமில்லை என்றால் லாராவையும் அழைத்துச் செல்ல வேண்டும் என்று நிர்ப்பந்தித்தார். ஜோஸ்கார்மன் லாராவையும் கூட்டிக்கொண்டுக் குடும்பம் வசிக்கும் டெமூகோ நகருக்குத் திரும்பினார். டிரினிடாட் தன்னுடைய குடும்பப் பெயரை சிறுமிக்கு அளித்து அவளைத் தன்னுடைய மகளாக ஏற்றுக்கொண்டார். ஜோஸ்கார்மனின் ரகசிய உறவு அவருக்கு முன்னமே தெரிந்திருக்கலாம் அல்லது அது பற்றிய சந்தேகம் இருந்திருக்கலாம். ஆனால் அவர் அதை வெளிப்படுத்தவில்லை. தனது சொந்தப் பிள்ளையான ரொடால்ஃபோ, ரோஸாவின் வாரிசான நெஃப்தாலி, அவுரேலியாவின் மகளான லாரா மூவரையும் தன் கரங்களுக்குள் சேர்த்துக்கொண்டார்.

இந்தச் சிக்கலான உறவின் உண்மையும் வினோதமும் நெஃப்தாலியை ஆழமாகப் பாதித்தன. பாப்லோ நெரூதா என்ற பிற்காலக் கவிஞரை இந்த ரகசியங்களும் மீறல்களும் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தன.

5

நெஃப்தாலியின் இளமைப்பருவம் சிற்றன்னை டிரினிடாடின் அரவணைப்பிலும் சகோதரி லாராவின் பாசத்திலும் கழிந்தது. சகோதரன் ரொடால்ஃபோ எவரிடமும் ஒட்டுதல் இல்லாமல் நடந்து கொண்டான். தந்தை ஜோஸ்கார்மனின் கண்டிப்பு நெஃப்தாலியை வெருட்டினாலும் இருப்புப்பாதைத் தொழிலாளியான அவருடன் மேற்கொண்ட ரயில் பயணங்கள் குதூகலமளித்தன. தானறியாத உலகத்தில், விந்தைகளின் உலகத்தில் வந்து பிறந்த குழந்தையின் குறுகுறுப்பு அந்தக் கண்களில் எப்போதும் இருந்தது. அதைக் கவிஞனின் பார்வை என்று புகழ்ந்தவர்கள் தாய் டிரினிடாடும் சகோதரி லாராவும் மட்டுமே.

பள்ளிப்பருவத்திலேயே நெஃப்தாலி கவிதைகள் எழுதத் தொடங்கினான்.

பொதுவான இலக்கிய வாசிப்புப் பழக்கமிருந்த டிரினிடாட் சிறுவனை உற்சாகப்படுத்தினார். அந்த ஊக்குவிப்பை மதிக்கும் வகையில்அஞ்சலட்டை ஒன்றில் ஏரியும் பனிமூடிய மரங்களுமிருக்க நடுவில் கவிதையெழுதி, அவருக்குச் சமர்ப்பித்தான் நெஃப்தாலி.

பொன்னிறப் பகுதிகளின் நிலக்காட்சியிலிருந்து

அன்புள்ள அம்மா

உனக்காக இந்த எளிய அஞ்சலட்டையைத் தேர்ந்தெடுத்தேன்.

தந்தையிடம் காண்பித்தபோது 'இதை எங்கேயிருந்து காப்பி அடித்தாய்?' என்று கேட்டார். அம்மா 'இது நல்ல கவிதை' என்று சிகையை அளைந்து பாராட்டினார். அன்று ஒரு கவிஞன் உருவானான்.

ஜோஸ்கார்மனின் குடும்பம், நெஃப்தாலி பிறந்த ஊரான பர்ராலிலிருந்து டெமூகோவுக்கு இடம்பெயர்ந்தது. நெஃப்தாலியின் பள்ளிப்பருவம் அங்கு கழிந்தது. பள்ளிப்பாடங்களைவிட இலக்கிய வாசிப்பில்தான் ஈடுபாடு அதிகம். இலக்கியம் தவிர்த்து பெண்களும் அரசியலும் அவனை முதன்மையாக ஈர்த்தன. பதினோராம் வயதில் முதல் கவிதை வெளியானது. அதே வயதில் முதல் காதலும் நிகழ்ந்தது. மரியா என்ற பெண்மீதுகொண்ட ஈர்ப்பு அவளது புறக்கணிப்பால் வெகுவிரைவில் கலைந்தது. எளிய குடும்பத்துப் பையனைக் காதலிக்க அவள் குடும்பம் அனுமதிக்கவில்லை. பிள்ளைக் காதலில் ஏற்பட்ட தோல்வி நெஃப்தாலியை தனியனாக்கியது. "நெரூதா எப்போதும் தன்னை ஓர் அனாதையாகவே எண்ணியிருந்தார். தாயைத் தேடுவதிலேயே வாழ்க்கையைக் கழித்தார். இது ஓரளவு உண்மை. எப்போதும் தாயை இழந்த பெரிய குழந்தையாகவே இருந்தார்" என்று அவரது இளம்வயது தோழி பிற்காலத்தில் நினைவுகூர்ந்தார். அரசியல் உள்ளடக்கம் தவிர்த்த ஆரம்பக்காலக் கவிதைகளில் தனிமையே பெரிதும் இடம்பெற்றது. இருபது காதல் கவிதைகளில் அதை விரிவாகவே காணலாம்.

தனது தனிமையைத் தீர்த்துக்கொள்ள இரண்டாவது பிள்ளைக்காதலில் விழுந்தான் நெஃப்தாலி. அமேலியா அல்விஸோ முதல் சந்திப்பிலேயே அவனுக்குள் கிளர்ச்சியை ஏற்படுத்தினாள். அவளிடம் தன்னுடைய காதலைத் தெரிவித்தான். பதின்பருவப் பெண்ணான அவளுக்கு அது விளங்கவில்லை.

தவிர அவள் குடும்பத்தினர் செல்வாக்கு மிகுந்தவர்கள். அவள் தந்தை மின்சார உற்பத்தி நிலையம் நடத்தி நகரத்துக்கே விநியோகித்து வந்தார். வசதியான பின்னணியைச் சேர்ந்தவர்கள். கீழ்மட்ட இருப்புப்பாதைத் தொழிலாளியின் பிள்ளையுடன் தங்கள் பெண் பழகுவதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டித்தார்கள். அமேலியா விலகினாள். நொறுங்கிப்போன நெஃப்தாலி கவிதையில் தஞ்சம் புகுந்தான்.

பதினான்கிலிருந்து பதினாறு வயதுக்குள் நெஃப்தாலியின் சுமார் முப்பது கவிதைகள் சிலியில் அந்த நாட்களில் வெளிவந்துகொண்டிருந்த வெவ்வேறு இதழ்களில் அச்சேறின. 'கனவுலகவாசியாகக் கவிதை எழுதிக்கொண்டு திரிவது நடைமுறை வாழ்க்கைக்கு உதவாது' என்ற தந்தையின் கண்டிப்பு இலக்கியப் பெருமையை மறைத்து வைக்கச் செய்தது. அவையனைத்தும் பாப்லோ நெரூதா என்ற புனைபெயரில் வெளிவந்தன. பள்ளி இறுதிநாட்களில் வசந்தகால விழாவையொட்டி நடந்த போட்டியில் முதல் பரிசுக்குரியதாக பாப்லோ நெரூதாவின் கவிதை தேர்ந்தெடுக்கப்பட்டது. அந்தக் கவிதையிலிருந்து நெஃப்தாலிரேயஸ் என்ற இயற்பெயர் மறைந்தது. பாப்லோநெரூதா என்ற பெயர் உலகத்துக்கு அறிமுகமானது.

*6*

பதினேழாம் வயதில் உயர்கல்விக்காக நாட்டின் தலைநகரமான சாந்தியாகோவுக்கு பாப்லோ நெரூதா சென்றார். சிலி பல்கலைக்கழகத்தில் பிரெஞ்சு பயிற்றுவிப்புத் துறையில் சேர்ந்தார். இலக்கியத்திலும் கவிதை எழுத்திலும் அவருக்கு இருந்த மோகத்தை அறிந்திருந்த ஜோஸ்கார்மன் ஒழுங்காகப் படித்தால் மட்டுமே தன்னால் உதவமுடியும் என்ற நிபந்தனையுடன் அவரை அனுப்பிவைத்தார். பல்கலைக்கழகத்தில் சேர்ந்த குறுகிய காலத்துக்குள் கல்வி வளாகத்திலும் இலக்கிய வட்டாரத்திலும் பிரபலமடைந்தார் நெரூதா. பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றது மேலும் புகழுக்குரியவராக்கியது. குறிப்பாகப் பெண்கள் இடையே.

நெரூதாவின் பல்கலைக் கல்விப்பருவம் சிலியின் கொந்தளிப்பான காலம். முதலாவது உலகப்போரில் சிலி நடுநிலைமை வகித்திருந்தும் போரின் பின்விளைவுகள் நாட்டை நாசமாக்கிக்கொண்டிருந்தன. அரசியல் குழப்பங்களும் பொருளாதார வீழ்ச்சியும் நாட்டை உலுக்கிக்கொண்டிருந்தன. மக்கள் எழுச்சி போராட்டமாக வெடித்தது. அரசாங்கம் கலவரங்களை அதிகாரத்தின் மூலம் ஒடுக்க முனைந்தது. ஜனாதிபதி யுவான்லூயிஸ்சான் ஃபுவாண்டஸ் மாணவர்கள்மீது அடக்குமுறையை ஏவினார். அதில் ஒரு மாணவர் பலியானார். மாணவர் கிளர்ச்சியில் பங்கேற்ற பாப்லோ நெரூதா மாணவர் அமைப்பின் தலைவராக நியமிக்கப்பட்டார். கவிஞர், மாணவர் தலைவர் ஆகிய தகுதிகளுடன் கிளாரிடாட் பத்திரிகையின் செய்தியாளரும் ஆனார்.

படிப்பதற்காகப் பல்கலைக்கழகத்துக்குப் போனவன் கவிதை எழுதுவதிலும் கட்டுரைகள் எழுதி வெளி—யிடுவதிலும் மூழ்கியதை அறிந்த ஜோஸ்கார்மன் செலவுக்காக நெரூதாவுக்கு அனுப்பிவந்த பணத்தை அடியோடு நிறுத்தினார். பத்திரிகைகளில் எழுதிக்கிடைத்த சொற்ப வருவாயில் வாழவேண்டிய நிர்ப்பந்தம் உருவானது. சிற்றன்னை டிரினிடாடும் சகோதரி லாராவும் மறைமுகமாக உதவினார்கள். வசதிக்குறைவான அறைகளில் வசித்தார் நெரூதா. அந்தக் குறுகிய அறைகளிலும் அவருடைய கவிதை வாசிப்பைக் கேட்கவும் அரசியல் பேசவும் இலக்கியக் கலந்துரையாடல் நடத்தவும் ஆண்களும் பெண்களும் அன்றாடம் திரண்டார்கள்.

பல்கலைக்கழகத்தில் சேர்வதற்காகப் புறப்படும் முன்பே நெரூதா காதல் வசப்பட்டிருந்தார். டெமூகோ வசந்தகால விழாவில் சந்தித்த டெரேஸாலியான் பெட்டியன்ஸ் மீது காதல் கொண்டிருந்தார். விழாவில் நகரத்தின் அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார் தெரேஸா. சாந்தியாகோவுக்குப் புறப்படும் முன்பே தெரேஸாவுடன் நெருக்கமான பிணைப்பு ஏற்பட்டிருந்தது. அவரைப் பிரிந்த துயரம் நெரூதாவை அலைக்கழித்தது.கடிதங்களில் காதலைக் கொட்டி அனுப்பினார். அவரிடமிருந்து வந்த பதில்களால் துள்ளினார். பதில் வரத்தாமதமானால் சுணங்கினார். விடுமுறை நாட்களில்தெரேஸாவைச் சந்திக்க நீண்ட பயணம் மேற்கொண்டார். சந்திக்க முடியாமற்போன தருணங்களில் துவண்டார். தனிமையில் புலம்பினார்.

தெரேஸாவுக்கும் நெரூதாமீது காதல் இருந்தது. எனினும் பெற்றோரின் எதிர்ப்பு அவரைக் கட்டிப்போட்டது. தெரேஸாவின் பெற்றோர் நெரூதாவை வல்லூறு என்று அழைத்தார்கள். அவரைப் பார்க்கக் கூடாது என்று மகளுக்குத் தடை விதித்தார்கள். ஆனாலும் காதலர்கள் இருவரும் ரகசியமாக உறவாடிக் கொண்டிருந்தனர். நெரூதா தனது கவிதைகளை ரகசியமாகத் தெரெஸாவுக்குக் கைமாற்றிக் கொண்டிருந்தார். இதற்கிடையில் அவருக்கு இன்னொரு காதலியும் வாய்த்தார். மரியா பரோடிஸ். சிறு தாள்களில் எழுதி அளிக்கும் கவிதைகளை யாருக்கும் தெரியாமல் உள்ளங்கைக்குள் பொத்தி வைத்து வாசித்துப் பரவசப்பட்டார் மரியா. 'சூரியனையும் தண்ணீரையும்போல நிச்சயமானவள்' என்று புகழ்ந்தார் நெரூதா. இருபது காதல் கவிதைகளில் 19ஆம் கவிதை மரியாவைப் பற்றியது.

தெரேஸாவுடன் காதலில் ஆழ்ந்திருக்கும்போதே சக மாணவியும் நண்பரான ரூபெனின் சகோதரியுமான ஆல்பெர்ட்டினா ரோஸா அசொகருடனும் காதல் கொண்டார் நெரூதா. அவரை விட இரண்டு வயது மூத்தவர் ஆல்பெர்ட்டினா. அவரே விரும்பியும் ஆல்பர்ட்டினா மீது உருவான ஈடுபாட்டை நெரூதாவால் தவிர்க்க முடியவில்லை. மாணவர் வட்டத்தில் அவருக்கு இருந்த புகழ், அவருடைய அறிவுத்திறன் அதற்கும் மேலாக அவருடைய கவிதைகள் ஆல்பட்டினாவையும் கவர்ந்தன. வகுப்புத் தோழன் என்ற பழக்கத்தில் ஆல்பர்ட்டினாவின் வீட்டுக்கு அடிக்கடி செல்லவும் நெரூதாவால் முடிந்தது. அவுரேலியானா, தெரேஸா ஆகிய பெண்களுடனான காதலுக்கு நெரூதாவின் வறிய நிலை இடையூறாக இருந்தது. ஆனால் சாதாரணக் குடும்பத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெண்ணான ஆல்பெர்ட்டினாவைப் பொறுத்து அந்தச் சிக்கல் எழவில்லை. ஆனால் ஆல்பர்ட்டினாவின் சகோதரி அடேலினா இருவரையும் கண்காணித்து வந்தார். சகோதரன் ரூபென் அவர்களுக்குத் துணையாக இருந்தார். நெரூதாவும் ஆல்பெட்டினாவும் மாலை நடை செல்லும்போது கூடவே போவார். சிறிது தொலைவு கடந்ததும் அவர்களை விட்டு விலகிக் கண் மறைவாகச் செல்வார். இது இருவருக்கிடையிலும் நெருக்கத்தை ஏற்படுத்தியது.

காதலர்களுக்கு இடையில் பாலுறவு என்பது நெரூதாவின் தலைமுறையில் விலக்கப்பட்டதாக இருக்கவில்லை. உண்மையில் நெரூதா உள்ளிட்ட அராஜகவாதி மாணவர்கள் கட்டுப்பாடற்ற காதல் இயக்கத்துக்காக வாதாடிக் கொண்டிருந்தார்கள். ஆல்பெர்ட்டினாவுடன் பந்தம் உருவாகிச் சில மாதங்களுக்குப் பின்பு நெரூதா கிளாரிடாடில் ஒரு கட்டுரை எழுதி வெளியிட்டார். பாலியல் திருப்திக்காகத் திருமணம், கற்பு என்ற பெயரில் பெண்களைக் கருவிகளாக்குவது பற்றிக் கட்டுரையில் விளாசியிருந்தார்.

கட்டுரை வெளிவந்த இரண்டு மாதங்களில் ஆல்பெர்ட்டினா எந்த ரகசியங்களும் மிச்சம் வைக்காமல் தனது உடலை நெரூதாவுக்கு முழு நிறைவுடன் திறந்து கொடுத்தார். பெண்ணுடல் ஒளிவு மறைவு இல்லாமல் முதல் முறையாக நெரூதாவுக்குக் காணக் கிடைத்தது. அந்தத் தூய அனுபவத்தையே 'பெண்ணின் உடலே, உன் கருணையைத் தொடர்ந்து போற்றுவேன்' என்று எழுதி இருபது கவிதைகளின் முதல் கவிதையாகவும் வைத்தார்.

ஒரு பெண்ணுடன் காதலில் திளைத்திருக்கும்போதே தொலைவிலிருக்கும் இன்னொரு காதலிக்காக ஏங்குவது நெரூதாவின் இயல்பு. ஆல்பெர்ட்டினாவுடன் பிணைப்பிலிருந்து கொண்டே தெரேஸாவை நினைத்து உருகிக் கொண்டிருந்தார். கடிதங்களில் விரகத்தைக் கொட்டிக் கொண்டிருந்தார். பெற்றோரின் தடையை உடைத்து தெரேஸா அவரைத் தேடி வந்தார். ஆனால் அந்தக் காதல் பழைய நறுமணத்துடனோ தீராத ஒளியுடனோ மங்காத வேட்கையுடனோ தொடரவில்லை. இருவரும் நிரந்தரமாகப் பிரிந்தார்கள். தெரேசா பின்னர் தட்டச்சு பழுது நீக்குநர் ஒருவரை மணந்தார். பாப்லோ நெரூதா மறைவுக்கு ஓர் ஆண்டு முன்பே தெரேஸா மறைந்தார்.

ஆல்பர்ட்டினாவுடனான உறவையும் நெரூதா கைவிடவில்லை. குடல்வால் அழற்சி முற்றி அடிவயிற்றுச் சவ்வு பாதிக்கப்பட்ட ஆபத்தான நிலையில் ஆல்பெர்ட்டினா அறுவைச் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தன்னை மகத்தான காதலனாக நெரூதா நிரூபித்த சந்தர்ப்பம் அது. ஆல்பெர்ட்டினா மருத்துவமனைப் படுக்கையில் கிடந்த எல்லா நாட்களிலும் நெரூதா அவருக்குத் துணையாக இருந்தார். சிகிச்சை முடிந்த பின்னர் ஆல்பர்ட்டினாவின் பெற்றோர் அவரை சாந்தியாகோ பல்கலைக்கழகத்தில் படிப்பை நிறுத்தி கன்செஷியன் பல்கலைக்கழகக் கல்வியியல் பள்ளியில் சேரும்படிக் கட்டளையிட்டார்கள். நெரூதா உடைந்து போனார். பிரிவு அவருக்கு ஆத்திரமூட்டியது. அதை ஆல்பர்ட்டினாவுக்குக் கடிதங்களாக எழுதியனுப்பினார். தனக்கு வேதனையையும் தன் காதலுக்கு அவமதிப்பையும் செய்தவராக ஆல்பெர்ட்டினாவைக் குற்றம் சாட்டினார். அவரைக் குற்ற உணர்வு கொள்ளச் செய்தார். 'உன் மௌனம் நட்சத்திரத்தின் மௌனம்' என்று சமாதானமும் சொன்னார். இருபது காதல் கவிதைகளில் மிகப் பிரசித்தமான 'இன்றிரவு என்னால் எழுத முடியும்' என்ற கவிதையில் வரும் 'இனி அவளைக் காதலிப்பதில்லை / எனினும் அவளை எவ்வளவு நேசித்தேன்' என்ற வரிகள் ஆல்பெர்ட்டினாவுக்கு எழுதப்பட்டவை.

'நெரூதா சாந்தியாகோவை விட்டு வந்திருந்தால் எங்களுக்கு இடையில் விலகல் நேர்ந்திருக்காது. நான் அவரைத் திருமணம் செய்துமிருப்பேன்' என்று பின்னாட்களில் ஆல்பர்ட்டினா குறிப்பிட்டார்.

ஆல்பர்ட்டினாவை மையமாக்கி நெரூதா எழுதிய கவிதைதான் (நீ இருந்ததைப்போலவே உன்னை நினைவு கூர்கிறேன் — கவிதை 6) அடுத்த காதலுக்கு வழிவகுத்தது. நெரூதாவின் கவிதைகளால் ஈர்க்கப்பட்ட லாரா, அவர் படித்து வந்த விடுதிப் பள்ளி விழாவில் கவிதை வாசிக்க நெரூதாவை அழைக்கச் சென்றார். அந்த சந்தர்ப்பத்துக்குப் பிறகு நெரூதா அடிக்கடி பள்ளிக்குச் சென்றார். இருவரும் நெருங்கினார்கள். ஆல்பர்ட்டினா விலகிச் சென்ற சமயம் அது. எனினும் லாராவுக்கும் நெரூதாவுக்கும் இடையில் ஏற்பட்ட காதல் அதிகம் பேசப்படவில்லை. லாராவைப் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வரியும் எழுதவில்லை. நெரூதாவே அதுபற்றி மௌனம் சாதித்தார். காரணம் லாராவின் வருங்காலக் கணவரான ஹோமிரோ அர்சேயுடன் நெரூதாவுக்கு இருந்த நட்பும் மரியாதையும். பின்னாட்களில் நம்பிக்கைக்குரிய செயலாளராக நெரூதாவின் மரணம்வரை பணியாற்றினார். 1977 ஆண்டு சர்வாதிகார ஆட்சியாளர்களால் மண்டை பிளந்து கொல்லப்பட்டார். கணவரின் மறைவுக்குப் பிறகு எழுதிய நினைவுக் குறிப்பில் '' நான் பாப்லிட்டொவை முரட்டுத்தனமான குறுகிய காலம் காதலித்திருந்தேன்' என்று லாரா ஒப்புதல் செய்தார்.

7

பால்யம்முதல் பதின்பருவம்வரை, தான் காதலித்தவர்களும் தன்னைக் காதலித்தவர்களுமான பெண்களுடன் ஏற்பட்ட உறவையும் பிரிவையும் சொல்லும் கவிதைகளின் தொகுப்பு இருபது காதல் கவிதைகளும் ஒரு நிராசைப் பாடலும். தனது தனிமையையும் அதைத் தீர்த்த பெண்களையும் தனது காமத்தையும் அதைத் தணித்த துணைகளையும் பாப்லோ நெரூதா இந்தக் கவிதைகளில் அழியாத நினைவுகளாக மாற்றினார். ஆண் மைய நிலை— யிலிருந்தே இந்தக் கவிதைகள் எழுதப்பட்டிருக்கின்றன. காதலிலும் காமத்திலும் சம பங்கு வகித்த பெண்களின் தரப்பிலிருந்து சின்ன எதிர்வினைகூட கவிதைகளில் இல்லை. முற்றிலும் ஓர் ஆணின் காதலும் காமமும் கொப்பளிக்கும் இந்தத் தொகுப்பின் பெருவாரியான வாசகர்கள் பெண்கள் என்பது விந்தை. எந்தப் பெண்களைப் பற்றி கவிதைகள் எழுதப்பட்டனவோ, சந்தேகமின்றி அந்தப் பெண்கள் இந்தக் கவிதைகளை வாசித்திருந்தார்கள் என்பது அந்தப் பெண்களின் பிற்கால நேர்காணல்களில் வெளிப்படுகிறது.

முதன்மையாக நான்கு பேர் இந்தக் கவிதைகளின் மையப் பாத்திரங்கள். அமேலியா, தெரேஸா, ஆல்பர்ட்டினா ஆகிய மூவரும் கணிசமான கவிதைகளின் நாயகிகள். பிற பெண்களுடன் உறவு நிலவியபோதும் இந்த மூவரையும் நெரூதா தீவிரமாகவும் மூர்க்கமாகவும் நேசித்தார். தொகுப்பில் அதிக எண்ணிக்கையிலான கவிதைகளில் இந்தப் பெண்கள் மறைவாகவும் பகிரங்கமாகவும் தெரியக் காரணம் நெரூதாவின் அதீதக் காதல்தான். தான் அவர்களிடம் கண்ட தனித்துவத்தை முன்னிட்டே காதலாகிக் கசிந்திருக்கிறார்.

பதின்மூன்று வயதில் காதல் கொண்ட அமேலியாவைத் தனது விடலைப் பருவப் பதற்றத்தைத் தணித்தவராக நெரூதா கண்டார். தன்னை விடுவித்தவர் என்று தெரேஸாவைக் குறிப்பிடுகிறார். கவிதைகளில் மிக அதிக எண்ணிக்கையை ஒதுக்குமளவு அவருடைய பாதிப்பு இருந்தது. இருபது காதல் கவிதைகளில் எட்டு கவிதைகள் தெரேஸாவை மையங்கொண்டவை. நீண்ட காலம் சீராட்டிக் கொண்டிருந்ததும் தெரேஸா மீதான காதலைத்தான். இளமைக் காலம் தாண்டி மேலும் காதலுறவுகள் நேர்ந்த பின்னும் தெரேஸாவைப் பிற்காலக் கவிதைகளிலும் நினைவு கூர்ந்திருக்கிறார். தன்னை ஓர் ஆணாக முழுமையாகத் தனக்குள் வரவேற்றவர் என்று ஆல்பர்ட்டினாவைக் குறிப்பிடுகிறார். தான் வாழ்ந்த காலத்தில் எழுதிய கவிதைகளிலும் கட்டுரைகளிலும் நினைவுக் குறிப்புகளிலும் மறைமுகமாகவும் மாற்றுப் பெயர்களிலும் தனது தோழிகளைக் குறிப்பிடுகிறார் நெரூதா. ஆனால் அவரது காலத்துக்குப் பின்பும் வாழ்ந்த 'காதலிகள்' அவர் மறைவுக்குப் பின்னர் நினைவுகூரல்களில் தங்கள் காதலை ஒப்புக் கொண்டனர்.

இருபது காதல் கவிதைகள் நூல், வெளிவந்த நாட்களில் மகத்தான வரவேற்பையும் கடுமையான விமர்சனத்தையும் பெற்றது. ஆபாசக் களஞ்சியம் என்றும் தனிநபர் காமக்கனைப்பு என்றும் கண்டனத்துக்குள்ளானது. தனியொரு கவிஞனின் திறந்த வாக்குமூலம் என்று அதைச் சொல்லலாம். அதேசமயம் அது காலத்தின் புத்தகமாகவும் இருந்தது. அதனாலேயே அது இளைஞர்கள் நடுவில் வெகுவாகப் புகழ் பெற்றது.

இந்த நூல் ஒரு யுகத்தை உருவாக்கியது; யுகத்தால் உருவானது. அந்தத் தலைமுறை இளைஞர்கள் அந்தக் கவிதைகளில் தங்களைக் கண்டடைந்தார்கள். அவற்றில் தங்களை அடையாளம் கண்டார்கள். தாங்கள் வாசிக்கும் காதலுடன் தங்களை இனங்கண்டார்கள். அந்த ஆண்டுகளில் இளம் பெண்கள் சமூக வெளியில் அவர்களை உறுதிப்படுத்திக் கொள்ளத் தொடங்கியிருந்தார்கள். 1920ஆம் ஆண்டு உலகின் பல பாகங்களிலும் பாலியல் சுதந்திரம் அரும்பிய காலமாக இருந்தது. சிலி இளைஞர்கள் இடையில் புரட்சிகரமான பாலியல் இயக்கத்தைப் பற்றிப் பேசப் பக்குவப்பட்டதாக இருந்தது அந்தப் புத்தகம்'' என்று பாப்லோ நெரூதாவின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய மார்க் எய்ஸ்னெர் மதிப்பிடுகிறார்.

இருபது காதல் கவிதைகளும் ஒரு நிராசைப் பாடலும் வெளிவந்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு பாப்லோ நெரூதா சிலி நாட்டின் தூதுவராக நியமிக்கப்பட்டு பணி நிமித்தம் பர்மாவுக்குப் புறப்பட்டார். தனது காதலிகளில் எவராவது கூட வரவேண்டும் என்று விரும்பினார். ஆல்பர்ட்டினாவிடமும் லாராவிடமும் தன்னை மணந்து கொண்டு ரங்கூனுக்கு வருமாறு மன்றாடினார். லாராவுக்கு அப்போது வயது இருபது. சிறு பெண்ணை வெளி நாட்டுக்கு அனுப்ப அவர் பெற்றோர்கள் மறுத்தார்கள். லாரா துணை வர மாட்டார் என்றானதும் நெரூதா தன்னை ஏற்றுக் கொள்ளும்படி ஆல்பர்ட்டினாவுக்குக் கடிதங்களாக எழுதினார். முன்பு அமேலியா, தெரேஸா ஆகியவர்களுடனும் காதல் முறியக் காரணமாக இருந்த சமூக அந்தஸ்து இங்கும் அவரை வீழ்த்தியது. ஆல்பர்ட்டினாவின் பெற்றோர் மகளைக் கண்காணித்தார்கள். நெரூதாவை மனமாரக் காதலித்தபோதும் ஆல்பர்ட்டினாவால் பெற்றோரை மீற இயலவில்லை. ஏமாற்றத்துடனும் துக்கத்துடனும் தன்னந்தனியனாகப் புறப்பட்டார் நெரூதா. அவரது பயணப் பையில் இழந்த காதல்களின் உயிர்ச் சான்றான 'இருபது காதல் கவிதைகளும் ஒரு நிராசைப் பாடலும்' தொகுப்பின் பிரதிகளும் இருந்தன.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனம்: **சிவானந்தம் நீலகண்டன்**

# மூவந்தியில் சூலுறும் மர்மம்




**மூவந்தியில் சூலுறும் மர்மம்**
**(கட்டுரைகள்)**
**சாம்ராஜ்**



கவிஞர்களை அவர்களின் கட்டுரைத் தொகுப்புகளின் வழியாக அறிமுகம் கொள்வதைத் தரக்குறைவான காரியமாகச் சிலர் கருதுகின்றனர். நான் அப்படி நினைக்கவில்லை. சொற்களை சுண்டக்காய்ச்சுவதற்காக கலையின் உலையில் கிடந்து வேகவோ, வரிகளை இடையில் அடித்து முறிக்கும் இலக்கிய வன்முறையில் ஈடுபடவோ அவசியமில்லாமல் வடிவ சுதந்திரத்துடனும் சொற்களிடையே அஹிம்சையுடனும் கவிதையின் அதே மின்னற்சுவையைக் கட்டுரையில் பாய்ச்ச முடியுமென்றால் நிச்சயம் முடியும். அக்கலை கைவந்த கவிஞர்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்களுள் தனக்கும் முதல் வரிசையில் இடமுண்டு என்று 'மூவந்தியில் சூலுறும் மர்மம்' — அதன் 37 கட்டுரைகள் மற்றும் ஒரு நேர்காணல் — வழியாக அனாயசமாக ஓர் 'உள்ளேன் ஐயா' சொல்லி அமர்கிறார் சாம்ராஜ்.

இக்கட்டுரைகளில் தான் சொல்லவந்த விஷயங்களுக்கு சாம்ராஜ் அளிக்கும் ஒப்புமைகள் தனித்துவமானவை. பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் இடதுகை சுழல்பந்து வீச்சாளர் அப்துல் ஹாதீர், முதலில் ஏதோ நடுவருக்குப் பந்துவீச வருவதுபோல அவரை நோக்கி ஓடிவந்து, ஒரு புள்ளியில் சடக்கென்று 'லி' வடிவில் திரும்பி மட்டையாளரை நோக்கிப் பந்துவீசுவதுபோல லிபி ஆரண்யா தன் கவிதைகளை எங்கேயோ தொடங்கி சட்டென்று கோணத்தை மாற்றி நம்மைத் தகர்த்துவிடுகிறார் என்று ஓர் ஒப்புமை வைக்கிறார் சாம்ராஜ். வேடிக்கையான ஒப்புமையாக முதலில் ஒரு புன்னகையை வரவழைக்கிறது என்றாலும், அதன் காட்சிப்படுத்தல் வழியாகக் கருத்து வலுவாகச் சிறைப்பிடிக்கப்படுகிறது. மேலும், கவிதையின் சடக்கென்று திரும்பும் தன்மை மட்டுமின்றி, பந்துவீச்சாளரின் கையிலிருந்து விடுபடும் பந்தின் வேகத்தைப் போலவே கவிஞரின் சொல்லின் வேகம் நம்மை ஆக்கிரமிப்பதாக அந்த ஒப்புமை பொருந்திப் போவதிலுள்ள அழகும் ரசனைக்குரியது. கவிஞர் இசையின் 'வரலாறு' கவிதையைப் பற்றிச் சொல்லும்போது, "நம் சமகாலத்தின் தத்துவச் சிக்கல்களையும் வரலாற்றுத் துயரங்களையும் ஒரு மீன் விற்பவனைப்போல சைக்கிள் பின் கேரியரில் வைத்துக்கொண்டு அலட்சியமாய்ப் போகிறார் இசை" என்று எழுதுகிறார். வரலாற்றுத் துயரம் ஒரு சைக்கிள் கேரியரில் போகும் வினோதமான அக்காட்சி நெடுங்காலம் என் நினைவில் தங்கப்போகும் ஒன்று.

சில படைப்பாளுமைகளைக் குறித்து ஒருவித வழிபாட்டுணர்வுடன் கட்டுரைகளை எழுதியிருக்கிறார் என்றாலும் அவ்வாளுமைகளிடம் கலைக் குறைபாடு தென்படும் இடங்களை மறைக்கத் தன் உணர்வை சாம்ராஜ் அனுமதிக்கவில்லை. வண்ணதாசனின் கடிதங்கள் "உத்திரத்தில் கட்டி இழுத்துப் பார்க்கப்பட்ட நைலான் கயிறுகளை அறுத்திருக்கின்றன" என்று ஒரு கட்டுரையில் போற்றும் அதேவேளையில், வண்ணதாசனின் பிற்காலக் கவிதைகளைக் குறித்து, "இரண்டாயிரத்துப் பத்து வாக்கில் முகநூலுக்குள் அவரது ரயில் நுழைகிறது. விருப்பக் குறிகள் வேறேதோ செய்கின்றன. ஜன்னலுக்கு வெளியே செயற்கையான வானவில்கள் தோன்றுகின்றன" என்று இன்னொரு கட்டுரையில் நேர்மையாக விளம்பவும் முடிகிறது.

நாகப்பட்டினம் செளந்தரராஜ பெருமாள் கோவில் பிரகாரத்தில், ஓரிடத்தில், இரண்டு பாதங்களைப்போல ஒரு வடிவம் தரையில் பொறிக்கப்பட்டிருக்கும். அதன்மீது ஏறி நின்று பார்த்தால் அக்கோவிலின் அனைத்து கோபுரக் கலசங்களும் தெரியும். உச்சிகளை மட்டும் ஒரே இடத்தில் நின்றபடி பார்ப்பதற்கு வசதியாக அப்படி ஓர் இடம். ஓர் இலக்கியப் படைப்பை, நூலை, ஆளுமையை, திரைப்படத்தை எந்த இடத்தில் நின்று பார்த்தால் உச்சங்கள் தெரியுமோ அங்கு நின்று இக்கட்டுரைகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்ராஜ் எழுதியிருக்கிறார். சொற்கூர்மை, பகடி எதற்கும் குறைவில்லை என்றாலும் இடுப்புக்குக்கீழே தாக்குவதில் அவருக்கு நிச்சயமாக ஆர்வமில்லை.

கவின் மலரின் 'நீளும் கனவு' சிறுகதைத் தொகுப்பு குறித்து எழுதுபவர் அத்தொகுப்பின் சிறப்பான கதைகளாகத் தான் கருதுபவற்றை எடுத்துக்கொண்டு அவற்றின் குறைநிறைகளைப் பேசுகிறார். குறிப்பாக 'மீனுக்குட்டி' கதையில், தான் பிறந்தபோது பெண்ணாகவும் கருப்பாகவும் பிறந்ததற்காக அப்பா அழுதார் என்று பாட்டி சொல்லிக் கேள்விப்படும் மீனு, ஒருநாள் முழுக்கக் காத்திருந்து, அப்பாவிடம் அதைக் கேட்கிறாள். ஆமாம் என்பவர், "அப்ப மீனுக்குட்டின்னு தெரியாதுல்ல ராசாத்தின்னு தெரிஞ்சிருந்தா அழுதுருக்க மாட்டேன்" என்கிறார். அப்படியான மெய்யுருகும் தருணத்தைக் கொண்டிருக்கும் அற்புதமான கதை எப்படியான சிற்சிறு போதாமைகளால், கோளாறுகளால் வாசகரிடமிருந்து அன்னியப்பட்டுப் போகிறது என்று விளக்கிச் செல்கிறார் சாம்ராஜ். இலக்கியப் படைப்பை விமர்சனத் தராசில் ஏற்றி எடைபோட்டு இன்னவிலை என்று சொல்லிவிடாமல், முத்து திரண்டுவிட்டது ஆனால் சிப்பிதான் இன்னும் மூடியே இருக்கிறது என்று திறந்து காட்டுகிறார்.

மலேசியக் கவிதைகளை விமர்சிக்கும்போதும், ஓரளவுக்காவது நவீனக் கவிதைகளின் தன்மைகளைக் கொண்டுள்ள கவிதைகளை எழுதியவர்களிடம் உரையாடுவதற்கே அதிகமாக முயல்கிறார். அவர்களிடமே மென்மேலும் குறைகளைக் காண்கிறார். வகுப்பிலேயே நல்ல மாணவனைக் கடிந்துகொள்வதைப் போன்ற அபத்தமாக முதலில் தோன்றினாலும், "மற்ற எல்லோரையும்விட இவர்களுக்குக் கூடுதல் பொறுப்பு இருக்கிறது" என்ற சாம்ராஜின் நியாயம் ஏற்கத்தக்கதே. தமிழகத்தில் காலாவதியான பாடுபொருள்கள், மொழி போன்றவற்றை இக்கவிஞர்கள் பயன்படுத்துவதை, மேலை நாடுகளில் காலாவதியான தொழில்நுட்பங்கள் மூன்றாம் உலக நாடுகளில் கோலோச்சுவதுடன் ஒப்பிடுகிறார்.

நாஞ்சில் நாடனின் 'தலைகீழ் விகிதங்கள்' நாவல், வீட்டோடு மாப்பிள்ளையாவதன் துயரத்தை, எழுதப்பட்டு நாற்பதாண்டுகள் கழித்து இன்று வாசித்தாலும் வாசிப்பவரைத் துயர்கொள்ளச்செய்யும் என்று குறிப்பிட்டுவிட்டு, "அது தங்கர்பச்சான் இயக்கத்தில் திரைப்படமாகும்பொழுது படத்தின் தலைப்புக்கு மிக நேர்மையாக இருந்தது. படத்தின் தலைப்பு, சொல்ல மறந்த கதை" என்று சாம்ராஜ் எழுதும்போது எப்படி சுவாரஸ்யம் குன்றும்?

"எடுத்துக்கொண்ட தலைப்பிற்குத் தொடர்புள்ள புள்ளிவிவரங்களை அடுக்கி, அதன் சுருக்கமான வரலாற்றைக் கோர்த்து, தான் சொல்லவந்ததை வலியுறுத்தும் சம்பவமொன்றை இணைத்து, இறுதியில் இந்தியப் பிரதமருக்கு ஒரு கேள்வியுடன் முடித்துவிட்டால் ஒரு சமஸ் கட்டுரை தயார்" என்று சமஸுடைய 'யாருடைய எலிகள் நாம்?' கட்டுரைத் தொகுப்பைக் குறித்து எழுதியிருந்தேன். அப்படி எந்த சூத்திரத்திற்குள்ளும் சிக்காதவை சாம்ராஜுடைய கட்டுரைகள்.

அபாரமான ஒப்புமைகளின் வழியாக அழுத்தமான காட்சிப்படுத்தல்கள், வழிபாட்டுணர்வில் மங்கிவிடாத நீதியுணர்வு, உச்சங்களை மட்டுமே உரைத்துப் பார்த்தல், மறைந்துகிடக்கும் மாணிக்கங்களைத் தொட்டுக்காட்டல், இலக்கியவாதிகளிடம் பொறுப்பைச் சுட்டிக்காட்டல், சூத்திரத்திற்குள் அடங்காத ஓட்டம் என்று முக்கியமான பல அம்சங்களுடன் இலகுவான மொழியில், களிநயமிக்க வழியில் இத்தொகுப்பின் கட்டுரைகளை சாம்ராஜ் எழுதிக்காட்டியிருக்கிறார். இவை போதாதென்று அவரது தீர்க்கமானச் சிந்தனைகள், பார்வைகள் பலவும் இக்கட்டுரைகளுக்கு வலுசேர்க்கின்றன.

இடதுசாரிப் படைப்பாளர்கள் ஒன்று பிரச்சாரமாகவே தொடர்கின்றனர் அல்லது இலக்கியத்தைவிட்டே விலகிவிடுகின்றனர் என்று எடுத்துக்காட்டுகளுடன் தொடங்கி, அவ்விரு முனைகளுக்கு நடுவே அழகியலுடன் பாலமிடும் படைப்பாளியை அடையாளம் காட்டி விளக்கும் ஒரு கட்டுரை சாம்ராஜின் இலக்கியத் திறனை மட்டுமின்றி இலக்கிய விமர்சனத்தின் இடத்தையும் காட்டுகிறது. படைப்பாளிக்கும் வாசகருக்கும் இடையே செயல்படும் மொழிபெயர்ப்பாளர் தன் மிகப்பெரிய இல்லாமையைக்கொண்டே தன் இருப்பை வலுவாக்கவேண்டும் என்று வாதிடும் இன்னொரு கட்டுரை மிக ஆழமானது.

படைப்பூக்கமுள்ள அபுனைவு (creative non-fiction) என்று குறிப்பிடுவதுதான் என் வழக்கம். ஆனால் சாம்ராஜ் கட்டுரைகளை வாசித்தபின் அப்பெயர் போதவில்லை. உயிர்த் துடிப்புள்ள அபுனைவு என்று சொல்லத் தோன்றுகிறது.

கவிதை, புனைவு வகைப் பயிர்கள் சிங்கப்பூர் இலக்கிய வெளியில் குறுவை, சம்பா, தாளடி என்று மூன்றுபோக விளைச்சலில் செழிக்கின்றன. சாகுபடிக்குத் தேவையான நவீனத் தொழில்நுட்பங்களை குறுகிய, நீண்டகால அளவில் அவ்வப்போது உள்நாட்டு, வெளிநாட்டுக் கார்வாரிகள் அளிப்பதுடன் ஒன்னடி மன்னடியாக இருந்து நீராணிக்கமும் பார்த்துச் செல்கின்றனர். படைப்பூக்கமுள்ள அபுனைவு மட்டும் முறையான சாகுபடியின்றி, அரிதாகப் பெய்யும் மழையில் மெலிதாகத் தலைகாட்டும் மானாவாரிப் பயிராகவே நீடித்துவருகிறது.

ஆய்வுக் கட்டுரைகளை நீக்கியபின் எஞ்சும் சொற்பமானவற்றிலும் உட்கார வைத்துப் பாடம் நடத்தும் கட்டுரைகள் மிகுதி, தோளில் கைபோட்டு நடந்துகொண்டே பேசும் கட்டுரைகள் குறைவு. நேரடியாக இல்லாவிட்டாலும் கொடி அடுப்பிலாவது அபுனைவுக்குக் கொஞ்சம் சூடு காட்டலாம். மூவந்தியில் சூலுறும் மர்மம் போன்ற கட்டுரைத் தொகுப்புகள் பல வாசகர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் உத்வேகத்தையும் உற்சாகத்தையும் அளித்து ஒரு மாற்றத்தைக் கொணரவும் உதவக்கூடும். •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனம்: **தமயந்தி கே.எஸ்**

# "போக்காளி" நாவல் வாசிப்பு அனுபவக் குறிப்பு




**போக்காளி**

(நாவல்)

நவமகன்

இதுவரை நான் பார்த்திராத பக்கங்கள். எனினும் மிக லாவகமாக வழுக்கிச் செல்லும் வருடங்களையே அத்தியாயங்களாக்கி நாவல் என்ற பிரமைக்குள்ளிருந்து இது நாங்கள் கண்ட வாழ்க்கைச் சுவடுகள் என்ற நிலையைக் கொண்டமைந்திருக்கிறது.

சாதாரணமாக ஒவ்வொரு வீட்டிலும் நடந்திருக்கக்கூடிய நிகழ்வுகளைக் கொண்டு தொடங்கும் 1988ஆம் ஆண்டு. வவுனியாவில் அப்படி—யில்லை. ஆயினும் வல்வெட்டியிலிருந்து என் தங்கை தன் பிள்ளைகளை வவுனியாவில் இருந்த எமது வீட்டில் அடைக்கலமாகத் தந்துவிட்டுத் தான் வீட்டுக்குத் திரும்பினாள். நள்ளிரவில் வீடு சுற்றிவளைக்கப்பட்ட காலம், காலையில் எழுந்து காட்டோரத்தில் மல சலங்கழிக்கச் சென்றால் அங்கு பூரி மணக்கும். பற்றைகள் செத்தைகள், மூலை முடுக்குகள், சந்து பொந்துகள் எங்கும் அவர்கள் தான். அக்காலத்திற்தான் போக்காளியைத் தாய் துரத்துகிறாள்.

பயணங்கள் பற்றிய விவரணங்கள் மிக நேர்த்தியாகப் படிப்பவரை வசீகரிக்கும் வண்ணம் எழுதப்பட்டிருந்தாலும் அது எங்களுடைய பயணங்களின் பரிமாணத்தை அல்லது கோரத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்து வருந்தவே முடிகிறது. உண்மையில் இந்த நாவல் முப்பதாண்டு போரையும் அதே காலத்தில் வன்னியில் வாழ்ந்த புலிகளையும் ஏனைய இயக்கங்களையும் மாந்தர்களையும் தனது நிலைக்களனாகக் கொண்டே நகருகிறது. ஏற்கெனவே ஷோபாசக்தி கூறியதுபோல நாங்கள் "வீட்டுக்கு வழியில்லாட்டியும் திட்டிப்போட்டாக்குற சனம்" நக்க வழியில்லாட்டியும் லட்சக்கணக்கில கணக்குப்பார்க்கிற குணம். பாத்திரங்கள் பேசுகிற அரசியலும் அவர்களின் எதிர்பார்ப்புகளும் புதியதல்ல, ஏற்கனவே அவர்களைப் பத்திரமாக அனுப்பிவிட்டு அங்கிருந்து வரும் பணத்தில் இங்கே மிக ஆடம்பரமாக வாழ்ந்துகொண்டிருந்த ஒரு சமூகத்தை நாமறிவோம். இவர்களிற் சிலர் தமது (பண) வலிமையால் பொறுப்பாளர்களுக்கு நாக்குக்கு ருசியாகச் சமைத்துப் பரிமாறியே வளைத்து வைத்திருப்பார்கள். இவர்களே இயக்கத்தின் மக்கள் அமைப்புகளில் முன்னணி வகிப்பர். அவர்களது உரையாடல்களே இந்த நாவலின் பாத்திரங்களில் தெறிப்பதாகத் தோன்றுகிறது.

அகதிக் கொட்டில் இது எமது வாழ்க்கை. அங்கே அகதிக்கு மாளிகை, தொலைக்காட்சி, மின்விளக்கு, காஸ் அடுப்பு அட அட அட கட்டிலென்ன மெத்தையென்ன கட்டிமுத்தமிடலென்ன. தொலைபேசிகள் கடிதப் போக்குவரத்துகள். சிலிர்க்குதே. தொலைபேசிக்காகவே யுத்தப் பிரதேசம் விட்டு வெளியே சென்று காணிவாங்கி வீடு கட்டும் பேறு வாய்த்திருக்கிற குடும்பங்களை அப்போதே நாம் பொறாமையோடு பார்த்தோம்.

நிலம் மெழுகாத மண் தரையில் பாயுமின்றி தரப்பால் துண்டுகளை பரப்பிப் படுத்திருந்து, திறந்த வெளிக்கிணற்றில் ஆண் பெண் பேதமின்றி சமதையாகக் குளித்த எமது மக்களுக்கு உடைமாற்றவும் மறைப்பில்லை. மலசல கூட மறைப்புகளும் பனங்கூடல்களாக இருந்தது என்பதையும், வைத்தியசாலைக்குப் போக வழியின்றி அந்தக் கொட்டில்களில் பிரசவித்தப் பெண்களையும் அதைக்கூட மறைக்க முடியாமல் ஆண்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தூரத்தள்ளி நில்லுங்கோ" என்று விரட்டியதையும் நினைத்துப் பார்க்க வைத்தது இந்த நாவல்.

சொந்த மண்ணில் வாழ்க்கைக்காக ஏங்கும் லட்சக்கணக்கான மக்களைப் போலல்லாது அவர்கள் மொழியறியாத சுவாத்தியமற்ற சூழலில் கடுங்குளிரிலும் பனியிலும், அனல் உலைகளிலும் கொதித்துக்கொண்டு வெளிநாடுகளில் துயருற என்ன காரணம்? கதையின் நாயகனால் சொந்த நாட்டுக்கு வர முடிந்தபோதும் அவன் இங்கே தொடர்ந்து வாழ ஏன் விரும்பவில்லை. அவன் எந்த இயக்கத்திலும் போராளியல்ல, ஆதரவாளனும் அல்ல என்றாலும் அந்த மனிதனைச் சொந்த மண்ணிலிருந்து விரட்டுவது அவனைச் சூழ உள்ளவர்களது வாழ்க்கை நலன்களே.

எனக்கொரு கதை நினைவுக்கு வருகிறது. சுப்பரும் அவரது மனைவியும் பாலைப்பழம் வெட்ட காட்டுக்குப் போனார்களாம். வெட்டிக் கீழே விழுந்த கொப்பிலிருந்து பழம் ஆய்ந்துகொண்டிருக்கும்போது கரடி வந்துவிட்டது. சுப்பர் பாய்ந்து மரத்தில் ஏறிவிட்டார். அவரது மனைவிக்கோ மரம் ஏறத் தெரியாது. எனவே அவள் கரடியைப் பார்த்துக் கூச்சலிட்டவாறே கையிலிருந்த முறத்தால் அதை அடிக்க ஆரம்பித்தாள். கரடி திகைத்தது. மேலேயிருந்த சுப்பரும் கத்தினார். எப்படி? "குடடி பாக்கியம் நல்லாக் குடு ஆற்ற மனிசியெண்டு நினைச்சார், விடாதையடி குடு" என்று கத்தினார். கரடி ஓடியேவிட்டது.

இதுதான் இந்தக் கதை முழுதும் ஓடிக்கொண்டிருக்கிற பிரதான உரையாடல்கள். விட்டிருந்தால் இவர்களது திட்டங்களே போராக மாறி வருவதுபோல ஒரு பிரமை. கதையினுள் ஊடாடும் சொலவடைகள் மிக ஜோர். நாம் வெளிப்படையாகப் பேச நினைத்தாலும் பேச முடியாத பல சொலவடைகள் "காத்துப்போயிரும்" "ரிம்மில ஓடுது" "தகடு வச்சிட்டாங்கள்" "கிட்டவரட்டும் திட்டமிருக்கு" வெண்டாத் தலைவர் தோத்தாத் தளபதி" இப்படி எக்கச்சக்கமான வார்த்தைகளில் பல பதிவுபெற்றிருக்கிறது. வெளிநாடுகளிலும் தமிழர்களுக்கேயான பரம்பரைப் புத்தி எனப்படும் பல விடயங்களைக் கைவிடாமல் வாழ முற்பட்டாலும் எல்லாமே மொத்தமாக சறுக்கி சகதியில் விழுவதாக கருதியிருக்கிறார் கதாநாயகன். ஆனால் இந்த வாழ்க்கையை இவர்கள் ஆரம்பிக்கு முன்பே வெளிநாடுகளில் படிக்க, தொழில் செய்யவெனச் சென்ற எமது கல்விமான்களின் வழிகாட்டுதல்களா? அல்லது எனது கார் எனது பெற்றோல் எனது வீதி என்ற மனோபாவமா? சேர் பொன் இராமநாதன், பொன்னம்பலம் அருணாச்சலம் போன்றோர் நாட்டிலே சீதனத்துக்கு ஒரு திருமணமும் போன இடத்தில் வெள்ளையினப் பெண்கள் பலரையும் மணந்து விவாகரத்துக்களும், புதிய வாழ்க்கையுமாக வாழ்ந்து காடியிருக்கிறார்கள் அல்லவா எனவே அது கோத்திரத்துக்குள்ள குணம் என ஒதுங்கிவிடுவோம்.

பெண்களுடன் விபச்சாரம், அவர்களோடு கூடி வாழ்தல், தனக்கென ஒன்றைச் சொந்த மண்ணிலிருந்து கொண்டுவருதல், அந்நியனுக்கு கலியாணப் பதிவை செய்து தனக்கானப் பெண்ணை அழைத்தல், இன்னும் புகைப்படத்துக்குத் திருமணம் செய்து பெண்ணை அனுப்புதல், ஓட்டுமாட்டாக மணமகன் இல்லாமலே திருமணப்பதிவையும் செய்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகும் பெண்கள், இருபது வயதில் எடுத்த போட்டோவை அனுப்பி பதினெட்டு வயதுப் பெண்ணை சிங்கப்பூருக்கோ இந்தியாவுக்கோ அழைத்து திருமணம் செய்தல், ஊருக்கே வந்து திருமணம் செய்து பெண்ணையும் விருந்துகளையும் அனுபவித்துவிட்டுப் "போய் எடுக்கிறன்" என்று கூறிப்போன மாப்பிள்ளைக்காகப் பல வருடங்கள் காத்திருக்கும் பெண்கள் என இப்படி ஏராளமான சம்பவங்களை நாம் பார்த்திருக்கிறோம். அதன் உண்மைத் தன்மையை நாவல் துலக்குகிறது.

எனது சிந்தனைகளைத் தூண்டி விட்டிருக்கிறது இப்புத்தகம். என்னைச் சந்திக்கவரும் எவரையும் இந்தப் புத்தகத்தைப் பற்றி அறியாமல் போக விடவில்லை என உணரும்போது நான் எழுதிய புத்தகங்கள் பற்றி நான் ஒருபோதும் பேசியதில்லை என்பதை நினைவூட்டியது. அட நாம் அப்படி என்னதான் எழுதிவிட்டோம். இதோ ஒரு இனத்தை அழிக்கத்துடித்த இனவாத அரசின் எந்தத் தூண்டுதலும் இல்லாமலே பெருந்தொகை தமிழர்கள் (போரில் கொல்லப்பட்டதைவிட பல மடங்கு என நினைக்கிறேன்) அவர்களது சந்ததி உட்பட அழிந்துபோன, அழிந்துபோகும் ஒரு வரலாற்றுப் பதிவே "போக்காளி". மாக்கியவல்லியின் இன அழிப்புக்காக குடியேற்றம் என்ற கோட்பாட்டைவிட இது வேகமாகச் செயற்பட்டிருக்கிறது. மொழியும் நாடும் பண்பாடும் கலாச்சாரமும் எப்பொழுதும் மீள முடியாதபடிக்கு தொலைந்துவிட்டது.

"எத்தனை காலம் தூங்கிக் கிடப்பாய் வீட்டிலே தலைகுனிஞ்சு ஏன் நடக்கிறாய் ரோட்டிலே" என்ற செல்லக்குட்டி அண்ணரின் பாட்டும், "வீட்டுக்கொருவர் நாட்டைக் காக்க விரைந்து வாரீர்.. விடுதலை இன்றேல் அழிவுகள் தொடரும் புரிந்து வாரீர்.." என்ற புதுவை அன்பனும் இந்த மண்ணில் விதைத்துச் சென்ற அந்த வீரிய எண்ணங்களை சுமந்து போராடிய அடிப்படை வசதிகளற்ற ஏராளமான போராளிகளின் கனவு வீரச்சாவுதான். இந்தப் போரை வென்று வீடு திரும்பும் நோக்கம் யாருக்கும் இருக்கவில்லை என்று கூற முடியாது. அனைவருமே நேசித்த பனங்கூடல்கள் அழிந்துவிட்டன. அனைவருமே பார்த்த தாயின் உடல் முதுமையடைந்து நலிந்து அழிந்துவிட்டது. நாடும் வெளிநாடுகளின் நாகரீகத்தை உள்வாங்கி மாறிவருகிறது. நாங்கள் முழுமையாக அவங்கள்தான் எனச் சொல்லிவிடுவோம் சொந்த மண்ணின் உறவுகளின் கனவுகளுக்காக இடைவிடாது உழைத்து அற்ப ஆயுசில் தம்மை அழித்துக்கொண்ட ஏராளமான போக்காளிகளை நாமறிவோம். இன்னும்கூட பேசப்படாத பக்கங்கள் நிறைய கைவிட்டுப் போயிருக்கிறது. என்றாலும் நவமகனின் இந்தக் கடுமையான முயற்சி தன் இலக்கை அடைந்து வாசகரை பூரிக்க வைக்கிறது. இந்த மண்ணில் வாழ்ந்துகொண்டே வெளிநாட்டுக் கனவில் உலவும் அனைவரும் கட்டாயம் படிக்க வேண்டிய புத்தகம் போக்காளி. ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனம்: **சிறில் அலெக்ஸ்**

# உடைந்த ஆன்மாவின் ஒரு துளி




**கையறுநதி**

**(கட்டுரைகள்)**

**வறீதையா கான்ஸ்தந்தின்**



எல்லா இறையியலாளர்களும் பக்திமான்களும் ஞானிகளும் திருப்திகரமான பதிலை அளிக்க முடியாத கேள்வி ஒன்றுண்டு. 'கடவுள் ஏன் உலகில் துன்பத்தை அனுமதிக்கிறார்?' ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்றார் ஒருவர். கர்மா என்கிறது ஒரு சிந்தனை மரபு. துயருருவோர் பேறுபெற்றோர் என்றார் இன்னொருவர். ஒரு குழந்தை உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கும்போது, பேரிடர்களின்போது, ஒரு பெருத்த அவமானத்தின் பின்பு, போர் மற்றும் மனித வக்கிரங்களின் கொடுஞ்செயல்களினை அனுபவிக்கும்போது இந்தத் தத்துவங்கள் அர்த்தமற்றவையாகத் தோன்றுவதே இயல்பு இல்லையா? ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய், மனிதன் அகவிழிப்படைந்த காலம் தொட்டே இக்கேள்வி இருந்துகொண்டே இருக்கிறது. துயரின் வலி நெஞ்சை நிரப்பி அழுத்தும்போது தத்துவம் அர்த்தமற்ற உளறலாகும், தர்க்கம் பிழையாகும், நிலம் நடுங்கி நம்பிக்கையின் தூண்கள் தகர்ந்து தூள் தூளாகும், பூமி விலகி நம்மை முடிவற்ற பாதாளம் நோக்கி வீழச் செய்யும். காலில் கட்டப்பட்டப் பாறாங்கல்லாகத் துன்பம் நம்மைத் தொடரும். செயலிழக்கச் செய்யும், எதை வேண்டுமானாலும் செய்யத் தூண்டும். நம்மை ஒரு சாதாரண மனிதன் என்று மட்டுமல்ல ஒரு சாதாரண விலங்காகவே உணரச் செய்யும். துன்பம் இல்லாத வீட்டிலிருந்து ஒரு பிடி அரிசியை வாங்கி வா என்றார் புத்தர். அடுத்தவரின் துன்பம் நமக்குச் செய்தி, நம் துன்பம் நமக்குத் துயர அனுபவம்.

கையறுநதி எனும் நாவல் வடிவில் எழுதப்பட்டிருக்கும் தன்வரலாற்றுப் புத்தகத்தில் வறீதையா கான்ஸ்தந்தின் தான் எதிர்கொண்டிருக்கும் துன்பம் ஒன்றை நம்முடன் பகிர்ந்துகொள்கிறார். மூளையின் சுரப்பிகளின் அதிசெயல்பாட்டால் ஒரு சராசரி வாழ்வை வாழ முடியாத மகளைப் பேணும் ஒரு தந்தையின் கதை இது. அந்தத் தந்தை ஒரு அறிவாளி. படித்தவர். பேராசிரியர். மனிதர்களின் பெருந்துயர்களை ஆய்வு செய்தவர். ஒரு மகளின் மனப்பிறழ்வை அவர் எப்படி எதிர்கொள்கிறார், அவரைச் சுற்றியுள்ளவர்கள் எப்படி எதிர்கொள்கிறார்கள் என்பவற்றைக் குறித்த பரவலான அனுபவங்கள் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளன.

ஒரு அசாதாரண மனிதரென்றாலும் அவரது அன்றாடம் என்பது பிறரைப் போல சாதாரணமானதுதான். அந்த அன்றாடத்தின் மேல் ஒரு பெரும் சோகம் வந்து விழும்போது அந்தக் கதையில் ஒரு காவியத் தன்மை வந்துவிடுகிறது. சோகம் என்றல்ல அதை சவால் என்றும் கொள்ளலாம், தான் விரும்பி ஏற்காத ஒரு சவால். பழங்கதைகளில் வரும் பூதங்களைப்போல ஒவ்வொன்றாய் மாயமாய் எதிர்பாராமல் தோன்றும் சவால்களை தனி ஒருவனாக எதிர்கொள்ளும் ஒரு தந்தை. விடாது போரிடும் ஒரு வீரனைப்போல சந்தேகங்களும், அவநம்பிக்கையும், தெளிவும், எதிர்நோக்கும் ஒரு சேரப் பயணிக்கும் ஒரு காவியத்தைப் போன்றது கையறுநதியின் கதை.

காரணங்களற்றத் துன்பத்தை ஒரு மனிதன் எப்படி எதிர்கொள்வது? கடவுளின் திட்டங்களை அறிவதெப்படி? இயற்கையின் திட்டங்களை அறிவதெப்படி? மிகக் கடினமான கேள்வி இது. இதற்கான காலம் மனிதனுக்கு அருளப்படவில்லை. இதற்கான திறனும் அவனுக்கு மிகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவே. இயற்கையின் எந்த நிகழ்வும் ஒரு நீண்ட காலத்தில் நிகழும் எண்ணற்ற செயல்தொடர்களின் விளைவேயாகும். ஒரு வண்ணத்துப் பூச்சியின் சிறகசைப்பு ஒரு புயலை உருவாக்கும். அவ்வண்ணத்துப் பூச்சியே பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் ஒரு விலங்கின் வாயிலிருந்து தப்பிய புழுவின் வாரிசாயிருக்கும். எத்தனையோ வண்ணத்துப்பூச்சிகள் எண்ணற்ற சாத்தியங்கள். பலகோடி தாயக்கட்டைகள் அந்தரத்தில் முடிவின்றி சுழன்றுகொண்டிருக்கும் ஒரு விளையாட்டில் வெற்றியுமில்லை தோல்வியுமில்லை. நாம் எத்தனை தூரம் விளையாடுகிறோம் என்பது மட்டுமே கணக்கு.

வறீதையா தத்துவார்த்தக் கேள்விகளை எழுப்பிக்கொண்டேயிருக்கிறார் அவருக்கேயுரிய விதத்தில் விடைகளையும் கண்டடைகிறார். அவர் அந்த விளையாட்டை நிதானத்துடனும் சாதுர்யத்துடனும் குறைந்தபட்ச பாதிப்புகளுடனும் விளையாடும் வழிகளைத் தேடி அடைகிறார். மனப்பிறழ்வுகளை நம் சமூகங்கள் எப்படி எதிர்கொண்டன இன்றும்கூட எப்படி எதிர்கொள்கின்றன என்பதை நாம் அறிவோம். அந்த அர்த்தமற்ற பழமையான பாதைகளில் அவரும் சற்று நடக்கிறார். பின்பு பல்லாயிரம் ஆண்டுகால நடைமுறைகளையும் ஒற்றை மனிதனாக எதிர்கொண்டு அறிவின் துணைகொள்கிறார். சுழலும் கோடி பகடைகளின் நிகழ்தகவைப் புரிந்துகொள்வதல்ல அந்த ஆட்டத்தின் விதி. அத்தனைப் பிரம்மாண்டத்தை அளந்துகொண்டிருந்தால் ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியாது. வானத்தைப் பார்த்துக்கொண்டே நடந்தால் தடுக்கி விழ வேண்டியதுதனே?. அந்தத் தந்தை தன் சிலுவையைச் சுமந்தபடியே அடுத்த அடியை எடுத்துவைக்கிறார். அவர் அந்த முடிவிலா பகடையாட்டத்தில் ஒரு காயாக நகர்த்தப்படுவ—திலிருந்து விடுபடுகிறார். ஆட்டத்தின் விதிகளை அவரே முடிவு செய்கிறார்.

கையறுநதி ஒரு சிறந்த வாசிப்பனுபவத்தைத் தருவதற்கான முதற்காரணம் அது சுய அனுபவப் பகிர்வென்றாலும் ஒரு நாவலின் கூறுமுறையைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. சம்பவங்களின் அடுக்குகள் ஒரு புனைவுத் தன்மையுடன் அடுத்து என்ன நடக்குமோ என்று வாசகர் எதிர்பார்த்திருக்கும்பொருட்டு வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல புனைவின் மொழியும் கையாளப்பட்டுள்ளது. குறிப்பாக உவமைகள் மற்றும் தத்துவ விசாரங்களையும் சொல்லலாம். ஆனாலும் இது உண்மையாக நடந்த, நடந்துகொண்டிருக்கும் ஒரு வாழ்க்கை என்கிற உணர்வும் ஒரு சேரக் கிடைக்கிறது.

இரண்டாவது காரணம் இதன் பேசுபொருள். பொருளாதாரத் தேவைகளைக் கடந்து வரும் மானுட சமூகம் சந்திக்கும் பெரும் சவால்களில் முக்கியமானது மனச்சிதைவுகள். கடந்த சில ஆண்டுகளாக மூளையைக் குறித்து வருடத்திற்கு ஒரு முக்கிய புத்தகமாவது வெளிவந்துகொண்டிருக்கிறது. மனதின் மாயத்தை பகுதி பகுதியாக, ஒரு எந்திரத்தைப் பிரித்து பார்ப்பதைப்போல, பாகம் பாகமாகப் பிரித்துப் பார்க்கின்றனர். ஆயினும் மனம் அல்லது மூளை குறித்த ஆய்வுகள் இன்னும் துவக்க நிலையிலேயே இருக்கின்றன. ஒரு புழுவின் மூளையைக் கூட நாம் முழுதாக அறிந்துகொள்ளவில்லை என்கிறார் மூளை குறித்த முக்கிய ஆய்வாளர்களில் ஒருவர் (கிரிஸ்டாஃப் காஷ்). பலகோடி தாயக்கட்டைகள் அந்தரத்தில் சுழலும் இன்னொரு உலகம் நம் உடலுக்குள்ளும் இருக்கிறது. மன நோய்மை என்பது உடல்ரீதியானதும்கூட. மனம், மூளை இரண்டையும் குணப்படுத்துவது அவசியம். அது நமக்கோ நம்மைச் சார்ந்தவர்களுக்கோ நேரும்போது நாம் பல்வேறு உணர்ச்சிகளுக்கு ஆளாகின்றோம். அதை இயன்றவரை மூடி மறைப்பவர்களே அதிகம். எனவே இப்புத்தகம் தைரியமான, புரட்சிகரமான வெளிப்பாடாகவும் உள்ளது. தன் மகளுக்குத் தகப்பனாக மட்டுமல்ல மனச் சிக்கல்களில் ஆட்படும் பல்லாயிரம் குழந்தைகளின் தகப்பனாகவும் நின்று எழுதியுள்ளார். தன் உடலை ஒருவர் மருத்துவ சோதனைக்கு உட்படுத்துவதுபோலத் தன் ஆன்மாவை உலகுக்குத் திறந்து காட்டுகிறார்.

மூன்றாவது காரணம் புத்தகத்தின் மையத்தை ஒட்டி வரும் ஆசிரியரின் பிற அனுபவங்கள். ஒரு சமனற்ற மீனவக் குடும்பத்தில், ஒரு சாதாரண மீனவ கிராமத்தில் பிறந்து வளர்ந்து எல்லையற்ற அந்தப் பெருங்கடலின் தீராத அழைப்பைப் புறந்தள்ளி பரிச்சயமில்லாத சமவெளி நோக்கி கண்ணற்றவன் காட்டுக்குள் அலைவதுபோல பாதைகளைத் தேடியலைந்து தன்னை ஒரு சமூகப் பங்களிப்பாளனாக ஆக்கிக்கொண்ட ஒரு அசாதாரணரின் சாகசக் கதையும் சந்திக்கும் சவால்களும் அவற்றைக் கடந்த விதங்களும் பதியப்பட்டுள்ளன.

பேராசிரியர் கான்ஸ்தந்தின் ஒரு அறிவு ஜீவி. அவரது புத்தகங்கள் அனைத்திலும் ஒரு ஆய்வுத்தன்மை இருக்கும். கையறு நதியில் அவர் ஒரு தனிப்பட்டவராக, ஒரு தந்தையாக, நம்மிடம் மனம்திறந்து பேசும் ஒரு நண்பராக வெளிப்படுகிறார். கடற்கரை குறித்த பல நூறு ஆய்வுகளைவிட 'ஆழி சூழ் உலகு' நாவல் தந்த தாக்கம் அதிகம். அதைப்போலவே கையறு நதியையும் மதிப்பிடலாம். ஆனால் இது கடற்கரையின் கதை மட்டுமல்ல. இது நம் காலத்தின் கதை; ஆகவே ஆழி சூழ் உலகை விடவும் பரவலான முக்கியத்துவத்தைப் பெற தகுந்தது. சட்டென்று நின்றுபோனதொரு கடிகாரத்தைப் போல வாழ்க்கையை நகரவிடாமல் ஒரே சுழலில் நிறுத்திவிடும் ஒரு துயரம், ஒரு இடுக்கண், ஒரு அசந்தர்ப்பம் உலகில் யாருக்கும் எங்கேயும் நேரலாம்.


கையறுநதி ஒரு நவீன துயரத்தை ஒரு நவீன மனிதன் எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதன் வழிகாட்டியாக அமையலாம். உங்கள் துயரங்களை எடைபோட, ஒப்பிட, அதன்வழி ஆறுதல் தேட ஒரு கதையாக இருக்கலாம். ஒரு அசாதாரண வாழ்வின் அசாதரண தருணங்கள் குறித்த மனம் திறந்த உரையாடலாக வாசிக்கப்படலாம். ஒரு சாகசக் கதையாக, ஒரு சோக நாடகமாகவும் படிக்கப்படலாம். என்னவாக இருந்தாலும் பேராசிரியர் கான்ஸ்தந்தின் ஒரு உணர்வுபூர்வமான, அறிவுபூர்வமான, அன்னோன்யமான, பயனுள்ள புத்தகத்தை எழுதியுள்ளார். அவருக்கு என் மனப்பூர்வமான நன்றிகள். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனம்: **கருணாகரன்**

# வலிய ஆயுதமாக மாறும் இலக்கியம்




**ஒரு சவரக்காரனின்**
**கவிதை மயிருகள்**
(கவிதைகள்)
கலைவாணன் இ.எம்.எஸ்.



கூளைக் கட்டியிருந்தது
பிச்சாண்டி ஆசாரியின் வீடு
கல்யாண வீடு

முதல் பந்தியில்
பக்கத்து கோவிந்தன் நாயர்
இலைக்குப் பருப்பு வந்தது

இப்பவே யாம்புல இருந்தியன்னு
சோறு விளம்பின ஒருத்தன்
ஓடுங்கல நாசுவ தாயளின்னு
எழுப்பி விட்டான்
என்னையும் என் அம்மையையும்

எல்லா விஷேச வீட்டுலயும்
ஒரு ஞானப் பிறகாசம் இருப்பான்
எங்களை விரட்டி விடுகதுக்கு.

என்று நம்முடைய கண்ணின் முன்னே (மனச்சாட்சியின், அறத்தின் முன்னும்தான்) ஒரு குரல் எழுந்து நம்மைப் பிளக்கிறதல்லவா, அதனால்தான். மேலும்

அம்மாவுக்கு
வீடு எப்பவும்
சுத்தமா இருக்கணும்

அவளுக்குத் துவர்த்து
பெட்சீட்டு ஒண்ணையும்
ஒருத்தரையும் தொட விடமாட்டா.

சட்டிபானையெல்லாம்
கழுவிக் கழுவி
தேஞ்சு போயிருக்கும்

ஒரு மாதிரிப் பட்ட மீனையெல்லாம்
திங்க மாட்டா.

ஒரு நாளு வீட்டுக்கு வந்த
செட்டித் தெரு ஸ்ரீமதி
சொல்லிட்டுப் போனா —
"மல்லிகாளுக்க அடுக்கள
நாசுவக் குடி மாதிரியா இருக்கு
பிராமணத்தி வீடு
தோத்துப் போயிரும்"

என்று இந்தக் குரல் இந்தச் சமூகத்தின் பெருமையையும் பெறுமதியையும் சொல்லும்போது மூடர்களுடைய நெஞ்சு பெருமிதத்தில் நிமிரலாம். ஆனால், மனிதர்களின் இதயம் கிழியும் அல்லவா! அதனால்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி இந்தத் தொகுதியிலுள்ள கவிதைகள் முழுவதுமே ஒடுக்கப்பட்ட ஒரு சமூகத்தின் ஆயிரமாயிரம் துயரக் கதைகளைப் பேசுகின்றன. நம்முடைய சட்டையைப் பிடித்து உலுக்கிக் கேள்விகேட்கின்றன. இந்த 21ஆம் நூற்றாண்டிலும் வெட்கமற்றுத் திரியும் சாதி வெறியர்களைக் கிழித்துத் தொங்க விடுகின்றன. அவர்களுடைய முகத்தில் காறி உமிழ்கின்றன. ஒடுக்கப்பட்ட மக்களுடைய கதைகளே துயரம் மிக்கவைதான். வரலாற்றில் அதற்குப் பெறுமதி இருந்ததில்லை. உண்மையில் அதற்கானப் பெறுமதி வலிந்து மறுக்கப்பட்டது. அது இந்த மக்களுடைய விதி என்ற ஒற்றை வரியில் கடந்து செல்லப்பட்டது. அதனால் இந்த மக்கள் குரலற்றவர்களாகினர். முகமற்றவர்களாக வரலாற்றின் ஓரத்தில் தள்ளிவிடப்பட்டனர்.

இந்த வரலாற்றுப் போக்கிற்கு மாறாகக் கலைவாணன் மிகச் சாதாரணமான எளிய மொழியில் மிக வலிய கவிதைகளை — வலிய நியாயங்களை — வலிய உண்மைகளை — வலிய கேள்விகளை — வலிய அதிர்வுகளை — வலிய துயரங்களை, வலிய அநீதிகளை — வலிய நீதி மறுப்புகளை — வலிய கீழ்மைகளை எழுதியிருக்கிறார். இது வெறும் எழுத்தோ பகிர்தலோ அல்ல. உரத்துப் பேசுதலாகும். குரல் மறுக்கப்பட்டவர்கள், குரலற்றவர்கள் உரத்துப் பேசுவது. இதனால் இது கவனத்திற்குரியதாகிறது. இதைப்போலவே மு. சுயம்புலிங்கமும் எளிய மொழியில் கரிசல்காட்டு வாழ்க்கையை எழுதினார். வறிய — எளிய விவசாயிகளின் (சம்சாரிகளின்) வாழ்க்கையையும் அவர்களுடைய பாடுகளையும். இவர்களுடைய அழகியலே இதுதான். இந்த அழகியலை எதிர்கொள்வதற்குப் பல தயக்கங்கள் இன்னும் உண்டு. அதற்கு இன்னும் வலுவான முயற்சிகள் வேண்டும். இன்னும் வலிமையாக இந்தத் தளத்தில் இயங்க வேண்டும். கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்துதான் எளிய மனிதர்கள் தங்களுடைய வாழ்க்கையை எழுதக்கூடிய சூழல் உருவாகியது. பிற்படுத்தப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், வறிய மக்கள் போன்றோருக்கான கல்வி ஓரளவுக்குச் சீராகக் கிடைக்கத் தொடங்கிய பின்பே இந்த மாற்றம் நிகழ்ந்தது. இதற்குப் பின் இந்த மாற்றத்துக்கான அலைகள் பலவடிவங்களில் உருவாகியுள்ளன. ஒரு திசையில் இது உரிமைக்கானப் போராட்டங்களாக அரசியல் வடிவமாகியுள்ளது. இன்னொரு திசையில் நீதி மறுப்பைச் சொல்லும், சமத்துவமின்மையை எதிர்க்கும் எழுத்தாக, இலக்கியமாகியிருக்கிறது.

இந்த வகையில் இந்தத் தொகுப்பில் உள்ளவை சாதாரண மக்களின் மிகப் பெரிய வாழ்க்கையைப் பேசுவதன் வழியாக மறுபண்பாட்டுக் கவிதைகளாகின்றன. இதைச் சரியாகத் திருத்திச் சொன்னால், மேன்மக்களின் மெய் வாழ்க்கையைச் சொல்கின்ற மெய்ப்பாடுகள் இவை எனலாம். தங்கள் மெய்யான உழைப்பினாலும் எளிய வாழ்க்கையினாலும் உயர்ந்தவர்களாகின்றனர் இந்த மனிதர்கள். அதுவே இவர்களை மேன்மக்கள் ஆக்குகின்றது. அதனால் இவர்கள் தங்களுடைய எளிய (உண்மையில் சிறப்பான, உண்மையான ) மொழியில் தயக்கமின்றித் துணிந்து உண்மைகளைச் சொல்ல முடிகிறது. இதுவே அழகு. இதுவே புதிய வரலாறு. இதுவே புதிய இலக்கியமாகிறது.

சாதியினால் மேன்மக்கள் என்று கருதுவோர் உண்மையில் கீழானோரே. ஏனென்றால், அறிவு, நீதி, அறம், நியாயம், பண்பு, சமூக வளர்ச்சி, உலகப் போக்கு, மனிதாபிமானம் என்ற எல்லாவற்றுக்கும் எதிரானவர்களாக இவர்கள் இருப்பதால் கீழானவர்களாகின்றனர். தமக்கு அப்பாலுள்ள பிற சமூகத்தை இழிவு படுத்தும்போது, உண்மையில் இழிவுப் படுத்துவோரே இழிவினராகின்றனர். அப்படியானவர்கள் எப்படி மேன்மக்களாக இருக்க முடியும்? சாதியை ஒரு அதிகார நிலையாகக் கருதி, பிறரை ஒடுக்குவோர், தாம் ஒடுக்குவதை நியாயப்படுத்தி, அதன் தர்க்கங்களை முன்னிறுத்தி இந்த மாதிரி உண்மையைச் சொல்லும் இலக்கியத்தை ஒரு போதும் படைக்க முடியாது. இன்று மனுதர்மத்தை வலியுறுத்தி, அதை மையமாக்கி எந்தப் “பெரிய” சாதியினரும் இலக்கியப் பிரதிகளாக்க முடியாது. தம்மை பொதுவெளியில் நியாயப்படுத்திப் பேச முடியாது. தமது நியாயத்தையும் அறத்தையும் (அவர்களுக்கெங்கே அறமுண்டு) முன்னிறுத்த முடியாது. ஏன் நீதிமன்றத்தில்கூட சட்டரீதியாக வாதிட்டு தமது சாதியின் நியாயங்களை முன்வைத்து வெற்றியைக் காண முடியாது. ஆகவே இவர்கள்தான் குரலற்றவர்களாகின்றனர். ஆம், வரலாறு இவர்களுடைய குரலைத்தான் இல்லாமல் செய்கிறது. இறுதியில் தங்கள் குரலைத்தாமே இல்லாமல் செய்வோராகி விடுகின்றனர். இதனால் இவர்கள் மீதே நமக்குக் கோபம் உண்டாகிறது. ஏனென்றால் அவர்கள் செய்வது அநாகரீகம். அறிவுக்கும் நியாயத்துக்கும் நீதிக்கும் எதிரானது. பண்பற்றது. இதை அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. அந்தளவுக்கு அவர்கள் மூடர்களாக இருக்கின்றனர். இவர்கள் மீது நமக்கு மதிப்பின்மை ஏற்படுகிறது. பதிலாக இழிவு படுத்தப்படுவோர் கருணைக்குரியவர்களாகின்றனர். அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற உணர்வு நமக்குள் பொங்கி எழுகிறது. இயல்பாக அவர்கள்மேல் நேசமும் விருப்பமும் உருவாகிறது. நம்முடைய தார்மீக ஆதரவை இந்த மக்களுக்கு அளிக்க முனைகிறோம்.

மதுபோதையில்
மாரடைத்துப்போன
பரமேஸ்வரன் நாயருக்கு

சவரம் செய்து
மூக்குச் சளி குண்டிப் பீ துடைத்து
குளிப்பாட்டி பவுடர் போட்டு
கைகால்
பெருவிரல்கள் சேர்த்துக் கட்டி
உடைமாற்றி
சென்ட் அடித்து

பிரேதத்தை கருநீள பெஞ்சில்
நீளமாகப் படுக்க வைத்து விட்டு
கொஞ்சம் அரிசியுடன்
வந்தார் அப்பா

அன்னைக்கு ராத்திரி
வீட்டுல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோறு பூரா
பொண நாத்தம்

வாழ்க்கையில் புழங்கும் மொழியில், அதே எளிய முறையில், சாதாரணமாகத் தம் பாடுகளைச் சொல்கிறார் கலைவாணன். அது தனியே அவருடைய பாடுகள் அல்ல. அவர் சார்ந்த நாவிதச் சமூகத்தின் பாடுகள். அவருடைய சமூகத்துக்குப் பிற ஆதிக்கச் சமூகங்கள் இழைக்கின்ற அநீதிகளை, அந்தச் சமூகத்தை மற்றச் சமூகங்கள் நோக்குகின்ற, அதை நடத்துகின்ற விதத்தைப் பற்றியெல்லாம் பளிச்சென கலைவாணன் சொல்லி விடுகிறார். ஆனால், இந்த நாவிதச் சமூகம் வரலாற்றில் ஆற்றிய பங்களிப்புகள் அதிகம். சித்த மருத்துவத்தை இவர்களே ஒரு காலம் செய்தனர். குழந்தைப் பேற்றின்போது பிரவசம் பார்ப்பது (மருத்துவச்சி) இவர்கள்தான். அன்றைய மகப்பேற்று மருத்துவர்கள். என்பதால்தான் பரியாரி என்ற பெயரே இவர்களுக்கு வந்தது. ஆட்களுக்கு மட்டுமல்ல, சமூகத்துக்கேப் பரிகாரம் செய்தவர்கள். இன்றைய நவீனச் சமூகத்தில் சலூன்கள் அறிவூட்டல் மையங்களாகத் திகழ்வதையும் காண முடியும். தினசரிப்பத்திரிகை தொடக்கம் சலூன்களின் நடக்கின்ற உரையாடல்கள் வரையில் இது நிகழ்கிறது.

எந்தச் சமூகத்தினருக்கும் வரலாற்றுப் பெறுமானங்கள் அதிகமுண்டு. அதிலும் எளிய அடித்தட்டு மக்கள், பிற்படுத்தப்பட்ட சமூகத்தினரின் சமூகப் பங்களிப்புகளும் வரலாற்றுப் பங்களிப்புகளும் மிக அதிகம். அவர்களே உழைப்புச் சக்திகள். துப்புரவுத் தொழிலாளிகள் இல்லையென்றால் நம்முடைய நகரங்களும் தெருக்களும் இந்த உலகமும் எப்படியிருக்கும் என ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். ஆனால் இதை உணர்வதற்கு சாதிய மனம் இடமளிப்பதில்லை. இதனால்தான் சமத்துவமின்மைக் கொடுமை நிகழ்கிறது.

சாதிய ஒடுக்குமுறையில் நிகழும் அநீதியையும் அதைத் தாங்க முடியாமல் தாங்கிக் கொண்டிருக்கும் துயரையும் பலரும் வெளியே சொல்ல விரும்புவதில்லை. அதிலும் குறித்த சமூகங்களிலிருந்து — சாதிகளிலிருந்து — மேலெழுந்து வருகின்ற மத்தியதர வர்க்கம் இதைப் பேசாமல் மெல்லக் கடந்து விடவே முயற்சிக்கிறது. இதைப்பற்றிப் பேசி, எதற்காகத் தன்னுடைய சாதிய அடையாளத்தைக் காட்ட வேண்டும்? ஏன் தேவை—யில்லாமல் சர்ச்சைகளை உருவாக்க வேண்டும்? எதற்காகப் பிரச்சினைப்பட வேண்டும் என்று அது எண்ணுகிறது. கல்வியையும் பொருளாதார வாய்ப்புகளையும் சரியாகப் பயன்படுத்திக் கொண்டால் இன்னும் சில பல ஆண்டுகளில் இந்த நெருக்கடிகளிலிருந்தும் கீழ்மைகளிலிருந்தும் நீங்கிவிட முடியும் என்று அது கருதுகிறது. அதுவரையில் தனக்கு இழைக்கப்படுகின்ற அநீதியையும் புறமொதுக்கல்களையும் கீழ்மைப்படுத்தல்களையும் மௌனமாகத் தாங்கிக் கொள்ளவே முயற்சிக்கிறது. இந்த நியாயத்திற்கும் ஒரு இடமுண்டு. ஆனால் இப்படிக் கருதுவதைப்போல எளிதில் மறைந்தோ மாறிவிடக்கூடியதோ அல்ல.

'அரேபியாவுக்கு ஓடிப் போனான் (நாசுவன்)
ஆறுவருசம் கழிச்சு வந்து
காரும் வாங்கி
மேட்டுக் கடை முக்குல
இப்ப ஹோட்டல் வச்சிருக்கான்.
அன்னா
இட்லி தின்னுட்டு போற
வேலப்பன்
சொல்லிட்டுப் போறான்
நாசுவனுக்க சட்னியில
அஞ்சாறு மயிரு கிடக்குன்னு...'

என்பது பொருளாதாரத்திலும் கல்வியிலும் முன்னேறினாலும் சாதிய ஒதுக்கலும் ஒடுக்கலும் எளிதில் தீர்ந்துவிடுவதில்லை என்பதற்கான நிரூபணங்களில் ஒன்று. அப்படி கல்வியிலும் பொருளாதாரத்திலும் முன்னகர்ந்தவர்கள் அந்த நிகழ்புலத்தில் சந்திக்கின்ற நெருக்கடிகளும் சவால்களும் அவமானங்களும் கொஞ் சமல்ல. இதற்கு ஏராளம் உதாரணங்களுண்டு. இதையும் தன்னுடைய கவிதைகளில் வெளிப்படுத்துகிறார் கலைவாணன். இப்படி தொகுதி முழுவதிலும் நிரம்பிக்கிடக்கும் வலிக்கு நாம் அளிக்கின்ற நிவாரணம் என்ன?

இது தனியே நாவித் சமூகத்தைப் பற்றியது மட்டுமல்ல. ஒடுக்கப்பட்ட பிற சமூகங்களைப் பற்றியதுமாகும். ஆகவே, கலைவாணனுடைய குரல் ஒட்டு மொத்தமாக ஒடுக்கப்பட்டோரின் குரலாகவும் ஒடுக்குமுறைக்கு எதிரானோரின் குரலாகவும் சேர்ந்தியங்குகிறது. ஒடுக்குமுறையை உணர்கின்ற எவரும் ஒடுக்குமுறைக்கு எதிரான குரலையே உயர்த்துவர். அவர்களிடத்தில் அல்லது அந்தக் குரலில் ஒரு பொதுத்தன்மை இருக்கும்.

இங்கே கலைவாணன் சொல்லும் உண்மையை எதிர்கொள்வது கடினமானது. அது நீதி மறுப்பைப் பற்றிப் பகிரங்கமாகப் பேசியிருப்பதாலும் உரிமை மறுப்பைத் துணிவோடு வெளிப்படுத்துவதாலும் மனிதப் பண்புகளையும் பண்பாட்டையும் கேள்விக்குட்படுத்துவதாலும் வலிய ஆயுதமாகிறது. இங்கேதான் கவிதை அல்லது இலக்கியம் ஒரு வலிய ஆயுதமாக, நீதிக்கானக் கூருள்ள குரலாக மாறுகிறது. இருக்கின்ற அசுத்தங்களைத் துப்புரவு செய்து, புதியதோர் உலகை சுத்தமானதாக உருவாக்குவதற்குரிய கருவியாகிறது.

படிப்பு வரலைன்னா
உங்கப்பன் கூட
செரைக்கப் போக வேண்டியது
தானலேன்னு

கூரைப் பள்ளிக் கூடத்த மொழுவ
சாணம் பொறுக்க
அனுப்பி வச்ச
நடராஜபிள்ளை வாத்தியாரை

அண்ணைக்கு ஒரு நாளு
செயர்ல இருத்தி வச்சு
அப்பா ஷேவ் பண்றாரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருதால இருந்து
கத்தி கீழ இறங்கி
கழுத்துக்குக் கிட்ட வரும்போது தோணுது

அப்பிடியே வச்சு
ஒரு இழுப்பு இழுத்துர மாட்டாரான்னு

தாயளி சாவட்டும்

இந்தக் கவிதையைப் படிக்கும்போது நினைவில் எழுகிறது மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவுக்கு அவருடைய இளைய வயதில் யாழ்ப்பாணத்தில் நடந்த கல்வி (நீதி) மறுப்பு. அது நடந்தது கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில். இந்த நூற்றாண்டிலும் இப்படித்தான் அங்குமிங்குமாக இந்தத் துயரம், இந்த அநீதி தொடர்வதாக இருந்தால்? இதற்கு யார் பொறுப்பு? நம்முடைய பதில் என்ன?

இதேவேளை கலைவாணன் தனியே ஒரு தரப்பில் நின்று எதையும் நோக்கவில்லை. அவரிடம் ஒரு பன்மைத்துவ நோக்குண்டு. அதற்கொரு உதாரணம் —

அண்ணைக்குக் கம்யூனிஸ்ட்கார
வெட்கட்ராம ஐயர்
எங்க வீட்டுக்கு வந்து
தண்ணி குடிச்சிட்டுப் போனாரு

அப்பாவுக்குக் கண்ணுல
ரத்தம் வந்துற்று

அம்மாவைப் பிடிச்சுக் கட்ட
முடியல

செட்டித்தெரு வழியாட்டு
பிராமணக் குடியளுக்கும்
இது தெரிஞ்சுது

பொம்பளகளுக்க
வீட்டு விலக்கு மாதிரி
அவரை மூணு நாளா
வீட்டுல ஏத்துக்கலயாம்
ஐயருக்க பெண்டாட்டி.

இதில் தொனிக்கும் கேலியின் அழகியல் உச்சம்.

“சவரக்காரனின் கவிதை மயிருகள்” ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய அவசியமான கவிதைகள். வாசித்த காலம் தொடக்கம் பல இடங்களில், பல அரங்குகளில் இந்தக் கவிதைகளைப் பற்றியும் கலைவாணனின் கவிதை அழகியலைப்பற்றியும் பேசி வருகிறேன். அந்தளவுக்கு இந்தக் கவிதைகள் மிகப் பெரிய ஈர்ப்பைத் தந்தன. உணர்வாலும் உண்மைகளாலும் சத்தியத்தினாலும் நெருக்கமாகிய கவிதைகள் இவை. ●

CGA

NIMAL VINAYAGAMOORTHY

CERTIFIED GENERAL ACCOUNTANT

THE NAME YOU NEED FOR YOUR BUSINESS

Nimal Vinayagamoorthy, CGA

Tel: 416-494-4777
Cell: 416-888-1128
Fax: 416-613-2739
Email: nimal@nlraccounting.com
2525 Pharmacy Ave, Toronto, ON M1W 2K2





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனம்: **தர்மினி**

# உம் நெஞ்சத்தில் முத்திரையாக என்னைப்பொறித்திடுக !




**உன்னத சங்கீதம்**
(கவிதைத்தொகுப்பு)
தமிழில்: பானுபாரதி

நான் அண்மையில் விருப்போடு படித்த மொழிபெயர்ப்புக் கவிதைகளின் தொகுப்பிது. இத்தொகுப்பின் வழியாக மேலும் சில அறிமுகங்கள் கிடைத்தன.

கவிஞர் பானுபாரதி அவ்வப்போது ஆங்காங்கே சில நோர்வேஜியக் கவிதைகளை மொழிபெயர்த்து சஞ்சிகைகள் மற்றும் இணையத்தளங்களில் அவை பிரசுரமாகியிருந்ததைப் படித்திருந்தேன். அவையடங்கலாக நோர்வேஜியக் கவிதைகள் எனும் தொகுப்பாக வெளிவருகிறதென்று அறிந்தபோது பெருமகிழ்ச்சியடைந்தேன். மொழிபெயர்ப்புகள் நல்ல எழுத்துக்களை நம்மிடம் சேர்க்கும் பணியைச் செய்கின்றன,மொழியை—நம் வாசிப்பின் பார்வையை விரியச் செய்கின்றன. அதைச் செய்த பானுபாரதிக்கும் கருப்புப்பிரதிகள் பதிப்பகத்துக்கும் நன்றிகளும் வாழ்த்துகளும்!

1990இல் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து நோர்வேயில் வாழ்ந்து கொண்டிருக்கும் கவிஞர் பானுபாரதி ‘பிறத்தியாள்’ என்ற கவிதைத்தொகுப்பை வெளியிட்டிருக்கிறார். அது ஓர்மை மிக்க கவிதைகளைக் கொண்ட நல்லதொரு தொகுப்பு. கவிஞரானவரே கவிதைகளை மொழிமாற்றுவதென்பது மேலும் சிறப்பு. தான் படித்த, இரசித்த கவிதைகளைத் தேர்ந்தெடுத்து கவிதைகளின் இயல்பும் தன்மையும் மாறாமல் தமிழ் வாசகர்களுக்குத் தந்திருக்கிறார் பானுபாரதி. முகப்புப்படத்தில் ஓர் இளம்பெண் லூர் என்ற இசைக்கருவியை இசைப்பது உன்னத சங்கீதம் என்ற தலைப்புக்குப் பொருத்தமாக இருக்கிறது.இப்படத் தெரிவும் நிறங்களும் கவிதைகளுக்கும் பெயருக்கும் ஒத்திசைவது சிறப்பு.

‘இது செல்விக்கும் சிவரமணிக்கும் ‘என்ற பானுபாரதியின் சமர்ப்பித்தலோடு தொகுப்பைத் திறக்கிறேன்.

மொழிபெயர்ப்பாளரின் கவிதைத் தெரிவுகளில் பெண்களது பிரச்சினைகளை வெளிப்படுத்துபவை,விடுதலையின் ஏக்கம்,உறவுகளுடனான உரையாடல்கள், இயற்கையுடனான மொழிவழி அகம் சார்ந்த வெளிப்பாடுகள்...போன்ற கருத்துகள் புலப்படுகின்றன. அவர் முன்னுரையில் குறிப்பிடுவதுபோல,நோர்வேயில் இன்று பெண்கள் அனுபவிக்கும் சுதந்திரத்திற்கு முன்னான ஒடுக்குமுறையின் வரலாறும் அதற்கெதிரான அவர்களது போராட்டங்களும் எவ்வாறாக இருந்தன என்பதை அறிய, சில கவிதைகள் வழி காட்டுகின்றன. ஒவ்வொரு கவிஞர் பற்றிய குறிப்பும் கொடுக்கப்பட்டிருப்பது வாசகர்களுக்கு அவர்களின் எழுத்தைத் தொடர உதவியாக இருக்கிறது. மேலும்மேலும் அவ்வெழுத்துகளைத் தேடிப்படிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்துகிறது.

தொகுக்கப்பட்ட கவிஞர்கள் வாழ்ந்த காலங்களை நான் கணக்கிட்டுப் பார்த்தேன்.பலர் நீண்ட காலம் வாழ்ந்தவர்களாக இருக்கிறார்கள். கலை மனமும் அலைகள் மோதும் கடலோர வாழ்வும் காரணங்களாக இருக்கலாமோ என்று எனக்குத் தோன்றியது. நோர்வே மற்றும் டென்மார்க் நாட்டுக் கவிஞர்களது எழுத்துகள் இதிலடங்குகின்றன.டென்மார்க்,நோர்வே நாடுகளின் மொழிவழித் தொடர்பு பற்றி மொழிபெயர்ப்பாளரின் முன்னுரை நல்லதொரு விளக்கத்தையும் வாசகர்களுக்குத் தந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் மரிய தக்வாமுடைய கவிதைகளிரண்டு தான் தமிழில் தன் மொழிபெயர்ப்பு முயற்சி என்கிறார் பானுபாரதி. 'ஒரு பெண்ணின் பணி முடிவடைகிறது' என்ற கவிதையை உயிர்நிழல் சஞ்சிகையில் 2006இல் படித்திருக்கிறேன். அப்போதிருந்தே என்னை ஆக்கிரமித்துக் கொண்ட எழுத்து அது. ஆகவே,மிக ஆர்வத்தோடு இத்தொகுப்புக்காகக் காத்திருந்தேன்.

தன் குழந்தைகள், குடும்பம் என்று வாழ்ந்த பெண் முதிர்ந்தவளாகி, வளர்ந்து விட்ட தன் குழந்தைகளைக் குறித்து, தான் அந்நிய மனிதர்களைத் தரிசிக்கிறேன் என்கிறார்.

'எனது குழந்தைகள் எங்கே?
அழகாக ஆடையணிந்து
அந்நிய மனிதர்போல்
என்னிடம் வந்திருக்குமிவர்கள்
இன்று தங்களது பெயர்களால் அழைக்கப்படுகிறார்கள்.
முன்பொருக்கால்
இவர்களது பிஞ்சுக்கரங்கள்
எனது
கழுத்தைக் கட்டிக்கொள்ளப்போட்டியிட்டன...'

இவ்வாறு நீண்டு செல்லும் வரிகளில் ஒரு பெண்ணின் பணிகள் தொடர்கின்றன.

'எனது சர்வாங்கமும் திருமணத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுக்கிடந்தது!

இந்த வரியில் மரிய தக்வாம் ஒரு பெண் தன் வாழ்வை; குடும்பம், குழந்தைகள், கடமைகள், பொறுப்புகள் என்பவற்றை நிறைவேற்றிய பின் என்னவாகிறார் என வாசித்து முடித்த பின் அடுத்த பக்கத்தைப் புரட்ட விடாமல் நின்று சிந்திக்க வைக்கிறார்.

'உன்னத சங்கீதம்' எனும் தலைப்பிலான கவிதை, இத்தொகுப்பில் இருக்கிறது. அத்தலைப்பு இப்புத்தகத்திற்கு அழகாகவும் பொருத்தமாகவும் அமைந்துவிட்டது. வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டிலுள்ள ஒரு புத்தகம் உன்னத சங்கீதம் என்பதைப் பலரும் அறிவர்.இவை சாலமோன் அரசன் எழுதிய கவிதைகள்.அழகான காதல் கவிதைகளாக பொதுவாகப் படிக்கும் போது தோன்றும் பாடல்கள் இவை. ஆனால் வேதாகமத்தினைப் பல வித அர்த்தங்களோடு கற்பிப்பவர்கள் இவை சாலமோன் தன் நாட்டைப் பெண்ணாக உருவகித்துப் பாடிய சங்கீதங்கள் என்பர்.எதுவாயிருந்தாலும் நோர்வேஜியக் கவி ஹெல்ச் வட்சென்ட் (1928—1994) இந்தக் காதலின் உன்னத சங்கீதத்திற்கான எதிர்வினைக் கவிதையாக ஒன்றை எழுதியிருக்கிறார், இத்தொகுப்பு அதைப் படிக்கும் வாய்ப்பைத் தந்தது. வேதாகமத்திலுள்ள வரிகளுக்கு நேரடியாகவே பதிலுக்குப் பதில் எழுதப்பட்ட கவிதையிது. எடுத்துக்காட்டாகச் சில வரிகளைக் கீழே தருகிறேன்.

'எனது கண்களை புறாவுக்கு ஒப்பிடாதே

எனது கூந்தலை மலையடிவாரத்தில் சயனிக்கும் மந்தைகளுக்கு உவமையாக்காதே

உனது ரோஜாவென்று என்னை அழைக்காதே

குளிருறைந்த இரவில் உனது ஒளியென்று என்னை அழைக்காதே...'

இவ்வாறான வரிகளைத் தொடர்ந்து கவிஞர் சொல்கிறார்,

'ஒரு மனிதமாக என்னை உலவவிடு.

நாமிருவரும் இணைந்து மனிதர்களுக்கான வாழ்வை வாழ்வோம்'.

பானுபாரதியின் பொழிமாற்றத்தில் இவை வேற்றுமொழிக் கவிதைகள் என்ற உணர்வே வாசிப்புத் தடையாக எழவில்லை.மொழிவளமும் பொருளும் உணர்ந்து கொண்டவராகக் கவிதைகளைத் தமிழ்ப்படுத்தியிருக்கிறார். கவிதையுணர்வு, பெண்ணியம், மென்மையும் மனித மாண்பும் பேண அவாவும் தன்மையுமாக இத்தொகுப்பு வாசகர்களுக்குக் கிடைத்திருக்கிறது.

இக்குறிப்பின் முடிவில் இதிலுள்ள கவிதையொன்றைப் பகிர்கிறேன். இது மிகப்பிரசித்தமான கவிதை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எல்லோருக்கும் எக்காலத்திற்கும், குறிப்பாக இப்பேஸ்புக் காலத்திற்கும் தகுந்ததுபோல எனக்குத் தோன்றியது. ஆகவே... கவிஞர் இங்கபோர்க் நாஸ்றவெட் (1887—1979 )எழுதியது.

எனக்கொரு பூச்செண்டினை வழங்கி விடுங்கள்
நான் உயிர் வாழ்கின்ற போதே
என்னிடம் ஒரு பூச்செண்டினைத் தந்துவிடுங்கள்
என் கண்கள்
அதைக் கண்டு மகிழ்வடையட்டும்
நான் இறந்த பின்
என் உயிரற்ற உடலத்தின் மீது—நீங்கள்
வைக்கும் மலர்களை எனது கண்கள்
காணப்போவதில்லை.

நான் உயிர்வாழும் போதே
அன்பிற்காக ஏங்கும் என் இதயத்திற்கு
அதைக் கொடுத்து விடுங்கள்—ஏனெனில்
மரணம் என் கண்களை மூடியபின்
எனக்கு வேண்டியது ஒன்றுமில்லை.

என் உயிரற்ற உடலின் முன்
கண்ணீர்த்துளிகளைச் சிந்தாதீர்கள்
அந்தக் கண்ணீர்த்துளிகள்
எனக்கு அமைதியைத் தந்தவை
ஆனால், முன்பு.
நான் சிந்திய கண்ணீர்ப் பெருக்கிலிருந்து
என்னை நீங்கள் காத்திருக்க முடியும்.

நான் எனக்குள்ளே புதையுண்டு போகாதபடி எனக்கென்ற உகந்த பொழுதுகளை நான் தேடியாக வேண்டும் —என்ற மரிய தக்வாமுடைய வரிகள் துணை செய்ய இப்புத்தகத்தைப் படித்து இச்சிறு குறிப்பை எழுதினேன். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PAT WILL BEAT any DEAL*

# All Your Real estate Needs..!

The Dependable Realtor you've been Looking for!

COMMITMENT | RELIABILITY | PROFESSIONALISM



FREE Listing Benefits And Buying Benefits, ...Save $$$

REAL ESTATE HALL OF FAMER

**PAT PUSHPAKANTHAN**

FULL TIME Real Estate Broker

Dir:416 894-1187

RE/MAX REALTY INC. BROKERAGE

ACE

1286 Kennedy Road, Suite 03 Toronto.ON. M1P 2L5

Bus: 416-270-1111 WWW.PATPUSH.COM

Profit From My experience 21 Years Of Service

**BUY & SELL HOMES, BUSINESSES, LAND, COTTAGES & MORE!**

Each office individually owned & operated *conditions apply , Not intended to solicit those home buyers or home sellers that are under a current agency agreement.

PLATINUM Access

Pre-Construction Condos In Scarborough, Etobicoke & at HWY7/Jane ..Subway

PLATINUM Access












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org